ஸ்ரீவேதாந்த தீபிகை.

தொகுதி-24 எண்-7.8.9.

ஜனவரி முதல் மார்ச் வரை

1936

JL
R65~211, N12
N35-24-7-9
158959

4101

SRI VEDANTA DIPIKA

Vol. 24] JANUARY 1936 [Part 7

Editors : { V. V. SRINIVASA AIYANGAR
S. VASUDEVACHARIAR

465

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்

ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்திரிகை.

OFFICE OF THE ...
17 JAN 1936

யுவ ௵

மார்கழி ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ லக்ஷ்மீகுமார கோடிகந்யகாதானம் மஹா மஹோபாத்தியாய
திருப்புட்குழி ஸ்ரீ கிருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி.

ஸ்ரீ

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ௵—மார்கழி௴ [ஸஞ்சிகை 7

ஸ்ரீ கிருஷ்ண தாதாசார்யர்

அடியேன் அறிந்த வண்ணம்.

[ஸ்ரீ. உ.ப. வ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் மதராஸ்.]

ஐம்பதாண்டுகளுக்குமுன் பல்லாண்டு இத்தென்னாட்டை அலங்கரித்துப் பிறகு திருநாட்டை அலங்கரிக்கச் சென்ற இம்மஹானுடைய சரித்ரம் ஒருவாறு எழுதப்பட்டு முன் மாதத்திய ஸஞ்சிகையில் பூர்த்தி பெற்றது. ஒருவாறென்றேன். எழுதப்பட்ட சரித்ரத்தில் குற்றங்குறையிருப்பினும் அவைகளைக் குறித்துச் சொல்ல வந்ததன்று. ஒருவாறென்றதால் அம்மஹானுடைய மாஹாத்மியத்தை இக்காலத்தவர்க்கு தெரிவிக்க வேண்டி எழுதப்பட்ட அச்சரித்ரமானது அவருடைய ப்ரசிஷ்யரும் மஹா வித்வானும் அடியேனுடைய ஆசார்யருமான ஸ்வாமியால் எழுதப்பட்டிருந்தபோதிலும், அவ்விஷயத்தில் என்னுடைய மனதில் பூர்ணமான திருப்தி உண்டாகவில்லை என்பதை ஒருவாறு தெரிவிப்பதற்கே ஒருவாறென்றேன். அளவிடக்கூடாததை அளவிடப்புகின் பிரயத்னம் ஒருவாறே முடியும்.

R65m R11, N12
158959
N35-24.7-5

சென[illegible] [illegible]றாண்டில் இத்தென்னாட்டில் வைதிக வேதாந்தங்களிலும், [illegible] லௌகிக வியவஹாரங்களிலும் பிரஸித்தி பெற்று விளங்கின அநேக மஹான்களை அடியேன் நேரில் கண்டு களிக்க பாக்யம் பெற்றுள்ளேன். அதுவுமன்றி அவர்களுடைய திவ்ய ரூபங்களெல்லாம் என் மனதில் அது முதல் இது வரையில் சித்திரங்களாய் எழுதப்பட்டு, விசித்ரமானதோர் சித்திரசாலையாய் அடியேனால் பரிபாலிக்கப் பட்டு வருகிறது. அவ்வித சித்திரப் படங்களி லெல்லாவற்றிலும் ப்ரதானமாயும், ப்ரகாசமாயும், மனோஹரமாயும் விளங்குவது திருப்புட்குழி ஸ்வாமி என்கிற நாமதேயத்தால் பிரஸித்தி பெற்று விளங்கின அந்த மஹானின் உருவப்படமே. அச்சித்திர சாலையில் அநேக ராஜாக்கள், மந்திரிகள், ஜட்ஜுகள், வக்கீல்கள், விவித வித்வான்கள், பிரபுக்கள், தனிகர்கள், வாக் சதுரர்கள் இன்னும் பற்பல வகையில் ப்ரஸித்தி பெற்றவர்களின் படங்கள் வரிசை வரிசையாய் ஏற்றப்பட்டிருப்பினும் அவைகளிலெல்லாம் சிரஸ் ஸ்தானத்தில் யாது காரணத்தினாலோ ஸ்தாபிக்கப்பட்டு விளங்குவது மேற்சொன்ன இந்த மஹானின் உருவப்படமே. யாது காரணத்தினாலோ என்று சங்கிப்பானேன்? ப்ரீதி, கிருதக்ஞதை, பயம், ஆச்சர்யம் இம்மாதிரியான அனேக மனோ பாவங்களால் மனுஷ்யர்களுடைய ஞாபகாலயம் எனக் கூறக்கூடும் சித்திரசாலையில் அவரவர்களுடைய சரித்ரானுஸாரமாய் எண்ணிறந்த ஸ்திரீ புருஷர்களுடையவும், விபவங்களுடையவும் படங்கள் வரைந்து வைக்கப் பட்டிருப்பினும் அவைகளில் தாரதம்ய ஸ்தானங்கள் பல காரணங்கள் ஒன்று சேர்வதால் ஏற்படுவதாகும். எனக்கு சிறு வயது முதலேயே அம் மஹானைப் பற்றி மஹா வித்வானென்றும், சதுச்சாஸ்திர பண்டிதரென்றும் இன்னும் பலவித மான விசேஷ கீர்த்தியானது காதில் அடிக்கடி பட்டுக் கொண்டிருந்ததனாலோ, அல்லது நான் அடிக்கடி அவர் வாஸஸ்தானமான பெருமாள் கோவில் எனப்படும் காஞ்சீ நகரத்துக்குப் போய்வர நேரிட்டதனாலோ, அல்லது எனக்கு ஆஜன்ம ஸித்தமாய் கிடைத்திருக்கிற வைதிக வித்வத் பக்ஷபாதத்தினாலோ, அல்லது அச்சிறு பிராயத்திலேயே அம்மஹானுடைய ஞான சக்தி குணாதிசயங்களை பகுத்தறிவு இல்லாத காலத்திலும் யாதோ ஒரு உள் உணர்ச்சியினாலுண்டான தெரிவினாலோ, அல்லது எல்லாம் ஒன்று சேர்ந்த காரணத்தினாலோ, இங்கு விசாரித்தறிய வேண்டிய அவச்யமில்லை. காரணம் யாதேனுமாகுக. என்னுடைய காலத்தில் நான் காண வேண்டி கிடைத்த மனுஷ்யர்களுள் அம்மஹானுடைய ஞாபகமும் அவருடைய ஸ்வரூப சித்திரமுமே என்னுடைய மனதில் விசேஷ கௌரவத்தை வகித்து அக்ராஸனத்தில் வீற்றிருப்பது போல் விளங்குகிறது. அந்த ஸ்வாமியினுடைய ரூப குணாதிசயங்களில் எதை நான் முக்கியமாக கிரஹித்திருக்கிறது என்று யோசிக்குமிடத்து, அஸாதாரணமானதோர் காம்

பீர்யமே என்று தோன்றுகிறது. மனோபாவத்திலும் சரீர ஆக்ருதியிலும் கூட 'யதா ஆத்மா ததா சரீரம்" எனக்கூடியதாய் அதி காம்பீர்யத்தை வகித்துள்ளார். அந்த ஸ்வாமியை சுத்தமாய்த் தெரியாதவருங்கூட கண்ட மாத்திரத்தில் அவசமாய் கௌரவிக்கக் கூடிய பெருமை வாய்ந்தவர். ஆத்மவான் ஆத்மஸ்தன் என்கிற அனிதர ஸாதாரணமான ஸம்ஸ்கிருத பதங்களால் நிர்தேசிக்கத் தகுந்த பெருந்தன்மை பொருந்தினவர். ஸ்ரீ தேவ ராஜஸ்வாமியினுடைய உத்ஸவங்களில் வேதகோஷ்டிக்கு முன் நக்ஷத்திரங்களால் நிறைந்த ஆகாசத்தில் சந்திரனைப்போல் ப்ரகாசிப்பவர். கௌரவமான ஆக்ருதிக்கும் ஆத்ம குணங்களுக்கும் ஸத்ருசமான காம்பீர்ய ஸ்வரத்தோடு கூடிய குரலை உடையவர். வைதிகர்களாலும், பண்டிதர்களாலும் லௌகிக ப்ரபுக்களாலும் எல்லா விதத்திலும் கொண்டாடப் பட்டவர். ஸஹஜமான மேதைதான் பெரியதோ, சிரமப்பட்டு ஸம்பாதித்த பாண்டித்தியந்தான் பெரியதோ? என்று வியக்கும்படியான மேன்மையுடையவர். ஏககாலத்தில் பயத்தையும் ப்ரீதியையும் எவரிடத்தும் உண்டாக்கக் கூடிய தன்மை பெற்றவர். ஆசாரானுஷ்டானங்களிலும்,வேதாந்த சாஸ்திரத்திலும், ஞானத்திலும், பக்தியிலும், விரக்தியிலும், கர்த்தவ்ய கர்மங்களிலும், துல்யமான ப்ரபாவமடைந்தவர். தேவராஜஸ்வாமி கைங்கர்யத்திலும், நிகமாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸ்தாபனத்திலும் ஸத்ய வ்ரதம் பூண்டவர். அப்பேர்க்கொத்த மஹானுடைய உருவப்படந்தான் என்னுடைய மனதில் வரையப்பட்டிருக்கிறது. திருவம்சத்திற்கேற்றதும் நீண்டதும் கௌரவத்தை வகித்ததுமான திருமுகமும் ஸ்நிக்த வர்ணமும் ஸௌந்தர்யமும் கூடிய தேஹமும், விசாலமான புத்திக்கு அறிகுறியான விசாலமான நெற்றிக்கட்டும், உற்றுப் பார்த்தவளவில் பயமுறுத்தக்கூடிய கண்களும், உள்ளுள்ள ப்ரீதியைக் காட்டாமல் காட்டும் கடாக்ஷமும், கடைந்து அமையப் பெற்றது போன்ற நாசிகையும், வாக்கின் மாதுர்யத்தையும் பாடவத்தையும் அறியக் குறிக்கும் மூடின உதடுகளும், ஸங்கல்பத்தின் பிடிவாதத்தை வ்யக்தமாக்கும் முக வாய்க்கட்டையும், ஔந்நத்யத்தை அநாயாஸமாய் வகிப்பதை நிதர்சிப்பது போன்ற கண்டமும், விசாலமான வக்ஷஸ்ஸும், உன்னதமான புஜங்களும், நீண்ட கரங்களும் இன்னும் பலவிதங்களில் ஸாமுத்ரிகா சாஸ்திரத்தில் மஹான்களுடைய லக்ஷணமாக விவரிக்கப்பட்டிருக்கும் அனேக விசேஷ லக்ஷணங்களோடு கூடிய இந்த ஸ்வாமியை ஒரு பால் கண்டவர் கேட்டவர் எவரும் மறக்கமுடியாது. அவருடைய உருவத்தையே சித்திரப்படமாக யாவச்சக்யம் செய்வித்து இந்தப் பத்திரிகையில் அநுபந்தமாக முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தஸ்வாமியினுடைய சரித்திரத்தை தென்னிந்தியாவில் நம்மவர்க்கெல்லாம் ஜீவ தசையில் மார்க்கதர்சியாய் குன்றிலிட்ட தீபம்போல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கவேண்டி இந்தப்படமானது ஓராசார்ய கைங்கர்யரூபமாக அன்னவரிடத்தில் விச்வாஸம் உள்ள அனைவருக்கும் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

ஸ்ரீ:

ஜீவாத்மாவின் ஸ்வேச்சா ப்ரவ்ருத்தி

[ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், மாம்பலம்]

(தொடர்ச்சி)

பகவத் கீதையில் மூன்றாவது அத்யாயத்தில் 'ஜ்ஞாந யோகம் துஷ்கரம் என்பதை உபபாதித்து வருகையில், ஸ்ரீபகவான்,

"ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஜ்ஞாநவாநபி ।
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி ॥"

[விஷயாநுபவம் பாதகம் என்னும் ஜ்ஞாநம் இருக்கையிலும், ஜந்மாந்தர வாஸநையானது விஷயாநுபவ மார்க்கத்திலேயே ஜ்ஞாநயோக ப்ரவ்ருத்தனையும் இழுத்துவிடும். சரீரத்தின் ஸம்பந்தம் இருக்கிறபடியால் எல்லா ஜந்துக்களும் அநாதிகால ப்ரவ்ருத்தமான வாஸநைக்குத் தக்கபடியே நடப்பார்களல்லவா? சாஸ்த்ரங்களின் விதி நிஷேதங்கள் அவ்விஷயத்தில் என்ன செய்யக்கூடும்?] என்று சொன்ன பொழுது, அர்ஜுநன் பயந்து,

"அத கேந ப்ரயுக்தோயம் பாபம் சரதி பூருஷ: ।
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: ॥"

[அது ஏன்? எதனால் ஏவப்பட்டவனைக் கொண்டு, தனக்கு இச்சை இராமல் இருக்கையிலும், பலாத்கரிக்கப்பட்டவன் போல இவன் விஷயாநுபவத்தில் ப்ரவ்ருத்திக்கிறான்?] என்று ப்ரச்நம் செய்தான். இவ்விதம் கேட்கும் அர்ஜுநனுடைய அபிப்ராயம் என்னவென்றால், 'ஒரு சேதநனை, அவனுடைய ஜந்மாந்தர வாஸநையானது அவனிடத்தில் ஒரு இச்சையை ஜநிப்பித்து அது வழியாகவே கார்யங்களில் பரவர்த்திப்பிக்க வேண்டுமன்றோ? ஜ்ஞாநயோக நிஷ்டனுடைய இச்சையோ விஷயாநுபவத்திலிருந்து விலகி ஜ்ஞாந யோகத்திலேயே நிற்கின்றது. இப்படிப்பட்டவன் விஷயத்தில் அந்த வாஸநை எப்படி ப்ரவர்த்திகை ஆகும்?' என்பதே. இந்த ப்ரச்நத்திற்கு ஸ்ரீபகவான்,

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: ।
மஹாசநோ மஹாபாப்மா வித்த்யேநமிஹ வைரிணம் ॥"

[ப்ராசீந வாஸநையால் உண்டாக்கப்படும் காமமே இம்மாதிரி அவனை ப்ரவர்த்திப்பிக்கின்றது; அது மிக்க பலமுள்ளது. அதைப் பெரிய சத்ருவென்று நீ அறிய வேண்டும்] என்றும்,

"பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாசநம்"

[அது உன்னுடைய ஜ்ஞாநத்தையெல்லாம் நசிப்பித்துவிடும்; அது அப்படி ஜ்ஞாநத்தை நசிப்பிக்கும் முன்னதாகவே நீ அதை நசிப்பித்து விடு] என்றும் ஸமாதாநம் சொல்லியிருக்கிறார். அதாவது, 'வாஸநையானது அநாதி காலமாக ப்ரவ்ருத்தமாய் மேன்மேல் அபிவ்ருத்தமாய் வந்திருக்கிறபடியால், அது இப்பொழுது ஜநித்திருக்கும் ஜ்ஞாநத்தைத் தடுத்து விடுகின்றது' என்று சொன்னதாயிற்று. வாஸநையின் ஆக்ரமத்தை எப்படித் தடுக்கலாமென்னும் அபிப்ராயத்துடன் ப்ரச்நம் செய்த அர்ஜுநனுக்கு, 'வாஸநை பலீயஸீ, அதை நசிப்பித்துவிடு' என்று மாத்ரம் ஸமாதாநம் சொல்வது எப்படி தேறுதலைக் கொடுக்கும்? ஆகையால், ஸ்ரீபகவானுடைய அபிப்ராயம், கேவலம் 'வாஸநை பலிஷ்டை' என்று வெளியிடுவது மாத்ரமாக இருக்க மாட்டாது; 'வாஸநையை எவ்விதம் நசிப்பிக்கக் கூடும்' என்பதையும் அந்த ஸமாதாநம் விளக்கிக் காட்ட வேண்டும். அப்படியே அது விளக்குகின்றது என்பது, பகவானுடைய மேல் வாக்யங்களைப் பார்த்தால் தெரியவரும். வாஸநை பலமுள்ளது என்பதைச் சொல்லிவிட்டு, அது என்ன உபகரணங்களைக் கொண்டு ஆத்மாவை ஆக்ரமிக்கின்றதென்றும், ஜ்ஞாந விரோதிகளாயிருக்கும் அந்த உபகரணங்களுள் எவை எவை, அடக்கப்பட வேண்டிய விஷயத்தில், ப்ரதாநங்களென்றும் உபபாதித்து, கடைசியில்,

"ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா ।
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ॥"

[இப்படி, 'காமமே அடக்கப்பட வேண்டியவைகளுள் ப்ரதாநம்' என்பதை அறிந்து, நீ மநஸ்ஸை புத்தியால் அடக்கி, வேறு ஒரு மார்க்கத்தாலும் அடக்கக்கூடாத காமரூபமான அந்தச் சத்ருவை நசிப்பித்து விடு] என்று முடித்திருக்கிறார். இந்த வாக்யத்தில் 'ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா' என்று காமத்தை நசிப்பிக்க ஒரு உபாயம் காட்டப்பட்டிருக்கின்றது. அதாவது, 'வாஸநை வழியாக ஓடும் மநஸ்ஸை, நீ, உன் விவேக ரூபமான சக்தியைக்

கொண்டு அடக்கு’ என்று சொன்னதாயிற்று. இப்படிச் சொல்லியிருப்பதிலிருந்து, அபதத்தில் ப்ரவர்த்திக்கும் மனஸ்ஸை அடக்குவதற்கு நம்மிடம் நமக்கு ஸ்வாதீநமான ஒரு சக்தி இருக்கின்றது வ்யக்தமாகின்ற தன்றோ? இந்தச் சக்திதான் பகவானால் நமக்கு ஸ்வதந்த்ரமாக இருக்கட்டுமென்று கொடுக்கப்பட்டுள்ள ஸாமர்த்ய விசேஷம். இதைச் சரிவர ப்ரயோகிப்பதும் ப்ரயோகியாமல் இருப்பதும் நமது கார்யமே; மற்றொருவருடைய ப்ரேரணை இதில் இல்லை. இப்படிப்பட்ட ஸாமர்த்யமொன்று நமக்கே ஸ்வாதீநமாக இராவிட்டால் நம்மைப் பார்த்து ‘மனஸ்ஸை புத்தியால் அடக்கு; அது வழியாகக் காமத்தை நாசம் செய்’ என்று சொல்வது கொஞ்சமேனும் உபபந்நமாகமாட்டாது. இவ்விடத்தில் கர்மயோகம் ப்ரஸ்துதமாகையால், ‘மனஸ்ஸை புத்தியால் அடக்கு’ என்பதற்கு ஆசார்யர்கள் பின்வருமாறு தாத்பர்யம் அநுக்ரஹித்திருக்கிறார்கள். ‘ஜ்ஞாந நிஷ்டை துஷ்கரம்; அது ஸப்ரமாதம்; ஆகையால் அந்த வழியில் போகாமல், மனஸ்ஸைக் கர்மயோகத்திலேயே ஸ்தாபித்து, அது வழியாக உன்னுடைய பாபங்களைப் போக்கடித்துக்கொண்டும் ஸத்வத்தை வ்ருத்தி செய்துகொண்டும் காமத்தை நசிப்பித்தல்வேண்டும்’ என்பது அவர்களுடைய தாத்பர்யம்.

“[illegible]”

[கர்ம யோகாநுஷ்டாநம் செய்யப்படாவிட்டால் நமது பாபம் போக்கடிக்கப் படமாட்டாது, ஸத்வமும் வ்ருத்தி அடையமாட்டாது; அப்படி ஸத்வம் வ்ருத்தி அடையாவிட்டால் வாஸனைக்கு உட்படுவது தோஷமென்னும் ஜ்ஞாநம் இருந்த போதிலும், நம்மால் அந்தக் காமம் நசிப்பிக்கப் படமாட்டாது’] என்று ஸ்ரீ தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் இந்த ப்ரகரணத்தில் அநுக்ரஹித்திருக்கிறார். இவையெல்லாம் நமக்கு அம்மாதிரி ஒரு ஸ்வேச்சை இருக்கின்றது என்பதை நன்கு விளக்குகின்றன. இந்தச் சக்தி விசேஷத்தை பாஷாந்தரத்தில் “Will-power” என்று சொல்வார்கள். இது எவனிடத்தில் த்ருடமாய் அபிவ்ருத்தமாக இருக்கின்றதோ, அவன் அதிமாநுஷங்களான கார்ய விசேஷங்களையும் ஸாதிக்கச் சக்தனாகிறான் என்பது பாஷாந்தர சாஸ்த்ரஜ்ஞர்களின் கொள்கை.

இவ்விதம் நாம் நமது இச்சையைக்கொண்டே அந்ய நிரபேக்ஷமாகக் கார்யங்களை ஸாதித்துக் கொள்வதற்குச் சக்தர்களென்பதும் அந்தச் சக்தி நமக்கு ஸ்வபாவத்தாலேயே இருக்கின்றது என்பதும் மற்றுமொரு ப்ரமாணத்தாலும் வ்யக்தமாக ஏற்படுகின்றது. அது என்னவென்றால் அபஹத

பாப்மத்வம் முதலிய எட்டு குணங்கள் பகவானுக்குப்போல ஜீவனுக்கும் ஸ்வாபாவிகமாக உண்டு என்றும், பத்த தசையில் கர்ம ரூபமான அவித்யையால் திரோஹிதங்களா யிருக்கும் அந்தக் குணங்கள் கர்ம பந்தம் விலகினவுடன் ஆவிர்ப்பவிக்கின்றன வென்றும் நமது உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. அந்தக் குணங்களுள் ‘ஸத்ய ஸங்கல்பத்வம்’ என்பது ஒன்று. எவனுடைய ஸங்கல்பம் [அதாவது, இச்சை] ப்ரதிஹதமாகாமல் அமோகமாக இருக்கின்றதோ அவனையே ஸத்ய ஸங்கல்பனென்று சொல்லக் கூடும். ஆகையால் ஜீவன்களிடம் அப்படிப்பட்ட அமோகமான ஸங்கல்பத்தைச் செய்யும் சக்தி ஸ்வாபாவிகமாக இருக்கின்றது என்பது இந்த உபநிஷத் வாக்யங்களிலிருந்து ஏற்படுகின்றது. அப்படி அந்த இச்சை அமோகமாக இருப்பது முக்த தசையிலேயே ஆவிர்ப்பவித்தபோதிலும், அது ஸ்வாபாவிகமான குணமாதலால் அது பத்த தசையிலும் அந்த ஜீவனிடம் இருக்கின்றது என்றே சொல்லவேண்டும். பத்த தசையில் அது கர்மங்களால் ப்ரதிபத்தமாக இருக்கின்றதே தவிர ஆத்யந்திகமாக இராமல் இருக்கவில்லை. அப்பொழுது ஸத்ய ஸங்கல்பத்வம் நிருத்தமாக இருந்தாலும், ஸங்கல்பிக்கும் சக்தி விசேஷம் ஜீவனிடம் இருக்கின்றது என்பது நிராக்ஷேபம். அது, கர்ம பந்தம் பலவத்தாக இருக்குமிடத்தில் துர்ப்பலமாகவும், கர்ம பந்தம் துர்பலமாக இருக்குமிடத்தில் பலவத்தாகவும் வ்யாபரித்துக்கொண்டு இருக்கின்றது என்று மாத்ரம் சொல்லக்கூடும். அதன் ஸத்தையை அபலபிக்க உபநிஷத் இடம் கொடுக்கவில்லை.

ஆகையால், ஈச்வரனால் நமக்கு ஸ்வாபாவிகமாகக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்வாதந்த்ர்ய மொன்றை அவனுக்கு அத்யந்தம் பரதந்த்ரர்களாக இருக்கும் நாம் அவனுடைய ஆஜ்ஞையின் கார்யமாக வஹித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதும், அந்த ஸ்வாதந்த்ர்ய மடியாகவே நாம் நமது துஷ்ட ப்ரவ்ருத்திகளுக்கும் ஸாது ப்ரவ்ருத்திகளுக்கும் ஈச்வரனுடைய நிக்ரஹாநுக்ரஹ ரூபமான பலங்களைப் பெறுகின்றோம் என்பதும், இந்த ஸ்வாதந்த்ர்யம் ஈச்வரனுடைய நித்யேச்சையால் ஸங்கல்பிக்கப்பட்டதாகையால் இதற்கு ஒருகாலும் பங்கம் ஏற்படமாட்டாதென்பதும், இந்த ஸ்வாதந்த்ர்யத்தை அறியாமல் நாம் செய்யும் கார்யங்களெல்லாவற்றிலும் நாம் பகவானுக்குக் கேவலம் உபகரணமாத்ரமாகின்றோமென்று நினைப்பதும் எல்லாம் பகவத் ஸங்கல்பமென்று சொல்லிக் கொண்டு நம்மை விட்டு பாத்தை விலக்கிக் கொள்வதும் வஸ்து ஸ்திதிக்கு விருத்தங்களென்பதும், இந்த ஸ்வாதந்த்ர்யமும் பகவதிச்சையின் பலமாக நமக்கு ஏற்பட்டிருக்கிற படியால் அந்த ஸ்வாதந்த்ர்யத்தை அவலம்பித்து நாம் அந்ய நிரபேக்ஷமாக கார்யங்களைச் செய்யும் பொழுதும் பகவானுக்கு அதில் காரணத்வம் அந்யூநமாகவே நிற்கின்றதென்பதும், இவை யெல்லாம் ஸித்தம். ‘பகவானால்

கொடுபடாமல் நமக்கே ஸ்வாபாவிகமாக இருக்கும் ஒரு ஸ்வாதந்த்ர்யத்துடன் நாம் கார்யங்களில் ப்ரவர்த்திக்கின்றோம்; நாமே அந்தக் கார்யங்களின் பலத்தை அநுபவிக்கப்போகிறோம்' என்று அநுஸந்தித்து ப்ரவர்த்திக்கை பாதகமே. அநுஸந்தாநம் சரியானபடி இருந்தாலும் ப்ரயோஜநாந்தரத்தை உத்தேசித்து அநுஷ்டிக்கையும் சரியன்று. கேவலம் கைங்கர்யார்த்தியாய் அநந்ய ப்ரயோஜநனாயிருக்கும் தசையில் கர்த்ருத்வாநுஸந்தாநம் விருத்தமாக மாட்டாது. இது தான் சாஸ்த்ரங்களின் ஹ்ருதயமென்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள்.

சென்னையில் வைதிக பரிஷத்

சென்னையில் சென்ற டிஸம்பர் மீ 30உ திநம் ஒரு வைதிக பரிஷத் நடைபெற்றது. ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்ரீ. உப. வி. வெங்கடரமண ஐயங்கார் முதலான பெரியோர்கள் வந்திருந்தார்கள். நூற்றுக்கணக்கான வைதிகர்கள் வேதகோஷத்துடனும் பூர்ணகும்பத்துடனும் ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபதியை வரவேற்றின பிறகு, ஸ்ரீ. உ. வெ. குடந்தை அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசார் ஸ்வாமி மங்களமாக பகவத்த்யானத்துடன் வேதமோதி சிறிது தர்மஸ்வரூபத்தைப் பற்றி உபந்யஸித்தார். தலைவர் தனது அழகிய ப்ரஸங்கத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விஸ்தாரமாக உபந்யஸித்தார். அதில் தர்மத்தின் பெருமை, தற்காலநிலைமை, நமது ஊக்கமின்மை, சீர்திருத்தக்காரரின் விஷமம், பல அதர்ம சட்டங்கள், அன்யபாஷை வேஷஸ்வீகாரம், வரப்போகும் ராஜீய சீர்திருத்தம், அதில் நாம் செய்யவேண்டிய விஷயம், நமது மதத்தைப் போதிக்கும் கலாசாலைகள் ஆரம்பிக்கவேண்டிய விஷயம் முதலியவைகளை விஸ்தாரமாக குறிப்பிட்டார். பலர் உள்ளத்தைப் பரவசமாக்கும் படியான உபந்யாஸத்தைக் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் க்ஷேமம் ஸங்கீதவித்வான் நடேச சாஸ்திரிகளும் அவரது குமாரன் சி. N. ராமசந்த்ரன் M. A. அவர்களும் அழகிய வீணைவாத்யம் வாசித்து ஸபையை மகிழ்வித்தார்கள்.

குடந்தையில் வேதபாடசாலை

விசிஷ்டாத்வைத ஸபையின் ஆதரவில், திவான் பஹதூர் S. ராகவய்யங்காரவர்களின் நன் முயற்சியாலும் உதவியாலும், அவருடைய மேற்பார்வையில் ஸ்ரீ ரங்கவிலாஸம் மண்டபத்தில் யஜுர் வேத பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. 8 வித்யார்த்திகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தகுந்த உபாத்யாயரைக்கொண்டு நடத்தப்பட்டுவரும் இப்பாடசாலை நீடூழி வாழ வேண்டுமென்று பொதுஜனங்கள் வாழ்த்துகிறார்கள்.

[ஆர்ய தர்ம பத்ரிகை]

உபய வேதாந்தங்கள்

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வோகேட், கடலூர்]

[த்வி வேதாந்தங்கள் என்றுரைக்காத போதிலும் உபய வேதாந்தமென்றார் இவ்வாசிரியர். உபயவேதாந்தம் என்று ஒருமைப் பதமாகவே சொல்லியிருப்பின் அழகாயிருக்குமோ வென்று யோசிக்கத்தகுந்த இவ்விஷயத்தில் நன்கு கண்டறிய நமக்கு பகவான் இரண்டு கண்கள் ஒரே த்ருஷ்டியோடு கூடியதாய் கொடுத்திருப்பதே தகுந்த உதாஹரணமும் நிதர்சனமும் ஆகும். இவ்விஷயத்தில் இவ்வாசிரியர் உத்ஸாஹத்துடன் எழுதியிருப்பது மிகவும் அபிநந்தனீயம்—ப.]

நாதேந முநிநா தேந
பவேயம் நாதவாநஹம் ।
யஸ்ய நைகமிகம் தத்வம்
ஹஸ்தாமலகதாம் கதம் ॥

ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி நடைபெற்று வரும் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் விலக்ஷணகாரங்களில் முதன்மையானது உபய வேதாந்தாவலம்பம். ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகள் காலவைகுண்யத்தால் ப்ரவசநம் செய்யப்படாமல் லுப்த ப்ராயமாயிருந்த ஸமயத்தில், ஸ்ரீமந்நாதமுனிகள் திருவாய்மொழியின் ஏகதேசத்தைத் தற்செயலாய்க் கேட்டு, அதன் அர்த்த வைலக்ஷண்யத்தில் ஈடுபட்டவராய், அப்ரபந்தத்தை முற்றும் அறியவேண்டுமென்று அவாக்கொண்டு, அதன் கர்த்தாவாகிய நம்மாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய திருக்குருகூருக்குச் சென்று விசாரித்ததில், அங்கும் அது கிடைக்காமல் சோகித்திருக்கையில், நம்மாழ்வாரின் அந்தரங்க சிஷ்யரான மதுரகவியின் சிஷ்யராகிய பராங்குசதாஸர் என்னும் பெரியாரிடமிருந்து 'நம்மாழ்வார் விஷயமாக மதுரகவி அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்கிற ஸ்தோத்ரத்தைப் பன்னீராயிர முறை ஆவ்ருத்தி செய்தால் நம்மாழ்வார் ப்ரஸந்நராவார்' என்கிற ஐதிஹ்யத்தைக் கேட்டார். உடனே யோகாப்யாஸத்தில் தேர்ச்சியுடைய நாதமுனிகள் ஆழ்வாரை த்யாநம் செய்துகொண்டு அந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்துக்கொண்டு யோகநிஷ்டையி லிருக்கும்போது, அவருக்கு ஆழ்வார் ப்ரஸந்நராய், திருவாய்மொழி முதலான எல்லாத் திவ்ய ப்ரபந்தங்களையும் உபதேசித்த வளவில்,

அவர் பரமாச்சரியத்தையும் அளவற்ற ஆநந்தத்தையு மடைந்து, ஆழ்வாரைப் பலமுறை ஸேவித்து, அவருடைய அநுமதியின் பேரில் தாம் உபதேசிக்கப்பெற்ற திவ்ய ப்ரபந்தங்களை ப்ரவசநம் செய்யவும் அவற்றைப் பகவத் ஸந்நிதிகளில் அநுஸந்திக்கவும் தொடங்கினர். அதுமுதல் இத்திவ்ய ப்ரபந்தங்கள் குரு சிஷ்ய பரம்பரா க்ரமமாய் அவிச்சிந்நமாய் அத்யயநம் பண்ணப்பட்டு வருவதுடன், பகவதாலயங்களிலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகைகளிலும் உசிதமான ஸந்தர்ப்பங்களில் வேதங்களுக்கு ஸமமாய் அநுஸந்திக்கப்பட்டும் வருகின்றன.

இவ்விஷயத்தில் நம் ஸம்ப்ரதாயத்தில் அந்வய மில்லாதவர் சில விப்ரதிபத்திகள் செய்ய நேரிடுவது பற்றி, இதைச் சற்றுப் பராமர்சிக்க வேண்டியது அவசியமாகிறது. அநாதியாகவும் அபௌருஷேயமாகவும் தேவபாஷாமயமாகவும் இருக்கும் வேதங்களுடன், தேச பாஷையில் மனிதர்களால் பாடப்பட்ட பாடல்களுக்கு ஸாம்யகல்பநம் பண்ணுவது கேவலம் ஸங்கேத ப்ரயுக்தமென்றும், சிஷ்ய ஸங்க்ரஹத்துக்காகவும் அர்த்தார்ஜநம் முதலிய சில்வான ப்ரயோஜநங்களை உத்தேசித்தும் இந்த ஸம்ப்ரதாயம் நடையாடி வருகிறதென்றும், இது ச்ரௌத ஸ்மார்த்த கர்மாநுஷ்டாதாக்களான ஆர்யர்களுக்குத் தகாதென்றும் ஆக்ஷேபங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாக்ஷேபங்க ளெல்லாம் மேல் பார்வைக்கு ப்ரபலம்போல் தோன்றிய போதிலும், வஸ்துஸ்திதியை நன்கு பராமர்சித்தால் அவை யுக்தமானவை யல்லவென்றும், ஸ்ரீநாதமுனிகளால் ப்ரவர்த்திக்கப்பட்டு ஸ்ரீ பாஷ்யகாரரால் போஷிக்கப்பட்டு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனால் பரிபாலிக்கப்பட்டுவரும் நமது ஸத்ஸம்ப்ரதாயத்தில் இவ்வகையான தோஷங்கள் ஒன்றும் ஆகாசத்தில் அழுக்குப் போல் கிஞ்சித்தும் ஒட்டமாட்டா வென்றும் நிஷ்பக்ஷபாதிகளுக்கு வ்யக்தமாய் ஏற்படும்.

ஸாதாரணமாய்த் தேவ பாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்துக்கும் மற்றுள்ள பாஷைகள் அனைவற்றுக்கும் பாஷா ஸ்வரூப ப்ரயுக்தமான தாரதம்யம் இருக்கச் செய்தேயும், இதை மாத்ரம் காரணமாகக்கொண்டு க்ரந்தங்களின் உத்கர்ஷாபகர்ஷங்களையும் பரிக்ராஹ்யத்வ அபரிக்ராஹ்யத்வங்களையும் நிர்ணயிக்க முடியாதென்பதும், அவ்வோ க்ரந்தங்களில் ப்ரதிபாதிக்கப்படும் விஷயங்களின் ஸ்வரூபமும் அதற்கு நியாமகமாகும் என்பதும் தடஸ்தர்கள் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். இவ்விரண்டு அம்சங்களில், வசந வைசிஷ்ட்யத்தைக் காட்டிலும் வாச்ய வைசிஷ்ட்யமே ப்ரதாநமென்பதையும் ந்யாயஜ்ஞர்கள் அப்யுபகமம் பண்ணுவார்கள். ஆகையால் மத்ஸ்ய கூர்ம வராஹாதி ஆகாரங்களைப் பரிக்ரஹம் பண்ணி அவதரித்த புருஷோத்தமனுக்கு, அவ்வோ சரீர ஸம்ஸ்தாநங்களை யிட்டு யாதொரு நிகர்ஷ கந்தமும்

ஏற்படாமல், அந்தந்த ரூபங்களை அவன் பரிக்ரஹத்தால் பெருமை பெற்றாப்போல், அம்மஹா புருஷனுடைய ஸ்வரூப ரூப குண விபவாதிகளை யதாவத்தாய் அநுபவ ஸித்தமாம்படி ப்ரதிபாதநம் பண்ணும் ஸ்துதி ப்ரபந்தங்கள் எப்பாஷையில் அமைந்தபோதிலும், அவை விஷய வைலக்ஷண்யத்தை யிட்டு ஸத்துக்களுக்கு உபாதேயங்களே யாகும் என்பதற்கு ஸந்தேஹமில்லை. இதைத்தான் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன்,

'ஸாஷா நீதிः வ்யாஸ்ருத ஹமவதிவதாகீ'

என்று ஸங்க்ரஹித்தார்.

மேலும் பகவான் பல ப்ரகாரமாய் அவதரிக்கும்போது,

"ராகவத்வேऽபவத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ ॥
தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ ।
விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநும் ॥"

என்கிறபடி அவனுடைய திவ்ய மஹிஷியாகிய பிராட்டியும் அந்தந்த ரூபத்துக் கிசையத் தானும் ரூபமெடுத்து அவதரிப்பதுபோல், அவ்விரு திருநாமங்களையும் நித்யம் ஸ்துதி செய்யும் காரணமாகவே சப்த ப்ருஹ்மம் என்று கூறப்படும் ஸ்ருதி தேவியும் அந்தந்த ஸந்தர்ப்பங்களில் அததற்குத் தகுந்த ரூப பரிக்ரஹம் பண்ணிக்கொண்டு அவதரிக்கிறாள். இவ்விஷயம்,

'வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
வேதः ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ॥'

இத்யாதி ப்ரமாணங்களால் ஸித்தம். ஆகையால் பூர்வ யுகங்களில் ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களின் சரித்ரத்தை வர்ணிப்பதற்காக வால்மீகி பகவான் வ்யாஸ மஹர்ஷி சுகப்ருஹ்மம் முதலிய மஹா கவிகளுடைய திருவாக்கிலிருந்து வேதங்கள் ஸ்ரீமத் ராமாயண மஹாபாரத பாகவதாதி ரூபமாய் ப்ரஸரித்தாப்போல், இந்த யுகத்திலும் அவை அபார காருண்ய வசத்தால் ஸ்ரீ வேங்கட ஸ்ரீரங்காதி திவ்ய க்ஷேத்ரங்களில் அர்ச்சா ரூபியாய் எழுந்தருளியிருந்து ஸமஸ்த ஜகத்தையும் அநுக்ரஹிக்கிற ஸ்ரிய: பதியின் சுபாஸ்ரய திவ்யமங்கள விக்ரஹத்தையும் ஸௌலப்ய ஸௌசீல்யாதி திவ்ய கல்யாண குணங்களையும் ஸ்தோத்ரம் செய்வதன் மூலமாய் ஸமஸ்த வேத ஸாரமான தத்வஹித புருஷார்த்தங்களை அதிவிஸதமாயும் நிஸ்ஸம்ஸயமாயும் ரஸ்யமாயும் ப்ரதிபாதநம் பண்ணுகிற ஸார்வாதிகார

மான த்ராமிட திவ்ய ப்ரபந்தங்களாக ஸ்ரீ பராங்குஶ பரகாலாதி முகேந ஆவிர்ப்பவித்திருக்கின்றன வென்று நிர்ணயிக்கத் தகும்.

இந்நிர்ணயத்துக்கு ப்ரதம ஹேது, அவைகளின் அர்த்த வைஶிஷ்ட்யமே யாகும். ஸகல வேதங்களுடைய உட்பொருளை ஆய்ந்தெடுத்த ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்கள் விஷயமாக '.........இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள்நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்று ஸமஸ்த சாஸ்த்ர பாரங்கதரான ஸ்ரீ தேசிகன் உத்கோஷித்திருப்பதே இதற்கு முக்ய நிதர்ஶந மாகும். 'மகிழ்ந்து பாடும்' என்கிற விசேஷணத்தினாலேயே இப்ரபந்தங்களின் உத்கர்ஷம் ஸூசிதமாகிறது. இதனால் அநந்யமான பகவத் பக்தியில் அநவரதம் ஆழ்ந்து கிடப்பதாலேயே 'ஆழ்வார்' என்று அஸாதாரண திருநாமம் பூண்ட இம்முனிவர்கள், தாம் அநுபவிக்கும் ப்ரஹ்மாநந்தத்தின் பரீவாஹமாகத் தம் நாதனைக் குறித்துப் பாடும் புகழ்க் கவிகள் அவருக்குச் சாத்தும் ஸுகந்த மாலைகள் போல் மாசற்றனவாகவும் அதிபோக்யமாகவும் ஸர்வ சாஸ்த்ரார்த்த கர்ப்பமாகவும் இருக்கும் என்று விளங்குகிறது. ஜந்மஸித்தமான பரமாத்ம பக்தியினால் ஸம்ப்ரக்ஷாலிதமான இவர்களது அந்தஃகரணத்தில் அஜ்ஞாநம் ஸம்சயம் விபர்யயம் முதலிய தோஷங்கள் சிறிதும் பற்றாததால், அயர்வறு மமரர்களாகிய நித்ய ஸூரிகளைப்போல் பரிபூர்ண விகாஸத்தை யடைந்த ஜ்ஞாநத்தையுடைய இவர்கள் திருவாக்கிலிருந்து வெளிவரும் சொற்களெல்லாம்

'ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநுதாவதி'

என்கிற கணக்கிலே தத்வத்தைச் சார்ந்திருக்குமே யன்றித் தவறியிருக்கமாட்டா வென்று அறுதி யிடக்கூடும். ஸ்ரீ கீதாசார்யன், தனது பக்தனும் சிஷ்யனும் ஸகாவுமான அர்ஜுநனுக்கு ஒருகாலத்தில் அநுக்ரஹித்த திவ்ய சக்ஷுஸ்ஸைக்கொண்டு அவன் ஸர்வ வேதாந்த ஸாரமாகிய 'ஜகத்ஸர்வம் ஶரீரம் தே' என்று பிதாமஹனால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டதான பகவானுடைய ஸர்வாந்தர்யாமித்வத்தை ஸாக்ஷாத்கரித்தது போல், ஆழ்வார்களும் தங்கள் பக்தி விசேஷத்தால் ப்ரீதனான பகவானால் அநுக்ரஹிக்கப்பெற்ற ஜ்ஞாந சக்ஷுஸ்ஸினால் அதீந்த்ரியார்த்த தர்சநஸமர்த்தர்களாய், ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களையும் ஸமஸ்த தத்வங்களையும் ப்ரத்யக்ஷீகரிப்பதால், இவர்களது திவ்ய ஸூக்திகள் வேதவாக்யங்களின் அந்தரங்கமான பாவங்களை அதிவிஶதமாய் விளக்கி, வேதோபப்ருஹ்மணங்களுக்குள் முதற் படியை அடைந்து நிற்கின்றன வென்பதற்குத் தட்டில்லை.

மேலும் விஷய வைலக்ஷண்ய மிப்படியிருக்க, தமிழ்ப்பாஷை 'ஸாரமவஸ்தி ப்ரஸூதா' என்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தவாறு அகஸ்த்யமுனி

வரிடமிருந்து தோன்றியதாகையால், அது ஆர்ய பரிக்ரஹத்துக்கு அநர்ஹமென்று நினைக்க இடமில்லை. கலி புருஷனுடைய ஜயகோஷம் எங்கும் வ்யாபித்துவரும் இக்காலத்தில், அவனுடைய விபூதிகளில் சேர்ந்த துர்மதிகள், கேவலம் துராக்ரஹணத்தினால் நமது பூர்வ மஹர்ஷிகளைப்பற்றி வாயில் வந்தபடியெல்லாம் பேசிய போதிலும், மஹர்ஷிகளால் ஆதரிக்கப்படாத பாஷை யாவது ஆசாரமாவது ஸத்துக்களுடைய அபிமாநத்துக்குப் பாத்ரமாகாதென்பதே தத்வவித்துக்களின் தீர்மாநம். அகஸ்த்யாதி மஹர்ஷிகள் த்ரிகால ஜ்ஞாநிக ளாகையால், காலாந்தரத்தில் ஆழ்வார்கள் அவதரித்து வேதார்த்தங்களை யெல்லாம் ஸர்வோபஜீவ்ய மாகும்படி வெளியிடுவார்கள் என்பதைக் கணிசித்தே, ஸம்ஸ்க்ருத ரீதியை அநுஸரித்துத் தமிழ்ப் பாஷைக்கு வ்யாகரணம் முதலியன ஏற்படுத்திப் பரிஷ்கரித்து, அதை அதி ம்ருதுவான சப்த ரசனையால் ஶ்ருங்கார பரிணமியான பக்தி ரஸத்தை ஆவிஷ்கரிப்பதற்கு அத்யந்தம் யோக்யமாக்கி, ஶாஸ்த்ரஜ்ஞர்களுடைய பஹுமாநத்துக்குப் பாத்ரமாம்படி செய்வித்தார்கள் போலும். தத்வ மிப்படி யிருக்க, வ்யதிரேகமே எங்கும் நிறைந்திருக்கும் இக்காலத்தில், சிலர், தமிழ்ப் பாஷை ஸம்ஸ்க்ருதத்தை ஆஶ்ரயித்த தென்பதை அதற்கு ஒரு பெருங் குறையாகக் கருதி, அது ஸம்ஸ்க்ருதத்தை எவ்விதத்திலும் சார்ந்ததல்லாத ஸ்வதந்த்ர பாஷை யென்று பெருமை கூறுகிறார்கள். இத்தகைய வாதங்கள் எல்லாம் சந்த்ரனுக்கு ஸூர்யனுடைய ஆஶ்ரயம் இல்லையாதென்றும், புதல்வனுக்குத் தந்தையின் ஸம்பந்தமில்லை யென்றும் கூறுவதைப்போல், உண்மை யறிந்தவர்களுக்குப் பரிஹாஸ ஹேதுவாகும்.

தவிரவும்: ஜகத்திலுள்ள ஸகல ப்ராஜைகளும் இப்போது காலக்ரமத்தால் பல வகையாக வேறுபட்டிருந்த போதிலும், ஆதிகாலத்தில் ஒரே மாதா பிதாவினிடமிருந்து உற்பத்தியானார்கள் என்கிற விஷயம் எல்லா சாஸ்த்ரங்களிலும் மதங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், அம்மாதிரியே தத்காலம் உலகத்தில் வழங்கிவரும் பாஷைகள் பஹுவிதமா யிருந்த போதிலும், இவைகள் எல்லாம் ஆதி மனிதர்கள் வ்யவஹரித்த ஒரு தாய்ப் பாஷையிலிருந்தே பிரிந்திருக்கவேண்டு மென்று நிச்சயிக்கத்தகும். அப்படி ஆதியில் வழங்கின பாஷை யாதென்று விசாரித்தால், அநாதியாய் அபௌருஷேயமாய் மற்றெல்லா க்ரந்தங்களுக்கும் முற்பட்டதென்று ப்ரஸித்தமாய் நிற்கும் வேதங்கள் எப்பாஷையில் அமைந்துளவோ அப்பாஷையே ஆதி பாஷையா யிருக்கவேண்டும் என்பதற்கு ஸந்தேஹமில்லை. முதலில் ஸ்ருஷ்டி காலத்தில் எல்லாப் பொருள்களின் பெயர்களும் பிரமதேவனால் வேத சப்தங்களினின்றே எடுத்துரைக்கப்பட்டன வென்று ஶ்ருதியிலும் ஸ்ம்ருதிகளிலும் கூறப்படுவதால், மேலே சொன்ன அநுமாநத்துக்கு ஶப்த ப்ரமாணத்தின் ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது. நாம் ப்ரத்யக்ஷத்தில் பரிசீலித்

தாலும், தமிழ் உட்பட மற்றெல்லாப் பாஷைகளிலும் வழங்கும் பொருளுள்ள சப்தங்கள், வெகுவாய் ஸம்ஸ்க்ருத பதங்களின் திரிபுகளாகப் புலப்படுகின்றனவே தவிர, இதற்கு வ்யதிரேகமாக இதர பாஷைகளிலிருந்து ஸம்ஸ்க்ருதத்துக்கு எப்பதமும் திரிந்து வந்திருப்பதாகக் காணப்படவில்லை. முதற் பதமாகிய ப்ரக்ருதிக்கும் அதன் திரிபாகிய விக்ருதிக்கும் பேதமென்னவென்றால், ப்ரக்ருதி சப்தம் பூர்ணமாயும் புஷ்கலமாயுமிருப்பதும், அதன் விக்ருதிகள் அப்படிக்கில்லாமல் ஏதாவது அம்சத்தில் விகலமாயிருப்பதுந்தான். இதற்கு ஒரு உதாஹரணம் எடுத்துக்கொள்வோம். 'மநுஷ்ய:' என்னும் ஸம்ஸ்க்ருத பதம் தமிழில் 'மனிதன்' என்றும், 'மனிசன்' என்றும் திரிபுகளை அடைந்திருக்கிறது. இவைகளுள் சப்த ஸ்வரூபத்தைக்கொண்டே எது ப்ரக்ருதியென்றும் எது விக்ருதியென்றும் ஸுலபமாய் நிர்ணயிக்கலாம். தவிர: அர்த்தத்தை விசாரிக்கும் பக்ஷத்தில், ப்ரக்ருதியாகிய 'மநுஷ்ய:' என்கிற சப்தத்துக்கு 'மநோர்ஜாத:' என்று வ்யுத்பத்தி சொல்ல முடியுமே தவிர, 'மனிதன்' 'மனிசன்' என்னும் பதங்களுக்கு, அவைகள் மநுஷ்ய சப்தத்தின் திரிபுகள் என்பதைத் தவிர வேறு விதமான வ்யுத்பத்தி சொல்ல முடியாது. இப்படி ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் என்கிற மூன்று ப்ரமாணங்களைக் கொண்டும் ஸம்ஸ்க்ருதம் தான் மற்றெல்லாப் பாஷைகளுக்கும் மூல பூதமான தாய்ப்பாஷை என்று நிராக்ஷேபமாய் ஸாதிக்கலாம். இதையே ஸரியான நிர்ணயமென்று முற்காலத்தில் பெரியோர் யாவரும் கைக்கொண்டிருந்தார்கள் என்பது பழைய தமிழ் நூல்களிலேயே விளங்கும். அப்படிக்கிருந்தும், ஸர்வ ப்ரகாரத்திலும் முறைதப்பின இக்காலத்தில், ப்ரமாணங்களைக் கவனிக்கவேண்டுமென்கிற பொறுப்பில்லாமல், அவரவருக்குத் தோன்றுவதையெல்லாம் சாஸ்த்ரமென்று கூச்சல் போடுபவர்களுடைய க்ஷணிகங்களான அபிப்ராயங்களையெல்லாம் தத்வைக த்ருஷ்டிகளான விவேகிகள் கவனிக்கவேண்டிய அவஸ்யமில்லை.

இது நிற்க: 'தமிழ்' என்கிற சப்தம் 'த்ரமிட' என்கிற ஸம்ஸ்க்ருத சப்தத்தின் திரிபாகவும், அது 'த்ராவிட' என்கிற சப்தத்தின் ரூபபேதமாகவும் ஏற்படுவதுடன், அது காரணமாகவே 'தமிழ்' என்னும் பதத்துக்கு 'இனிமையான' என்கிற அர்த்தம் ஏற்பட்டதென்றும் தோன்றுகிறது. இப்படி மெல்லிய இனிய சொற்கள் அமைந்திருப்பது பற்றியே, பகவத் பக்தி பரிதர்களான ஆழ்வார்கள் பகவானிடத்தில் தங்களுக்கிருக்கும் அடங்கா ப்ரேமையை வெளியிடுவதற்கும், அவன் திருவடிகளில் நித்ய தாஸ்யம் செய்ய அமையவேண்டும் என்கிற பெரும் பேற்றை யாசிப்பதற்கும் இப்பாஷையே தகுந்ததென்று, இதனில் தம் திவ்ய ப்ரபந்தங்களை இயற்றினார்கள் போலும். கல்ப ஸூத்ர வ்யாக்யாதாவான பெரியாழ்வாரும் பகவா

னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸாக்ஷாத்கரித்தவுடன், அதன் ஸௌந்தர்யத்தைக் கண்டு பரவசராய்ப் பாடிய திருப்பல்லாண்டும், அதை அநுஸரித்து அவனுடைய திவ்ய கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் வர்ணிக்கும் ப்ரபந்தமும் இப்பாஷையில் தானே அமைந்திருப்பதும், பிற்கால் ஆழ்வாரென்றும் ஆசார்யனென்றும் கொண்டாடத்தக்க கவிதார்க்கிக கேஸரியாகிய ஸ்ரீ வேதாந்ததேசிகனும் பகவானை அந்தரங்கமாய் அநுபவிப்பதின் பரீவாஹமாய் மும்மணிக்கோவை, நவரத்னமாலை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் பாக்கள் முதலிய தமிழ் ஸூக்திகளை அருளிச்செய்திருப்பதும் இதற்கு நிதர்சநமாகும். இப்படி, பகவத் ரஸாநுபவத்தில் ஆழ்ந்திருப்போர்க்கு அதை இப்பாஷையிலேயே ஆவிஷ்கரிப்பது ஸ்வரஸ ஸித்தமாயிருப்பதுமன்றி, 'ஸஹ போதயந்த: பரஸ்பரம்' என்கிற தர்மத்தை அநுஸரித்து, இந்த ஆராவமுதக்கடலை அநுபவித்து எல்லோரும் உஜ்ஜீவிக்கவேண்டுமே என்கிற பரிவினால், இம்மஹா காருணிகர்களான பக்தசிகாமணிகள் இப்ரபந்தங்களை ஸர்வஜந ஸாதாரணமான பாஷையில் அநுக்ரஹித்தார்கள் என்றும் நிச்சயிக்கலாம்.

இப்படி ஸர்வ ஸுலபமாய் அத்யந்த ரஸவத்தாய்ப் பகவானுடைய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையே முக்யமாய் ப்ரதிபாதித்து, அவனை அகிஞ்சநர்களான ப்ரபத்யதிகாரிகள் கூச்சமற்றணுகத் தட்டில்லையென்று வழிகாட்டும் ஸர்வ வேதாந்த ஸாரார்த்த கர்ப்பமான திவ்ய ப்ரபந்தமும், ஜகத்காரணத்வம் முதலிய பகவத் பாரம்யத்தை முக்யமாய் ப்ரதிபாதநம் பண்ணுகிற சக்தாதிகாரமாய் நிற்கும் வேதமும், பகவானுடைய திருவடியிணைபோல் ஸஜ்ஜநங்களுக்கு உபஜீவ்யமாகும் என்று கருதியே, கங்கா யமுநா ஸங்கமம் போலும் லக்ஷ்மீ நாராயணர்களுடைய சேர்த்தி போலும் பரம ஸௌபாக்யவத்தான உபய வேதாந்த ஸம்ப்ரதாயத்தை மஹர்ஷிகள் போன்ற நமது பூர்வாசார்யர்கள் ப்ரவர்த்திப்பித்தார்கள்.

ஜயதி விபுதநாதோ [illegible] நாத:
ஜயதி ச குருகேஸோ நாதயோகீ யதீந்த்ர: ।
ஜயதி நிகமாந்தாசார்ய தேஸிகோ தேஸிகேந்த்ர:
ஜயதி நிகமயுக்மம் ஸாதுஸேவ்யம் வரேண்யம் ॥

ஸ்ரீ:

ஜீவாத்ம தத்வ ஸ்வரூப நிரூபணம்

[ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ
தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி]

ஆத்ம சப்தமானது ஸ்நுவிகரணத்திலுள்ள 'ஆப்஌' தாதுவினல் நிஷ்பந்நமாகிறது. ['ஆப்஌ வ்யாப்தௌ—ஆப்நோதி : வ்யாபிக்கிறுன்.] அதிஸூக்ஷ்மமாக இருப்பதால் தன்னை விடப் பெரிதாக இருக்கிற எல்லா வஸ்துக்களையும் வ்யாபிக்கிறுன் என்பது திரண்ட பொருள். வேதாந்திகள், இந்த ஆத்ம சப்தமானது 'ஆப்஌' என்கிற தாதுவின் மீது 'மநிந்' ப்ரத்யயம் வந்து, ப்ரத்யய ஸந்நியோக சிஷ்டமாக, தாதுவிலுள்ள பகாரத்திற்குத் தகாரம் ஆதேசமாக வந்து நிஷ்பந்நமாகிறது என்று கூறுகிறார்கள். வையாகரணர்களோ, இந்த சப்தமானது சாகடாயநரால் சொல்லப்பட்டதும், பாணிநியினல் 'உணாதயோ பஹுளம்' என்று அஷ்டாத்யாயியில் மூன்றுவது அத்யாயத்தில் முதன்மையாகக் கூறப்பட்டுள்ள ஸூத்ரத்தால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுமான 'ஸாதிஹூஸ்ருதி ந்ருதிப்ய:' என்கிற ஸூத்ரத்தினல் 'அத' தாதுவின் மீது 'மநிந்' ப்ரத்யயம் வந்து, 'ணித்வ' ப்ரயுக்தமான ஆதி வ்ருத்தியும் வந்து நிஷ்பந்நமாகிறது என்கிறார்கள். 'அத ஸாதத்ய கமநே' ஹாதுவில் பரஸ்மைபதி தாதுக்களின் தொடக்கத்தில் இந்த தாது படிக்கப்பட்டிருக்கிறது. 'ஸாதத்ய கமநம் நாம ஸததகமநம்' என்று பால மநோரமையில் வாஸுதேவ தீக்ஷிதர் கூற்று. 'கமநம்' என்பதற்கு இங்கே ஜ்ஞாநம் என்பது பொருள். 'ஸர்வே கத்யர்த்தா ஜ்ஞாநார்த்தகா:' என்று சாப்திகர்களின் கொள்கை. ஆகையால் அப்பொழுதும் 'அறிவோடு கூடியிருத்தல்' என்கிற அர்த்தத்தை இந்த 'அத' தாது உணர்த்துகிறது. இதனல், ஆத்மா ஞானத்தை ஸ்ரூபமாகவும் அதையே குணமாகவும் உடையவன் என்பது ஸித்திபெறுகிறது. இந்த ஜீவாத்ம தத்வமானது இருபத்தாறு தத்வங்களில் உள்ளடங்கியது. ப்ரமாணங்களால் ஸித்திக்கும் பதார்த்தங்கள் தத்வங்களென்று பகரப்படுகின்றன. ஜட தத்வங்கள் இருபத்து நான்கு; சேதந தத்வங்கள் இரண்டு. ஆக தத்வங்கள் இருபத்தாறு. இந்த ஜீவாத்ம தத்வமானது இருபத்தைந்தாவது தத்வமென்று வேதாந்திகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜ்ஞானத்துக்கு ஆஸ்ரயனுக இருப்பவன் சேதநன். சரீரத்திற்கு ப்ரதி ஸம்பந்தி

யாக இருப்பவனை ஆத்மாவென்று சொல்லுகிறோம். ஸங்கல்ப விகல்பாத்மக ஜ்ஞானத்திற்கு ஆஸ்ரயனுக இருப்பதால் இவன் கர்த்தா.

இந்த ஜீவாத்மாவை ப்ரத்யகாத்மாவென்றும், பரம புருஷனைப் பரமாத்மாவென்றும் வ்யவஹரிக்கிறோம். சேதநத்வம், ஆத்மத்வம், கர்த்ருத்வம் முதலியவைகள், ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் பொதுவாக உள்ள லக்ஷணங்கள். அணுவான சேதநனுக இருப்பது ஜீவனுக்கு அஸாதாரணமான லக்ஷணம். இவன் எக்காலத்திலும் பரமாத்மாவுக்கு விதேயன் ; அதாவது : பரதந்த்ரன். இவனுக்கு ஒன்றிலும் ஸ்வாதந்த்ர்யம் எப்பொழுதும் கிடையாது. ஜீவாத்மாவுக்கு ப்ரத்யக்த்வமாவது தனக்குத்தான் ப்ரகாசித்தல் : (அதாவது: தன் ப்ரகாசத்துக்குத் தான் பலியாக இருத்தல்). பிறருக்கே ப்ரகாசிக்கும் வஸ்துக்களை நாம் பராக்குக்கள் என்று வ்யவஹரிக்கிறோம். 'என் சரீர'மென்று ஆத்மாவைக் காட்டிலும் வேருக சரீரம் வ்யவஹரிக்கப்படுவதால், சரீரம் ஆத்மாவல்ல. 'நான் கண்ணுல் பார்க்கிறேன் ; காதால் கேட்கிறேன்; வாக்கினுல் சொல்லுகிறேன் ; மனத்தினுல் நினைக்கிறேன்' என்று வ்யவஹரிக்கப்படுவதால், இந்த்ரியங்களும் ஜீவாத்மா அல்ல. 'என்னுடைய ப்ராணன்' என்று சொல்லப்படுவதால், ப்ராணனும் ஜீவாத்மா அல்ல். 'நான் அறிகிறேன்' என்று சொல்வதனுல், ஜ்ஞானமும் ஆத்மாவல்ல.

சரீரத்தைவிட்டு வெளிப்படுதல், ஸ்வர்க்கம் வைகுண்டம் நரகம் முதலிய ப்ரதேசங்களுக்குச் செல்லுதல் முதலிய செய்கையினுலும், ப்ரமாணங்கள் கூறுவதாலும், இந்த ஜீவன் அணுபரிமாண முள்ளவன். தீபம் சிறியதாக ஓரிடத்தில் இருந்தபோதிலும், தன்னுடைய ஒளியினுல் வீடு அனைத்தையும் வ்யாபிப்பதுபோல, இந்த ஜீவாத்மா அணுவாக இருந்தபோதிலும், தன்னுடைய தர்மபூத ஜ்ஞானத்தினுல் எல்லா ப்ரதேசங்களையும் வ்யாபிக்கிறுன். இவ்வித மிருப்பதால்தான், ஸௌபரி மஹர்ஷி முதலியவர்களுக்கும் முக்தர்களுக்கும் ஒரே ஸமயத்தில் அநேக சரீரங்களைப் பரிக்ரஹித்தல் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இவன் நித்யன்; பிறப்பு இறப்பு இல்லாதவன். பிறந்தான் இறந்தான் என்கிற வ்யவஹாரமானது கர்ம ஸம்பந்தத்தால் உண்டாகிற தேஹ ஸம்பந்த வியோகங்களைக் காரணமாகக்கொண்டு ஏற்படுகிறது. நித்யனுகவும் ஜ்ஞாந ஸ்வரூபியாகவு மிருக்கிற இந்த ஜீவனுக்குக் கர்ம நிமித்தமான தேஹ ஸம்பந்தம் ஏற்படும்பொழுது, 'பிறந்தான்' என்கிறோம். அவ்வாறே தேக வியோக மேற்படும்பொழுது, 'இறந்தான்' என்று சொல்கிறோம். இந்த ஜீவாத்மாக்கள் எண்ணிறந்தவர்கள்; நித்யர்களாக இருப்பவர்கள். அவர்கள், பத்தர்கள் முக்தர்கள் நித்யர்கள் என மூன்று வகைப்பட்டிருக்கிறார்கள். ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு, ஸுகதுக்கங்களை அநுபவித்து, ஜநந மரணங்களுக்கும் விலக்க முடியாத பிணிகளுக்கும் ஆட்பட்டு

வருந்துகிறவர்கள் பத்தர்கள். இம்மண்ணுலகில் பிறந்து, கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பத்தியோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டித்து, ஈஸ்வரனை ஆராதித்து, அவனுடைய பேரருளால் ஸம்ஸார பந்தத்தை அறுத்து, அதிலிருந்து மீட்சி அடைகிறவர்கள் முக்தர்கள். ஒருக்காலும் கர்ம ஸம்பந்தத்தால் உண்டாகிற ஸம்ஸாரமில்லாதவர்கள் நித்யர்கள். ஒவ்வொரு சரீரந் தோறும் இந்த ஜீவாத்மா வேறுபட்டிருக்கிறான். முந்தி அநுபவித்த விஷயங்களை 'நான் அநுபவித்தேன்' என்று நினைப்பதால் இவன் நித்யன்.

“ தேஹேந்த்ரியமந:ப்ராணதீப்யோ(அ)ந்யோ(அ)நந்யஸாதந: |
நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரம் ஆத்மா பிந்ந: ஸ்வத: ஸுகீ || ”

இந்த ஶ்லோகம் ஜீவாத்ம ஸ்வரூப நிர்ணயக ப்ரமாணம்.

ஜீவாத்மா ஒருவன் என்று வ்யவஹரிப்பது, ஜ்ஞாநத்தையே எல்லா ஜீவன்களும் உருவமாகக் கொண்டிருத்தலால். இதனால் ஸ்வரூபைக்யம் ஏற்படாது. 'நான் மநுஷ்யன், நான் தேவன், நான் கந்தர்வன், நான் யக்ஷன்' எனும் இப்படிப்பட்ட வ்யவஹாரங்களால் ஜீவன்கள் பலவகைப்பட்டவர்களாக ஏற்படுகிறார்களே என்றால், இந்த வ்யவஹாரம் சரீராத்ம ப்ரமத்தால் உண்டாகிறது. அபாதிதமான வ்யவஹாரமிருப்பதால் எப்படி இதை ப்ரமம் என்று சொல்லலாம் என்று வினவினால் ஸத்யம்—மேல் கூறப்படுகிறபடி இந்த வ்யவஹாரம் ஸத்யமென்றே சொல்லலாம். அதாவது : ‘ சரீரத்தைச் சொல்லுகிற சப்தங்கள் தன்னை மட்டும் உணர்த்தி நிற்காமல், சரீரியையும் சேர்த்து உணர்த்துகின்றன’ என்கிற ந்யாயத்தினால் மநுஷ்யன் தேவன் முதலிய தேஹத்தைச் சொல்லுகிற சப்தங்கள் அந்தந்தத் தேஹத்தை உணர்த்துவதோடு இராமல், அந்தந்த ஶரீரத்திலுள்ள ஜீவாத்மாவையும் சேர்த்தே உணர்த்துகின்றன. இந்த ஜீவாத்ம ஸ்வரூபத்தை, ஜ்ஞாநத்வம், ஆநந்தத்வம், அமலத்வம், அணுத்வம் முதலிய தர்மங்கள் நிரூபிக்கின்றன. பௌத்தர்கள், ஆத்மா க்ஷணிக ஸந்தாந ஸ்வரூபன் என்று பகர்கின்றனர். ப்ருதிவீ அப் தேஜஸ் வாயு ஸ்வரூபமாக இருக்கிற தேஹத்தை ஜீவன் அவதியாகக் கொண்டிருக்கிறான் என்று சார்வாகர்கள் சொல்கிறார்கள். ஜீவாத்மா எந்தெந்த தேகத்தி லிருக்கிறானோ அந்தந்த தேகபரிமாணமுள்ளவனென்று ஜைநர்கள் கூறுகின்றனர். ஸாங்க்யர்களோ வெனில், கர்த்ருத்வம் போக்த்ருத்வம் முதலிய தர்மங்கள் எல்லாம் ப்ரக்ருதிக்கேயன்றி, புருஷ சப்தவாச்யனான ஜீவனுக்கு ஒன்றுமே கிடையாது என்கிறார்கள். ஸமீபத்தில் இருக்கிற வஸ்துக்கள் கண்ணாடியில் ப்ரதிபலிப்பனபோல, ஸந்நிஹிதமான ப்ரக்ருதியின் ஸ்வரூபம் நிர்மலனான புருஷனிடம் ப்ரதிபலிக்கிறது. இந்தப் புருஷனைத் தவிர ஈஸ்வரன் வேறாகவில்லை என்கிறார்கள்,

“ மூலப்ரக்ருதிரவிக்ருதிர் மஹதாத்யா: ப்ரக்ருதிவிக்ருதய: ஸப்த |
ஷோடஶகஸ்து விகாரோ ந ப்ரக்ருதிர் ந விக்ருதி: புருஷ: || ”

என்பது அவர்களின் கொள்கை. ப்ருஹ்மாம்சம் ஜீவன் என்று யாதவ பக்ஷத்தார் கூறுகின்றனர். உபாதியுடன் கூடின ப்ருஹ்ம கண்டம் ஜீவனென்பது பாஸ்கரன் கொள்கை. நிர்விசேஷமான ப்ருஹ்மமே அவித்யையினால் கல்பிதமான ஜீவபாவத்துடன் கூடியதாக ப்ரமிக்கிறதென்று மாயாவாதிகள் கூறுகின்றனர். ஜீவாத்மாக்கள் நித்யர்களாகவும், ப்ருஹ்மத்திற்கு நியாம்யர்களாகவும், சரீரபூதர்களாகவும், ப்ரகார பூதர்களாகவும் இருக்கிறார்கள் என்பது ஸ்ரீ பகவத்ராமாநுஜ பாதாளுடைய மதம். பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் ஸர்வ ப்ரக்ாரத்தாலும் வேற்றுமை உண்டு; அந்தப் பரமாத்மா ஸர்வஜ்ஞன்; இந்த ஜீவாத்மகா கிஞ்சித்ஜ்ஞன், அவன் விபு; இவன் அணு; அவன் ஸ்வதந்த்ரன்; இவன் பரதந்த்ரன்; அவன் கர்மபந்த மற்றவன்; இவன் கர்மவஶ்யன்; பரமபுருஷன் தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துக்களாலும் அபரிச்சிந்நன்; இந்த ஜீவாத்மா தேச கால வஸ்துக்களால் பரிச்சிந்நன்; உலகிலுள்ள எல்லா வஸ்துக்களிலும், (அதாவது: சேதநங்களிலும் அசேதநங்களிலும்) ஜீவனுடைய அநுப்ரவேசமுண்டு; காஷ்ட லோஷ்ட பாஷாணாதிகளில் கூட ஜீவாத்மாக்களின் ஸாந்நித்யமுண்டு; மரம் செடி கொடிகளிடங்களிலும் சைதந்யமுண்டு; ஜலமில்லாமல் போனால் எவைகள் வாட்டமடையுமோ அவைகளெல்லாம் ப்ராணனுள்ளவைகள். ஆதலால் மரங்கள் முதலிய ஸ்தாவரங்கள் ப்ராணிகளே. இக்காரணத்தினாலேயே சாகுந்தல நாடகத்தில் சகுந்தலை பர்த்ரு க்ருஹத்துக்குப் போகும் தருணத்தில் கண்வ மஹர்ஷியானவர் மரங்களைப் பார்த்து,

“ பாதும் ந ப்ரதமம் வ்யவஸ்யதி ஜலம் யுஷ்மாஸ்வபீதேஷு யா
நாதத்தே ப்ரியமண்டநா(அ)பி பவதாம் ஸ்நேஹேந யா பல்லவம் |
ஆத்யே வ: குஸுமப்ரஸூதிஸமயே யஸ்யா பவத்யுத்ஸவ:
ஸேயம் யாதி ஶகுந்தலா பதிக்ருஹம் ஸர்வைரநுஜ்ஞாயதாம் || ”

[மரங்களே! உங்களுடைய அடியிலுள்ள பாத்தி பரிபூர்ணமாக ஜலத்தினால் நிரம்பினாலொழிய எவள் தீர்த்தத்தைக் கூட உட்கொள்வதற்கு முயற்சிக்கிறதில்லையோ, தன் தேஹத்தை அலங்கரித்துக் கொள்வதில் ப்ரீதியுள்ளவளாக இருந்தபோதிலும் கூட உங்களிடத்திலுள்ள அன்பினால் உங்களிடத்திலிருந்து தளிரைக் கூட எவள் கிள்ள மாட்டாளோ, நீங்கள் முதன்மையாகப் பூக்கும் தருணத்தில் எவள் அபரிமிதமான ஸந்தோஷம் ஏற்பட்டு உத்ஸவம் கொண்டாடுகிறாளோ,

அப்படிப்பட்ட இந்த சகுந்தலை தன் பர்த்தாவினுடைய க்ருஹத்துக்குப் போகிறாள். உங்கள் அனைவராலும் அநுமதி கொடுக்கப் படலாம்] என்று சொன்னார். அவைகளும் அந்த மஹர்ஷியின் வசநத்தைக் கேட்டவுடனே கோகில த்வநியினால் அநுமதி செய்யவே, மஹர்ஷி பரமஸந்துஷ்டராக,

> 'அநுமதகமநா ஶகுந்தலா தருபிரியம் வநவாஸபந்துபி: ।
> பரப்ருதவிருதம் கலம் யதா ப்ரதிவசநீக்ருதமேபிரீத்ருஶம் ॥'

நான் அநுமதி கேட்டவுடன் மதுரமான இப்படிப்பட்ட கோகில த்வநியானது என்னுடைய ப்ரஶ்நத்துக்கு உத்தரமாக இந்த மரங்களால் கூறப்பட்டபடியால், வநவாஸத்தினால் பந்துக்களாக இருக்கிற மரங்களால் சகுந்தலை அநுமதி கொடுக்கப்பட்டாள் என்று ஸந்தோஷித்துச் சகுந்தலையை அனுப்பினார். ஸகிகளும் சகுந்தலையை நோக்கிச் சகுந்தலே! உன் பிரிவாற்றாமையினால் இந்தத் தபோவநத்திலுள்ள செடி கொடிகளுக்கும் ப்ராணிகளுக்கும் ஏற்பட்டிருக்கிற துரவஸ்தையைக் கண்ணுற்றுப் பார் என்று சுட்டிக் காட்டி,

> "உத்கலிததர்பகவலா ம்ருக்ய: பரித்யக்தநர்தநா மயூரா: ।
> அபஸ்ருதபாண்டுபத்ரா முஞ்சந்த்யஶ்ரூணீவ லதா: ॥"

[சகுந்தலே! நீ பிரிந்து போவதால் ஏற்பட்ட துயரத்தினால் மான்கள் வாயிற் கொண்டுள்ள தர்ப்பங்களை உள்ளே விழுங்காமல், அவைகளை நழுவிக் கீழே விழும்படி செய்துகொண்டு உன்னையே நோக்குகின்றன. மயில்கள் உத்ஸாஹத்துடன் செய்யும் நர்த்தநத்தை விட்டு விட்டுக் கவலையுடன் உன்னையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. கொடிகள் உன் பிரிவாற்றாமையினால் கண்ணிலிருந்து நீர்த்துளிகளை உதிர்ப்பன போல் பழுத்த இலைகளை உதிர்க்கின்றன பார்] என்று கூறினார்கள். இந்த ஸந்தர்ப்பத்தை நோக்குங்கால், ஸஹ்ருதயன் எவன்தான், செடி கொடி மரங்களில் ஜீவஸாந்நித்ய முண்டு என்பதை விஶ்வஸிக்காம லிருப்பான். இது தான் மகா கவிகளின் க்ரந்த ஸ்வாரஸ்யம். ஏதோ ஒன்றை வ்யாஜமாகக்கொண்டு பண்டிதர்களோ பாமரர்களோ எல்லோரும் ஸந்தோஷிக்கும்படியாகவும், அவரவர்கள் குணங்களுக்கும் சீலத்துக்கும் தக்கபடி ரஸிக்கத் தக்கதான சரித்ரங்களையும் ரஸங்களையும் அமைத்து க்ரந்தங்களைச் செய்து, வ்யங்க்ய மர்யாதையால் தத்வார்த்தங்களை எடுத்துக் காட்டுவர். சிலர், வ்ருக்ஷம் செடி கொடி முதலியவற்றில் ஜீவஸாந்நித்ய முண்டு என்பதற்கு, ஸ்ரீமத் ராமாயணம் அயோத்யா காண்டத்தில் அறுபதாவது ஸர்க்கத்தில் உள்ள

> "அஸ்தி கச்சித் த்வயா த்ருஷ்டா ஸா கதம்ப ப்ரியா ப்ரியா ।
> கதம்ப யதி ஜாநீஷே ஶம்ஸ ஸீதாம் ஶுபாநநாம் ॥
> ஸ்நிக்தபல்லவஸங்காஶா பீதகௌஶேயவாஸிநீ ।
> ஶம்ஸஸ்வ யதி வா த்ருஷ்டா பில்வ பில்வோபமஸ்தநீ ॥
> அஶோக ஶோகாபநுத ஶோகோபஹதசேதஸம் ।
> த்வந்நாமாநம் குரு க்ஷிப்ரம் ப்ரியாஸந்தர்ஶநேந மாம் ॥'

என்னும் இவை போன்றவைகளை ப்ரமாணமாகச் சொல்ல முன் வந்தார்கள். அவைகள் ப்ரமாணங்களாகா. ஏனெனில்: ஸீதா வியோக துக்கத்தினால் உந்மாதத்தை அடைந்து, ப்ரஜ்ஞையை இழந்து, சேதநா சேதந விவேகமில்லாதிருக்கும் நிலைமையில் புலம்பின வசநங்களுக்கு அர்த்தமு முண்டோ? அவைகள் ப்ரமாணங்களாக ஒப்புக் கொள்ளத் தக்கவைகளாக ஒருக்காலும் ஆகமாட்டா. இந்த விஷயத்தில்,

> 'காமார்தா ஹி ப்ரக்ருதிக்ருபணாஶ்சேதநாசேதநேஷு ।'

என்கிற கவி சிகாமணியாகிய காளிதாஸன் வசநமும்,

> 'விஶ்லேஷேண க்ஷுபிதமநஸாம் மேகபூர்வாஞ் ச்ரோதாந்
> யாச்ஞா தைந்யம் ஸ்ப்ருஶதி ஸ்தாவரம் ஸம்விதந்தோ?"

என்கிற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய ஹம்ஸ ஸந்தேச காவ்யத்திலுள்ள வசநங்களும் ப்ரமாணங்களாக ஆதரிக்கத் தக்கவைகள். 'ஜீவாத்மா ஒன்றுதான்' என்று சொல்வதும், 'அந்த ஜீவாத்மா ஒரு தடவை தான் பிறப்பவன்: மறு பிறப்பு இல்லை' என்று சொல்வதும், ஒவ்வொருவனுக்கும் தனித் தனியாக ஏற்படுகிற ஸுக துக்காதிகளின் அநுபவத்தால் அப்ரமாணங்கள். ஜீவாத்மா ஒன்றாக இருந்தால், ஒருத்தனுக்கு ஸுகமுண்டானால் அது எல்லோருக்கு முண்டாகவேண்டும்; துக்கமும் அப்படியே. அப்படி உலகத்தில் காணப்படவில்லை. ஜீவனுக்கு மறு பிறப்பு இல்லை என்று சொல்லும் பக்ஷத்தில், பரம கருணாநிதியான பகவானுடைய ஸ்ருஷ்டியில் எல்லா ஜீவாத்மாக்களும் பிறவியிலேயே ஸுகிகளாகவும், தநிகர்களாகவும், அரோக த்ருடகாத்ரர்களாகவும், நல்ல குணமுள்ளவர்களாகவும், நல்ல அறிவுள்ளவர்களாகவும், கல்வியில் ஊக்கமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படி உலகில் ஒருவரும் காணப்படவில்லை. ஒருவன் பரம ஸுகியாகவும், ஒருவன் பரம துக்கியாகவும், ஒருவன் ரோகியாகவும், மற்றொருவன் த்ருடகாத்ரனாகவும், ஒருவன் நல்ல குண முடையவனாகவும், மற்றொருவன் துர்க்குண நிதியாகவும், ஒருவன் தநிகனாகவும், மற்றொருவன் தரித்ரனாகவும் காணப்படுகிறான். இவைகளுக்குக் காரணம், முன் ஜன்மத்தில் செய்த வினைப் பயன் என்

பதை ஒப்புக்கொண்டாலொழிய இதற்கு வேறு உத்தரம் சொல்ல முடியாது.

பத்த ஜீவர்கள், தேவர்கள் மநுஷ்யர்கள் திர்யக்குக்கள் ஸ்தாவரங்களென நான்கு வகைப்பட்டிருக்கின்றனர். இந்த ஜீவாத்மாக்களில் சில ஜராயுஜங்கள்; சில அண்டஜங்கள்; சில ஸ்வேதஜங்கள்; சில உத்பிஜ்ஜங்கள். கர்ப்பத்தில் சில காலம் வஸித்து வெளிப்படுகிற ஜீவன்கள் ஜராயுஜங்கள். முட்டையில் தோன்றிச் சில காலம் அந்த முட்டையிலேயே இருந்து பிறகு வெளிப்படுகிற ஜீவன்கள் அண்டஜங்கள். வேர்வையிலிருந்து தோன்றுகிற ஜீவன்கள் ஸ்வேதஜங்கள். பூமியைப் பிளந்துகொண்டு மேலே நோக்கி முளைத்து வருகின்றவைகள் உத்பிஜ்ஜங்கள். மனிதர்கள் மிருகங்கள் முதலியவைகள் ஜராயுஜங்கள். பறவைகள் பாம்புகள் முதலியவைகள் அண்டஜங்கள். கொசுக்கள் க்ரிமிகள் முதலியவைகள் ஸ்வேதஜங்கள். செடிகள் கொடிகள் மரங்கள் முதலியவைகள் உத்பிஜ்ஜங்கள். இந்த ஜீவன்கள், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்களுக்கு உடன்பட்டவர்கள். பிறக்கும் தருணத்தில் ஜீவவர்க்கங்களை ப்ரஹ்மாவோ ருத்ரனோ விஷ்ணுவோ ஒருவர் கடாக்ஷிக்கிறார். ப்ரஹ்ம கடாக்ஷத்துக்கு ஜீவன் பாத்ரனானால் ரஜோ குணத்தால் கவரப்படுகிறான்; ருத்ரனால் கடாக்ஷிக்கப்பட்டால் தமோ குணத்தால் ஆக்ரமிக்கப்படுகிறான்; விஷ்ணுவினால் கடாக்ஷிக்கப் பட்டால் ஸாத்விகனாக ப்ரகாசிக்கிறான். இந்த விஷயத்தில்,

> 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: ।
> ஸாத்விகஸ்ஸ து விஜ்ஞேயஸ்ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ॥
> பச்யத்யேநம் ஜாயமாநம் ப்ரஹ்மா ருத்ரோ(அ)த²வா புந: ।
> ரஜஸா தமஸா சாஸ்ய மாநஸம் ஸமபி⁴ப்லுதம் ॥'

என்கிற அபியுக்த வசநங்கள் ப்ரமாணங்கள். இந்த ஜீவன்களை ஸ்ருஷ்டிப்பதும் ரக்ஷிப்பதும் ஸம்ஹரிப்பதும் பரமாத்மாவின் கருணை கார்யமே. ப்ரளய ஸமயத்திலே கரணகளேபரங்களை இழந்து, ஜ்ஞாந ஸங்கோசத்தை அடைந்து, அசித்துக்கள் போல் இருக்கிற ஜீவன்களைப் பார்த்து நிர்வேதமுள்ள பரமபுருஷன், தன் தயையினால் கரணகளேபரங்களைக் கொடுத்து, ஸ்வாராதந ரூபமான கர்ம மார்க்கத்திலும் உபாஸநத்திலும் வழிபடச் செய்து, ஸம்ஸார பந்தத்தினின்று விடுபடச் செய்வோமென்கிற ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டிக்கிறான். இந்த விஷயத்தில்,

> 'அசித³விஶிஷ்டாந் ப்ரளயே ஜந்தூந்
> அவலோக்ய ஜாதநிர்வேதா ।
> கரணகளேப³ரயோக³ம்
> விதரஸி வ்ருஷஶைலநாத²கருணே த்வம் ॥'

என்கிற அபியுக்த வசநம் ப்ரமாணம். அவ்வாறே ரக்ஷணமும் கருணாதீநம். இது ப்ரஸித்தமாதலால் நிரூபிக்கவேண்டியதில்லை. 'உத்தம ஜாதியில் உத்தம குலத்தில் தோன்றி, நல்ல வித்யையைக் கற்று, நல்ல சரீரத்தைப் பெற்று, நல்ல கீர்த்தியையும் ஸம்பத்தையு மடைந்திருக்கிற ஒருவன், அகாலத்தில் உயிர் துறக்கும்போது எல்லோரும் வருந்துகிறார்களே; இப்படிப்பட்ட ஒரு மரணம் எப்படிப் பகவானுடைய கருணாகார்யமாகக் கொள்ளலாம்?' என்றால், அதுவும் கருணாகார்யம்தான். ஏனெனில்: நம்மால் அறிய முடியாததும், தொடர்ந்து வந்துகொண்டிருப்பதும், அநிஷ்ட பலத்தை விளைவிக்க ஸந்நத்தமாயு மிருக்கிறதுமான ப்ரபலமான தீவினையானது, இந்த ஜந்மத்தில் இந்த ஜீவனை அணுகாம லிருப்பதற்காகவாவது, அல்லது பலனைக் கொடுக்க ஸந்நத்தமாக இருக்கிற வரப்போகிற தீவினை இந்த ஜந்மத்தில் இந்த ஜீவனை நாடாமலிருப்பதற்காகவாவது, இவனை ஈச்வரன் ஸம்ஹரிக்கிறான். இதில்

> 'க்ஷுபி⁴தம் ஸதா தநூ ஸ்வபராயாதாம் நிரோதி⁴நீம் ஜக³த: ।
> பத்²யாஹாரகாரணே வ்ருத்திம் ஸம்ஹரகேஶிநாஶரஸி ॥'

என்கிற ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய வசநம் ப்ரமாணம். ப்ரஹ்மம் ஜீவன் கர்மம் இம் மூன்றும் அநாதியாக இருந்தபோதிலுங்கூட, கர்மாவானது அழிவுள்ளது. இந்தக் கர்மாவானது ப்ராரப்தம் ஸஞ்சிதம் ஆகாமி என்று மூன்று வகைப்பட்டுள்ளது. இப்பொழுது பலத்தைக் கொடுத்துக்கொண்டு அநுபவத்திலிருந்து வருகிற கர்மம் ப்ராரப்தம். முன் ஜந்மத்தில் நம்மால் சேர்த்துவைக்கப்பட்டதும் பலத்தைக் கொடுக்கப் போகிறதுமான கர்மாவானது ஸஞ்சிதம். இந்த ஜந்மத்தில் நம்மால் செய்யப்படும் வினைகளால் விளைகின்றதும், இனிமேல் பலனைக் கொடுக்க வரப்போவதுமான கர்மம் ஆகாமி என்றும் சொல்லப்படும். இந்தக் கர்மபந்தத்தை அறுத்து முக்தி ஸாம்ராஜ்யத்தைப் பெறுவதற்குக் கருணாநிதியான பரமாத்மாவினுடைய கருணை ஒன்றே அஸாதாரண ஸாதநம்.

> கல்பேஷ்வதீதபரஸங்க்²யேஷு ஸம்ஸக்தயா
> வாஸீ ஶாஶ்வதஸாரதீ கதி³நீபஸ்தாவிஹாரஸ்தஸ்கர: ।
> பஶ்சாத்தாபவஶாத்மநாப்³ஜநிவஹத்ஜ்ஞாநாத்மநோஷ்டாபிவ
> ஸ்தா²நம் ஜீவபரம் பராதிவஸதி பஶ்யாமி ஸம்ப்ரஸ்ஸ்யாதீ: ॥

(தொடரும்)

இதிஹாஸ புராணங்களில் ஸ்த்ரீ ஶூத்ரர்களின் அதிகாரம்

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர், சென்னை.]

[இவ்விஷயத்தில் ப்ரபலமான அபிப்ராயபேதங்கள் இருக்குமென்று ஆதியிலேயே நினைத்தோம். சுத்தமாய் சாஸ்திரத்தையே கொண்டு செய்யப் பட்ட இவ்விஷய விசாரணையில் உபர்யுபரி சர்ச்சையினாலேயே ந்யாயம் தெரியுமாகையால் இவ்வித விஷயங்களில் இப்பேர்க்கொத்த வ்யாஸங்கள் மிகவும் அபேக்ஷிக்கத் தக்கவைகள்—ப.]

வேதாந்த தீபிகையின் சென்ற புரட்டாசி மீ ஸஞ்சிகையில், ஸ்ரீ. உப. வித்வான் அநந்தாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்ட "வித்யா விஷயத்தில் ஸ்த்ரீகளின் அதிகாரம்" என்கிற உபந்யாஸத்தைக் கண்ணுற்றோம். அவர் அதில், ஸ்த்ரீகளின் படிப்பைக் குறித்து எழுதத் தொடங்கி; நம் நாட்டில் மேனாட்டு நாகரிகம் தலையெடுத்ததன் பயனாக ஸ்த்ரீகள் புருஷர்கள் என்கிற வேற்றுமையில்லாமல் எல்லோரும் ஓரே விதமாகவே படிக்கவேண்டு மென்கிற ஏற்பாட்டினா லுண்டாகும் குறைகளையும், நம் முன்னோர்களில் சிலரின் மநோபாவத்தை அநுஸரித்துப் பெண்களுக்குப் படிப்பே வேண்டியதில்லை யென்கிற வாதத்தில் உண்டான குறைகளையும் நன்கு எடுத்துக்காட்டி, அதன் பின், ஸ்த்ரீகளும் ஶூத்ரர்களும் மற்றுமுள்ளோர்களும் வேதத்தைத் தவிர மற்ற ராமாயணம் மகாபாரதம் மற்றப் புராணங்கள் தர்ம சாஸ்த்ரங்கள் முதலிய நூல்களை நேரில் படித்து உபயோகிக்கலா மென்றும் தகுந்த யுக்தி களைக்கொண்டு நிர்த்தாரணம் செய்திருக்கிறார்.

அவற்றிற்கு அவர் சொல்லும் யுக்திகளாவன :—

1. தத்காலம் ஆண்பிள்ளைகளுக்குப் படிப்பைச் சார்ந்ததாகச் செய்யப்படும் சடங்குகளில் முதலாவது அக்ஷராப்யாஸம். இதைச் செய்ய அதிகாரிகள் இன்னார்தாம் என்று கூறாமையால் ஸ்த்ரீகளும் ஶூத்ரர்களும் மற்று முள்ளோர்களும் அதிகாரிகளே.

2. "ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா ।
இதி பாரதமாக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம் ॥"

என்று ஸ்த்ரீ ஶூத்ரர்கள் படிப்பதற்காகவே ஸ்ரீ வேதவ்யாஸர் மகா பாரதத்தை எழுதியதாக ஏற்படுவதால், வேதத்தை ப்ராஹ்மணர்கள் எவ் விதம் உபயோகிக்கிறார்களோ, அவ்விதமே ஸ்த்ரீ ஶூத்ரர்கள் மகா பாரதத்தை உபயோகிக்க அதிகாரமுள்ளவர்களே.

3. ஸ்ரீ ஸஹஸ்ர நாமாத்யாயத்தில் 'யஇதம் ஶ்ருணுயாந்நித்யம் யஶ்சாபி பரிகீர்த்தயேத்' என்று தொடங்கி, 'ஶூத்ர: ஸுகமவாப்நுயாத்' என்றிருப்பதால், கேட்பதில் போல் படிப்பதிலும் ஸ்த்ரீ ஶூத்ரர்களும் அதிகாரமுள்ளவர்களே.

4. ராமாயணத்தைப் படிப்பதில் அதிகார முண்டென்பதற்கு, 'படந் த்விஜோ வாக்ருஷபத்வமீயாத்' என்றாரம்பித்து, 'ஜநஶ்ச ஶூத்ரோऽபி மஹத்வமீயாத்' என்று பாலகாண்டத்தில் ஸங்க்ஷேப ஸர்க்கத்தின் முடிவில் ஸ்ரீ வால்மீகி பகவானாலேயே 'படந் ஶூத்ர:' என்று அந்வயம் ஏற்படும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

5. இவ்வாறான அநேக வசநங்களின் அர்த்தத்தையெல்லாம் 'ஶ்ராவயேச்சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத:' என்ற ஸ்ம்ருதி வசநம் ஒன்றைக்கொண்டு மாற்றிவிடுவது உசிதமாகாது.

6. ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யாதாவான ஸ்ரீ கோவிந்த ராஜர், ஸங் க்ஷேப ஸர்க்க வ்யாக்யாநத்தில், 'படந்' என்ற வசநப்ரமாணத்தால் அவர் களும் ராமாயணத்தைப் படிக்கலாமென்று முதலில் சொல்லி, பிறகு முன் கூறிய ஸ்ம்ருதி வசநத்திற்கும் அதை ப்ரபலமெனக் கொள்ளும் பெரியோர் களுக்கும் பயந்து அவ்வர்த்தத்தை மறுத்துவிட்டு, வேறு விதமாகக் கூறியதும் உசிதமாகாது.

7. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் கீதையின் சரம ச்லோகத்தை ஜபிக்க அதிகாரம் ஸ்த்ரீகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், அதன் மூலம் பகவத் கீதையிலும், அதன் மூலம் முழு மகாபாரதத்திலும் அதிகார முண்டாகலாம்.

படிப்பினால் அடையவேண்டிய லக்ஷ்யம் இன்னதென்று உணராமலும், 'பரலோகம் ஒன்று உண்டு, தங்களுக்கும் மறு பிறப்பு ஒன்றுண்டு' என்ற எண்ணத்தையும் அறவே துறந்து, மேனாட்டு நாகரிகத்தில் மோஹங்கொண்டு

ப்ரமிக்கும் தத்காலத்திய ஸ்த்ரீகள், தாங்கள் அடையவேண்டியதாகக் கருதும் முன்னேற்றத்தின் விஷயத்தில் யாதொரு படியாலும் நாம் குறுக்கே நிற்க உத்தேசிக்கவுமில்லை; அப்படிச் செய்வது அவ்வளவாகத் தற் சமயம் பயனைத் தரமாட்டாதென்பதையும் நன்கறிவோம். ஸ்ரீமான் அநந்தாசாரியர் தத்காலத்திய ஸ்த்ரீகளின் விஷயத்தில் தாராள சிந்தையுடன் செய்ய முன் வந்த இவ்வுபகாரம் மிகப் பாராட்டத்தக்கதே யாயினும், அவர் ' இது தம்முடைய அபிப்ராயம்' என்று மாத்ரம் சொல்லி நிறுத்தாமல், 'இது சாஸ்த்ரீயமானது' என்பதால் மட்டும் அதன் உண்மை எவ்வாறானது என்று நாம் அதைச் சற்று விசாரிக்கவேண்டியதாயிற்று.

1. வேதத்தில் ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அதிகாரமில்லை யென்பதை இவர் பரிபூர்ணமாகவே அங்கீகரிக்கிறார். ஆயினும் வேதாங்கங்களான இதிஹாஸ புராணங்கள், தர்ம சாஸ்த்ரங்கள், ஜோதிஷம், இவைகளைப் படிக்க அதிகாரமுண்டென்கிறார்.

'ஶிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
கல்பஶ்சேதி ஷடங்கானி வேதஸ்யாஹுர் மநீஷிண: ॥'

என்றும்,

'புராண ந்யாய மீமாம்ஸா தர்மஶாஸ்த்ராங்க மிஶ்ரிதா: ।
வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தஶ ॥'

(யாஜ்ஞவல்க்ய)

என்றும், நான்கு வேதம், ஆறு அங்கம், மற்ற உபகாரகமான பாகங்கள் நான்கு, ஆக பதினான்கும் தர்மஸ்தாநங்களென்றும் வித்யாஸ்தாநங்களென்றும் சொல்லப்படுகின்றன. இவற்றில் நான்கு வேதங்கள் ப்ரதாநமானவை. அவைகளின் உண்மையான பொருளைச் செவ்வையாய்த் தெரிந்துகொள்ள மற்றைப் பத்தும் அபேக்ஷிதங்கள். ஆக, ப்ரதாநமான வேதங்களுடன் சேர்ந்து மொத்தம் பதினான்கு தர்ம வித்யா ஸ்தாநங்களெனப்படுகிறது. இங்கு ப்ரதாநமான வேதத்தில் அதிகாரமில்லாதவர்கள், அவைகளின் அங்கங்களில் மாத்ரம் அதிகாரமுள்ளவர்களாக எவ்வாறு ஆவார்கள்? மூலத்தில் அதிகாரமில்லாதவன் அதன் வ்யாக்யாநத்தை வாசிப்பதால் மட்டும் என்ன உபயோகத்தை அடைய முடியும்? வேதத்தின் அர்த்தத்தைச் சரிவரத் தெரிந்துகொண்டு, அதில் சொன்ன கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டியல்லவோ வேதத்தைக் கற்பது? மந்த்ர ப்ராம்ஹண அர்த்தவாத ரூபமாயிருக்கிற அவ்வேதம் சில விடங்களில் கலந்தும், சில விடங்களில் பிரிந்தும், சிற்சில விடங்களில் ஸங்கீர்ணமாயு மிருப்பதால், சில விடங்களில் சிற்சில வேத பாகங்கள் உத்ஸந்நமா யிருப்பதாலும், மந்தமதிகளான நம் போன்றவர்கள் அதன் அர்த்தத்தை எளிதில் தெரிந்துக்கொள்ள இயலாதென நினைத்தே, நம்முடைய ஸௌகர்யார்த்தமாக மந்வாதி மஹர்ஷிகள் ஸ்ம்ருதி புராண இதிஹாஸம் முதலியவற்றில் அவ்வர்த்தத்தை ப்ரகாசிப்பித்திருக்கிறார்கள். இவ்வர்த்தம்—

'ஸ்வல்பாயாஸா வைதிகா: ஶப்தா: ப்ரகீர்ணத்வாச்ச யே த்விஜா: ।
தேஷு ஸர்வவ்யவஸ்தார்த்தம் ஸ்ம்ருதிதந்த்ரே ப்ரதிஷ்டிதா: ॥'

என்ற மரீசி வாக்யத்தால் ஸ்பஷ்டம். ஸ்வல்ப ஜ்ஞாநமுள்ளவன் எங்கு வேதத்திற்கு அபார்த்தம் செய்து விடுவானோ வென்று வேதம் பயப்படுகின்றது. ஆனதால், வேதார்த்தத்தைச் செவ்வையாய்க் கண்டறிந்த மஹர்ஷிகளின் வாக்யங்களைக் கொண்டே வேதார்த்தத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டும். இதனை

'இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் ।
பிபேத்யல்பஶ்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி ॥'

என்கிற ஶ்லோகம் கூறுகின்றது. வேதமும் 'யத்வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்' என்று இம்மஹர்ஷிகளை, நன்கு வேதார்த்தத்தை யறிந்தவர்களென்று புகழ்ந்து கூறுகின்றது. உபப்ரம்ஹணத்திற்காக (வ்யாக்யாநத்திற்காக) ஏற்பட்ட க்ரந்தங்களில், தர்ம சாஸ்த்ரங்கள் வேதத்தில் பூர்வ காண்டார்த்தத்தை விசதமாக்க ஏற்பட்டனவென்றும், உபநிஷதர்த்தத்தை இதிஹாஸ புராணங்கள் விசதமாக்குகின்றன வென்றும்,

'ப்ராயேண பூர்வகாண்டஸ்ய உபப்ரும்ஹணம் தர்மஶாஸ்த்ரத: ।
இதிஹாஸபுராணாப்யாம் வேதாந்தார்த்த: ப்ரகாஶ்யதே ॥'

என்கிற வசநம் கூறுகின்றது. ஆக இத்தால், ஆபஸ்தம்பாதிகளின் ஸூத்ரங்களும், மநு முதலியவர்களின் ஸ்ம்ருதிகளும், வேதோக்தமான கர்மங்களை அநுஷ்டிப்பவர்களுக்கு வேண்டிய ப்ரகாரங்களை யெல்லாம் விசதமாயும் உதாஹரணபூர்வகமாயும் எடுத்துக் காட்ட வந்தவைகளே யல்லாமல், தனியே இவைகளுக்கு வேறு உபயோகமில்லை யென்றதாயிற்று. அப்படியே,

'ஶிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா'

என்கிற வ்யாகரணம் ஜோதிஷம் முதலிய க்ரந்தங்களும் வேதார்த்தத்தை நன்கு தெரிந்துகொள்வதற்கும், அபசப்தங்களைக் கர்ம காலங்களில் உச்சரிக்காமலிருப்பதற்கும், அக்கர்மங்களை எந்தெந்த காலங்களில் செய்யவேண்டுமென்பதற்கும் உபயோகப்படுகின்றனவாகும். இவ்வளவே யல்லாமல், தனியே இந்த க்ரந்தங்களிலிருந்து யாருக்கும் யாதொரு விதமாயும் ப்ரயோஜநம் ஏற்படமாட்டாது. ஆகையால் வேதாத்யயநத்திற்கு அதிகாரம் பெறாதவர்கள் இவைகளை வாசிப்பதால் அவர்களுக்கு என்ன உபயோகம்? உபயோக மில்லாமலிருப்பது மாத்ரமன்றிக்கே, இவ்வித்யா ஸ்தாநங்கள் பதினான்கையும் சூத்ரர் முதலியவர்கள் தொடக் கூடாது.

'ஷடங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: ।
புராணம் தர்மஶாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தஶ ।
யாந்யுக்தாநி மயா ஸம்யக் வித்யாஸ்தாநாநி பாரத ।
உத்பந்நாநி பவித்ராணி பாவநார்த்தம் ததைவ ச ।
தஸ்மாந்நைதாநி ஸ்த்ரீஶூத்ரை: ஸ்ப்ரஷ்டவ்யாநி யுதிஷ்டிர ॥'

என்று மகாபாரதம் ஆஶ்வமேதிக பர்வத்தில் 116-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குப் 'புராண' என்கிற சப்தத்தால் இதிஹாஸமும் க்ரஹிக்கப்படுகின்றது. வேதாந்தார்த்தத்தை உபப்ரஹ்மணம் செய்வதற்காக இதிஹாஸ புராணங்கள் ஏற்பட்டபடியால், அவைகளில் ஒன்றான புராணத்தைச் சொன்னதிலிருந்தே மற்றொன்றான அத்துடன் கூடவே படிக்கப்பட்ட இதிஹாஸத்திற்கும் க்ரஹணம் ஸித்தம். இங்குப் பதினான்கு வித்யாஸ்தாநங்கள் என்று கணக்கிடும் காலத்தில், இதிஹாஸ புராணங்கள் வேதாந்தார்த்தத்தை விசதமாக்க ஏற்பட்டவைகள் என்ற இவை யிரண்டிற்கும் ஒரே விதமான உபகாரம் என்பதை முன்னிட்டு, இவை யிரண்டிற்கும் ஒன்றோடொன்று விசேஷ பேதமில்லை யாதலால், ஒரே புராண பதத்தால் இரண்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் வேதாத்யயந மில்லாததால் வேதார்த்தத்தில் ஆபாத ப்ரதீதி உண்டாகக் கூடாதாகையால், அதை உபப்ரஹ்மணம் செய்வதற் கேற்பட்ட இதிஹாஸ புராணங்களிலும் அதிகாரமில்லை. உபகாரக மாகாவிட்டாலும் புராணார்த்தங்களை அவர்கள் ஸ்வதந்த்ரமாகவே கற்கலாகாதோ வென்பது முன் எடுத்த 'நைதாநி ஸ்த்ரீஶூத்ரை: ஸ்ப்ரஷ்டவ்யாநி' என்கிற நிஷேதத்தால் நிஷித்தமாயிற்று. ஆகவே ஸ்வதந்த்ரமாகவும் கற்க வழியில்லை; அங்கமாகவும் கற்க வழியில்லை. ஆனால் பாபக்ஷயார்த்தமாகச் சூத்ரர் முதலியவர்கள், இதிஹாஸ புராணங்களை, அதிகாரம் பெற்றவர்கள் மூலம் கேட்கலாமென்று மாத்ரம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா ।
இதி பாரதமாக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம் ॥'

என்று இங்கு, 'ஸ்த்ரீ சூத்ரர் முதலியவர்களுக்கு வேதம் காதில் படக்கூடாததாயிற்றே' என்று காருண்யத்தால் அவர்கள் கேட்கத் தகுந்தவாறு மகா பாரதம் வ்யாஸ பகவானால் அருளிச்செய்யப்பட்டது என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. இங்கு வேதத்தில் அதிகார மில்லாதவர்களுக்கு மஹாபாரதத்தில் அதிகாரமென்று சொல்லாமல், வேதம் கேட்கத் தகாதது பற்றி மகாபாரதம் செய்யப்பட்டதென்றால், மகாபாரதத்தைக் கேட்கலாமென்று மாத்ரம் ஏற்படுமே தவிர, அதைப் படிக்கலா மென்றும் சொல்ல முடியாது. 'த்ரயீ ந ஶ்ருதிகோசரா' என்கிற பதப்ரயோகத்தைக் கவனிக்கவும். ஸ்த்ரீ சூத்ரர்கள் தொடக் கூடாதென்று மகா பாரதத்திலேயே ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்க, அதற்கு விரோதமாக இவ்வசநத்தால் மஹா பாரதத்தை அவர்கள் படிக்கலா மென்பது எவ்வாறு பொருந்தும்?

இதை விசாரிக்கத் தொடங்கி ஸ்ரீமான் அநந்தாசாரியர், படிப்பைச் சார்ந்ததாகச் செய்யப்படும் அக்ஷராப்யாஸம் இன்னாருக்குத் தானென்று வ்யவஸ்தை ஏற்படுத்தாததால், அது எல்லோருக்கு முண்டென்கிறார். அதனால் இவருக்குக் கிடைத்த லாபம் என்னவோ தெரியவில்லை. இந்த அக்ஷராப்யாஸம் என்பது வைதிகமுமல்ல; ஸ்மார்த்தமுமல்ல. நித்யம் நைமித்திகம் காம்யம் இவைகளிலும் சேர்ந்த தல்லவென்று அவர் கூறுகிறபடி அங்கீகரித்தாலும், மேற்கொண்டு படிக்கப்போகிற வித்யைக்கு உபயோகப்படுமாறு அதற்கு வேண்டிய அக்ஷர சிக்ஷையைச் செய்விக்கும் ஒரு காரியம் ஜோதிஷ நூல்களில் ஒரு நல்ல நாள் பார்த்துச் செய்யவேண்டியதெனச் சொல்லப்பட்டு, நம் நாட்டில் த்ரைவர்ணிகர்களிடத்தில் அநுஷ்டாநத்திலிருந்து வருகிறது. இது வேதாத்யயநத்திற்கு அங்கமா அல்லது லௌகிகமான பாஷையைப் படிப்பதற்காக ஏற்பட்டதா வென்கிற விசார மிங்கு அநாவசியமானது. இது வேதாத்யயநத்திற்கு அங்கமென்று ஏற்படுமாகிலும், ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு இதில் முதலே அதிகாரமில்லை. லௌகிக வித்யாப்யாஸத்திற்காக வென்றால், இவர்கள் எந்தெந்த க்ரந்தங்களைப் படிக்க அதிகார முள்ளவர்களாகிறார்களோ, அவைகளைப் படிக்க இது பூர்வாங்கமாக உபயோகப்படுமே யல்லாது, நிஷித்தமான பாகங்களைப் படிப்பதற்கும் இது உபகாரப்படுகிறதென்று எவ்வாறு சொல்வது? அக்ஷரசிக்ஷையின் மூலமாக எல்லாவற்றையுமே படிக்க உபகாரமாகிறதெனில், வேதத்தையும் படிக்க உபயோகமாகலாமே. வேதத்தைப் படிக்க அவர்களுக்கு உபநயந மில்லையே யென்றால், உபநயந மில்லாமலேயே படிக்கலாமே. அது சாஸ்த்ரத்தில் நிஷித்த

மென்றால், மகா பாரதாதிகளையும் அவர்கள் படித்தல் சாஸ்த்ர நிஷித்த மென்று முன்னமேயே காட்டப்பட்டது.

உண்மையில் இவ்வக்ஷராப்யாஸம் அதை விதிக்கும் நூல்களி லெல்லா வற்றிலுமே த்விஜர்களுக்கு வேண்டிய ஜாதகரணம் நாமகரணம் அந்நப்ரா சநம் சௌளம் முதலியவற்றைச் சொல்லி, அதன் பின் அக்ஷராப்யாஸத்தை உபதேசித்து, மேற்கொண்டு உபநயநம் முதலியவற்றையு முபதேசித்திருப்ப தால், முன்னும் பின்னுமிருக்கும் கர்மங்கள் த்விஜர்களுக்கே யானவை பற்றி, அதன் நடுவே யிருக்கும் அக்ஷராப்யாஸமும் த்விஜர்களுக்கே யானதென்று சொல்லவும் இடமுண்டு. இதன் விரிவு இங்கு ப்ரயோஜந மதிக மில்லா மையை யுத்தேசித்து அவசிமல்லாதது.

2. இரண்டாவது யுக்தியாக ஸ்ரீமான் அநந்தாசாரியர் எடுத்தது—'स्त्रीशूद्रद्विजबन्धूनां' என்கிற ப்ரமாணத்தை அநுஸரித்து, ப்ராஹ்மணர்கள் எவ்விதம் வேதத்தை உபயோகிக்கிறார்களோ, அவ்வாறே இவர்களும் மஹா பாரதத்தை உபயோகிக்க அதிகார முள்ளவர்க ளென்பது. அவ் வசநத்தில் 'त्रयी न श्रुतिगोचरा' என்கிற பதங்களின் ஸ்வாரஸ்யத்தையும் மற்ற நிஷேத வசநங்களையும் அநுஸரித்து, அவர்கள் மஹாபாரதத்தைக் கேட்க மாத்ரம் அதிகார முள்ளவர்களென்று முன்பே நிஷ்கர்ஷித்தோ மாதலால் இதுவும் நிரஸ்தமாயிற்று. மேலும் வேதத்தை ப்ராஹ்மணர்கள் உபயோகிப்பது போல் இவர்களும் மஹாபாரதத்தை உபயோகிப்ப தென்றால், வேதோக்தமான எல்லாக் கர்மங்களையும் ப்ராஹ்மணர்கள் அநுஷ்டிக்கத் தட்டில்லாதபடி, மஹா பாரதத்திலும் பஞ்சமஹா யஜ்ஞங்களைப் பற்றியும் பக்தியோகத்தைப் பற்றியும் விஸ்தாரமாகக் கூறியிருப்பதால், இவர்கள் அவைகளையும் அநுஷ்டிக்கத் தடையிராமல் போகு மல்லவா? இது இந்த ஸ்வாமிக்கும் ஸம்மதமாகாதே. ஆனால் அஹிம்ஸை ஸத்யவசநம் சரணாகதி இவைகளிலுங் கூட அதிகாரமில்லாமற் போகாதோ வெனில், அது தனிப்பட்ட அந்தந்த விதிவாக்யங்களின் பலத்தால் கிடைப் பதாகும். அதைக்கொண்டு மற்றதைக் கல்பிக்கப் புகுந்தால் முன் சொன்ன அதி ப்ரஸங்கம் வரும்.

3. ஸஹஸ்ரநாமாத்யாயத்தில் 'य इदं शृणुयात्' என்று தொடங்கி, 'शूद्रः सुखमवाप्नुयात्' என்றிருப்பதும் இவருக்கு அநுகூலமில்லை. இங்கு எவனொருவன் ஸஹஸ்ர நாமத்தைக் கேட்கிறானோ, எவனொருவன் சொல்லுகிறானோ, அவர்களுக்கு ஏற்படும் பலன்களைச் சொல்லும் கோவையில், ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்யர்களுக்குப் பலனைச் சொல்லிவிட்டு, சூத்ரன் ஸுகத்தை யடைவான் என்று சொல்வதால்,

சூத்ராதிகளும் அதைப் படிக்கத் தகுந்தவர்களென்று இவர் அபிப்ராயம். 'எவன் கேட்கிறானோ, எவன் சொல்லுகிறானோ' என்று அநுவதித்து அவர்களுக்குப் பலன்களைச் சொன்னால், அவன் எதில் அதிகாரமுள்ளவனோ அதன் மூலம் அவனுக்கு அப்பலம் கிடைக்குமென்று கொள்வதுதான் உசிதமே யல்லாது, நிஷேத வசநங்களையும் மீறி, அதிகார மில்லாதவற்றிலும் இவ்வநுவாத ரூபமான வசநம் அதிகாரத்தையும் கல்பிக்கச் சக்தியுள்ள தாகா தென்பது மீமாம்ஸா ந்யாயஸித்தம். ஆகையால் 'यश्चापि परिकीर्तयेत्' என்ற பாகத்தை, 'शूद्रः सुखमवाप्नुयात्' என்றதோடு அந்வயிக்க வழியில்லாததால், 'शृणुयात्' என்பதை மட்டும் அந்வயித்து, ஸஹஸ்ர நாமத்தைக் கேட்கும் ஸ்த்ரீ சூத்ரர்கள் ஸுகத்தை யடைவார்க ளென்றே பொருள் கொள்ளவேண்டும்.

ஸ்ரீ சங்கராசார்யரால் செய்யப்பட்டிருக்கிற ஸஹஸ்ர நாம பாஷ்யத்திலும்—

'शूद्रः सुखमवाप्नुयात् श्रवणेनैव, न तु जपयज्ञेन। तस्य जपयज्ञेष्वनधिकारात् इति श्रुतेः। श्रावयेच्चतुरो वर्णान् कृत्वा ब्राह्मणमग्रतः इति महाभारते श्रवणमनुज्ञायते। सुमतियाश्च श्रवणाच्च शूद्रयोनिः इति हरिवंशे। यः शूद्रः शृणुयादिमं सुखमवाप्नुयात् इति व्यवहितेन सम्बन्धः। न त्वनन्तरेण कीर्तयेदित्यनेन'

என்று 'यश्चापि परिकीर्तयेत्' என்பதை 'शूद्रः' என்பதுடன் அந்வயிக்க அநேக பாதங்க ளிருப்பதாக நினைத்தே அத்துடன் சேர்க்காமல் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது.

4. ஸ்ரீமத் ராமாயண ஸங்க்ஷேப ஸர்க்கத்தின் முடிவிலும், 'जनश्च शूद्रः' என்று அந்வயம் ஏற்படும்படி கூறியதும் முன் சொன்ன ரீதியில் அநுவாத ரூபமானதால், தனிப்பட்ட வசநங்களுடன் விரோதம் வாராமல் கொள்ள வேண்டிய தவசியமாதலால், 'जनः' என்கிற பதத்தை 'जानयन्' என்கிற பதத்தின் ஸ்தாநத்தில் வந்ததாக வைத்து, அப்பொழுது 'இதரர்களைப் படிக்கும்படி செய்து' என்று அதன் பொருளாதலால், 'தான் கேட்டு ஸுகத்தை யடைவான்' என்று கொள்ள வியலு மாதலால் இவருக்கு அநுகூலமாகாது. ஸ்ரீ கோவிந்த ராஜரும் இதற் கிணங்க, 'இங்கு 'शृण्वन्' என்கிற பதத்தைக் கூட்டிக்கொண்டு, அர்த்தம் செய்து கொள்ளவேண்டும்,' என்று எழுதியிருக்கிறார்.

5. ஒரு ஸ்ம்ருதி வசநத்தைக்கொண்டு அநேக ப்ரமாண வசநங்களின் அர்த்தத்தை மாற்றக் கூடாதென்பதும் அழகல்ல. இவ்விஷயம் மிகவும் ஸூக்ஷ்மமானது. இங்கு எந்த வசநத்தைக்கொண்டும் எந்த ப்ரமாணங்களின் அர்த்தத்தையும் மாற்ற முன் வரவில்லை. இவர் எடுத்த வாக்யங்களெல்லாம் அநுவாத ரூபமாயிருந்து அந்யாவஸித்தமாவதால், அவ்வசநங்களுடன் மற்ற எதற்கும் விரோதமே யில்லை. விரோத மிருந்தா லல்லவோ பலாபல சிந்தை செய்யவேண்டும். ப்ராபல்ய தௌர்ப்பல்ய விஷயத்தில் ப்ரமாணங்களின் அந்யதாஸித்தியும் அநந்யாவஸித்தியுமே நியாமகமே யொழிய அவைகளின் ஸங்க்யை நியாமகமாகாது. துர்ப்பல லிங்கங்கள் பல இருந்தென்ன? ஒரு ச்ருதியால் அவைகள் பாதிக்கப்பட வில்லையா? ப்ரத்யக்ஷத்தை உபஜீவித்து வரும் அநுமாநத்தாலும் ப்ரத்யக்ஷ ப்ரமாணமே பாதிக்கப்படுவதையும் காண்கிறோ மல்லவா?

6. ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யாதாவான ஸ்ரீ கோவிந்த ராஜர், முதலில் யதாச்ருதமாக வ்யாக்யாநம் செய்தபோதிலும், பின்னிட்டு ப்ரபல ப்ரமாணங்களுக்கும் பெரியோர்களின் கொள்கைக்கும் பயந்து, தம்முடைய அர்த்தத்தை மாற்றிக்கொண்டது மிகவும் உசிதமே. ப்ரபல வசந விரோதத்தில் ஆஸ்திகரான யார்தான் பயப்பட மாட்டார்கள்? அல்லது முதலில் சொன்ன அர்த்தம் அவருடைய ஸொந்த அபிப்ராயமா யிருக்கலாம். அதனாலும் ஸ்ரீமான் அநந்தாசாரியருக்கு யாதொரு லாபமும் கிடைத்து விடவில்லை. ஜபத்திற்கு ஸமாநமாக வெறும் படநத்தில் மட்டுமல்லவோ அதிகார மென்கிறார். அர்த்த விசாரம் செய்யவோ இடங் கொடுக்கவில்லை.

7. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் கீதையின் சரம ச்லோகத்தில் ஸ்த்ரீ முதலியோருக்கு அதிகார மிருப்பதையொட்டி மற்ற க்ரந்தங்களிலும் அதிகார முண்டாயிருக்கவேண்டு மென்றதும், ப்ரத்யேகமான வசநங்களால் தனிப்பட்ட சிற்சில விஷயங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு எல்லாவற்றிலுமே அதிகாரத்தைக் கல்பிக்கலாமானால், சரம ச்லோகத்தின் மூலம் கீதையைப் படிக்க அதிகாரமுண்டென்று சொன்ன ரீதியில் அந்தக் கீதையில் சொல்லப்பட்ட பக்தி யோகத்திலும் அதிகார முண்டென்று ஏன் சொல்லலாகாது? 'தஹி வக்த [illegible]' என்றபடி தனிப்பட்ட வசநங்களால் அதிகாரமோ அநதிகாரமோ ஏற்பட்ட பின், ஒன்றைக்கொண்டு மற்றொன்றிலும் அதிகாரத்தைக் கல்பிப்பது பொருத்தமானதாகாது.

'சரம ச்லோகத்தில் ஸ்த்ரீகளுக்கும் சூத்ரர்களுக்கும் அதிகாரம் கொடுத்த ஸ்ரீ வைஷ்ணவர்கள், மஹாபாரதத்தைப் படிக்கவும் அவர்களுக்கு

அதிகார முண்டென்றே அபிப்ராய முள்ளவர்கள்' என்று இந்த ஸ்வாமி கருதுகிறார். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தர்களான ஸ்ரீ பாஷ்யகாரர், ச்ருதப்ரகாசிகாசார்யர், ஸ்ரீ வேதாந்த தேசிகன் முதலானோர் ஸ்த்ரீ சூத்ரர்களுக்குச் சரம ச்லோகத்தை உபதேசிக்கும் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களே; அவ்வாறு உபதேசித்தும் வந்தவர்கள் தாம். ஆயினும் அவர்களுடைய க்ரந்தங்களில் இவ்வபிப்ராயத்திற்கு மாறாக நிர்த்தாரணம் செய்யப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

ஸ்ரீ பாஷ்யம் அபசூத்ராதிகரணத்தில்—

'[illegible]'

என்றும், ச்ருத ப்ரகாசிகையில் அதே இடத்தில்:

'[illegible]'

என்றும்,

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ந்யாய பரிசுத்தியில்—

"[illegible]"

தஸ்மாச்சாதுர்வர்ணிகஸ்யைவ தவ்யாதி । தத்₃ப்₃ராஹ்மணே வித்₃யா ப்ராப்த்யேயஶூத்₃ரஸ்யாதாய அயிமர்ஜவத்₃யாதி । க்ஷத்ரிய வைஶ்யா ஸ்யாம் யஶூத்ரஸ்யாதாயைவ । * * * * தத்₃ஸ்யேஷாம் கஶூப்₃ரஹ்ம ஈரம்ஸாவவோபதநஹித ரூவவ்யேய அதிகாரா: தேஷாமேவ நாத்யயூவபத்தஸாயிதபா யஶூவித்₃யாஸ்யாநாஹிதந்யாயவிஸ்தராயிகார இதி ஸித்₃த₄ம் ॥’

என்றும், அதிகரண ஸாராவளியிலும் அப ஶூத்ராதிகரணத்தில்—

“ ஶூத்₃ராணாம் ஹார்த₃ஷே: ஶ்ரவணமநநம் வாவஶாஸ்த்ராதி விஸைஷ்ய வேதா₃த்₃யாவாத ப₃ந்தி₄யத₃ தயிகாரணா தோவவைம் ஹேதுதைஸ்ஸ்:। வித்₃யாஸ்யாநாதி ஶூத்₃ரே ஶூத்₃ராதி₃ க₃யந்தாணவாய விஸஸ்த₂ வஸ்ஸ்தவ்யாதி தஸ்மாந்நிஹி விகரயியாம் வித்₃யாவாவஸாயிகாரா: ॥ ”

என்றும் ஸித்தாந்தம் செய்திருப்பதால், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர் எவருக்கும் இவ்வழி ந்யாய்ய மென்று கொள்ள ருசிக்க மாட்டாதென்பது நிச்சயம்.

பிழை திருத்தம்

சென்ற (கார்த்திகை) மாதத்து ஸஞ்சிகையில் ‘ஸ்ரீ கீதாசார்யனும் தென் குருகூர் நம்பியும்’ எனும் வ்யாஸத்தில் 285—ம் பக்கத்தில் 21-22—வது வரிகளைப் பின் வருமாறு படிக்க.

“பிறர் அனர்த்தங் கண்டால் ஐயோ! என்று இருந்தானாகில், நமக்குப் பகவத் ஸம்பந்தம் உண்டு என்று இருக்க அடுக்கும். இத்தனையும் பட்டிடுவானுக்கு என்று இருந்தானாகில், நமக்குப் பகவத் ஸம்பந்தம் இல்லையென்று இருக்க அடுக்கும்.”

ஸ்ரீ:

“ இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன் ”

அல்லது

மண்ணாசை நீத்த மன்னர் மன்னர்.

(ஸ்ரீமான் உ. வே. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், சென்னை.)

பொருளாசை, மண்ணாசை, பூங்குழலார் போகத்திருளாசை என்கிற ஈஷணாத்ரயங்களையும் வெறுக்கவேண்டும் என்பது பெரியோர்கள் உபதேசம். இவற்றுள் ‘ நாஹம் அர்த்தபரோ தேவி ’ என்றவிடத்திலும், ‘ ஹ்ருஷ்டோ ஸஹத்யம் வரோஹமி ரொகெ ’ என்ற விடத்திலும், பெருமாள் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தபோது பேசிய பாசுரங்களில் பொருளாசை நிஷேதிக்கப்பட்டது.

“ ந ராம: பரதா₃ராம்ஸ்து சக்ஷுர்ப்₄யாமபி பஶ்யதி ”

என்கிற கைகேயி வாக்யத்தாலும்,

“ மித்₂யாவாக்யம் நதேஹேதம் நஹிஷ்யதி ராவண ।
க₃ந்தோதிதாஷணம் ஸ்ரீணாம் வரேஷாம் யஶூதாஸதி ॥ ”

என்கிற பிராட்டி வாக்யத்தாலும், பரதார பராங்முகம் கௌரவிக்கப்பட்டபடியால், ஸ்த்ரீகள் விஷயத்தில் ஆசையும் ஒதுக்கப்பட்டது.

தசரத மன்னவர்க்கு நான்கு புதல்வர்கள் அஸஹாய ஶூரர்களாயும் மஹாத்மாக்களாயும் பிறந்திருந்தும், அவருக்குப் பிறகு அவரது ராஜ்யத்தை ஆள்வதற்கு ஆளில்லாமல் அங்காலவரும் வேண்டாமென்று தள்ளிய வ்ருத்தாந்தத்திலிருந்து மண்ணாசையும் ஆகாதென்று உணரலாம். எப்படியெனில்:

மூத்த குமாரராய் முடி சூட ப்ராப்தியுடையரான பெருமாள், ராஜ்யத்தை ஒரு பொருட்டாய் மதியாது வனம் செல்ல இசைந்தார். நேற்று

தமக்கு அளிக்கப்பட்ட ராஜ்யம் இன்று தம்ம தல்லவென்று ஏற்பட்ட போது, சிறிதளவேனும் கலக்க மிருக்காதா? இவ்விடத்தில் வால்மீகி மஹர்ஷி ஆச்சரியப்பட்டுப் பின்வருமாறு பேசுகிறார் :—

" உதீவதவத்ஸம் வரஹம் வதனத்ரம்
தமெவ ராஜ்ஞ: ப்ரவிவேஶவேஶ்மகம் ।
ப்ரவிவ்ஶதஸ்தாவி ஶஹாந்தஹாவோ
ராஜா தம் வாத்ருவஸ்வதாஸிதவ்: ॥ "

கைகேயி அப்பொழுது சொன்ன சொல் மஹர்ஷிக்கு இப்போது தாங்க முடியவில்லை. பெருமாள் எப்படியோ அச் சொல்லைக் கேட்டும் இவ்வண்ணம் சோகமும் வ்யதையும் சிறிதுமின்றி நிற்பது மஹர்ஷிக்கே வியப்பாகிறது. இந்த நிலையை அநுபவித்த கம்பரும், தம்மை மறந்து ஈடு படுகிறார் இவ்வாச்சர்யத்தில்.

" இப்பொழு தெம்மனோரா லியம்புதற் கெளிதே யார்க்கும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்தசெந்தா மரையினை வென்ற தம்மா. "

'ராஜ்யம் உனக்கில்லை' என்ற வாசகம் செவிப்பட்டவுடன், திருமுகச் செவ்வி அன்றலர்ந்த செந்தாமரையினும் மலர்ந்து விளங்கிய தென்றால், ராஜ்யத்தில் பெருமாள் எவ்வளவு பற்று வைத்திருந்தா ரென்பது ஒருவாறு விளங்குமன்றோ? பெருமாளுடைய இத்தகைய வைராக்யத்தைப் பின்புள்ளோர் புகழ்ந்தது மட்டோடில்லை. பிராட்டி இவ்ருத்தாந்தத்தைப் பேசும் போதும் நினைக்கும்போதும் மிகுந்த உவகை தோற்ற அருளிச் செய்வதுண்டு.

ஸுந்தர காண்டத்தில் திருவடியினிடம் இந்தப் பட்டாபிஷேகக் கதையைப் பேசும்போது பிராட்டி,

" ஸமீக்ஷ்ய ஸம்பாரம் ஶ்ரீமத் அபிஷேகார்த்தம் ப்ரியம் ।
உதவாச வஸ்வசாவர்த்ய வாசா ப்ரதிமஸதவா ॥ "

என்று வர்ணிக்கிறாள். பெருமாளுடைய அந்தரங்க ஹ்ருதயத்தை அறிந்தவளாகையால், முதலில் மனத்தால் அங்கீகரித்துப் பிறகு வாக்கால் இசைந்தமையை நன்கு எடுத்துக் காட்டுகிறாள். இது பெருமாளிடத்தில் தான் காணலாம். அப்ரிய கார்யத்தை நிர்ப்பந்தத்தின் பேரில் ஒப்புக்கொள்வோ

ரெல்லாரும் முதலில் வாக்களித்து விட்டுப் பிறகு மனத்தை இசைவித்துக் கொண்டு ஆசையை விடுவது உலக இயல்பு. அதற்கு மாறாகப் பெருமாள் முதலில் மனத்தினால் உதறிப் பிறகு வாக்கால் உதறினார் அபிஷேகத்தை. இதுவும் பெருமாளுடைய பற்றின்மையைக் காட்டும். அசோக வனத்தில் ப்ரலாபிக்கும்போது பிராட்டி அகக் கண் முன்னர் இந்த ஆச்சர்யமான ஸந்நிவேசம் தோற்றினபடியை அநுபவிக்கும் விதம் காண்க.

" மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்குமு கத்தினை யுன்னுவாள். "

ராஜ்ய நஷ்டம் போன்ற கஷ்டங்களால் வாடாத ஒரு அற்புதமான மலர்போலும் இது !

பெருமாள் ராஜ்யத்தை விரும்பாதிருந்தது இவ்வண்ணம் நிற்க, அவருக்கு அடுத்த ராஜ குமாரரான பரதாழ்வான் மனோ நிலை எவ்வண்ணமிருந்ததென ஆராய்வோம். ராஜாவென்று யாராகிலும் அவரை அழைத்தால் அவர் தபிப்பர். உதய காலத்தில் ராஜ ஸூசகமான மர்யாதை க்ரமத்தில் துந்துபி வாத்யம் கோஷிக்கப்பட்டால், அது பொறுக்காமல் 'நாஹம் ராஜேதி சாவதேம்' [நான் ராஜா வல்லேன்] என்று சொல்லிக் கொண்டே எழுந்து வெளியில் வந்தாராம். ராஜ ஸதஸ்ஸில் வஸிஷ்ட மாமுனிவர் ப்ரஜைகளின் சார்பாகப் பரதனை ராஜாவாக வரித்தபோது,

" ஸம்வ்ருத்தஸ்ய வாசா கதம் ஸ்வஸ்தோ ராஜ்யவான் ।
விலலாப ஸபாமத்யே ஜகர்ஹே ச புரோஹிதம் ॥ "

என்று ரோதநம் செய்து வஸிஷ்டரைக் கடிந்து பேசியது மல்லாமல், 'ராஜ்யஞ்ச அஹஞ்ச ராமஸ்ய' என்று சேதநா சேதந விபாகமறத் தாமும் ராஜ்யமும் ராம சேஷத்து என்று ஜலித்தாகித்து, தமக்கு ராஜ்யத்தில் பற்றின்மையை ப்ரகாசப் படுத்துகிறார். இந்த மனோ நிலையை உணர்ந்த குஹப் பெருமாள் ராஜ்யத்தை த்ருணமாய் மதிப்பதில் ராமனைக் காட்டிலும் பரதனே மேம்பட்டவன் என்பதைப் பேசும் பாசுரத்தை அறியாதவரிலர்.

" தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்

போயினை யென்ற போழ்து புகழினேய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ளாவரோ தெரியி னம்மா."

பாபத்தைக் கண்டு பெரியோர் அஞ்சுவது போலல்லவா ராஜ்யத்தைக் கண்டு பரதன் அஞ்சியது! பரத்வாஜ மஹர்ஷி,

"கிமிஹாகமநே கார்யம் தவ ராஜ்யம் ப்ரசாஸத:"।

என்று கேட்ட சொற்கள் உட்புகுந்து வாட்ட,

"ஸந்தோஷ்வபி பித்ராசைவம் ஸமவாப்தவி சந்ருதே"।

என்று துடிதுடித்துப் பேசுகிறார். "மாலடி முடிமேல் கோலமாம் குல சேகரன்" என்று பின்னால் பேசிய ஆழ்வாரைப்போல் பெருமாள் பாது கையைச் சூடிய பின்னரே பரதனுக்குச் சற்றே மனவமைதி ஏற்பட்டது. இவர் வேண்டிய ராஜ்யம் இதுதான்.

"ஏகா த்ருணாய ஸமதோசணி பாதுரக்ஷே
ராமேண தாம் விரஹிதாம் ரகுராஜதானீம் ।
ஸ்ராவேவ ஸர்வஜனஸம்ஜ்ஜித நீசவர்ணீம்
சேதே சமோதயசதீம் சரணாசயோத்யாம் ॥"

ஒரு ராஜதானிக்குப் பதிலாய்ப் பல ராஜதானிகளை யடைந்ததாக ஸ்வாமி தேசிகன் அழகாய் அருளிச் செய்கிறார். பின்பு பதினன்கு வருஷங்களும் பாதுகா ராஜ்யமேயன்றிப் பரத ராஜ்யமன்று. "ஸமதஸ்ரமஸநம் ஸர்வம் பாதுகாஸ்யாம் ந்யவேதயத்" என்றும், "தத: ஸ்தவஷா ராஜ்யம் காரயாமாஸ ஸர்வதா" என்றும், பரதன் புரிந்த அரசெல்லாம் பாதுகை யரசன்றி வேறில்லை. பட்டாபிஷேக ஸர்க்கத்தில் பெருமாளுக்குப் பலர் நடுவில் ராஜ்யத்தைச் சாஸநம் செய்து கொடுக்கும் ஒரு வேளையில் தான் சட்டப்படி உரிமை மாறவேண்டியதற்காக,

"த்ருதம் ராஜ்யமிதம் ச தத்வாமி பாதயாஸ்ருக்ஷ்யா"।

என்று தமக்குக் கொடுக்கப்பட்ட ராஜ்யமாக வ்யவஹரித்தது.

பரத ராஜ்யாபிலாஷை இத்தன்மைத்து என்றால், அடுத்த ராஜ குமாரரான இளைய பெருமாள் எவ்வளவு ராஜ்ய ஆசை கொண்டிருந்தார் என்று பார்ப்போம். இவர் பகவத் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திற்கு முன் னமே முடிசூடியவர். இவருக்கு அயோத்யா ராஜ்யம் உத்தேச்யமில்லை யென்பது சொல்ல வேண்டியதேயில்லை. ஆதிசேஷன் ஸ்ரீ வைகுண்டத்தி

லேயே ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழ்வராம். அஸ்தாநத்தில் அத் தனை பய சங்கை. இங்கே இளையபெருமாளாய் வந்தபோதும் ராம ப்ரீதியால் இவர் அடிக்கடி சீறுவதுண்டு. அப்பொழுதெல்லாம் இவருடைய ராஜ்ய விஷயத்தில் ஏற்பட்ட வெறுப்பை வெளிக்குக் கொண்டு வரும்படி பேசி, பெருமாள் இவரை அடக்குவது கொண்டே இவருடைய ராஜ்ய விரக்தியை வெளிப்படுத்துகிறார். அயோத்தியில் வநவாஸ ப்ரஸ்தாவம் வந்தபோது அதற்கு ஹேதுவான தசரத மன்னவரைப் பிதா வென்றும் மதியாது, "வத்யதாம் பத்யதாமபி" என்று துள்ளியபோது, பெருமாள்,

"மாலக்ஷ்மண ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே"।

செல்வம் குறைந்ததற்குத் துக்கிக்காதே யென்று பேசியபோது,

"உதிஷ்ட்ததி ரமேதேன லக்ஷ்மணோஸ்யஸ்ரம் ஸ்ஸமு:" ॥

வெட்கத்தால் தலை குனிகிறார். சித்ரகூடத்திற் கெழுந்தருளும் பரத னைப் பற்றி இளைய பெருமாள் தப்பு அபிப்பிராயத்தால் பேசிய பேச்சைக் கேட்டுத் திருவுள்ளங் கலங்கிய பெருமாள் லக்ஷ்மணனைக் கடிந்து பேசுபவர் போல் காட்டிக் கொள்ளும் பொருட்டு,

"யதிராஜ்யஸ்ய ஹேதோ ஸ்த்வமிமாம் வாசம் ப்ரபாஷஸே ।
வக்ஷ்யாமி பரதம் த்ருஷ்ட்வா ராஜ்யமஸ்மை ப்ரதீயதாம் ॥

"உச்யமானோபி பரதோ மயா லக்ஷ்மண தத்வத: ।
ராஜ்யமஸ்மை ப்ரயச்சேதி பாடமித்யேவ வக்ஷ்யதி ॥"

'ராஜ்யத்திற்காகத் தானே நீ இவ்வாறு பரதனை நிந்தித்துப் பேசு கிறாய். இதோ பார்; பரதன் வரட்டும். உனக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும் படி சொல்லுகிறேன். அவன் முழு மனதுடன் அப்படியே யென்று இசை வான்' என்று அருளினார்.

ராஜ்யம் என்று கேட்டவுடன் இருபது வருஷங் கடுஞ்சிறை யென் றால் உள்ளம் எப்படிக் கலங்குமோ அப்படிக் கலங்குகிறார் இளைய பெரு மாள். தலை நிமிர முடியாத லஜ்ஜையால் தாக்கப்பட்டவராய் இச் சொல் லைக் கேட்டும் எப்படி யிருப்பது என்று வெட்கி,

"லக்ஷ்மண: ப்ரவிவேசேவ ஸ்வாநி காத்ராணி லஜ்ஜயா ।"

தனக்குள்ளே தான் புகுந்து கொண்டனராம். அப்புறம் பெருமாளே இந் நிலைமை மாற்ற மறுபேச்சுப் பேசிவிடுகிறார் என்று மஹர்ஷி மேலே சொல்லுகிறார்.

"[illegible]" ।

எவ்வளவு கேட்டும் இளைய பெருமாளுடைய ஐயம் மாறவில்லை. சிறிது நேரத்தில் பரதன் எழுந்தருளும்போது,

'தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவல மீதென
எழுதிய படிவமொத் தெய்தும்'

பரதனை லக்ஷ்மணனுக்குச் சுட்டிக் காட்டி,

"ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையநீ
தேர்ப்பெருந் தானையாற் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு."

என்று சொன்னார். பார்த்தார் இளைய பெருமாள். பரதனைச் சற்று முன்னே,

"வைதெழுஞ் சொல்லொடுஞ் சினத்தொடும் உணர்வு
சோர்தர நின்றனன் கண்ணநீர் நிலத்து வீழவே."

பரதன் ராஜ்ய காங்க்ஷியாய் வருகிறானென்று இளவலுக்கு எழுந்த கோபம் ஆரண்ய காண்டத்தில் விராதனைக் கொன்ற பிறகே தணிந்தது. அங்கே பேசுகிறார் லக்ஷ்மணன்,

"ராஜ்யகாமே மம க்ரோதோ பரதே யோ பபூவ ஹ ।
தம் விராதே விமோக்ஷ்யாமி வஜ்ரீ வஜ்ரமிவாசலே ॥"

அந்தப் பெருங் கோபத்திற்கு இப்போதே லக்ஷ்யங் கிடைத்ததென்கிறார். இளைய பெருமாள் அநந்ய ப்ரயோஜநமாகக் கைங்கர்யத்தையே ஆசைப் பட்டார் என்பது பட்டாபிஷேக ஸமயத்திலும் வெளியாகிறது. 'யௌவராஜ்யத்தை ஏற்றுக் கொள்' என்று பெருமாள் எவ்வளவு நியமித்தும், 'வேண்டுவதில்லை' யென்று பிடிவாதமாய் மறுத்தார்.

"ஸர்வாத்மநா பர்யநுநீயமாநோ யதா ந ஸௌமித்ரி
ருபைதி யோகம் । நியுஜ்யமாநோபி ச யௌவராஜ்யே"

பெருமாளை "கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே" உலகமாளப் பெற்றாள். ஸுமித்ரா தேவி பேசியபடி "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" இவர் வநவாஸத்திற்குப் பிறந்தவர் முடிசூட முன் வருவரோ?

முதல் தோன்றிய மூவர் மனோ நிலை இவ்வண்ணம் நிற்க: இதே ராஜ்ய விஷயத்தில் சத்ருக்நன் சித்த வ்ருத்தி இதற்கு மேற்பட்டு நிற்கும். இது வால்மீகி காவ்யத்தில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. கம்பர் இவருடைய இந்த மனோ நிலையை விளக்க ஒரு ஸந்நிவேசம் ஏற்படுத்திக் கொண்டு அழகாய்க் கவி பாடியிருக்கிறார். பதினான்கு வருஷம் கழிந்தும் பெருமாள் திரும்பி வரவில்லை யென்று சோகித்த பரதன்; சத்ருக்நனை விளித்து,

"சொன்ன நாளிலி ராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யானினி வீடுவென்
மன்ன னாதியென் சொல்லை மறாது" என்றார்.

கேட்டார் சத்ருக்நன். 'கிளர்தடக் கைகளால் தோட்டதன் செவி பொத்தி', நடுநடுங்கி, 'நான் என்ன அபராதம் செய்தேன்!' என்று விம்மினராம்.

"கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனானு மொருதம்பி போனவர்கள்
வருமவதி போயிற் றென்னா
ஆனாத வுயிர்விடவென் றமைவானு
மொருதம்பி யயலே நானா
தீயானு மிவ்வரசாள் வேனென்னே
யிவ்வரசாட் சினிதே யம்மா."

"நல்ல ராஜ்யமிது. பெருமாளும் விட்டு, பின்னிரு தம்பிகளும் வேண்டாத அரசை, மறுதம்பி யான்தானா வேண்டப் போகிறேன்? மன்னனவர் பெருமான் துறந்த நகரத்தில் காலடி வைத்து உள் நுழைந்தாலும் 'ராஜ்யத்தை விரும்பினான்' என்ற சொல் நிற்கும் எனப் பயந்து, 'நீர் நந்திக்ராமம் தாண்டாதிருக்க, உமது திருவடிகளில் கைங்கர்யத்தை விரும்பி வாழும் அடியேன் மட்டில் ஒரு குடைக் கீழரசு புரிய இசைவேனோ?' என்று மறுதளித்தார்.

ஆகவே, இஷ்டப்பட்டு ராஜ்யத்தை ஒருவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்று தீர்ந்த பிறகு, பெருமானே வேறு வழியில்லாது, கடமை செலுத்தத் திருவபிஷேகம் செய்து கொண்டார்.

கணித மாக்கள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீமான். ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி,

திருவல்லிக்கேணித் தமிழ் சங்கம்]

தமிழ்ப் பாஷை மிகவும் அருமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்'. மக்கள் மாக்கள் என்ற இரண்டு பதங்களை எடுத்துக்கொள்வோம். மக்கள் என்பதன் விகாரம் மாக்கள். ஐம்பொறி உணர்வேயன்றி, மனம் என்பதோர் அறிவும் உடையார் மக்கள். மனவுணர்ச்சி யில்லாதார் மாக்கள் எனப்படுவர். இதனைத் தொல்காப்பியனார் 'மாவு மாக்களும் ஐயறி வினவே, மக்கடாமே ஆறறிவுயிரே' என்று மரபியலுட் கூறிப்போந்தார். இதனைப் பின்பற்றித் திருவள்ளுவரும் குறளில் பலவிடத்தும் மாக்கள் என்னுஞ் சொல்லை இழிந்தோர்க்கும், மக்கள் என்னுஞ் சொல்லை உயர்ந்தோர்க்கும் வழங்கிவருவர். 'கொலை வினையராகிய மாக்கள்'; 'செவியிற் சுவை யுணரா வாயுணர்வின் மாக்கள்'; 'மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'; 'மக்களே போல்வர் கயவர்' என வருதலே இதற்குச் சான்று.

கணித மாக்கள் என்பது கணிதம் மாக்கள் எனப் பிரிந்து, சோதிட நூல் வல்லார் எனப் பொருள் தரும். கல்வியிற் பெரிய கம்பர் இம்மாக்களைப் பற்றிக் கூறுவதைச் சற்றுக் கவனிப்பாம்.

தசரத சக்கரவர்த்தி சோதிடர்களை நோக்கி 'இராமனுக்கு முடிசூட்டுதற்குரிய நல்லநாளை ஆராய்ந்து சொல்லுக' என்று வினவ, அவர்களும் 'மகுடாபிஷேகத்திற்கு ஏற்ற நாள் நாளைக்கு' என்றாராக, பிறகு சக்கரவர்த்தி வசிட்டனை வரவழைத்து, 'நாளைக்குப் பட்டாபிஷேக மாதலால் இராமனுக்கு முதல் நாளே செய்யவேண்டிய சடங்குகளைச் செய்க' என்றான். அவ்வசிட்டனும் அங்ஙனமே செய்தான். இதனைக் கம்பர்,

"கடிகமழ் தாரினான் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முதன்மை கூறிப் பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாண் மொழிமி னென்றனன்."

"பொருந்துநா ணாளிநின் புதல்வற் கென்றனர்
திருந்தின ரன்னசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்மால் யானையான் பிழைப்பில் செய்தவம்
வருந்தினன் வருகென வசிட்ட னெய்தினன்."

சோதிடரைக் கவி 'மாக்கள்' என்று பழித்துக் கூறியதன் காரணம், அவர் கூறிய சோதிடம் பயன்படாமை பற்றியே. நாடாள நாள் பார்க்க, இராகவன் காடாள வல்லவோ செல்வதாய் முடிந்தது! எம்பெருமானின் அவதார ரஹஸ்யத்தைச் சோதிடரா கணித் தறியவல்லார்? சுரருடனே முனிவர்களும் சுருதி நான்கும் தேடுகின்ற திருப்பாதங்களை யுடைய திருமாலின் அபார மஹிமையை எவரே முற்கூற வல்லார்? ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் பரமபத நாதன், அயன் புதல்வன் தசரதன் கீழ் யுவ ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொள்ள அமைவனோ? இப்பரம ஸூக்ஷ்மத்தைக் கேவல கணித நூலறிவுடையாரா உணரவல்லார்? தன்னுடைய காசில் கொற்றத்தால் வாலிக்கு மோக்ஷம் கொடுத்து, வானர ராஜ்யத்துக்கு அதிபதியாக வைத்தான் சுக்ரீவனை. இராவணனுக்கு முன்னைய பதவி பெற அவன் சரீரத்தைப்போக்கி, தர்மாத்மாவான விபீஷணனையும்வானை ராட்சஸ ராஜ்யத்துக்கு மகுடஞ் சூட்டுவித்தான். இவ்விரு அரசர் கூட நிற்க, அயோத்திக்கு ஜயஸ்ரீயோடு எழுந்தருளிப் பட்டாபிஷேகம் கண்டருளும் இச்சையுடனிருந்த ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் ஸங்கல்பத்தை, அவனையன்றி வேறு யார்தான் அறியமுடியும்?

உயுத்த காண்டம் திருமுடி சூட்டு படலத்துள்ள கீழ்க்கண்ட இரண்டு பாசுரங்களும் கவனித்தற்குரியன.

வசிட்டன் வருதல்.

"கோமுனி யோடு மற்றைக் கணிதரைக் கொணர்க வென்ன
ஏவினன் றேர்வ லான்சென் றிசைத்தலு மூலக மீன்ற
பூமகன் றந்த வந்தப் புனிதமா தவன்வந் தெய்த
யாவரு மெழுந்து போற்றி யிணையடி தொழுது நின்றார்."

வசிட்டன் நாளைப் பட்டாபிடேக நாளெனல்.

"அரியணை பரத னீய வதன்கணண் டிருந்த வந்தப்
பெரியவ னவனை நோக்கிப் பெருநிலக் கிழத்தி யோடும்
உரியமா மகளி ரோடு முகந்தன ரொருவில் செல்வம்
கரியவன் றுய்த்தற் கேய்ந்த காப்புநா ணாளை யென்றான்."

இங்கு முனியுடன் அழைக்கப்பட்டமையால் சோதிடரைக் கணிதரென்று அழகிதாகக் கூறுகின்றார் கவி. வசிட்டன் வந்தானென்பதை, 'எம்பெருமான் நாபீ கமலத்தில் தோன்றிச் சகல உலகங்களையும் சிருட்டிக்கும் நான்முகன் தனயனான புனித மாதவன் வந்தான்' என்கிறார். 'பொருவின் மன்னவன் காவலில் ஆணையின் கடவுளாமெனத் தேவரு முனிவரு முணருந் தேவர்கள் மூவரில் நால்வரா முனி' என்று, முன்னம் இவரைக் குறித்துள்ளார் கவி. 'வசிட்டன் வாக்கு' என்பது உலகப் பிரசித்தம். அது ஸத்ய வாக்கு. பகவானின் பேரானதால் அவன் திருவுள்ளத்தை நன்குணர வல்லார் இவர்தான் என்பது போதரும். எனவே, தசரதனிருந்த காலே, பட்டாபிஷேகத்து முகூர்த்தம் வைத்தது வசிட்டனன்று எனவும், இறுதியில் அம் மஹோத்ஸவத்துக்கு நன்னாள் வகுத்தது அம்முனியே என்பதும் பெற்றாம்.

"அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடைக விக்க விருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையன் றங்கண்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி."

எம்பெருமான் அவதார ரஹஸ்யம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

"𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍 ॥"
"[illegible] ।
[illegible] ॥"

மனிதர்களின் வயதளவு

(1)

[ஸ்ரீ. உப. பண்டித வி. அநந்தாசார்யர், சென்னை]

சென்ற ஐப்பசி மீ-ல் வெளிவந்த வேதாந்த தீபிகையில் மனிதர்களின் வயதளவைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருப்பதைக் கண்டோம். வேதம், புராணம், இதிஹாஸம் முதலிய பழைய நூல்களில் காணப்படும் கதைகளில் ஆயுளின் அளவு சம்பந்தப்பட்ட வரை ஒன்றோடொன்று ஒற்றுமையற்று விளங்குகின்றன என்பது உண்மையே. ஆனால் அவை யெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒன்றுக்கொன்று விரோதமின்றி ஒரு அபிப்ராயம் கற்பிக்காதவரையில் அவை ப்ரமாணமாக மாட்டா. அறிவில் அபாரமான சக்தி வாய்ந்த நமது முன்னோர்களும் இவ்விஷயத்தில் உதாஸீநர்களாக இல்லை. மனிதர்களின் ஆயுளைப் பற்றி வேதங்களும் மற்றுமுள்ள நூல்களும் பலவாறாகக் கூறுகின்றன. "𑌶𑌤𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑍈 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌶𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌃" "𑌶𑌤𑌾𑌯𑍁𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑍍𑌶𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃" என்று வேதங்களும், "வேதநூற் பிராயம் நூறு" என்று வேதங்களை அடியொற்றின ஆழ்வார்களும், "𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂" என்றும் கவிகளும் பாடியிருக்கின்றனர். தவிரவும், '𑌶𑌤𑌾𑌯𑍁𑌃' என்ற வேதமே, "𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌿" என்று ஆயிரம் வருஷங்களில் முடிக்கவேண்டிய யாகங்களை விதிக்கின்றன. இது எப்படிப் பொருந்தும் என்று பாட்ட தீபிகையில் இக் கேள்வியைக் கேட்டுப் பின் வருமாறு ஸமாதாநம் கூறியிருக்கிறது. அதாவது: அநுபவத்திற்கும் பொருந்தாத வருஷ ஸங்க்யைகளை அநுபவத்திற்குப் பொருந்துமாறு கொள்ள வேணும். இதற்கு வேதங்களிலும் சாஸ்திரங்களிலுமே வழி காட்டப்பட்டிருக்கிறது. சில விடங்களில் "[illegible] 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃" என்றும், "[illegible]" என்றும் "[illegible] 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂" என்றும் பலவாறாய்க் காண்கிறோம். கடற்கரைக் கூட்டத்தில் ஆயிரம் ஜனங்கள் இருந்தார்கள் என்றால், ஆயிரம் என்னும் சொல்லுக்குப் பலவாறாய்ப் பொருள் கற்பிக்கிறோமல்லவா? அதுபோல் இங்கு ஸந்தர்ப்பாநுகுணமாகவே அபிப்ராயம் சொல்லவேணும். ஆனால் இதில் மற்றொரு ரஹஸ்யம் உண்டு. மனிதனுக்கு நூறு வருடங்கள் ஆயுள் என்று வேதம் சொன்னது பொது விதியாகும். இதற்கு விலக்குகள் பலவிதமாய் நேரலாம். அவரவருடைய கர்மாநுகுணமாக ஆயுள் நீளவும் சுருங்கவும் கூடும். மநு முதலான ஸ்ம்ருதிகர்த்தாக்கள் யுக பேதங்கொண்டு ஆயுள் அளவு வித்தியாஸப்படும் என்றனர். க்ருதயுகத்தில் 400 வருடங்கள் என்றும், த்ரேதாயுகத்தில் 300 வருடங்கள் என்றும், த்வாபர யுகத்தில் 200 வருடங்கள் என்றும், கலியுகத்தில் 100 வருடங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

வேதங்களிலேயே பூர்ணமான புருஷாயுஸ் 100 வருடங்கள் என்று சொல்லி இருக்கும்போது, தற்காலம் சிலர் நூற்றுக்கு அதிக வயது ஜீவித்திருப்பதைக் காண்கிறோம். இப்படி ப்ரத்யக்ஷாநுபவத்தைக் கொண்டு ஆலோசிக்குமளவில், வேதம் சொன்னது

பொது விதி என்றும், சில விசேஷ விதிகளால் அதற்கு விலக்கு உண்டாகலாம் என்றும் சொல்லாமலே விளங்கும். தசரதர் அறுபதினாயிரம் வருஷமும், இராமன் பதினோராயிரம் வருஷமும் ஜீவித்திருந்தார்கள் என்று வால்மீகி சொன்னதையும், வருஷம் என்னும் சொல்லுக்கு மாதம் என்றோ, பக்ஷம் என்றோ, திநம் என்றோ பொருள்கொண்டு ஸமரஸப்படுத்தவேணும். தைத்திரீய கட சாகையில் பரத்வாஜர் என்ற ரிஷி, 300 வருஷங்கள் ஜீவித்திருந்து வேதாத்யயநம் செய்து வந்ததாகவும், அவர் தமக்கு நான்காவது புருஷாயுஸ் கிடைத்தாலும், வேதத்தையே அத்யயநம் செய்யப்போவதாயும் எண்ணங்கொண்டதாகக் கூறியுள்ளது. இதை அர்த்தவாதமாகக் கொண்டாலும் விரோதமில்லை. அல்லது "ருஷயோ தீர்கஸந்த்யத்வாத் தீர்கமாயுரவாப்நுயு:" என்று மநு சொன்னபடி, ப்ரும்மசர்ய வ்ரதாநுஷ்டாந மகிமையால் அவருக்கு ஆயுள் நீண்டது என்றும் சொல்லலாம். அப்படியே கிருத யுகாதிகளில் ஜனங்களில் பெரும்பான்மையோர் வ்ரத நியமாதிகளைச் சரிவர நடத்தி வந்ததால், அக்காலத்தில் சாதாரணமான ஆயுள் 400 வருஷங்கள் என்றும், வ்ரத நியமாதிகள் இல்லாமல் சாதாரண நிலைமையில் உள்ளவர்களுக்கு அக்கிருத யுகத்திலும் வேதோக்தமான நூறு வருஷங்களே பூர்ணாயுஸ் என்றும் கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் நமது பரமாசார்யரான ஸ்ரீ தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் அருளிச்செய்திருப்பதையும் உதாஹரிக்கிறோம்.

மனிதர்களில் நியதாயுஸ் என்றும் அநியதாயுஸ் என்றும் இருவகைகள் உண்டு என்றும், சாபம் அல்லது வரப்ரஸாதம், மந்த்ரசக்தி, தபோபலம், ஔஷதமகிமை முதலான விசேஷங்களால் ஆயுள் குறைந்தோ கூடியோ நிற்குமவர் நியதாயுஸ் என்றும் ஒரு விசேஷ விதியில்லாமல் ஜந்ம ஸித்தமான ஆயுளை மாத்திரம் பற்றியிருப்பவர் அநியதாயுஸ் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அநியதாயுஸ்ஸுக்களுடைய ஆயுளை மாற்றப் பல வழிகள் ஏற்படலாம். நியதாயுஸ்ஸுக்களுடைய ஆயுளை மாற்ற இயலாது. இதில் நீண்ட நியதாயுஸ் மார்க்கண்டேயன். குறுகிய நியதாயுஸ் பரீக்ஷித்து மஹாராஜன். ஆயுர்வேத சாஸ்த்ரஜ்ஞர் சாதாரணமான புருஷாயுஸ் 120 வருடங்கள் என்றார்கள். இப்போது விதிக்கும் விசேஷ விதியால் மாற்றம் உண்டாகலாம். இச் சந்தர்ப்பத்தில் மநு ஸ்ம்ருதியிலிருந்து ஒரு ஸாராம்சத்தை எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது. மநுவினிடமிருந்து ப்ரம்மசர்ய தர்மங்களையும் க்ருஹஸ்த தர்மங்களையும் விரிவாய்க் கேட்டுத் தெரிந்து கொண்ட ரிஷிகள், "பகவானே! இவ்வளவு சுத்தமான ஆசாரங்கள் நமது கையில் இருக்கும்போது ம்ருத்யு நம்மிடம் வருவதற்கு என்ன மார்க்கம் இருக்கிறது" என்று கேட்கிறார்கள். அதற்கு மநு,

"அநப்யாஸேந வேதாநாம் ஆசாரஸ்ய ச வர்ஜநாத் ।
ஆலஸ்யாத் அந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி ॥"

என்று பதில் கூறுகிறார். இதன் பொருள் எல்லாருக்கும் எளிதில் விளங்கும். ஆகவே, மேற்சொன்ன தோஷங்கள் யாவும் இல்லாவிடில் நமது ஆயுள் நீண்டு பெருகும் என்பதில் ஐயமில்லை. மகாபாரதத்தில் பல விடங்களில் ஆயுள் குறைவதற்குக் காரணம்

அநாசாரம் என்றும், ஆயுள் வளருவதற்குக் காரணம் ஸதாசாரம் என்றும் பலவித உதாஹரணங்களோடு உரைத்திருப்பதை நமது நேயர்கள் அனைவரும் படிப்பது அவசியம்.

ஆயுள் விஷயத்தில் ஜாதகம் பார்க்கவேணும் என்று பேரவாக் கொண்டிருக்கும் நமது நண்பர்களும் இதைக் கவனிக்கவேணும். ஜாதக பாவத்தில் விசேஷவிதி ஒன்று இல்லாமல் இருந்தால் இந்த ஜாதகத்திற்கு இவ்வளவு ஆயுள் என்று தெரியுமே தவிர, விசேஷ விதிகளால் வரும் குறுமை நெடுமைகள் அதனால் தெரியமாட்டா. ஆகையால் விசேஷ விதிகளின் உண்மை இன்மைகளைக் கொண்டு நமது பூர்வீக க்ரந்தங்களுக்கு ஒன்றோடொன்று விரோதமின்றிப் பொருள் சொல்லுவதே உசிதம்.

(2)

[ஸ்ரீ. உப. T. S. நாராயணய்யங்கார், திருப்பளாத்துறை]

சென்ற ஐப்பசி மாதம் தீபிகையில் புருஷாயுஸ்ஸின் ப்ரமாணத்தைப் பற்றிப் பத்ராதிபர் ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி ஒரு ஸம்சயத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது: 'ஶதாயுர்வை புருஷ:' என்கிற ச்ருதிக்கு விருத்தமாய்த் தசரதர் 60,000 வருஷ காலம் இருந்தாரென்று ராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அதற்கு வரதாநம், யோகாப்யாஸம், தபஸ் இவைகள் தவிர வேறு காரணங்கள் இருந்தால் தெரிவிக்கும்படி எழுதி யிருக்கிறார். இது விஷயத்தில் என் மனத்தில் தோன்றிய சில காரணங்களை இங்கு எழுதுகிறேன்.

'ஶதாயுர்வை புருஷ:' என்ற வேதம் சொல்லியிருப்பது மனிதர்கள் ஆயுளைப் பற்றிய பொதுவான விதியாகும். சில நல்ல கார்யங்களினால் வயதை 100-க்கு மேல் பெருக்கிக் கொள்ளவும், சில கெட்ட காரியங்களினால் 100க்குள் குறைத்துக் கொள்ளவும் கூடும். இதில் 100க்குமேல் வளர்த்துக் கொள்ளக்கூடும் என்கிற விஷயத்தை ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அபராதபரிஹாராதிகாரம் முதலான இடங்களில் அருளிச்செய்திருக்கிறார். கெட்ட காரியங்களினாலும் ஆயுள் குறைந்து போய் விடுமென்பதை மநுஸ்ம்ருதி அத். 6, ச்லோ. 134ல் காணலாம். என்ன காரணத்தினால் ப்ராஹ்மணர்களுக்கு ஆயுள் குறைந்து போகிறது என்கிற மஹர்ஷிகளுடைய கேள்விக்கு 'அநப்யாஸேந வேதாநாம்' என்கிற ச்லோகத்தில் வேதங்களை அப்யஸிக்காததினாலேயும், ஆசாரங்களை விட்டு விட்டதினாலேயும், செய்யவேண்டிய கர்மாக்களைச் சோம்பலினால் செய்யாததினாலேயும், சாப்பிடக் கூடாத வஸ்துக்களைச் சாப்பிடுவதனாலேயும் ஆயுள் குறைந்து விடுகிறதென்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

க்ரந்த லிபியில் அச்சிடப்பட்ட மஹாபாரதத்தில் உத்யோக பர்வாவில் பக்கல் 113ல், த்ருதராஷ்ட்ரன் விதுரரைப் பார்த்து 'ஏன் மனிதர்களுக்கு ஆயுள் குறைந்து போய் விடுகிறது?' என்று கேட்கிற கேள்விக்கு 'அதிவாதம், அதிமாநம், அத்யாகம், கோபம், த்ரோஹம் எனும் இக்கத்திகள் மனிதருடைய ஆயுள்களை வெட்டி விடுகின்றன. யமன் ஆயுளைக் குறைக்கிறதில்லை' என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே

ஆரண்ய பர்வாவிலும் பக்கம் 428-ல் ஸத்யம் பேசுவது, பொய் சொல்லாமல் இருப்பது, ஸ்வதர்மங்களை விடாமலிருப்பது, இவை முதலான கார்யங்களினால் அபம்ருத்யு கிடையாது என்று எழுதப்பட்டிருக்கிறது. உத்தர ஸ்ரீ ராமாயணத்திலும் ப்ராஹ்மண சிசு மரித்தகதையைச் சொல்லுமிடத்திலும் 'நான் பொய் சொல்லாமலும், ஸ்வதர்மத்தை விடாமலுமிருக்க, என்னுடைய சிசு மரிக்கக் காரணம் என்னிடத்திலில்லை' என்று ப்ராஹ்மணன் சொல்லுகிற வார்த்தையினாலேயும் அறியலாம்.

இது நிற்க: ஜ்யோதிச் சாஸ்த்ரத்தில் ப்ருஹஜ்ஜாதகம் 7-வது அத்யாயம் 13-வது ச்லோகத்தில்

' [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ '

மனிதன் பிறக்கும் காலத்தில் சில க்ருஹங்களுடைய யோகத்தைக் குறிப்பிட்டு, அதில் பிறந்தவனுக்கு ஆயுளுக்கு அளவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பட்டோத்பால வ்யாக்யானத்தில் இந்த விஷயம் வ்யக்தமாக வ்யாக்யானம் பண்ணப்பட்டு, யோகத்தில் பிறந்தவனுக்கு மநுஸ்ம்ருதி அ. 4 ச்லோ. 134 யும் எழுதி, அதில் சொல்லப்படும் பரதார கமநமாகிற ஆயுளைக் குறைக்கிற கொடிய குற்றமுமிவனுக்கு நேர்ந்தாலும் ஆயுள் குறையாதென்றும், ஆயுர்வேதங்களில் சொன்ன ரஸாயந மருந்துகளினால் அவன் ஆயுளை வளர்த்திக் கொள்ளலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் கர்க்க ருஷியால் சொல்லப்பட்ட கார்க்கேயர் நாடி க்ரந்தத்தில் முதல் காண்டத்தில் 734, 739 வது பாட்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

என்னபொன் கோபுரங்கி சமேறிகேந் திரத்தினிற்க
பன்னிய திருகோ ணத்தே பாராவதாங் சிசந்தன்னி
லுன்னிய வெள்ளி நிற்க் யுயிர்கட கம்பிறக்கின்
மன்னவ னுகந்தமட்டும் வாழ்குவன் கமலனாரே.

விண்ணினிற் கடகந்தோன்ற வெண்மதி குருவிருக்க
திண்ணமா யதனில்வெள்ளி சேர்புத னிருக்க மற்றோர்
வண்ணமாய் மூன்றோடாறு மறுபதி னொன்றிற் றோன்றும்
அண்ணலா லவருக்காயு ளருளிட முடியா தென்னே.

ஆகையினால் நமது புராதனமான வைதிக க்ரந்தங்களில் நம்பிக்கை யுள்ளவர்களுக்கு அமிதாயுஸ்ஸுக்களான மனிதர்கள் விஷயத்தில் ஆயுள்கள் அதிகமாக விருக்க இவ்வாறான பல காரணங்கள் இருப்பதால் தசரதர் முதலானவர்கள் 100 க்குமேல் ஜீவித்திருந்தது நம்பக்கூடியதாகவே ஆகும்.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஐந்தாவது பாதம்

208. அக்நிஷ்டோமத்தில் பஹிஷ்பவமானம் என்கிற ஸ்தோத்ரத்தைக் காநம் செய்வதற்காக யஜமானனும் ஆறு ருத்விக்குக்களும் ஹவிர்தாநத்திலிருந்து கிளம்பி சாத்வாலம் வரையில் போகிறார்கள். ஒருவர் பின்னால் ஒருவராய் எறும்புச் சாரிபோல் போகவேண்டும்; ஒருவர் கச்சத்தைப் பின்னாலே போகிறவன் பிடித்துக்கொண்டு போகவேண்டும். போய் உட்காருகிற வரையில் பிடியை விடக்கூடாது. விடுவதற்கு அபச்சேதம் என்று பெயர். உத்காதா விட்டால், தக்ஷிணை கொடுக்காமல் யாகத்தை முடித்து, வேறு யாகத்தைச் செய்து, முன் யாகத்தில் கொடுக்க வேண்டிய தக்ஷிணையை அதில் கொடுக்கவேண்டியது. ப்ரதிஹர்த்தா விட்டால், எல்லா ஸ்வாத்தையும் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். இங்கே ஸந்தேஹம். இரண்டு பேர்களும் ஒரே வேளையில் விட்டால் ப்ராயச்சித்தம் உண்டா—என்று.

பூர்வபக்ஷம் :—அப்போது ப்ராயச்சித்தம் செய்வதற்கு நிமித்தம் கெட்டுப்போய் விட்டது. ஒருவன் விட்டாலன்றோ, அதை ப்ராயச்சித்தத்துக்கு நிமித்தமாகச் சொல்லியிருக்கிறது. இரண்டு பேர்களும் விட்டால், அதை இன்னான் விட்டான் என்று சொல்லக் கூடாது. ஆகையால் ப்ராயச் சித்தம் இல்லை.

ஸித்தாந்தம் :—இங்கே இரண்டு அபச்சேதங்கள் இருக்கின்றன. அவைகளில் உத்காதா ஒன்றைச் செய்தான். ப்ரதிஹர்த்தா மற்றொன்றைச் செய்தான். ஆகையால் நிமித்தம் கெட்டுப்போகவில்லை. காலம் மாத்ரம் ஒன்றாயிருப்பதால், அபச்சேதம் ஒன்றுபோல் ப்ரமிக்கிறீர். ஆகையால் ப்ராயச்சித்தம் உண்டு. (அதி—17.)

பூர்வ பக்ஷத்தில் சொன்னபடி எப்போது இருக்கலாம் என்றால், ஒருவன் விடுவது மற்றொருவன் ப்ரயத்நத்தில் பொருந்தியிருந்தால். இங்கே அப்படியில்லை. ஒருவன் மற்றொருவனைக் கவனிக்காமல் விடுகிறான். (சா—502)

209. முன் சொன்ன உதாரணத்தில் எந்த ப்ராயச்சித்தத்தைச் செய்கிறது? இரண்டையுமா ? அல்லது இஷ்டப்படி ஏதாவது ஒன்றையா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் :—இரண்டையும். கேள்வி—ஒன்றில் தக்ஷிணை கொடுப்பதில்லை ; மற்றொன்றில் எல்லா ஸொத்தையும் கொடுக்கவேண்டுமே. இவைகளை எப்படிச் சேர்க்கிறது ? என்று. பதில்—ப்ராயச்சித்தமாக இரண்டு தடவை யாகத்தைச் செய்கிறது. முதல் யாகத்தில் தக்ஷிணையைக்கொடுக்க வேண்டியதில்லை. இரண்டாவது தடவையில் எல்லா ஸொத்தையும் கொடுக்கிறது. இரண்டு தடவை செய்தாலும் கர்மம் ஒன்று தானே. ஆகையால் இரண்டையும் என்றது ஸரிதான்.

ஸித்தாந்தம் :—இரண்டாம் தடவை செய்வதில் அபச்சேதமில்லையே நிமித்த மில்லாமல் ப்ராயச்சித்தம் எப்படிக் கூடும்? ஆகையால் முதல் தடவையிலேயே இரண்டு நிமித்தங்களா லுண்டான இரண்டு ப்ராயச்சித்தங்களும் வருகின்றன. ஒன்றுக்கொன்று விரோதமா யிருப்பதாலே ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டியது. (அதி—18)

210. இரண்டு அபச்சேதங்களும் ஒன்றின்பின் ஒன்றாக உண்டானால், எந்த ப்ராயச்சித்தத்தைச் செய்கிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—முதல் நிமித்த முண்டானபோது அதின் ப்ராயச்சித்தம் விரோதமில்லாமல் உண்டாயிற்று. அது ப்ரபலம். இரண்டாவது ப்ராயச்சித்தம் விரோத மிருக்கையில் உண்டாகிறது. ஆகையால் அது துர்ப்பலம். முதல் நிமித்தத்துக்குத்தான் ப்ராயச்சித்தம் செய்ய வேண்டியது.

ஸித்தாந்தம்:—ச்ருதிக்கும் லிங்கத்துக்கும் விரோத மிருக்கும்போது, ச்ருதி ப்ரபலம் என்று சொல்லப்பட்டது. அது இங்கே உதாரணமாக மாட்டாது. முன் ப்ரமாணத்தைப் பின் ப்ரமாணம் தேடுகிறபடியால், (அதாவது—லிங்கத்துக்கு ஆதாரமாக ச்ருதி இருக்கிறது என்று கல்பிக்க வேண்டியபடியால்). முன் ப்ரமாணத்தோடு விரோத மிருந்தால், பின் ப்ரமாணம் உண்டாகிறதே யில்லை. இங்கே அப்படியில்லை. இன்ன ப்ராயச்சித்தம் பண்ணவேண்டும் என்கிற ஜ்ஞாநம், ஒன்று மற்றொன்றைத் தேடாமல் தனித்தனியாய் அந்தந்த வாக்யத்தால் உண்டாகிறது. ஆகையால், பின் ஜ்ஞாந முண்டாவதற்குத் தடங்க லில்லை. அது உண்டாகும்போதே தனக்கு விரோதமான முன் ஜ்ஞாநத்தைப் பாதித்துக்கொண்டே வருகிறது.

(2) கேள்வி :—ஒரு ஜ்ஞாநம் மற்றொன்றில் பொருந்தியிருக்கவில்லை. இந்த விஷயத்தில் இரண்டும் ஸமம். முன் ஜ்ஞாநமே பின் ஜ்ஞாநத்தை அடிக்கட்டுமே என்று. பதில் :—முன் ஜ்ஞாந முண்டான காலத்தில் இரண்டாவது ஜ்ஞாநமில்லை. அதை எப்படி அடிக்கிறது ? பின் ஜ்ஞாந முண்டாகும் போது, முன் ஜ்ஞாநத்தை அடித்துக் கொண்டே வருகிறது. இப்படி அடிபட்ட ஜ்ஞாநம் பின் ஜ்ஞானத்தை எப்படி யடிக்கும்? பின் ஜ்ஞாநத்தை அடிப்பதொன்றும் காணப்படவில்லை. ஆகையால் பின்னாலே உண்டான அபச்சேதத்துக்குத்தான் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். (அதி-19)

ஐந்தாவதுபாதம் முற்றிற்று.

ஆறாவது பாதத்தில் ஸத்ர யாக விஷயமான விசாரமும், ஏழாவது பாதத்தில் விச்வஜித் யாகத்தில் தக்ஷிணை விஷயமான விசாரமும் செய்யப் படுகின்றன.

எட்டாவது பாதம்.

211. இதில் சில கர்மங்களை எந்த அக்நியில் செய்கிறது ? ஆஹவநீயத்திலா ? அல்லது லௌகிகமான அக்நியிலா என்று விசாரிக்கப் படுகிறது. ஆதாந மில்லாததால் ஆஹவநீய அக்னியில்லை. லௌகிகமான அக்நியில்தான் என்று தீர்மாநம். ஆதாந மில்லாமைக்குக் காரணம் :—

(1) “ வஸு-காமம் அத-ஹெ-ரா த்ரயாஜயெத் ” என்று ஒரு வாக்யம். பசுவை ஆசைப்படுகிறவனை ‘அத-ஹெ-ரா’ என்கிற மந்த்ரத்தாலே யாகத்தைச் செய்விக்க வேண்டியது என்பது அதின் பொருள். இது ஆஹிதாக்நி யல்லாதவனுடைய இஷ்டியென்று ஒரு வாக்ய மிருக்கிறது. ஆஹிதாக்நி—ஆதாநம் பண்ணினவன். (அதி-1)

(2) உபநயந ஹோமம் :— ஆதாநத்தை, வேதம் படித்து, அதின் அர்த்தத்தை அறிந்தவன் தான் செய்யவேண்டியது. உபநயநம் ஆகாதவனுக்கு வேதத்தைப் படிப்பது மில்லை ; அதின் அர்த்தமும் தெரியாது. ஆகையால் ஆதாநமில்லை. (அதி-2)

(3) நிஷாதஸ்தபதி செய்யும் யாகத்தில் பிராமணன் முதலான மூன்று ஜாதியில் சேராதபடியால், அவனுக்கு ஆதாநம் கிடையாது. (அதி-3)

(4) ‘யொ ப்ரஹ்மசாரீ ஸ்த்ரியமுபெயாத், ஸ கர்தபம் பசுமாலபெத’ என்று வாக்யம். இதின் பொருள்—எவன் பிரமசாரியாயிருந்து ஸ்த்ரீயைத் தொடுகிறானோ, அவன் கழுதையான பசுவை உபாகரணம் பண்ண வேண்டியது—என்பது. ஆதாநத்தை ஸ்த்ரீயும் புருஷனும் சேர்ந்து செய்யவேண்டியது என்று வசந மிருக்கிறது. ஆகையால் ப்ரம்மசாரி அதைச் செய்ய முடியாது. (அதி-4)

எட்டாவது பாதம் முற்றிற்று.

ஆறாவது அத்யாயம் முற்றிற்று.

ஏழாவது அத்யாயம்.

212. இதுவரையில் ஆறு அத்யாய்ங்களால் உபதேசம் விசாரிக்கப் பட்டது. வேண்டிய விஷயங்களை யெல்லாம் சொல்லுமிடம் உபதேசம். இனி அதிதேசத்தைப் பற்றி விசாரிக்கப்படும். அதிதேசம் என்பது ப்ரகிருதியான கர்மத்துக்குச் சொல்லப்பட்ட தர்மங்களை அதற்கு ஸமானமான கர்மங்களுக்குக் கொண்டுபோவது. இந்த விஷயமான விசாரங்கள் 7-வது முதல் 10-வது அத்யாயம் வரையில் செய்யப்படுகின்றன. அவைகளில், 7, 8, அத்யாயங்களில் எந்த ப்ரக்ருதி யாகத்திலிருந்து அதிதேசம் செய்கிறது என்று விசாரம் செய்யப் படுகிறது. தர்மங்களையும் மந்த்ரங்களையும் கொண்டுபோகும்போது கர்மத்துக்கும் மந்த்ரத்துக்கும் பொருத்த மில்லாமலிருக்கலாம். ஸௌர்ய தேவதையின் சரு யாகத்தைச் செய்கையில் நிர்வாபம் செய்யவேண்டும். அதற்கு மந்த்ரம் அக்நி தேவதையின் மந்த்ரம். அதற்கும் ஸௌர்ய தேவதைக்கு நிர்வாபம் செய்வதற்கும் பொருத்தமில்லாமையால், மந்த்ரத்தில் அக்நி என்கிற சொல்லை யெடுத்துவிட்டு, ஸௌர்யன் என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டும். இப்படி மந்த்ரத்தை மாற்றுவதற்கு ஊஹம். என்று பெயர். இது ஒன்பதாவது அத்யாயத்தில் விசாரிக்கப் படுகிறது. ப்ரக்ருதியான அக்நி தேவதையின் புரோடாச யாகத்தில் அரிசியை மாவாகப் பண்ணவேண்டும். இது ஸௌர்ய தேவதையின் சரு யாகத்தில் வேண்டியதில்லை. ஆகையால் பேஷணம் என்கிற ஸம்ஸ்காரமும் அதன் மந்த்ரங்களும் வேண்டியவைகள் அல்ல. அதிதேசத்தால் வருவதைத் தள்ளிவிடவேண்டும். இதற்கு ப்ராப்த பாதம் என்று பெயர். இது 10-வது அத்யாயத்தில் விசாரிக்கப்படுகிறது.

முதல் பாதம்

214. முதன் முதல் ஸந்தேஹம்—அதிதேசம் பண்ண வேண்டுமா? உபதேசம் பண்ணப்பட்ட அங்கங்கள் எல்லா யாகங்களுக்கும் பொதுவல்லவா? என்பது.

பூர்வபக்ஷம்:—அங்கங்கள் எல்லா யாகங்களுக்கும் பொதுவாய்த்தான் உபதேசிக்கப்பட்டன. அவைகளுக்கு யாகத்தோடு ஸம்பந்தம். யாகம் கரணம் என்பதையும், ப்ரயாஜம் முதலானவைகள் இதிகர்த்தவ்யதை என்பதையும் எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ப்ரயாஜம் முதலான அங்கங்களுக்கு அபூர்வத்துடன் ஸம்பந்தம் என்றால், யாகமும் அபூர்வத்தை உண்டு பண்ணுகிறது, இவைகளும் அதையுண்டு பண்ணுகின்றன என்று ஏற்படும். அப்போது கரணமான யாகத்துக்கும், உபகரணமான ப்ரயாஜம் முதலானவைகளுக்கு முள்ள வேறுபாடு போய்விடும். மேலும், அவஹநநமும் (அரிசியாகப் பண்ணுவதும்), பேஷணமும் (மாவாகப் பண்ணுவதும்) யாகத்தை நடக்கும்படி செய்வதால், யாகத்தோடு ஸம்பந்தப்பட்டவைகள். அவைகள் எப்படி அங்கங்களோ, அப்படியே ப்ரயாஜம் முதலானவைகளும் அங்கங்கள். ஆகையால் அவைகளுக்கு யாகத்தோடு தான் ஸம்பந்தம். தர்சபூர்ணமாஸமும் அக்நிஷ்டோமமும் எப்படி யாகங்களோ, அப்படியே ஸௌர்ய தேவதையின் சருயாகமும், ச்யேந யாகமும். ஆகையால் சொன்ன எல்லா அங்கங்களும் எல்லா யாகங்களுக்கும் பொது. ஆகையால் அதிதேச விசாரம் வேண்டியதில்லை.

ஸித்தாந்தம்:—அபூர்வம் பலனை யுண்டுபண்ணுகிறபடியால் முக்யமானது. பலனை நேராகக் கொடுக்காதபடியால் யாகம் முக்யமானது அன்று. ஆகையால் முக்யமானதற்காக ப்ரயாஜம் முதலானவைகளை விதிப்பது ந்யாயம். கரணமான யாகத்துக்கும், உபகரணமான ப்ரயாஜம் முதலானவைகளுக்கும் முதலில் அபூர்வத்துடன் ஸம்பந்தம். அபூர்வங்கள் வெவ்வேறு என்று முன்னாலே சொல்லப்பட்டது. அந்தந்த அபூர்வத்துடனாவது, அல்லது அதற்குக் காரணமான யாகவிசேஷத்துடனாவது ஸம்பந்தப்பட்ட ப்ரயாஜம் முதலான தர்மங்கள் எந்த ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவைகள் அவைகளுக்கு மாத்ரம் அங்கங்கள். இப்படியிருப்பதால் ப்ரகரணத்துக்கு ப்ரயோஜந முண்டாகிறது. எல்லாத் தர்மங்களும் எல்லா யாகங்களுக்கும் பொதுவானால், ப்ரகரணத்துக்கு ப்ரயோஜநமில்லாமல் போகும். ஸௌர்ய தேவதையின் யாகத்துக்கும் ச்யேந யாகத்துக்கும் தர்மங்களைச் சொல்லாமையால், எந்த தர்மங்களோடு அந்த யாகங்களைச் செய்கிறது என்று ஒரு தேட்ட முண்டாகிறது. அதை த்ருப்தி பண்ணுவதற்காக அதிதேசம் பண்ணவேண்டும். அதின் விஷயமான விசாரத்தையும் செய்யவேண்டியது. (அதி—1)

214. அதிதேசம் மூன்று விதமாய்ச் செய்யப்படுகிறது. முதலாவது ப்ரத்யக்ஷமான ச்ருதியாலே. உதாரணம்—

ச்யேந என்றும், இஷு என்றும், இரண்டு ஏகாஹமான ஸோம யாகங்கள். அவைகளுக்கு அங்கங்கள் அக்நிஷ்டோமமான ப்ரக்ருதியாகத்திலிருந்து வருகின்றன. ச்யேந யாகத்துக்குச் சில விசேஷ தர்மங்கள் விதிக்கப்படுகின்றன. இஷு யாகத்துக்கும் ஒரு விசேஷ தர்மத்தை விதித்து "[illegible]" என்று ஒரு வாக்யமிருக்கிறது. இதின் பொருள்—மற்றவைகள் ச்யேந யாகத்துடன் ஸமானம் என்பது. இங்கே 'உதாஜ' என்பது என்ன? பொதுவான அக்நிஷ்டோமத்தின் தர்மங்களா? அல்லது ச்யேந யாகத்தின் விசேஷ தர்மங்களா? என்று ஸந்தேஹம்.

பதில்:—முதல் சொல்லப்பட்டது எந்த ஜாதியானதோ, அதைத் தான் 'ஊதாரஃ' என்கிற சொல் சொல்லுகிறது. "தேவதத்தன் தான் அத்யயநம் பண்ணுகிறான், வேறு ஒருவனுமில்லை (கேதாரஃ)" என்று சொன்னால், அத்யயநம் பண்ணத் தகுந்த சிறு பிள்ளை தான் சொல்லப்படுகிறான். மாடும் குதிரையும் துணியுமன்று. அப்படியே இங்கேயும். இஷ்டி யாகத்துக்கு ஒரு விசேஷ தர்மம் சொல்லப்பட்டது; மற்றவைகள் என்றால், அதே ஜாதியான விசேஷ தர்மங்கள் என்பது தான் பொருள். அவைகள் ச்யேந யாகத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகிறது என்று விதிக்கப்படுகிறது. (அதி—2)

முதல் பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்.

215. இரண்டாவது விதமாய் அதிதேசம் பண்ணுவதற்கு உதாரணம். குண்டபாயிநாம் அயநத்தில் ஒரு வாக்யம். 'மாஸமக்நிஹோத்ரம் ஜுஹோதி' என்று. இதை எந்த தர்மங்களைக் கொண்டு செய்கிறது என்று ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்:—அக்நிஹோத்ரம் என்பது ஒவ்வொரு நாளும் செய்யும் அக்நி ஹோத்ரத்தின் பெயர். ஆகையால் அதிலிருந்து தர்மங்களையெடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றலாம். அது பிசகு; ஏனென்றால், அந்தச் சொல் இரண்டையும் சொல்லுகிறது. அதற்கு என்ன பொருள் ஏற்பட்டிருக்கிறதோ, அந்தப் பொருளைக்கொண்டே அவைகளைச் சொல்லுகிறது. ஆகையால் அதிதேசமில்லை.

ஸித்தாந்தம்:—"அக்நயே ஹோத்ரம் யஸ்மிந் கர்மணி தத் அக்நிஹோத்ரம்" எந்தக் கர்மத்தில் அக்நி தேவதைக்கு ஹோமம் செய்யப்படுகிறதோ, அது அக்நிஹோத்ரம் என்கிற சொல்லுக்குப் பொருள். இதைக்கொண்டு தினந்தோறும் செய்யும் அக்நி ஹோத்ரத்தை அது சொல்லுகிறது. அதற்கு அக்நி தேவதையென்று மந்த்ரத்தால் தெரிகிறது. மாஸம் செய்யும் அக்நி ஹோத்ரத்தில் தேவதை அக்னியென்று தெரியவில்லை. ஆகையால் அக்நிஹோத்ரம் என்கிற சொல் தன் பொருளைக்கொண்டு அதைச் சொல்லாது. தினந்தோறும் செய்யப்படும் அக்நி ஹோத்ரத்தின் தர்மங்கள் அதற்கு வருவதற்காக இந்தப் பெயர் அங்கு வந்திருக்கிறது. அதைச் சொல்லும் போது சொல்லுக்குப் பொருள் முக்யம் அன்று; கௌணம். ஆகையால், அதிதேசம் பண்ணலாம். (அதி—1)

(2) கேள்வி—ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் இருக்கக் கூடாதோ என்று. பதில்—எந்த இடத்தில் ஒரே பொருளைக்கொண்டு ஒரு பதார்த்தத்தைச் சொல்லி, அதனுடைய குணங்களோ தர்மங்களோ மற்றொன்றிலிருப்பதால் அந்தக் காரணத்தை முன்னிட்டு அதையும் சொல்லலாமோ, அந்த இடங்களில் இரண்டு பொருள்கள் ஒரு சொல்லுக்கிருப்பனவாகக் கொள்ளக் கூடாது.

(3) மறு கேள்வி—அக்நி ஹோத்ரம் என்கிற சொல் மாஸம் செய்யும் கர்மத்தை முக்கியமான பொருளைக்கொண்டு சொல்லுகிறது. அதின் தர்மங்களை நித்யாக்நி ஹோத்ரத்துக்கு எடுத்துக்கொள்ளுவதைக் காட்ட, அதையும் அந்தச் சொல் சொல்லுகிறது என்று ஏன் கொள்ளக் கூடாது? என்று. பதில்—மாஸம் செய்யும் கர்மத்துக்கு தர்மங்களில்லையே. அதின் தர்மங்களைக்கொண்டு நித்யாக்நி ஹோத்ரத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லமுடியாதே; எப்படி அதைக் கௌணமாய் சொல்லலாம். (சாஸ்-532)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நான்காம் பாதம்.

216. மூன்றாவது விதமாய் அதிதேசம் பண்ணுவது லிங்கத்தாலே. இப்படி அதிதேசம் பண்ணுவது கூடுமா என்று ஸந்தேஹம். "ஸௌர்யம் சரும் நிர்வபேத் ப்ரஹ்மவர்சஸகாமஃ" என்று ஒரு வாக்யம். வேதத்தைப் படிப்பதால் வரும் தேஜஸ்ஸை ஆசைப்படுகிறவன் ஸூர்ய தேவதையின் சருயாகத்தைச் செய்யவேண்டியதென்பது அதின் பொருள். அக்நி தேவதையின் புரோடாச யாகத்தின் தர்மங்கள் அவஹநநம் முதலியவைகள். அவைகள் ஸூர்ய தேவதையின் யாகத்தில் வருமா? அவைகள் வருமென்று காட்ட ச்ருதி லிங்கம் முதலான ப்ரமாணங்களில்லையே—என்று.

பதில்:—தர்மங்கள் வருமென்று காட்டுவதற்கு அநுமானமிருக்கிறது. அதாவது—சொன்ன யாகமானது கரணமாயிருப்பதால், உபகாரங்களைத் தேடுகிறது. உலகத்தில் போஜநம் பண்ணுவது போலவும், வேதத்தில் தர்சபூர்ணமாஸ இஷ்டிகள் போலவும் என்று. (அதி—1) சொன்ன வாக்யத்தில், ப்ரஹ்ம வர்ச்சஸத்தை யாகத்தாலுண்டுபண்ணவேண்டியது என்று, உபகரணத்தைத் தேடும் பாவனை சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லும் வேதம் அதற்கு உபகாரங்களைச் சொல்லவில்லை. ஆகையால் வேறு இடத்தில் ஏற்பட்டிருக்கும் உபகாரத்தை இங்கே கொண்டு வரவேண்டுமென்று சாஸ்த்ரமே ஒப்புக்கொண்டிருக்கிறது என்று நிச்சயம் பண்ணலாம். சா-(546)

217. இதின் மேல் ஸந்தேஹம்—உபகாரங்களை எங்கேயிருந்து எடுத்துக்கொள்ளுகிறது? உலகத்தில் ஸ்தாலீபாகம் செய்கிறார்களே, அதிலி

ருந்து எடுத்துக்கொள்ளலாமா? அவைகள் அத்துடன் பிணைத்திருக்கவில்லை. வேதத்தில் சொல்லியவைகள் ஏதாவது ஒரு யாகத்துடன் புணைக்கப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து அவைகளை எப்படிப் பிரித்துக்கொண்டுவருகிறது —என்று.

பதில் :—வேதம் சொல்லும் கரணத்துக்கு உபகரணத்தைத் தேடும்போது, வேதத்தில் சொல்லிய உபகரணங்கள் தான் முதலில் தோன்றும். அவைகள் தான் கிட்ட இருக்கின்றன. சொன்ன ஆக்ஷேபத்துக்கு என்ன பதில் என்றால், ப்ரகரணம் என்கிற ப்ரமாணத்தாலே ஒரு யாகத்தோடு பிணைத்திருந்தாலும், சொன்ன அநுமாநம் அவைகளை வேறொன்றோடு பிணைக்கலாம். மேலும், "வ்யாஜெ வ்யாஜெ கரூஷணும் ஜுஹொதி" என்று ஸௌர்ய தேவதையின் யாக விஷயத்தில் ஒரு வாக்யமிருக்கிறது. ப்ரயாஜங்கள் அதிலிருப்பதாக வைத்துக்கொண்டு, ஒவ்வொரு ப்ரயாஜத்திலும் க்ருஷ்ணலத்தை ஹோமம் பண்ணும்படி வாக்யம் விதிக்கிறது. க்ருஷ்ணலம் என்பது நெல்லைப்போல் செய்யப்பட்ட தங்கத்துண்டு. இதினாலும் வேதத்தில் சொல்லிய உபகரணங்களையே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று காட்டப்படுகிறது. (அதி-2)

சாஸ்த்ர தீபிகைப்படி பூர்வபக்ஷமும் ஸித்தாந்தமும்

பூர் :—ப்ரத்யக்ஷமான சாஸ்த்ரத்தால் தர்சபூர்ணமாஸங்களுடன் உபகரணங்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே தடவை சொல்லப்பட்ட வேத வாக்யம் அப்படி அவைகளைப் பிணைத்து மறுபடியும் ஸௌர்ய தேவதையின் யாகத்துடன் எப்படிச் சேர்க்கும்? எல்லாவற்றுக்கும் பொதுவாய் அவைகளை விதிக்கிறது என்று சொல்லக் கூடாது. சாஸ்த்ரமில்லாமல் ஸௌர்ய தேவதையின் யாகத்துக்கும் உபகரணங்களுக்கும் ஸம்பந்தமுண்டாகாது. உலகத்துக் கர்மங்களின் உபகரணங்கள் அநேகங்களுக்குப் பொதுவாயிருக்கின்றன. அவைகளிலிருந்து அங்கங்களை எடுத்து கொள்ளலாம்.

ஸித்தாந்தம் :—வேதத்தில் சொன்ன அங்கங்களும் ஸௌர்ய தேவதையின் யாகமும் ஒத்திருக்கின்றன. வேதத்தில் சொல்லப்பட்டபடியிருப்பது என்கிற காரணத்தாலே. ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டவைகள் அப்படி ஒத்திருக்கவில்லை. அவைகளின் நினைவு உடனே வராது. உடனே நினைவுக்கு வரும் வேதம் சொல்லும் அங்கங்களை விட்டு, உடனே நினைவுக்கு வராத ஸ்ம்ருதி சொல்லும் அங்கங்களை எடுத்துக்கொள்வது ந்யாயமன்று.

(2) ஸ்ம்ருதிகள் சொல்லுகிறவைகளும் வேதம் சொல்லுமவைகள் போலத்தானே. ஸ்ம்ருதிகளுக்கும் வேதம் தானே மூலம்—என்று கேள்வி. பதில்—அவைகளுக்கு ப்ரத்யக்ஷமான வேத வாக்யங்கலளில்லாமையால், வேதம் சொல்லுமவைகள் போலன்று.

(3) மறுபடியும் கேள்வி—ஸ்ம்ருதிகளுக்கு ஆதாரமான வேதம் சிலருக்கு ப்ரத்யக்ஷம் என்று சொல்லவில்லையா? என்று. பதில்—வேதம் யாகங்களைத்தான் சொல்ல வந்தது. அப்படியே தர்சபூர்ணமாஸ இஷ்டிகள் முதல் யாகங்களையே சொல்லுகிறது. நடுவே வேறு விஷயங்கள் நினைவுக்கு வரும்போது, அவைகளையும் சொல்லுகிறது. முக்யமானவைகள் தர்ச பூர்ண மாஸ இஷ்டிகளும், ஸௌர்ய தேவதையின் யாகமும். இந்த விஷயத்திலும், அவைகளுக்கு ஒற்றுமை யிருக்கிறது.

(4) மேலும், ஸௌர்ய தேவதையின் யாகத்தை ஆஹவநீயத்தில் செய்யவேண்டியது. ஸ்ம்ருதிகள் சொல்லும் அங்கங்கள் ஔபாஸநாக்நியில். இப்படியே பெரியோர்கள் ஆசாரம். அவைகளை யெடுத்துக்கொண்டால், ப்ரதாந யாகங்கள் ஓர் அக்நியில்; அங்கங்கள் வேறு அக்நியில் என்று ஏற்படும். இரண்டும் ஒரே இடத்திலிருக்க வேண்டுமென்பது இல்லாமல் போகும்.

(5) பூர்வ பக்ஷத்தில் சொன்ன குற்றம் வராது. ஒரு விதியால் அங்கங்களைத் தர்சபூர்ணமாஸ இஷ்டிகளோடு பிணைத்து, அவைகளை வேறொரு யாகத்துக்கு விதிப்பதானால், சொன்ன குற்றமுண்டு. அப்படியில்லையே. அதிதேசத்தாலேயன்றோ அவைகளைக் கொண்டுபோவது. தர்ச பூர்ண மாஸ இஷ்டிகளுடன் பிணைத்திருப்பது குணமாயிற்றே. ஓரிடத்தில் பிணைக்கப்படாததை வேறிடத்துக்குக் எப்படி கொண்டு போகிறது. (சா—546—547)

நாலாவது பாதம் முற்றிற்று.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமத் எம்பெருமானார் திருப்பள்ளியெழுச்சி

[ஸ்ரீ. உப. அ. தே. ராமாநுஜய்யங்கார், திருக்குருகூர்.]

சீர்மரு வுங்கமலத் திருமக டன்கணவன்
றிருவரு ளாலுயருந் தேசிக ரிற்றலைவன்
பார்பர வுங்கருணைப் பழுதறு மகிழ்மாறன்
பரிவுட னருளியநற் பனுவல்க ளாயிரமுங்
கார்நிக ருனதுபெருங் கருணையி னாலுலகிற்
கட்டுரை செய்தருளிக் கலியத னைக்கடிவா
யேர்மரு வும்பொழில்சூ ழினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 1

தினமத னுக்கிறைவன் செங்கர மாயிரமுந்
திக்குறு மிருளிரியச் சேர்ந்தன குணவறைகா
ணுனதுக ழல்கமலம் தொழுதுயிர் பெற்றிடுவா
ருயர்ந்தபு கழ்த்திருமா லடியவ ரெய்தினர்காண்
சினமத னைக்கடியுந் தேசிக ரிற்றலைவா
திருமலை நம்பிதனக் கபிமத னானவனே
யெனதுயி ருக்கமுதே இனியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 2

பதமுறு மெய்ச்சுருதித் தலையில்வ ரும்பொருளைப்
பதின்மர்க லைப்பொருளோ டொக்கமி கப்பகர்வார்
சதுமறை யிற்பொருளைத் தத்துவ நூலுடனே
சந்தத முஞ்சொலுவார் வந்தொலி மிக்கதுகா
ணிதனையி னிச்சிடரோ னுதயம திக்குறையா
யெண்ணியெ னைப்போல்வார் விண்ணில்மி கப்புகவே
இதமருள் வித்தகனே வினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 3

தப்பில்நெ றிப்பொருளைத் தனியொரு தேர்தனிலே
தன்னுயி ரானதனஞ் சயனவ னுக்கருளா
லொப்பியி சைந்திடவன் றுபதே சித்தருள்கூ
ருத்தம னடியிணையே யொள்ளிய தஞ்சமெனச்

செப்பில டங்காநன் மணிநிக ருனதருளாற்
செப்பிய செவ்வியவென் திருவர தற்கினிய
வெப்புவி யும்புகழ்சே ரினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 4

கொத்தல ரும்பொழிலில் கோதறு தாமரையிற்
கொண்டெழு வண்டொலியும் கோவலர் குழலொலியும்
மத்துறு தயிரொலியும் மாதர்கள் வளையொலியும்
மறையவ ரோதொலியும் மண்டியெ ழுந்தனகாண்
பத்துடை யடியவர்தம் பயனது வானவனே
பரசம யத்தினர்மப் பாறவு தித்தவனே
எத்திசை யும்புகழு மினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 5

கஞ்சம லர்க்கணமுங் கள்ளவிழ் முல்லைகளுங்
கலகிய ணைந்துவரும் கடிகமழ் மாருதமும்
மிஞ்சியி திந்தனுகக் குணதிசை யதுவெளவே
மெல்லவெ ழுந்தனகாண் கற்றில மேதிகள்தா
னஞ்சுக மேனிநிகர் புல்லத னைக்கருதா
வத்துணை யாதரவா லடியிட வுற்றனகா
ணெஞ்சலி லிமையவர்சூ ழினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 6

தேசிகர் பஞ்சவரும் செப்பமு டன்றிருமால்
சிந்தைம கிழ்ச்சியுடன் றெரிசன முய்ந்திடவே
மாசில்து யத்துடனே நின்கணு ரைத்திடுவார்
மற்றுள மறையோரும் வந்தனர் நற்றுணையாய்க்
காசினி யிற்பொலிவேய் கச்சிந கர்த்திருமால்
கருணைத னக்குரியாய் கற்றவர் கற்பகமே
யீசவெ னக்குயிரே வினியபெ ரும்பூதூ
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 7

தெண்டிரை தவழ்பொருனைத் தென்ளிய தண்புனலும்
திருமக ளுறைமார்பன் திருவடி யிற்புனலும்
புண்டரி கம்மீகுசூழ் பொன்னித னிற்புனலும்
பொங்குசி லம்புநதிப் புடலுட னத்தனையுங்

கொண்டுகு டங்கடனிற் கூரகு லாதிபனும்
மற்றுள வாரியருங் குழுமியெ ழுந்தனர்கா
ணெண்டிசை யும்பொலிவா ரினியபெ ரும்பூது
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 8

செங்கம லச்செறுவிற் பெடையொடு மினிதமருஞ்
சிறப்புடை யன்னமுந்தன் சிறகுத றிக்கரைமே
லங்குள விரையதனைக் கருதிய தற்கருகே
யடியிட வைத்ததுகா ணஞ்சிறை வரியுடனே
யெங்கள்கு டிக்கரசே யெழில்வர தற்கினியா
யெழிலுறு பொற்கமலப் பதயுக முடையவனே
யெங்குமெ ழும்பொழில்சூ ழினியபெ ரும்பூது
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 9

சின்னமு மத்தளமுஞ் சீர்மலி காளமுடன்
றிகழ்திரு மால்பதியிற் றேசெழு சங்கதுவும்
முன்னம ளித்தனர்காண் முழுதுணர் வேதியனே
முடும்பையர் குலத்திலுறும் வேங்கட வற்கினியா
யென்னையு முன்னடியிற் கொண்டவ னேபரனே
யெழில்மகிழ் மாறனடிக் கிசையுமி கப்புனிதா
வின்னமு தப்புனல்சூ ழினியபெ ரும்பூது
ரெதிவர னேயமலா பள்ளியெ ழுந்தருளே. 10

கடிகம ழும்பொழில்சூழ் குருகைந கர்க்கிறைவன்
கழலிணை தொழுதெழுவோ னெதிவர மாமுனிதன்
னடிதனி லேமிகவும் பரிவுட னுரைசெய்த
பள்ளியெ ழுச்சிதனைப் பகர்பவர் தாமினிதாய்
கொடியணி நெடுமதிளுங் கோபுர மும்புடைசூழ்
கோதறு பரமபதங் குறுகிய திற்றிருமால்
அடியிணை யதனருகே அடிமைகள் செய்தினிய
வமரர்க ளால்மிகவும் மாதர முறுவர்களே. 11

ஸ்ரீ:

க்ரந்த விமர்சம்

திருவாய்மொழி :—[நம்மாழ்வார் அருளிச்செய்தது: திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கெ. ராமாநுஜாசார்யரால் எழுதபட்டுள்ள எளிய தமிழ் உரையுடன் கூடியது.] ஸ்வல்ப காலத்திற்கு முன் ஆரம்பிக்கப்பெற்ற இந்த க்ரந்தம் இப்பொழுது பூர்த்தி அடைந்து அநுபந்தங்களுடன் வெளி வந்துவிட்டது. இதில் ஒவ்வொரு திருவாய் மொழியின் பொருள் அந்தந்தத் திருவாய்மொழியின் முதலிலும், ஒவ்வொரு பத்தின் பொருள் அந்தந்தப் பத்தின் ஆரம்பத்திலும், ஒவ்வொரு பாசுரத்துக்கு முன்னால் அதற்கு அவதாரிகையும், பாசுரத்துக்குக் கீழே பதவுரையும் கருத்தும் விசேஷார்த்தங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. திருவாய்மொழியின் தாத்பர்யத்தை ஸ்ரீ தேசிகன், 'த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி' என்னும் க்ரந்தத்தில் ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமாக அருளிச்செய்திருக்கிறார். அந்த ச்லோகங்களும் அந்தந்தத் திருவாய்மொழியின் கடைசியிலும் அந்தந்தப் பத்தின் கடைசியிலும் தமிழ் உரையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும், கண்ணிநுண் சிறுத்தாம்பின் பொழிப்புரை, தமிழ் இலக்கணக் குறிப்பு பாட்டுக்களின் இலக்கணம், அரும்பத அகராதி, இவை முதலியவைகளைக் காட்டும் எட்டு அநுபந்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதலில், ஆழ்வார் விஷயமாகவும் திருவாய்மொழி விஷயமாகவும் ஒரு அவதாரிகையும் எழுதப்பட்டிக்கின்றது.

இவையெல்லாவற்றையும் நாம் தீர்க்கமாகப் படித்தோம். உரை எழுதப்பட்டிருக்கும் ரீதியும் அநுபந்தங்களின் ப்ரக்ரியையும் ஒவ்வொன்றும் புகழத்தகுந்ததாக இருக்கையிலும், அவதாரிகை எழுதப்பட்டிருக்கும் மாதிரியும், அதில் உபபாதிக்கப்பட்டுள்ள விஷயங்களும், நமது மநஸ்ஸை மிகவும் கவர்ந்தன. திருவாய்மொழி ஸம்பந்தங்களான விஷயங்களெல்லாம் இந்த அவதாரிகையில் ஆறு அதிகாரங்களில் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது அதிகாரத்தில் திருவாய்மொழி விஷயம் முழுவதும் பன்னிரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றது. அம்மாதிரியே 'நாயிகா பாவம்' 'தமிழ் வேதம்' இந்த இரண்டு விஷயங்களும் தனித்தனியே நான்காவது ஐந்தாவது அதிகாரங்களில் பரிசீலநம் செய்யப்பட்டு, அவைகளின் ரஹஸ்யார்த்தங்களும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. விஷயங்களைச் சங்கா களங்கங்களின்றிக்கே தெளிவாக க்ரஹித்து, அவைகளை ஹார்த்தமாக அநுபவித்திருப்பவர்களாலன்றி, வேறு ஒருவராலும் இம்மாதிரியான கார்யம் ஸாதிக்கப்படமாட்டாது என்பது நிச்சயம். ஸ்ரீ. உப. ராமாநுஜாசார்ய ஸ்வாமி, க்யாதி லாபாதிகளை உத்தேசித்து இந்தக் கார்யத்தில் ப்ரவர்த்திக்கவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆழ்வார் எம்பெருமானை அநுபவித்ததுபோல, அம்மாதிரி பாக்யம் பெற்றவர்களெல்லாரும் அவனை அநுபவிக்க ப்ரயத்நம் செய்யவேண்டும் என்பதே அவருடைய மநோ

ரதம். இந்த உதாரமான மநோரதத்தைப் பூர்த்தி செய்விக்க இந்த க்ரந்தம் மஹத்தான உபகாரமாகும் என்பது நிச்சயம்.

(2). அம்ருத வர்ஷிணீ: [திருக்குடந்தை ஸ்ரீ பராங்குச பக்த ஸபையாரால் ப்ரசுரிக்கப்படும் மாத ஸஞ்சிகை]. ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்டுள்ள 'நாலாயிரம்' என்று சொல்லப்படும் திவ்யப்ரபந்தங்களுக்குப் பூர்வாசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கும் வ்யாக்யாநங்களை அநுஸரித்து எளிதான தமிழ் நடையில் மொழிபெயர்ப் பொன்று செய்து, அதை மாத ஸஞ்சிகை ரூபமாக வெளியிடவேண்டும் என்னும் உத்தேசத்துடன், 'ஸ்ரீ பராங்குச பக்த ஸபை' என்னும் பெயருடைய ஒரு ஆஸ்திக ஸமாஜம் திருக்குடந்தையில் ஏற்பட்டிருப்பதாக நாம் அறிகிறோம். இப்பொழுது பொதுத் தனியன்களின் உரையும், முதல் திருவந்தாதியின் உரையும் எழுதப் பெற்று, மூன்று ஸஞ்சிகைகள் வெளி வந்திருக்கின்றன. இது ஒவ்வொரு மாஸமும் விசாக நக்ஷத்ரத்தில் வெளிவரும். ஒரே தடவையாக ரூ 35 கொடுத்து உபகரிப்பவர்களும், வருஷம் ஒன்றுக்கு ரூ 5 அல்லது ரூ. 3 வீதம் கொடுத்து உபகரிப்பவர்களும் இந்த ஸபைக்கு அங்கத்தினராவார்க ளென்றும், அவர்களுக்கு ப்ரதிமாஸமும் ஸஞ்சிகைகள் ஸபையின் செலவிலேயே அனுப்பப்படுமென்றும், கார்யதர்சியின் விண்ணப்பத்திலிருந்து தெரிய வருகின்றது. இந்த ஸபைக்கு அங்கத்தினராகச் சேர விரும்புவர்கள் கீழ்க்குறிக்கப் பட்டிருக்கும் விலாஸத்திற்கு எழுதலாம். கே. வரதாசார்யர், பி. ஏ., பி. எல்., வக்கீல், பச்சையப் முதலித் தெரு, கும்பகோணம்.

(3) யது நாத கத்யம் —இது, ராமநாதபுரத்தைச் சேர்ந்த பர்தல்குடி என்று பெயருள்ள ஸ்ரீ க்ராமத்தில் எழுந்தருளியிருக்கும் வேலாமூர் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யர் என்னும் ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருத பாஷையில் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஒரு கத்யம். ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய சரித்ரத்தை ச்ராவ்யமான சப்தங்களால் மிக்க ரஸத்துடன் இந்த க்ரந்தத்தில் அந்த ஸ்வாமி வர்ணித்திருக்கிறார். ஸ்ரீ தேசிகனால் அநுக்ரஹிக்கப் பட்டிருக்கும் 'ஸ்ரீ ரகுவீரகத்யம்' என்னும் க்ரந்தத்தின் ப்ரகாரத்தை அநுஸரித்தே இந்த க்ரந்தம் எழுதப்பட்டிக்கின்றது என்பது இதை ஸேவிக்குமவர்களுக்கு நன்கு விளங்கும். இதில் காணப்படும் சப்த ஸௌஷ்டவமும், அர்த்த புஷ்டியும், ஹார்த்தாநுபவத்துடன் கூடிய வர்ணநங்களும், மிகவும் ரஞ்ஜகங்களாக இருக்கின்றன. 'ஸ்ரீக்ருஷ்ண பஜந தசகம்' என்று ஒரு தசகமும் இதனுடன் சேர்த்து அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதன் விலை 0 - 1 - 6. அபேக்ஷிப்பவர்கள், "மானேஜர், ஸ்ரீஸத் வித்யா புக்-டெப்போ, நெ. 1 புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ்" என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புகள்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸர் எஸ். ராதா க்ருஷ்ண வித்வானும் ஹிந்து மதமும்

சென்ற மாஸத்தில் நடைபெற்ற தியஸாபிகல் [Theosophical] வார்ஷிக மஹா ஸங்க ஸம்பத்தமாக 'ஸர்வ மத ஸதஸ்' என்று ஒரு ஸங்கம் சேர்ந்தது. அதில், இக்காலத்தில் இந்த ஜகத்தில் ப்ரதாநங்களாகக் கொண்டாடப் பட்டு வரும் மதங்களெல்லாவற்றைப் பற்றியும் அந்தந்த மதங்களுள் ப்ரஸித்தி பெற்ற பெரியோர்களைக் கொண்டு பல உபந்யாஸங்கள் செய்விக்கப்பட்டன. ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன் என்பவர் அப்பொழுது ஹிந்து மதத்தைப்பற்றி உபந்யஸித்தார். அந்த உபந்யாஸத்தில், அவர், ஹிந்து மதம் என்பது, அநாதி காலமாய் எவ்வித மாறுதலையும் பெறாமல் எப்பொழுதும் ஏக ரூபமாயிருக்கும் சில தத்வக் கொள்கைகளையாவது சில கர்மாநுஷ்டாநங்களையாவது சார்ந்து நிற்கின்றது என்று நினைப்பது தவறுதலான நினைவு என்றும்; சற்றேறக்குறைய நாலாயிரம் அல்லது ஐயாயிர வர்ஷகாலமாக அந்தந்தக் காலத்தில் வாழ்ந்து வந்த வித்வாங்களால் தம் தம் புத்திக்கு எட்டின மட்டும் ஆலோசிக்கப் பெற்றுத் தம்மால் அநுபவிக்கப்பட்டுள்ள அநுபவங்களையே அந்த மதம் சார்ந்து நிற்கின்றதென்றும், அந்தக் காரணத்தாலேயே அது காலம் செல்லச் செல்ல மேன்மேல் தெளிவைப் பெற்று வருகின்றதென்றும், அந்தத் தெளிவு இன்னமும் பூர்த்தியைப்பெறாமல் அஸமக்ரமாகவே இருக்கின்றதென்றும், அப்படி இருப்பதே உண்மையான மதத்தின் லக்ஷணமாதலால் அந்த மதம் உண்மையான மதங்களுள் ஒன்றாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்றும், இத்யாதியான அபிப்ராயங்களை வெளியிட்டிருக்கிறார். உபநிஷத்துக்களில் தென்படும் தத்வ விவரணங்களுள் சில விவரணங்களே உபாதேயங்களாம்; மற்றவை யுக்திக்கு ஒத்து வராமையாதலால் பரித்யாஜ்யங்களாம். தைவத்தால் வெளியிடப்பட்டதென்று ஒரு சாஸ்த்ரமுமில்லையாம். எல்லா சாஸ்த்ரங்களும் மநுஷ்ய க்ருதங்களாம். எல்லா மதங்களும் இம்மாதிரி தத்வாந்வேஷணத்தையே செய்து வருகிறபடியால் அவைகளுக்குள் பரஸ்பரம் விரோதங்கள் ஸம்பவிக்கக் காரணம் இல்லையாம். ஒரு ப்ரயாணத்தில் முன்னும் பின்னுமாக ப்ரயாணிகள் ப்ரயாணம் செய்வது போலவே, இந்தத் தத்வாந்வேஷணம் செய்பவர்களெல்லாரும் ஓரே மார்க்கத்தில் முன்னும் பின்

னுமாக ப்ரவர்த்தித்துக்கொண்டிருக்கிறார்களாம். இதுதான் அவருடைய நிஷ்கர்ஷமாம்.

இம்மாதிரியான பல நிஷ்கர்ஷங்களை நாம் அறிவோம். அவையெல்லாம் அத்யந்தம் அநாதரணீயங்களே. ஆனால் இதில் விசேஷித்த அம்சமொன்று இருக்கிறபடியால், நாம் இதைக் கொஞ்சம் விசாரிக்கும்படி நேர்கின்றது. அது என்னவென்றால்:—ஸர் ராதாக்ருஷ்ணன் என்பவர் ஒரு பெரிய வித்வான்; பாஷாந்தரத்திலும் மிக்க தேர்ச்சி அடைந்திருக்கிறார். ஆத்ம ஸம்பத்தமான ஜ்ஞாநத்தை நன்கு பெற்றிருக்கிறாரென்றும் மிக்க ப்ரக்யாதி அவருக்கு உண்டு. மேல்நாட்டு வித்வான்களெல்லாரும் இவரை ஹிந்து மத விஷயமான சாஸ்த்ரங்களில் ஒரு பெரிய அதிகாரியென்றே கொண்டாடி வருகிறார்கள். எவ்வித ஆக்ரஹமுமின்றிக்கே ஸகல விஷயங்களையும் தடஸ்தமாக விசாரிக்கும் யோக்யதை இவரிடம் பூர்ணமாக வாய்ந்திருக்கின்றது என்பது அவர்களுடைய ஹார்த்தமான நம்பிக்கை. இவ்வளவு யோக்யதா விசேஷத்தைப் பெற்று, வ்யபதிஷ்டரென்று ஸாமாந்ய ஜநங்களால் இவர் பஹுமதிக்கப்பட்டு வருகிறபடியால், இவர் தமது அபிப்ராயங்களை வெளியிடும் விஷயத்தில் மிக்க ஜாகரூகராய் இருத்தல் வேண்டுமன்றோ? இப்பொழுது இவர் ஹிந்து மதத்தைப் பற்றிப் பேசியிருக்கும் வார்த்தைகள் வஸ்து ஸ்திதியை உள்ளபடி உணர்த்துகின்றனவா என்பதைப் பரிசீலித்துப் பார்த்தால், இவர் சொல்லியிருப்பது முழுவதும் உண்மையான ஸ்திதிக்கு விருத்தமாக இருக்கின்றது என்பது நன்கு விளங்கும். ஹிந்து மதமானது அபௌருஷேயமான வேதத்தையே சார்ந்து நிற்கின்றதென்பதும், அதன் தத்வ நிர்ணயங்களெல்லாம் அநாதி காலமாக ஏகரூபமாகவே இருக்கின்றனவென்பதும், உபநிஷத்துக்களெல்லாம் ஏககண்டமாக ஒரே விஷயத்தை ப்ரதிபாதிக்கிறபடியால் அவைகளுள் ஒரு அம்சமும் அநுபாதேயமாக மாட்டாதென்பதும் இன்னும் இவை போன்றதன்றோ வஸ்து ஸ்திதி? இப்படியே நமது ஆசார்யர்களெல்லாரும் நிர்வாஹம் செய்திருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் அநாதரித்து, தம்முடைய புத்திக்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அதுவே ஹிந்து மதத்தின் ஸவரூபம் என்று இவர் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ?

இக்காலத்தில் ஒவ்வொருவரும் தம் தம் அபிப்ராயத்தையே ஒவ்வொரு மதமாக ஸ்தாபித்து வருகிறார்கள். அப்படி கணக்கற்ற மதங்கள் புதிது புதிதாக வெளிவந்துகொண்டிருக்கின்றனவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுடன் நமக்கு எவ்வித விவாதமும் இல்லை. ஸர் ராதாக்ருஷ்ணனும் அம்மாதிரி ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க ப்ரயத்நப்பட்டால் நாம் அதைப்பற்றிக் கொஞ்சமேனும் சோகிக்கமாட்டோம். அப்படிச் செய்யாமல் இவர் தமக்குத் தோன்றுவதையே ஹிந்து மதத்தின் லக்ஷணமென்று சொல்லி, ஹிந்து மதம் இப்படிப்பட்டது என்பதை அறியாத மனிதர்களின் புத்தியில் அந்த மதத்தைப் பற்றிக் கீழ் விவரித்திருக்கிறபடி ஒரு விபரீத ஜ்ஞாநத்தை ஜநிப்பிக்கிறாரே என்பது மாத்ரம் நமக்கு மிக்க வருத்தத்தை உண்டு பண்ணுகின்றது. இதைப்பற்றி மறுபடியும் அவகாசம் நேரும்பொழுது பூர்ணமாக விசாரிப்போம்.

வேறு

பொங்கிய வடவையிற் புழுங்கிச் செம்பிய
னிங்கித முணர்ந்தவோர் படையி னேந்தலைத்
துங்கவெஞ் சேனையிற் போந்தத் துண்டனை
யிங்குறப் பிணித்துமீள் கெனவி யம்பினான். 50

கேட்குமு னம்மொழி கிளர்ந்து சேனைமன்
பூட்கையின் புரவியி னணியும் பொங்கழல்
வாட்படை வயவருந் திரண்டு சூழ்வரக்
கோட்புலிப் போத்தெனக் கொதித்துச் சென்றனன். 51

துரகதந் தெண்டிரை துலங்கு சாமரை
நிரைநுரை கரித்திர ணிறைதி மிங்கிலம்
விரவிய வாகினி வேலை யோடுசென்
றுரைபெறுங் கலியன தூர்வ ளைந்தனன். 52

உருமென விடிப்புறு முரசவோ தையுங்
கரிபல பிளிறுவெங் கலிப்புங் காலென
விரைவுறு மைங்கதிப் புரவி வெள்ளங்கள்
வரைவில கனைத்திடு மிசையின் வன்மையும். 53

வெருளியிற் றுடித்தி வீசை மன்னர்க
ணகநிகர் புயம்புடைத் திரையு நாதமுஞ்
செகமெலாஞ் செவிடுறக் கிளரக் கேட்டுளம்
புகைதரப் புழுங்கினர் கலிய னாங்கரோ. 54

ஆடன்மா வலவனா யங்ஙனே யெழுந்
தோடுறச் சிறுவயப் படையி னொன்னல
ராடுக ளிரிந்தெழ வடர்க்கும் வேலையின்
வீடுறத் தமினுயிர் வீழ்ந்து டற்றினார். 55

கதிர்விடு மசிதனிற் கரிக்கு லத்தினை
முதிர்சின மடங்கலொன் றுகிரின் மோதுபு
சிதைவுற வகிர்வது கடுப்பச் சேரலார்
வதைபட மறலியின் வலிந்து வாட்டினார். 56

வந்திடு மூவகை வரூதி னித்திர
டந்துயி ரந்தகன் றனக்கு வீழ்தலும்
வெந்திற லனீகினி வேந்த னோடிய
விந்தையைப் பவனனே வியந்து நோக்கினான். 57

இட்டனன் புறம்வெரீஇ யேதிலா னெனக்
கட்டழ குரையுளாங் கலியன் சீற்றமும்
விட்டிழி குருதிவாள் விளங்கு பொன்றட
றிட்டன ரரண்மனைக் கெழுந்து மீண்டனர். 58

கதிர்மணி மந்திரங் கலக்கக் கைரவத்
துதிதருந் துடியிடை புலந்து புல்லினண்
மதிமுகச் சனகிமுன் மறந்த ரக்கரை
வதைபுரி மணாளனை யணைந்த வாறெனா. 59

பின்னரப் பராந்தகன் பெருகு கிள்ளியை
யொன்னல னெனத்தமக் குணர்ந்து வேலைசூழ்
மண்ணெலா மெதிர்ப்பினு மடிக்கு மாற்றல்சா
லின்னமும் பெரும்படை யியையக் கூட்டினார். 60

வென்கொடுத் திரிந்தவச் சேனை வேந்தனும்
பொன்கொழித் திடுநதிக் கிறைவன் பொற்பதந்
தன்கரங் குவித்தனன் றாழ்ந்து நாவெழா
தென்கழ றுவதென விரங்கி நின்றனன். 61

கண்டது காவலன் கறுத்து வாய்மையை
விண்குறை யெனவவன் விதிர்த்து வேந்தனை
திண்டிற லவனது தெரிக்கற் பாலதோ
கொண்டென துயிரையே குலைந்து மீண்டனன். 62

தருமனுங் கலியனுந் தக்க வன்மையின்
விரிபடை யுயிரையும் விளங்கு மாமணி
யரியபொற் பணிமுத லனைத்தை யும்பகிர்ந்
திருவரு முறைவழு வின்றி யேகினார். 63

என்றலு மிறைவன திருகணுஞ் சுடர்
துன்றிய கொழுந்தினி லாலஞ் சூழ்ந்தபோ
லன்றிருஞ் சிவப்புற வகங்கொ தித்திட
வென்றிகொ ளமைச்சரை விளித்துக் கூறுவான். 64

18-வது சருக்கம்

வேறு

தானைத் தலைவன் றனையன் றனைத்தாங் கவையங்
கோனைப் பொருவ விழைத்திட் டவென்குற் றமேயோ
ஆனைக் கெதிராம் வெருகென்னவென் றுணைமீறிச்
சேனைத் திரள்க ணமதும் மவன்சென் றழித்தான். 1

காணிற் கலங்குங் கருதா தவர்கா லனஞ்சுங்
கோனைக் களிறு முதல்வா கினிகூர்ந் தவெல்லாம்
மாணப் புனைந்து கடுகத் திருமங் கைமன்ன
னேணாற் புரிசை வளைந்தெற் றுகவென் றுதாழான். 2

நண்ணாற் வணங்கு மிளிற்பொற் கழனன் குவிக்கிக்
கண்ணா ருசத்தின் மணிபோர்க் கவசங் கவித்துப்
புண்ணீ ரொழுகு மயில்வாண் முதற்போற் றும்வெய்ய
வெண்ணான் குடற்றும் வயவே திகளேற் றுமன்னே. 3

கையாற் கரிய முகில்வெம் பகையென் றுகன்றி
மெய்யா வலிக்கு மொருவெங் கரிமீ திவர்ந்து
பொய்யாத் தருமற் கெதிர்போ யமுன்போர் கலந்த
வெய்யோன் பகதத் தனின்வா கினிவே லைசுற்ற. 4

கன்னங் கறுத்த சயிலக் கனகத் தினோங்கி
மின்னுங் குவட்டின் மிசைவெண் மதியூர் வதொத்த
வெண்ணின் கவிகை நிழலிற் புடைவீ சுவெள்ளைப்
பொன்னங் கவரி குளிர்கால் செயப்போ கினால். 5

வனப்பிற் குறுகார் புறந்தந் தெழுவாட் டுவீரத்
தனத்தின் மதனைத் தருமன் றனைவென் றநீரார்
தனக்கெந் தநாளுந் திறைதந் ததரா ணிபாலர்
சினத்திற் கணக்கற் றவர்பாங் கரடர்ந் துசென்றார். 6

சோனைப் பெருக்கிற் சொரிதா னக்கவு ளும்வாழைக்
கானைப் பொருவு முடலும் பனைக்கையுமார்ந்த
வானைத் திரளம் புலிவெற் படையத் திரண்டு
சேனைத் திரளிற் கருங்கா லொடுசெல் லபோதும். 7

காற்றும் பறவைக் கிறையுங் கதிகண் டுமோதும்
பாற்றங் கெழிற்சா மரைப்பண் செறிபா ரசிகத்
தாற்றங் கரையில் வளர்ந்தா டமரிற் பயின்ற
வேற்றம் பயிலுந் துரகத் தணியெண் ணலென்னே. 8

தும்பிக் குலந்து ரகமான் களிற்றேன் றுமார்ப்புங்
கம்பிக் கவெங்குங் குணின்மோ துபறைக் கலிப்பும்
பம்பிக் கிளம்பப் பரவம் பாத்தோ ருமாங்கே
வெம்பிக் கலங்கி லிவர்செய் திவிளம் பலென்னே. 9

எண்ணற் றவெய்ய வனிகத் தினெழுந் ததூளி
வண்ணக் கரும்பேர் மகரா லயந்தூர்த் துவானின்
கண்ணுற் றதிங்கள் கதிர்மாய்த் தெழக்கண் டதெய்வத்
தண்ணற் றரள நகைமா தர்கடாங் களித்தார். 10

சுடரும் பல்லே தித்திரை யும்பல சும்மையும்மிக்
கடருந் தளமா மகல்வா ரிதிக்கா னவெற்பின்
கடலின் றெழுந்த கடமா நதிபா யுமந்தப்
படையின் பெருக்கைப் பரகா லனன்றார் படுப்பார். 11

பேனா ருடலைப் பிளக்கும் விளையா டலுந்தம்
வானாண் மதியா விறலும் மிகுவீ ரரோடு
மானான் கலியன் மறமுங் குறித்தும் பர்மாத
ரேனார் வதுவை யெழிற்கோ லமியைந் துகின்றார். 12

சென்றின் னவண்ண மிறைவன் பெருஞ்சே னைமாடக்
குன்றம் மனைகங் குழுமுந் திருமங் கையென்னும்
பொன்றங் குழூரின் புரிசைப் புறஞ்சூ ழவாழ்வார்
மின்றங் குதந்தம் மிளிரச் சிரித்தீ துரைப்பார். 13

தாளு துமென்றன் றகுமா மதிவல் லபத்தோய்
வாளா ரரியைப் பலதும் பிவளைக் குமாபோற்
பாளா கபயன் பலவா கினிபோ டுநம்மை
யானா கிவெல்ல வகந்தைக் கிறையா கிவந்தான். 14

றூறா யிரமா ளொருவீ ரனொருக் கவீழும்
வீறா ரளவில் விறலா ரினஞ்சே னைவெள்ளஞ்
சிறா வெழுக வினியென் றவர்செப் புமுன்ன
மாறா வலத்தி னவையா ரவத்தாங் கெழுந்த. 15

வேறு

கலியனு முடனே போரிற் கருதலார் காணின் மாழ்கும்
வலியுறு மணியி னான்கு மந்திரத் தலைவர் சூழக்
கலியொடு முத்தி யூழிக் கால்கரை புரண்டு வைய
நலிவுற வெழுந்த தென்னும் பதாகினி நடுவிற் சென்றார். 16

கரவான முதல கானார் கருத்தழி படைக டாங்கிப்
பரகாலன் படைக டேசாந் தரத்திருந் தெழுந்த கொண்கற்
குரமாருங் கற்பின் மின்னா ளுவந்தெதிர் படர்வ தொப்ப
நரபால னபயன் றானைக் கெதிருற நடந்த வன்றே. 17

எண்ணறு மிருவர் தானைச் சும்மையி னிறங்க லுற்ற
கண்ணகன் மங்கை யூரை யனந்தனங் கரிய மாலின்
பண்ணமர் வழிவிளக்கும் பராந்தகன் பதியென் றுன்னி
யொண்ணறு முடிகளாலே யுவந்துரத் தேந்தினால். 18

இன்னண மெழுந்த வந்த விருதிறப் படையு மார்ப்பிற்
கொன்னவில் பரியகோட்டுக் குஞ்சரத் தொடுகைம் மாவும்
பன்னரு பரிக ளோடப் பரிகளு மானோ டாளுந்
துன்னிய வமரர் காணத் துனிமிகப் பொருத மாதோ. 19

மறங்கெழு மொருவன் பார வாளெனுங் கொடியை மாற்றான்
றிறங்கெழு களத்தின் வீழ்த்து முன்னரத் நிணிய கந்தி
லறங்கெழு விசும்பி னார்வத் தெதிர்ந்துறு மமர மாதி
னிறங்கெழு கரத்தி னாறி நிலவுதார் வீழ்ந்த தம்மா. 20

மற்றொரு வயவன் வீட்டு மதமலைத் தலையோர் சென்னி
யற்றவ னடிக்கு முண்டத் தியைந்தாட லரவம் பூண்டான்
பெற்றநற் கரிமு கத்துப் பிள்ளையார் கலியன் வெய்ய
கொற்றம தறிந்தா னந்தங் கூர்தரக் குனித்தன் மானும். 21

ஆங்கொரு மறவன் சென்னி யறுப்புண்ட கவந்த மீதி
னோங்குமோர் சூரக தத்தின் றுணிபடு சிரம்வீழ்ந் தொன்றத்
தாங்குறுந் தோற்ற மாயோ தனங்காண விசும்பி னின்று
மீங்குற விழுந்த கிம்பு ருடனது வடவ மேய்க்கும். 22

காலனுக் கிணையோர் காளை யொருமத கயத்திற் கும்ப
மேலிருங் கதையிற் றாக்க மிகுசெருக் களத்தி னெங்கும்
வாலொளி சிதறச் சிந்துந் தரளங்கண் மங்கை மன்னன்
மேலுறும் வயப்பொன் மின்னாட் கிறைத்தவெண் பொறியின் மின்னும்.

ஒன்றினொன் றடியுண் வெய்ய வொளிர்படைப் புலிங்க மன்னர்
கன்றிடு சினத்திற் கண்ணிற் கான்றிடு மவையும் விஞ்சித்
துன்றிய குடைப தாகைத் தொகைகளி னெருக்கி னெங்கு
மொன்றிய கரிய மிக்க தமந்தனை யொழிக்கு மன்றே. 24

இன்னண மறவர் பொங்கி யெதிரெதி ருடற்ற மங்கை
மன்னவன் றிரித்துக் கேட கந்தனை மலர்க்கை பற்றுங்
கொன்னவி லசியுங் காரார் கொண்டலி னிடைய ருது
மின்னுறுங் கொடிமின் னென்ன மிளிர்தா விரைவி னாற்றும். 25

பங்கயஞ் செறியு மிக்குப் பரவுமோர் தடத்துட் பொங்கி
வெங்களி றுழக்கு மாபோல் விரைமனத் தடமே செல்லுந்
துங்கமாந் துரக தத்திற் றோற்றிவேண் டலன்பேர் தானை
யெங்கணு மொருவ ராகி வடவெயி னெரித்தா ரன்றே. 26

குணபமோர் குன்றினைத் தன்குவட் டிருந்து பாயு
நிணமிகு குருதி செந்தா திருந்திழி யருவி நேருங்
கணங்கொடு கழுது பாடக் கவந்தமங் கியைய வாடு
முணவுயி ருதரம் வீங்கி நமன்றெவிட் டுறவு நோக்கும். 27

படுகளங் கிழித்துப் பாயு முதிரவா றிடையின் மாய்ந்தார்
வடுவறு முகமே செய்ய மலர்ந்தசெங் கமலஞ் சென்னி
யிடைகருங் கசமே சைவ லந்திகழ் கபால மேய
வடைதரு பகத்தின் சங்க மாங்குறித் தடைவோர்க் கம்மா. 28

மண்டையாஞ் சடக மாருங் குருதிகண் மதித்து மாந்திக்
கண்டையைக் களிற்றின் கஞ்ச மெனக்கொடு கணங்கொள் பூதம்
பெண்டுக ளுடனே யங்கு நாற்கவிப் பெருமாள் சீர்த்தி
பண்டனிற் செறியப் பாடுஞ் சதிமுறை பிறழ்வின் மன்னோ. 29

வளவன்ற னளவில் சேனை யடவிமா வலவன் மங்கை
யுளவனாந் தாவந் தன்னி னீறெழ வுலைதல் காணா
வுளமிகக் கொதிப்புற் றாழி யுருத்திர னெனவே பொங்கித்
தளகருத் தர்களு மற்றத் தாணிபர் குலமுஞ் சுற்ற. 30

சதமகன் சதியி னன்று சலதாம் பலவு மாயர்
சிதைவுறப் பொழிந்த வண்ணங் கலியனார் சேனை வெள்ள
மதமுற விசிகை யாதி யடுபடை யளவி லங்கம்
புதைதர வெறிந்த போழ்தில் விபுதருந் துளங்கினாரால். 31

குமுதமா வல்லி கொண்க னிழலின்கண் மறைவான் கூடத்
தமதுமா விவர்ந்து சீறித் தரியலார் தளத்திற் றுமு
நிமிருமா வசியுமாக நிலவுற நிமிடஞ் சுற்ற
வமுதராங் கறிந்தார் பேணா ரொருவரு மெதிர்க்கக் காணார். 32

எலிக்குல மெரிந்து நாக முயிர்ப்பமாய்ந் தொழிந்த தென்ன
நிலக்கிறை தனது தானை நீறுபட் டொழிய நீலன்
குலக்கொழுந் தாழித் தீயிற் கூர்ந்துமேல் வருத னோக்காக்
கலக்கமுற் றிவனைப் போரில் வேறனுங் கடிதென் றுன்னா. 33

தனியனாய் மீண்டு போந்து தன்னக தனாக மங்கைப்
புனிதனும் வாகை யந்தார் புனைந்துவிண் பொழியும் வாசப்
பனிமலர் மழையி னூடே செயமுர சியம்பப் பாணர்
வினைபுரி விறலைப் பாட மீண்டுதங் கோயில் புக்கார். 34

காவிரி புரக்கு நாடன் கருதியோர் விரகு மற்றும்
பூவமர் விபுதர்க் குற்ற வேடமும் பொருந்திப் போந்து
தேவரு முவக்கும் வாகைத் திருமங்கைக் கிறைமுன் னின்றான்
மாவலி யிடையி லேற்க வணைந்தமா மாயன் போல்வான். 35

போந்தவன் காவி னாசி புகறலு மவரும் பூரித்
தேந்துமுப் புரிவெண் ணூலோ யியம்புக விழைந்த தென்னக்
காந்தையர்க் கனங்க னன்றாய் கருதிய தளிப்ப லென்றிங்
கீந்திடி னுறுதி வாய்மை யிசைக்குவ னிசையின் மிக்கோய். 36

என்னவக் குமுதவல்லி யிறைவனுங் கியைந்து தந்த
பின்னரப் பெரும கன்முன் கோசிகன் பிழையொன் றில்லா
மின்னினன் மரபின் வேந்தன் மெலிவுற விரந்த வண்ண
நின்னிருந் தரணி காவ னேர்கென நிகழ்த்தி னானால். 37

உடைதிரைப் பரவை மீதூர்ந் தெழுவபோ லூறுகன் வந்தக்
கடையுமுள் ளுடைத லில்லாக் கலியனுங் குணர்ந்து வாய்மை
யுடையதம் முறைசெய் காவ லுதகமோ டுதவ வேற்று
நடைமிகுங் கோர மூரு நரபதி வெளியி னாங்கே. 38

வரையிலா வலிய ரேற்று வருகினு மடர்க்க வல்ல
புரையிலாக் கலியன் றன்னைப் புன்சிறைப் படுத்திப் பொன்னி
னிரையிலார் நறையூர் நின்ற நம்பியி னிலவு காலு
முரையிலாஞ் சினக ரத்துள் ளுறைந்திடக் காவல் செய்தான். 39

வேறு

எங்களிறைக் கீதிறையை யீந்திடென வமைச்சன்
றங்கியரு கெப்பொழுதுந் தான்வெருளுந் துனியுஞ்
செங்கமலக் கண்ணனடி யாரமுது செய்ய
வங்குததி யாரதன மாற்றுகிலா விடரும். 40

பட்டினியின் பருவரலும் பட்டுமனங் குன்றிக்
கட்டழகன் வாய்மையெனும் பாசமதிற் கட்டுண்
டட்டவெழுத் தையனையுந் தாமரையா ளடியு
மிட்டமுட னிட்டதிரு வுள்ளமுட னிருந்தார். 41

ஈங்குநிகழ் காலையிலவ் வெழினிலயத் திலகும்
பூங்கமலப் பூமகளார் புத்திரனுண் புன்கண்
டாங்கவருந் தாயரெனத் தன்னுளமும் வெம்பி
யோங்கியுயர் நம்பிதிரு வுள்ளமுறச் சொன்னான். 42

தன்கருணை யின்னுருவாம் பன்னியுரை தன்கா
தின்கணுற முள்ளமுவந் தின்கனவிட் டட்ட
நன்கினிய பாறினமு நாடறிய மறையோன்
றன்படிவ மாகியவ ரங்கையுறத் தருவான். 43

செங்குமுத வல்லியிறை செய்தமுதப் பாலை
யிங்கிதுவு மெம்பெருமா னின்கருணை யென்றே
பொங்கரவப் பாயலரங் கன்னனனந்தப் பொருப்பன்
றுங்ககரி கிரியனிவர் பாதமலர் துதித்தே. 44

எத்தனைநா ளிச்சிறையி ருந்தடியே னினைவல்
சித்திரமாஞ் செய்கையுன தாருணருஞ் சீரார்
நித்தனெயுன் னிகரரிய பொற்பதமென் றூர்வே
னத்திகிரி யருள்வரத வென்றுமனங் கசிவார். 45

இந்தவணம் பல்லளவை செல்லவுமோ ரிரவி
லந்தவர தன்கலிய னின்கனவி லையா
நந்தமிருங் கச்சிநகர் நணுகுவையே லுன்றன்
பந்தமறும் படியரையன் பொன்றருது மென்றான். 46

பொள்ளெனவப் புண்ணியரும் விண்டுதுயில் வாசக்
கள்ளமலர்த் தண்டலைசூழ் கச்சியரு ளாளன்
கள்ளனவ னீதனுரை கண்டுமனம் பொங்கி
யுள்ளவரு கிறைபணிசெய் வோர்கடமை விளியா, 47

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட-கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலைப்புகளோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5 4 0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4 4 0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விச்வாச முள்ளோர்க்கன்றோ சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படி கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत् ।
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல்பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,

313, எஸ்பளனேட், மதருஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

Vol. 24] FEBRUARY 1936 [Part 8

Editors: S. VASUDEVACHARIAR, V. V. SRINIVASA AIYANGAR

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

யுவ ஹு

தை மீ

பத்ராதிபர்கள்:

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபை
(லிமிடெட்)

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 39, முத்தியாலு செட்டி தெரு, வெப்பேரி, சென்னை).

டைரக்டர்கள்.

வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
ப்ரஸிடெண்டு.

பி. ரங்கஸாமி ஐயங்கார்,
(ரிடைர்ட் ஸப் ஜட்ஜ்)
ஜெனரல் ஸெக்ரிடரி.

டி. ராஜகோபாலாசாரியர்,
(ரிடைர்ட் ஸப் ஜட்ஜ்)
எக்ஸிக்யூடிவ் ஸெக்ரிடரி.

எஸ். ஜகன்னாதாசாரியர் ஷை

எஸ். ஆராவமுதய்யங்கார்,
(அட்வோகேட்)
டிரெஷரர்.

டி. டி. ஸ்ரீநிவாஸாசாரியர்,
(அட்வொகேட்)

என். டி. சாமண்ணா,
(ஸொலிஸிடர்).

எம். ஸுதர்சன ஐயங்கார்,
(எம். டி. பிரதர்ஸ்).

ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார்,
(கோயமுத்தூர்).

டி. ஈ. சடகோபாசாரியர்,
அட்வொகேட் திருப்பாபுலியூர்

டி. ஆர். வி. சர்மா,
ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யவும் ஷை ஸித்தாந்த க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்வதற்காகவும் முக்கியமாக இச்சபை ஏற்பட்டுள்ளது. தத்காலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திற்கெனவே சுமார் 25 வருஷ காலமாக நடைபெற்றுவரும் **வேதாந்த தீபிகை** யென்னும் மாதத் தமிழ் பத்ரிகையை இச்சபையார் ஏற்றுக்கொண்டு விஷயங்களை எல்லோரும் எளிதில் அறியக் கருதி இனிய தமிழ் நடையில் ப்ரசுரம் செய்து வருகிறார்கள்.

வருஷச் சந்தா. ரூ. 3—0—0 தனி ப்ரதி 0—4—0

ஸபையில் அங்கனத்தினர்களாகச் சேருகிறவர்கள் ஷேர் 1 க்கு ரூ. 50 செலுத்த வேண்டும். இதை சௌகரியமான தவணைகளிலும் செலுத்தலாம். அங்கத்தினர்களுக்கு ஸபையின் ப்ரசுரமான **ந்யாயஸித்தாஞ்ஜனமும்** இவ்வருஷத்திய தீபிகையும் விலை யன்னியில் கொடுக்கப்படும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே நம:

திஹவநகஊநம் தஊயுவண-ம்
ரவிகுரமளாரவரா ஊரம் ஊயாநெ ।
வவாரஜுககயூராவு தாநநாவெ
விஜயவஸவெர திரவஷு ஜெஉநவஷா ॥

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள்: ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ ஸ்ரீ—தை மீ [ஸஞ்சிகை 8

விஷய ஸூசிகை.

1.	ஸம்பாதகரின் குறிப்புகள்	378
2.	ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]	385
3.	திருவாய் மொழியின் முதலும் முடிவும் [ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்ஹாசார்யர்]	397
4.	வான்சிறப்பு [ஸ்ரீ. உப. பந்தல்குடி திருமலை ஐயங்கார்]	400
5.	மாதுல ஸுதா பரிணயம் [ஸ்ரீ. உப. பண்டித அநந்தாசார்யர்]	406
6.	தீண்டாமையைத் தீர்க்கும் இயக்கம் [ஸ்ரீ. உப. பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்]	409
7.	ஸ்ரீமத் ராமாயணமும் ஆச்ரய ப்ராதான்யமும் [ஸ்ரீ. உப. டி. சுந்தராச்சார்யர், வக்கீல், சீர்காழி]	420
8.	உபய வேதாந்தங்கள் [ஸ்ரீ. உப. டி. சடகோபாசார்யர், திருப்பாதிரிப்புலியூர்]	424
9.	பத்ராதிபரின் விவரண ப்ரத்யுத்தரம்	426
10.	மீமாம்ஸா ஸங்க்ரஹம் [திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]	427
11.	ஸத்வித்யை	1

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, வேப்பேரி, மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றை கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணிவிலாஸ், போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன் மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

158959
சென்னை-600 005.

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

ஐந்தாவது ஜ்யார்ஜ் சக்ரவர்த்தியின் மரணம்.

யுவ வருஷம் தை மீ 7௳ [20—1—1936] திங்கள் கிழமை இரவு மணி 11, நிமிஷம் 55 க்கு, நமது சக்ரவர்த்தியாகிற ஐந்தாவது ஜ்யார்ஜ் மன்னர் தேஹ வியோகம் அடைந்தார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். இவருக்கு தேஹ வியோகம் நேர்ந்த பொழுது எழுபது வயஸ். இவருடைய நாற்பத்தி ஐந்தாவது வயஸ்ஸில் [6—5—1910] இவருடைய பிதா ஏழாவது எட்வர்ட் சக்ரவத்தி மரணம் அடைந்த பொழுது, இவர் ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொண்டு சென்ற இருபத்தைந்து வர்ஷ காலமாக இந்த ராஜ்யத்தைப் பரிபாலநம் செய்து வந்தார். இவர் ராஜ்ய பரிபாலநம் செய்து வந்த காலத்தில் இவருடைய ராஜ்யத்திலிருந்த ப்ரஜைகளெல்லாரும் ஸௌக்கியத்துடன் இருந்து வந்தார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்விதம் ப்ரஜைகள் ஸுகமாக இருந்தது இவருடைய நற்குணங்கள் அஸாதாரண ஸாமர்த்யம் இவைகளை நன்கு ஸூசிக்கின்றதன்றோ?

'இங்கிலாந்தில் ராஜ்ய பரிபாலநம் செய்வது முழுவதும் மந்த்ரிகளின் அதீநமாக இருக்கிறபடியால், அதன் குணத்திற்காவது தோஷத்திற்காவது ராஜாவை எவ்விதத்தில் அதிகாரியாக நினைக்கக் கூடும்?' என்று சிலர் சங்கிக்கலாம். இது நமது ராஜாவின் அதிகாரத்தை உள்ளபடி அறியாதவர்களின் வார்த்தை என்றே சொல்ல வேண்டும். நமது ராஜா நியதமான ஒரு வ்யவஸ்தைக்கு அடங்கி நடக்க வேண்டிய அரசன் (Constitutional monarch) என்பது உண்மையே; மந்த்ரிகள் முகமாகவே அவர் ராஜ்ய தந்த்ரத்தை நிர்வஹித்து வருகிறார்; ஆனால் அப்படி நிர்வஹிப்பதில் அவருக்கு ஏராளமான அதிகார விசேஷம்

இருக்கின்றது என்பதை நாம் மறக்கக் கூடாது. அவருக்கு மூன்று விதங்களான அஸாதாரண அர்ஹதை உண்டு என்று அந்த ராஜ்ய தந்த்ர ரஹஸ்யத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அவையாவன:— (1) மந்த்ரிகள் செய்யும் ராஜ்ய பார நிர்வஹண மெல்லாவற்றிலும் தாம் உட்புகுந்து அவைகளில் தமது அபிப்ராயத்தைக் கலந்து கொள்ளும்படி இவர் மந்த்ரிகளை நியமிக்க அர்ஹர்; (2) மந்த்ரிகள் செய்யும் கார்யங்கள் இவருடைய புத்திக்குச் சரியானவை யென்று தோன்றினால் அவைகளில் அவர்களை தைர்யத்துடன் ப்ரவர்த்திக்கும்படி ப்ரோத்ஸாஹநம் செய்யலாம்; (3) அவர்கள் செய்யும் கார்யங்கள் தோஷ துஷ்டங்களென்று இவருக்குத் தோன்றும் பக்ஷத்தில், அவர்களை இவர் அநுசாஸநம் செய்யலாம். [Right to be consulted, right to encourage and right to warn.] இந்த அதிகாரங்களை அவ்யாவர்த்தகங்களான அதிகாரங்களென்று நினைக்கக் கூடாது. அஸமர்த்தர்களான ராஜாக்கள் விஷயத்தில் இவை அவ்யாவர்த்தகங்கள் ஆகுமே தவிர, ஸமர்த்தரும் நற்குணம் வாய்ந்துள்ளவருமான ராஜாக்கள் விஷயத்தில் இவை மிகவும் ஸபலமாகவே பரிணமிக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

இந்த ராஜாவை நாம் நேரில் அறியோம். ஆனாலும் ஆப்தர்களிடமிருந்து இவருடைய நற்குணங்களின் மஹிமையைப் பற்றி நாம் பஹுவாகக் கேட்டிருக்கிறோம். லோகத்தில், சர்ப்பேச்வரனாக இருப்பது, நல்ல வயஸ்ஸிலிருப்பது, ஒப்பற்ற ரூபத்தை உடைத்தாயிருப்பது, அமாநுஷ சக்தியைப் பெற்றிருப்பது இவை ஒவ்வொன்றும் மஹத்தான அவிநயங்களுக்கு இருப்பிடமென்று ஜநங்கள் சொல்வார்கள். இவையெல்லாம் இந்த அரசனிடத்தில் குவிந்திருக்கையிலும் இவரை அவிநயமென்பது கொஞ்சமேனும் ஸ்பர்சிக்காமலே இருந்தது. இவரைப் பற்றி புகழ்கிறவர்களெல்லாரும், இவருடைய ராஜ்ய வ்யாபார ஸம்பந்தமான ஸாமர்த்யத்தைக் காட்டிலும் இவருடைய ஸௌசீல்யத்தையே மிகப் புகழ்ந்து பேசுகிறார்கள். நற்குணங்களுள் ஸௌசீல்ய மென்பது மிகவும் உயர்ந்த குணம். பகவானுடைய விஷயத்திலும் அவனைப் பாடுமவர்களெல்லாரும் அவனுடைய ஸௌசீல்யத்திலேயே ஆழ்ந்து அவனைப் பாடியிருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட ஸௌசீல்யம் இவரிடம் குடிகொண்டிருந்ததால், இவரைப் புகழவும் இவருடைய விபத்தில் ஹார்த்தமாக துக்கிக்கவும் நமக்கு ப்ராப்தமாகின்றன.

இருபத்தைந்து வர்ஷங்களுக்கு முன் இவருக்கு ராஜ்ய பட்டாபிஷேகமான பிறகு, இவர் இந்தப் பாதகண்டத்திற்கு விஜயம் செய்து, புராண ப்ரஸித்தமான நமது டெல்லி நகரத்தில் இந்தப் பரத கண்டத்திற்குச்

சக்ரவர்த்தியாக முடி சூடப் பெற்ற பொழுது [12-12-1911], நாம் இவருடைய ஸாத்விகமான மனோபாவத்தை, இவர் அக்காலத்தில் நமக்கு அளித்த வரங்களிலிருந்து நன்கு அறிந்து, இந்தத் தீபிகையில் நாம் இவருக்கு எழுதி இருந்த ஸ்வாகத வாக்யங்களைப் பின் வருமாறு உபஸம்ஹரித்தோம்.

“ஆக்ரஹத்தைக் காட்டிலும் ந்யாயமே பெரிதென்றும், ப்ரஜைகளின் ஆநுகூல்யத்தைத் தேடுவதே தமது தர்மமென்றும், பஹுஜந இஷ்டத்துக்கு விரோதம் செய்வது தைவத்திற்கு ஸம்மதமாக மாட்டாதென்றும் உணர்ந்து, இம்மாதிரி ஒரு வரத்தை (Annulment of the partition of Bengal) அளித்த இந்த ப்ரபு உண்மையில் நமது சக்ரவர்த்தியே. ...... இவ்விதமாக ந்யாய்யமான மார்க்கத்திலேயே இவர் எப்பொழுதும் நடந்துகொண்டு ஸகல ப்ரஜைகளுக்கும் க்ஷேமத்தைச் செய்துவரும்படி இவருக்கு த்ருடமான ஸத் புத்தியையும் தீர்க்காயுஸ்ஸையும் நல்ல ஆரோக்யத்தையும் பகவான் பூர்ணமாகக் கொடுத்து அநுக்ரஹிக்கவேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.” [Vol. 1. No. 11-1911-12].

இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கும் வரன் என்னவென்றால், அப்பொழுது இந்தத் தேசத்திலிருந்த ராஜ ப்ரதிநிதிகளால் ஜநங்களுடைய இஷ்டத்திற்கு விருத்தமாகச் செய்யப்பட்டிருந்த ராஜ்ய ஸம்பந்தமான ஒரு வ்யாபாரத்தை ஜநங்களுடைய இஷ்ட ப்ரகாரம் மாற்றினதே. பஹுகாலமாக ஒரே ராஜதானியாக இருந்து வந்த பங்காளத்தை, ஏதோ சில விஷயங்களை உத்தேசித்து, அப்பொழுது இருந்த வைஸ்ராய் இரண்டாகப் பிரித்து விடவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார். இதை ஜநங்கள் பலமாக ஆக்ஷேபித்தார்கள். அந்த ஆக்ஷேபத்தைக் கொஞ்சமேனும் ஆதரியாமல், அந்த வைஸ்ராய், தாம் செய்ததையே உறுதி செய்துவிட்டார். இங்கிலாந்திலிருந்த பெரியோர்களும் ‘வைஸ்ராய் செய்தது செய்ததே’ என்று அதை ஸ்திரப்படுத்தி விட்டார்கள். இது ஜநங்களுடைய மனத்தில் மிக்க வருத்தத்தை ஜநிப்பித்தது. இதை அறிந்த ஜ்யார்ஜ் மன்னர், தாம் முடிசூட்டிக்கொள்ளும் தருணத்தை ஒரு வ்யாஜமாக அவலம்பித்து, தமது அதிகாரிகளாற் செய்யப்பட்டிருந்த நிஷ்கர்ஷத்தை நிராகரித்து, ஜநங்களுடைய மனம் குளிரும்படி பங்காள ராஜதானியை மறுபடியும் முன்போல ஒன்றாகச் சேர்த்தார். இது ஸாதாரண கார்யமன்று. இதைத் தைர்யத்துடன் செய்யும் திறமையுள்ளவர் ஒரு பெரிய மஹானன்றோ? நமது சாஸ்த்ரம், ராஜாக்கள் தேவதைகளின் அம்சங்களைக்கொண்டு ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள் என்று சொல்லுகின்றது.

“𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑌿𑌲𑌯𑌮𑌾𑌰𑍍𑌕𑌾𑌣𑌾𑌮𑌗𑍍𑌨𑍇𑌶𑍍𑌚 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯 𑌚 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌶𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌨𑌿𑌰𑍍𑌹𑍃𑌤𑍍𑌯 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌃 ॥
𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑍋 𑌨𑍃𑌪𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑍇𑌜𑌸𑌾 ॥

....

𑌮𑌹𑌤𑍀 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑌰𑌰𑍂𑌪𑍇𑌣 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥”

[ராஜாக்களை ஸ்ருஷ்டிக்கும் பொழுது, பகவான், இந்த்ரன் வாயு யமன், ஸூர்யன் அக்நி வருணன் சந்த்ரன் குபேரன் ஆக இந்த எட்டு தேவதைகளிடமிருந்து ஸார பூதமான அம்சங்களை ஆகர்ஷித்து அவைகளைக் கொண்டு அவர்களை ஸ்ருஷ்டித்தார். ஆகையால், அவர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிகமான வீர்யத்தை உடைத்தாயிருக்கிறார்கள். அவர்கள் மநுஷ்ய ரூபமாக நிற்கும் பெரியதொரு தேவதையே] என்று மநு சொல்லியிருக்கிறார். சிற்சில ராஜாக்களிடமே இது நன்றாக விளங்குகின்றது. இந்த ஜ்யார்ஜ் மன்னர் அம்மாதிரியான ராஜாக்களுள் ஒருவர் என்பதே நமது நம்பிக்கை.

* * * *

ஹிந்து மதமும் இக்காலத்திய பெரியோர்களும்

சென்ற ஸஞ்சிகையில், ஹிந்து மத விஷயமாக ஸர் எஸ். ராதாக்ருஷ்ணன் அவர்களால் வெளியிடப்பட்ட அபிப்ராயத்தின் ஸாதுத்வத்தைப் பற்றி நாம் சங்கித்து, அவரால் சொல்லப்படும் ஹிந்துமத லக்ஷணம் ‘ஹிந்துமதம்’ என்று பஹுகாலமாக பஹுஜநங்களால் வ்யவஹரிக்கப்பட்டு வரும் மதத்தைக் குறிக்க மாட்டாதென்றும், அந்த லக்ஷணம் வேறொரு புதிய மதத்திற்கே பொருந்தி நிற்குமென்றும் எழுதியிருந்தோம். ஹிந்து மதம் என்பது, நமது வேதத்தையும் அதன் உபப்ருஹ்மணங்களாயுள்ள ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் இவைகளையும் ஆதாரமாக உடையது. அவைகளிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் ப்ரமாணங்களே என்பது அந்த மதத்தின் கொள்கை. அவைகளுள் பூர்வாபர விருத்தம் போலத் தென்படும் அம்சங்களெல்லாவற்றையும் நமது ஆசார்யர்கள் ஸமந்வயம் செய்து அந்தச் சாஸ்த்ரங்களின் உட்கருத்தைத் தெளிவாக விவரித்திருக்கிறார்கள். அவர்களால் காட்டப்பட்டுள்ள மார்க்கத்தை அடியொற்றி எவர்கள் நடக்கிறார்களோ அவர்களே சரியான ஹிந்து மதஸ்தராவார்கள். தமது புத்தியை ப்ரதாந நியாமகமாக அவலம்பித்து அதற்கு ஒத்திருப்பதாகத் தோன்றும் அம்சங்களில் மாத்ரம் சாஸ்த்ரங்கள் ப்ரமாணமாகின்றனவென்றும் மற்றை அம்சங்களில் அவை அநா

தரணீயங்களென்றும் சொல்லிக்கொண்டு நடப்பவர்கள் ஒரு புதிய மதாபாஸத்தைத் தழுவினவராவார்களே தவிர, உண்மையான ஹிந்து மதஸ்தர்களாக மாட்டார் என்பதே நமது நம்பிக்கை.

இக்காலத்தில் ஸர் எஸ். ராதாக்ருஷ்ணன் போல அபிப்ராயம் கொண்டிருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ப்ராயேண இங்க்லீஷ் பாஷையை அப்யஸித்து இங்க்லீஷ் காரர்களுடைய ஸம்ஸ்காரத்தைப் பலவாறாகப் பெற்றிருக்குமவர்களெல்லாரும் இப்படிப்பட்ட அபிப்ராயம் கொண்டவர்களே. இவர்களுள் சிலர் ஜந்மாந்தர ஸுக்ருத மடியாகச் சிறந்த புத்தி பரிபாகத்தையும் ருஜுவான நடவடிக்கையையும் உடையவர்களாய் அவைகளின் பலமாக ராஜத்வாரத்தில் விசேஷித்த கௌரவத்தையும் லோகத்தாரால் வ்யபதிஷ்டர்களென்று பஹுமதிக்கப்படும் மஹிமையையும் அடைந்திருக்கிறார்கள். இவர்களுடைய மனோபாவத்தில் எவ்வித துஷ்ட ஆக்ரஹமும் இல்லையென்றே சொல்ல வேண்டும். நமது முன்னோர்களிடத்தில் இவர்களுக்குச் சிறந்த விச்வாஸமுண்டு; அந்த முன்னோர்களாற் செய்யப்பட்டுள்ள க்ரந்தங்களிடத்தில் உயர்ந்த கௌரவ புத்தியுமுண்டு. ஆனால், இவர்கள் பால்யம் முதல் மேல் நாட்டாருடைய ஸம்ஸர்க்கத்திற்குப் பாத்ரமாக இருந்து விட்ட படியால், அதீந்த்ரிய வஸ்துக்களில் ஒருவித அவிச்வாஸமும் சாஸ்த்ரங்களில் அப்ராமாண்ய புத்தியும் இவர்களிடம் ஸங்க்ரமித்திருக்கும்படி நேர்ந்திருக்கின்றது. அபௌருஷேயமாக ஒரு சாஸ்த்ரம் இருக்கக்கூடும் என்னும் புத்தி இவர்களுக்கு உதிக்கவில்லை. மஹர்ஷிகள் முதலான நமது முன்னோர்களெல்லாரும் நம்மைப்போல மனிதர்களான படியால், மனிதர்களுக்கு ஸஹஜமான தவறுதல் அவர்களுக்கு முண்டு என்பதே இவர்களின் நினைவு. த்ரிகால ஜ்ஞாநம் என்பது அஸம்பாவ்ய மென்பதும், ஆகையால் அந்த முன்னோர்களாற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களில் எவை எவை நமது காலத்திற்கு ஒத்திருப்பவையாகத் தென்படுகின்றனவோ அவை யவைகள் மாத்ரம் அங்கீகரிக்கத் தகுந்தவையாகும் என்பதும் அவர்களுடைய வாதம். இந்த வாதத்தை அநுஷ்டாந பர்யந்தமாக்கி, இவர்கள், நமது மஹர்ஷி ப்ரோக்தங்களான வர்ணாச்ரம தர்மத்தையும் நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களையும் ஆத்யந்திகமாகத் துறந்து விட்டார்கள். போஜநத்திலும் அந்யர்களுடன் வேறுவிதமாக ஸம்ஸர்க்கிப்பதிலும் இவர்கள் ஒருவித நியமத்தையும் அநுஷ்டிப்பதில்லை. விவாஹாதிகளிலும் வேறு சில விஷயங்களிலும் சிற்சில நியமங்களை இவர்கள் அநுஷ்டித்தால், அது அவைச் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன என்னும் காரணத்தாலன்று; அவை யுக்திக்கு ஒத்து இருக்கின்றன என்னும் காரணத்தாலேயே என்று சொல்லவேண்டும். தைவமொன்று உண்டு

என்னும் எண்ணம் மாத்ரம் அவர்களுடைய மனத்தில் இருக்கின்றது என்றே தெரிகின்றது. ஆனால், வேறு தேவதாந்தரங்கள், அந்தத் தைவத்தினுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டு, சிற்சில அதிகாரத்தை வஹித்து வருகிறார்கள் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி வர்த்தித்து வருவது தான் புத்திமத் க்ருத்யமாகு மென்பது அவர்களுடைய நினைவு. இப்படியெல்லாம் இருக்கையிலும் இவர்கள், தாம் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களென்றே சொல்லிக் கொண்டு வருகிற படியால், இவர்களைப் பெரியோர்களென்று நினைத்து, ஸாமாந்ய ஹிந்துக்களுள் பலர்,

"யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜநஃ"

[ச்ரேஷ்டனென்று நினைக்கப்படுமவன் எதை அநுஷ்டிக்கிறானோ அதையே ஸாமாந்ய ஜநங்கள் அநுவர்த்திக்கிறார்கள்] என்கிறபடி, இவர்களுடைய அடியை ஒற்றி அநுஷ்டாநங்களை நிர்ணயித்து வருகிறார்கள். இவர்களுடைய உயர்ந்த பதவியையும் மேல் நாட்டார் இவர்களிடம் வைத்திருக்கும் கௌரவத்தையும் பார்த்து, இவர்கள் போல தாமும் ஆகவேண்டும் என்னும் மனோரதத்தை வஹிக்கும் நமது பாலர்கள் ஸுதராம் இவர்களால் ஆகர்ஷிக்கப் பட்டவர்களாய் வழி தவறி நடக்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

இவர்களுக்கு நாம் சொல்லிக்கொள்ள விரும்பும் வார்த்தைகள் சில உள.

(1) அபௌருஷேயமாகவும் ப்ரம விப்ரலம்பாதிகளால் ஸ்பர்சிக்கப் படாததாகவும் சாஸ்த்ரமொன்று அநாதியாக இருக்கக் கூடும் என்பதில் என்ன அநுபபத்தியை இவர்கள் காண்கிறார்கள்? நம்மை ஸ்ருஷ்டித்த தைவம் ஸர்வத்தையும் செய்வதற்குச் சக்தியை உடையது என்பது உண்மையானால், அந்தத் தைவத்தின் ஸங்கல்பமடியாக அப்படிப்பட்டச் சாஸ்த்ரமொன்று ஏன் ஏற்பட்டிருக்கக் கூடாது?

(2) நமது மதக் கொள்கைகள் நிலைபெற்றவையாக இருத்தல் வேண்டாவோ? ஒவ்வொரு மனிதனிடமும் விலக்ஷணமாகவும் ஒரு காலத்தில் இருந்தது போல மற்றொரு காலத்தில் இராததுமான நமது புத்தி சக்தியையே அந்தக் கொள்கைகள் ஆதாரமாகச் சார்ந்திருக்கும் பக்ஷத்தில், அந்தக் கொள்கைகள் ஒவ்வொரு க்ஷணமும் மாறிக் கொண்டிருக்குமன்றோ? உண்மையை அறிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆவலை உடைய ஜநங்களுக்கு இவை எவ்விதமான ஆறுதலைக் கொடுக்கும்?

(3) ஒன்றை நாம் ப்ரமாணமாக ஒத்துக்கொண்டால், அது ஸகல அம்சங்களிலும் நிர்துஷ்டமாக இருத்தல் வேண்டாவோ? அதில் சில அம்சங்க

னில் அப்ராமாண்யத்தைச் சங்கிக்க இடமுண்டானால், அந்தச் சங்கை மற்றை அம்சங்களையும் எவ்விதம் ஸ்பர்சியாமல் இருக்கும்? அவைகளில் உறுதியான நம்பிக்கை செய்வது என்பது எப்படி ஸாத்யமாகும்?

(4) சஞ்சலமான மநஸ்ஸை ஸ்வாதீநப்படுத்தி நல்வழியிற் செலுத்துவதற்கு சிற்சில சிக்ஷைகள் [Disciplinary measures] அவச்யம் வேண்டுமென்று ஒத்துக்கொள்ளும் இவர்கள், அப்படிப்பட்டச் சிக்ஷையையே முக்ய நோக்கமாயுள்ள நமது கர்மாநுஷ்டாந விதிகளை ஏன் ஆக்ஷேபிக்கிறார்கள்? இந்தக் கர்மாநுஷ்டாநத்திற்கு வேறு விதங்களான ப்ரயோஜநங்களை இவர்கள் ஒத்துக்கொள்ளாவிடினும், சிக்ஷா ரூபமான இந்த ப்ரயோஜநத்தை உத்தேசித்தாவது அதை இவர்கள் அங்கீகரிக்கக் கூடாதோ?

(5) மநுஷ்யர்களின் ஜ்ஞாநம் ஒரு எல்லைக்கு உட்பட்டு இருக்கின்றது என்பது உண்மையே. நமக்கு ப்ரத்யக்ஷமாக இருக்கும் வஸ்துக்களையே நாம் பூர்ணமாக அறிவதற்குச் சக்தியற்றவர்கள் தாம். ஆனால், ஈச்வரன் இச்சிக்கும் பக்ஷத்தில், அவன், ஒருவனுக்குப் பூர்ணமான ஜ்ஞாநத்தை ஸங்கல்பிக்க அசக்தனாவனோ? ஜகத் முழுவதையும் ஸ்ருஷ்டித்து அதைப் பாதுகாத்து வரும் ஈச்வரன், அந்தப் பாதுகாப்பின் நிமித்தமாக, த்ரிகால ஜ்ஞாநிகளாகச் சிலரை இந்த ஜகத்தில் அவதரிப்பித்து, அவர்கள் முகமாக எல்லாக் காலத்திற்கும் ஒத்ததான சாஸ்த்ரமொன்றை ஏற்படுத்துகிறான் என்று சொல்வதில் என்ன தோஷத்தை இவர்கள் காண்கிறார்கள்? நிற்க, இவர்கள் 'யோகம்' என்று ஸாதநமொன்று உண்டு என்பதை நம்புகிறவர்களாகையால், அந்த யோக மஹிமையால் ஒருவனுக்கு த்ரிகால ஜ்ஞாநம் ஸம்பவிக்கக் கூடும் என்பதை ஏன் நம்பக்கூடாது?

(6) தத்வ நிஷ்கர்ஷத்திற்குத் தர்க்கம் அவசியம் அபேக்ஷிதமே. ஆனால் அது ஸத்தர்க்கமாக இருத்தல் வேண்டுமன்றோ? நமது புத்தியின் சிறுமையைப் பார்த்து, நாம் எந்தத் தர்க்கம் சாஸ்த்ரத்திற்கு அவிருத்தமோ அதை அவலம்பிப்பதன்றோ யுக்தமாகும்? அச்சிறுமையைப் பாராமல் அந்தப் புத்திக்கு ப்ராதாந்யத்தைக் கொடுத்து சாஸ்த்ரத்தை அப்ரதாநமாகச் செய்வது யுக்தமாகுமோ?

(7). எல்லாராலும் கௌரவிக்கப்படும் பதவி ஒன்றைப் பெற்றிருக்குமிவர்கள், அது காரணமாகத் தமது மீது ஸம்பவிக்கும் அதிக பாரத்தை உணரவேண்டுமன்றோ' இவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்தே ஆசார நிர்ணயத்தைச் செய்ய வேண்டுவர்களான ஸாமாந்ய ஜனங்கள் வழி தவறி நடவாமல் இருக்கவேண்டுமானால், இவர்கள் தமது நடவடிக்கைகளை விசேஷித்துப் பரிஷ்கரித்துக் கொள்ள வேண்டியது அத்யாவச்யகமாகின்றது. ஆகையால், இது விஷயத்தில் எவ்வித ஔதாஸீந்யத்தையும் செய்யாமல், ஸகல குண தோஷங்களையும் தீர்க்கமாக ஆலோசித்து, ஜகத்துக்கும் தமக்கும் ஹிதமான மார்க்கத்தைத் தேடி, இவர்கள் தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று நாம் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்.

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யர், M. A., B. L. அட்வொகெட், திருச்சி.]

𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌦𑍈𑌰𑍁𑌪𑌹𑌿𑌤𑍇𑌽𑌪𑌿 𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌮𑍇𑌧𑍇
𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑍋 𑌵𑌰𑌦 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌲𑌬𑍍𑌧𑌭𑌾𑌗𑌾𑌃 ।
𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑍇 𑌮𑌖𑌪𑌤𑍌 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍈𑌵
𑌹𑍈𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌹𑌵𑌿𑌷𑌾𑌂 𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌭𑍂𑌵𑌨𑍍 ॥

[பதவுரை] 𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌮𑍇𑌧𑍇-அச்வமேதயாகம், 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌦𑍈𑌃-அந்தந்த இந்த்ராதி தேவர்கள் மட்டுக்கும் பெயரான சப்தங்களோடு (சப்தங்களால்), 𑌉𑌪𑌹𑌿𑌤𑍇 𑌅𑌪𑌿 - அந்தந்தப் பெயர்களைச் சொல்லி ஸமர்ப்பிக்கப்பட்டாலும், அந்தந்தப் பெயர்களோடு கூடியிருந்தாலும், அந்தந்தப் பெயர்களால் உபலக்ஷணம் செய்யப்படுகையில், (இப்படி சொல்லுகையில், '𑌅𑌪𑌿' பதத்தை '𑌅𑌲𑌬𑍍𑌧𑌭𑌾𑌗𑌾𑌃' என்பதோடு அந்வயிக்கவேணும்); 𑌵𑌰𑌦! - வரதப்பெருமாளே!, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍-(பெருமாள் ஆவிர்ப்பவிப்பதற்கு) முன்பு, 𑌅𑌲𑌬𑍍𑌧𑌭𑌾𑌗𑌾𑌃-தாங்கள் யஜ்ஞபாகங்களை அடையாதவர்களாய், 𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑌃 - இந்த்ரன் முதலியவர்கள், 𑌮𑌖𑌪𑌤𑍌 𑌤𑍍𑌵𑌯𑌿 - யஜ்ஞத்திற்குப் பதியான நீர், 𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑍇 - ஸாக்ஷாத்தாய் ஸேவிக்கப்பட்டபொழுது, (அத்யக்ஷராய் எழுந்தருளியிருக்கும்போது), 𑌹𑍈𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌹𑌵𑌿𑌷𑌾𑌮𑍍 - ஸ்வர்ணமயமான அண்டமென்னும் கர்ப்பத்தில் பிறந்த ப்ரஹ்மாவினுடைய ஹவிஸ்ஸுக்களின், 𑌰𑌸𑌮𑍍 - ரஸத்தை, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍈𑌵 - கண்ணாலேயே, 𑌅𑌨𑍍𑌵𑌭𑍂𑌵𑌨𑍍 - அநுபவித்தார்கள்; (பிறகு ஸத்தையை அடைந்தார்கள்; ஆத்மலாபத்தை அடைந்தார்கள்.)

முன் ச்லோக விவரணத்தில் இரண்டு சேர்த்துக்கொள்ளவேணும். ஸ்ரீ பாகவதத்தில் வத்ஸாபஹாரத்துக்குப் பிறகு ப்ரஹ்மா கண்ணனை ஸேவித்துக்கொண்டு ஸ்துதி செய்கையில், இரண்டாவது ச்லோகத்திலுள்ள அநுபவத்தைப் போன்றது முன் ச்லோகம்.

'𑌅𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌦𑍇𑌵 𑌵𑌪𑍁𑌷𑍋 𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌯
𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌾𑌮𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌤𑍁 𑌭𑍂𑌤𑌮𑌯𑌸𑍍𑌯 𑌕𑍋𑌽𑌪𑌿 ।
𑌨𑍇𑌶𑍇 𑌮𑌹𑌿 𑌤𑍍𑌵𑌵𑌸𑌿𑌤𑍁𑌂 𑌮𑌨𑌸𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣'

என்கிற ச்லோகத்தின் வார்த்தைகளும் பொருள்களும் ஸ்வாமியால் அநுஸரிக்கப்பட்டன. இரண்டிடத்திலும் ப்ரஹ்மாவுக்கு ஸேவை. 'உம்முடைய

இத்திருமேனி என்னிடம் அநுக்ரஹமே வடிவுகொண்டது. இந்த விக்ரஹம் உம்முடைய இச்சாமயம்; பூதமயமல்ல. நான் ப்ரஹ்மாவா யிருந்தாலும் உமது திருமேனியின் மஹிமையை அளவிடச் சக்தனல்லேன்' என்பது அந்த ஶ்லோகத்தின் பொருள். இங்கே 'காருண்ய பரிணாம:' என்பதற்குக் கருணை மயமான திருமேனி என்பது பொருள். கருணை யென்பது அநுக்ரஹிக்க இச்சை. அநுக்ரஹமயம், இச்சாமயம் என்று ப்ரஹ்ம ஸ்துதியில் ப்ரஹ்மா அநுபவித்ததை இங்கே 'காருண்ய பரிணாம:' என்றார். கோரின வரத்தை யெல்லாம் கொடுக்கும் இந்த வரதப் பெருமாள் தம் பிள்ளைக்காக ஆவிர்ப்பவித்தவர். "பிள்ளைக்கு வேண்டியதைக் கொடுக்கும் தகப்பன், தான் தாநம் செய்வதாக நினைக்கமாட்டான். புத்ரனுக்குப் பாத்யப் பட்டதை அவன் ஞாயமாக அடைகிறானென்று தகப்பன் நினைப்பனே யல்லது, யாசகனுக்குக் கொடுப்பதுபோல் தாதாவாகத் தன்னை நினைக்க மாட்டான்" என்று ஸ்ரீ ஸுதர்சநபட்டர் கத்ய வ்யாக்யாநத்தில் அருளிச் செய்தார். அப்படியே இப்பெருமாளும், ப்ரஹ்மாவாகிய பிள்ளையைப்போல் எல்லோரும் பிள்ளைகள் என்று அபிமானித்து, அவரவர்கள் தாங்கள் இட்டுப்பிறந்த பாகத்தை அடைகிறார்களென்று நினைக்கும் உதார ஸ்வபாவ முடையவர்.

இங்கே சில சங்கைகள் :—இப்படி எல்லோருக்கும் கருணைமயராய் இருந்து கொடுக்கும் வள்ளலான இப்பேரருளாள வரதன், இந்த்ரன் முதலிய தேவர் குழாத்துக்கு, அவரவர்களுக்கு அநாதி காலமாய் யஜ்ஞங்களில் ஹவிஸ்ஸில் ஏற்பட்டிருக்கும் பாகத்தை, அடையவொட்டாமல், அவர்கள் வாய்ச் சோற்றைப் பிடுங்கி உண்ணலாமா? அவர்களுக்கு அநாதியாய் வ்யவஸ்திதமாக ஏற்பட்டிருக்கும் ஹவிர்ப் பாகத்தைக் கூடப் பிடுங்கிக்கொள்ளும் பெருமாள் வரதராவரோ? 'ப்ரணதார்த்தி ஹரன்' என்பதற்குப் பதிலாய் இவரை 'ப்ரணதபாகஹரர், ப்ரணத ஸ்வாபஹாரி' என்று பெயரிடுவது உசிதம். பர்வத ராஜனாகிய ஹிமவானுக்கு ப்ரஜாபதி யஜ்ஞ பாகத்தைக் கல்பித்தாரென்று குமார ஸம்பவத்தில் காளிதாஸர் சொல்லுகிறார். இந்த்ரன் முதலியவர்க்கு ஹவிர்ப்பாகம் கொடுக்க வேண்டிய வ்யவஸ்தையை ப்ரஜாபதியாகிய பெருமாள் தானே ஏற்படுத்தினார். தான் கொடுத்ததைத் தானே பிடுங்கிக்கொள்ளலாமோ?

'[illegible]'

[என் நாயகனை ராமன் பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுப்பவரே யொழிய கொடுத்ததைத் திரும்பவும் வாங்கிக்கொள்ளமாட்டார்] என்று ஸீதை பெருமை பேசினாள். பிராட்டி பேசினது பொய்யாகலாமோ? 'தேவர்களுக்கு நீங்கள் யாகங்களில் ஹவிஸ்ஸைக் கொடுத்து அவர்களை த்ருப்தி

செய்யுங்கள்; அவர்கள் உங்களுக்கு மழையையும் தாந்யங்களையும் கொடுத்து, உங்களை த்ருப்தி செய்யட்டும். அவர்கள் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் அவர்களுக்கு ஸமர்ப்பிக்காமல் உண்பீரேயானால் நீங்கள் திருடர்களே' என்றார் கீதையில் பெருமாள். இப்படி அவரவர் ஹவிஸ்ஸை இல்லை என்று செய்து தாம் உண்ணும் பெருமாள் திருடாகாரோ?

கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை யென்பர். இங்கே வாய்க் கெட்டினது நழுவிற்று. அக்நி தேவர்களுக்கு வாய் முகம். அக்நியில் ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கையில் அக்நியாகிய வாயைக்கொண்டு அந்த ஹவிஸ்ஸுக்கு யஜமாநனால் உத்தேசிக்கப்பட்ட தேவர் அதை உண்பர். இவ்வரதப் பெருமாள் அவதரிக்கப் போகும் யாகத்தில் அவர்கள் வாய்க்கு வந்த சோறு நழுவும்படி செய்யலாமோ?

இந்த்ரன் முதலியவர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகையில் 'நான்தான்' என்று பெருமாள் வந்து அவர்களுக் கிட்டதை வாங்கலாமோ? இது ஆள்மாறாட்ட மாகாதோ? இந்த ஸத்ய வ்ரத க்ஷேத்ரப் பெருமாள் இப்படியா பெருங்குற்றம் செய்யவேணும்? கோ குலத்தில் இருக்கையில் இந்த்ரனுக்குப் போடும் பூசையை அவனுக்கு இல்லாமற் செய்து கோவர்த்தநம் என்னும் மலைக்குப் போடச்செய்தார். அங்கே இந்த்ரனுக்கு இல்லை செய்தது மட்டும். இங்கே இந்த்ரன் ஒருவன் மட்டும் இழக்கவில்லை. பல தேவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாகங்களை இழந்தார்கள். கோவர்த்தனத்துக்குப் பூசை போடும்பொழுது வைதிகயாக மில்லை. யாகத்தில் பாகங்கள் அநாதியான வேதத்தாலே பாத்யப்பட்டன. யாகத்திலும் முதன்மையான அச்வமேத யாகம் இது. இதில் பாகத்தை அபஹரிக்கலாமோ?

தக்ஷ யாகத்தில் சிவனுக்கு ஹவிர்ப்பாக மில்லாமற் செய்ததனால் என்ன அநர்த்தம் விளைந்ததென்பது நாலாவது ஸ்கந்தத்தில் ப்ரஸித்த மல்லவோ? அப்படிப் பெருங் கலகம் உண்டாகுமே. இப்பெருமாள் அவதாரஸமயத்தில். 'யஜ்ஞவிக்நகரம் ஹந்யாம்' [யஜ்ஞத்துக்கு விக்நம் செய்பவரைக் கொல்வேன்] என்று சீறும் பெருமாள் தாமே யஜ்ஞத்துக்கு ஏற்பட்ட மர்யாதையை மீறலாமோ?

தீக்ஷிதர்கள் ப்ராயேண ஏழையா யிருப்பர். யாசகம் செய்து பொருள் சேர்த்து யாகம் செய்வர். இங்கே ஸ்வர்ணமயமான ப்ரஹ்மாண்டமென்னும் கர்ப்பத்தில் பிறந்த ஹிரண்யகர்ப்பர் செய்யும் யாகத்தில் சிறந்த ஹவிஸ்ஸுகள் மிக ரஸமாயிருக்குமென்று நாக்கு ஊறிக்கொண்டு ஆவலோடு ஹவிஸ்ஸின் ரஸங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அநுகூலரான தேவர்களை ஏமாறச் செய்யலாமோ?

'நான் தான் எல்லா யஜ்ஞங்களுக்கும் போக்தா ; ப்ரபு ; தேவர்கள் என்னுடைய சரீரம் (தநு). அவர்களை அர்ச்சிப்பவர், என்னை அர்ச்சிப்பதாகத் தெரிந்துகொள்ளாவிட்டாலும், என்னைத்தான் அர்ச்சிக்கிறார்கள்' என்று கீதையில் ஸாதித்தபடி பெருமாள் தானே எல்லாவற்றையும் புஜிப்பவரென்று கேட்கலாம். அப்படி இருந்தாலும், ச்ராத்தத்தில் நிமந்த்ரணம் செய்யப்படும் ப்ராஹ்மணர்கள் தாங்களும் வஸு ருத்ராதித்யர் முதலியவரால் உத்தேசிக்கும் அந்நத்தைப் புஜித்து த்ருப்தி யடைவதுபோல் இந்த்ராதிகளுக்கும் போஜந த்ருப்தி. இந்த ஸ்லோகத்திலுள்ள பதங்களால் இந்த சங்கைகள் ஏற்படுவதை ரஸிகர் எளிதில் அறியலாம். சங்கைகளின் பரிஹாரங்களும் ச்லோக பதங்களால் ஏற்படுகின்றன.

தத்தத்வெஷ:—அந்தந்த ஹவிர்ப்பாகத்துக்கு ஏற்பட்ட தேவதைக்குத் தனிமையான பெயர்களாகிய சப்தங்களால் அவர்களை அழைக்கிறார்கள். அவரவர்களுக்கு மட்டும் ஏற்பட்ட பெயர்கள் பெருமாள் பெயரல்ல. இங்கே 'மட்டும்' என்பதைப் பாதகமில்லாத இடத்திலெல்லாம் 'மட்டும்' என்னும் அவதாரணத்தைச் சேர்த்துக்கொள்ள வேணும் என்கிற ந்யாயத்தின் பலத்தைக்கொண்டு சேர்த்துக்கொள்ள வேணும். அந்தந்த தேவதா மாத்ர வாசகமான சப்தங்களால் என்று பொருள். இந்த்ரனைக் கூப்பிடுகையில், 'அஹல்யாயை ஜார!' [அஹல்யைக்காக ஜாரனானவனே!] என்று கூப்பிடுகிறார்கள். இந்த வர்ணநம் (இந்த அடையாளம், லிங்கம்) மற்றொருவருக்கு ஒட்டுமா? இந்த அருளிப் பாட்டைக் கேட்டுப் பெருமாள் தம்மை அழைத்ததாகச் சொல்லலாமா? என்று சங்கையை இந்தப் பதம் ஸூசிக்கிறது. 'வஷ்ட்யதே இதி வஷட்' அடையப்படுவது பதம். இந்தப் பதத்தால் முடிவில் அடையப்படுவது பெருமாள் என்பது ஸமாதாநம்.

உபஹிதே அபி—(அஸ்வமேதயாகம்) அந்தந்தத் தேவதைகளின் அடையாளங்களையும் பெயர்களையுமுடைய அழைப்பு மந்த்ரங்களோடு கூடியிருந்தாலும். யாகங்கள் ப்ரயோஜநத்தை உத்தேசித்துச் செய்யும் ஸகாமராலும் செய்யப்படும் ; ஒரு ப்ரயோஜநத்தையும் உத்தேசியாமல் கேவலம் ஈஸ்வராராதநமாக நிஷ்காமராலும் செய்யப்படும். இரண்டுக்கும் மந்த்ரங்கள் ஒன்றே ; ப்ரயோகங்கள் ஒன்றே ; உத்தேசம் மட்டும் வேறு. ப்ரஹ்மா செய்யும் இந்த யாகம் நிஷ்காமமானது ; பகவானை ஆராதிக்கவே செய்யப்படுகிறது. இப்படி நிஷ்காமர் செய்யும் யாகங்களில் வேதாந்த வ்யுத்பத்தி யென்னும் பூர்ண வ்யுத்பத்தியுடைய யாக கர்த்தாக்கள் இந்த்ராதி தேவர்களைப் பேசும் சப்தங்களைக் கொண்டு இந்த்ராதி தேவதைகளைச் சரீரமாகவுடைய அந்தர்யாமியையே தங்களுடைய ஹவிஸ்ஸுக்கு உத்தேஸ்யமான தேவதையாக நினைப்பர். அந்தந்தப் பதங்களால் பொருள்படும் தேவ

தாசரீரகரான பரதேவதையை உத்தேசித்து அந்தந்த சப்தங்களையுடைய மந்த்ரங்களையே சொல்லி ஹவிஸ்ஸை த்யாகம் செய்வர். ஆதிகாரணப் பொருளான ஸர்வ சக்தியை, ஸர்வாந்தர்யாமியையே உத்தேசித்துக் கூப்பிடுவர். ஆதிமூலமே! ஆதிகாரணமே! என்று கஜேந்த்ராழ்வாரைப்போல் இங்கே உத்தேசித்துக் கூப்பிடுகையில், கரிவரதன் வந்து ஹவிஸ்ஸைப் பெறுவது உசிதமா? ஏனைய இந்த்ராதி தேவதைகள், 'இதோ நான் வந்தேன்' என்று வருவது உசிதமா? எது ஆள் மாறாட்டமாகும்? 'நாஹம் நாஹம்' [நானில்லை நானில்லை] என்று அவர்கள் தூர விலகியிருப்பதுதானே உசிதம். இந்த ஸமாதாநம் 'உபஹிதே' என்பதற்கு, 'உபாதியால் உபலக்ஷிதமான' என்று பொருள் கொள்வதால் கிடைக்கும். இந்த்ராதி தேவர்கள், யஜ்ஞபதியும் யஜ்ஞபோக்தாவுமான வரதனுக்கு சரீரமென்னும் உபாதிகள்; கஞ்சுகங்கள் (சட்டைகள்) போன்றவர்கள். வரதனுடைய சரீரங்களாகிய அவர்களைச் சொல்லும் சப்தங்கள் அவர்களுக்கு ஆத்மாவான வரதனை அடையும். உள்ளே யிருக்கும் அந்தர்யாமியை அறியாதவர்கள் வெளிப்படைச் சரீரங்களான இந்த்ராதிகளை மட்டும் உத்தேசிப்பர். ப்ரஹ்மா பூர்ணமான வேதாந்த வ்யுத்பத்தியுள்ளவர். யாகம் செய்யுமவர் என்ன பொருள் கொள்ளுகிறாரோ அப்படித்தானே பொருள் கொள்ளவேண்டும். 'ஊநம் ஊத்யவஸம்' தாநம் என்பது கொடுப்பவர் இஷ்டம். 'உபஹிதம்' என்பதற்கு, 'உபாதியால் உபலக்ஷிதமான' என்று பொருள் கொள்கையில் 'உபஹிதே' என்பதை 'மகபதியான நீர்' என்பதோடு ஒட்டிக்கொள்ளலாம். 'அந்தந்தப் பதங்களால் மறைக்கப்பட்டிருந்தாலும்' என்றும் பொருள் கொள்ளலாம். இந்தப் பதங்கள் ப்ரஹ்மாவிற்கு உத்தேஸ்யமான அந்தராத்மாவை மறைத்தாலும், நீரே அவருக்கு உத்தேஸ்யராதலால் ஹவிஸ்ஸுக்கள் உம்மையே சேர்ந்தவை.

தஸ்மிந்மஹே—யாகங்களில் உயர்ந்த அஸ்வமேத யாகத்தில். இந்த உயர்ந்த யாகத்தில் ஹவிர்ப்பாகத்தை அடையாமற் போவது துஸ்ஸஹம்.

ஶக்ராதய:—இந்தரன் முதலியோர். இவர்களுள் ருத்ரனும் ஒருவர். இந்த்ரனுக்குள்ள பாகத்தை உபேந்த்ரன் கொண்டு போகலாமா? இங்கே ஶக்ரனென்னும் பெயரை எடுத்ததற்கு ஸ்வாரஸ்யங்கள் உண்டு. ராமாயணத்தில் பாலகாண்டம் 14-ம் ஸர்க்கம் அஸ்வமேத வர்ணநத்தில் 7-வது ஸ்லோகத்துக்குப் பிறகு,

'ஆஹ்வயாம்சக்ரிரே தத்ர ஶக்ராதீந் விபுதோத்தமாந் ।........
ஹோதாரோ த்வத்வராவாஹ்ய ஹவிர்பாகாந் திவௌகஸாம் ॥'

என்று இரண்டு ஸ்லோகங்கள் சில ஸ்ரீ கோஶங்களில் உள்ளன. சில வற்றில் இவை இல்லை. ஸ்ரீ தேசிகன் கடாக்ஷித்த ராமாயண கோசத்தில் அவ்

விரண்டு ஸ்லோகங்களும் உள்ளனவென்று இதனால் நினைக்கலாம். அவற்றை ஸ்மரித்தே இங்கே 'ஶக்ராத்யா꞉' என்று ப்ரயோகித்திருப்பது ஸம்பாவிதம். இந்த்ரனை உத்தேசிக்கும் மகத்தை நிறுத்திக் கோவர்த்தந கிரிக்குப் பூஜை செய்யுமுன், சுகர், 'ஶக்ரோத்ஸவம் ஜிஹாஸதா' [ஸக்ரனுடைய அஹங்காரத்தைப் போக்க எண்ணி] என்றும், கோவர்த்தநத்தைக் குடையாகப் பிடித்து ரக்ஷணமான பின்பு, கோலோகத்திலிருந்து 'ஸுரபி'யென்னும் காமதேநுவும் ஸக்ரனும் கண்ணனிடம் வந்தார்கள்' என்றார். பராசரர் விஷ்ணுபுராணத்தில் இதே ப்ரகரணத்தில் பெருமாளால் பங்கமடைந்தபின், 'ப்ரீதியினால் நீண்டு மலர்ந்த தாமரைக் கண்களோடு ஸக்ரன் புன்னகை கொண்டு, 'ஹே க்ருஷ்ண! உபேந்த்ரனாகிய உம்மைக் கோக்களுக்கு இந்த்ரனாகக் கோவிந்தனாக அபிஷேகம் செய்கிறேன்' என்று பேசினதாகப் பணிக்கிறார். தக்ஷயாகத்தின் முடிவில் பெருமாள் எழுந்தருளினபோது அவரை எல்லோரும் துதி செய்தார்கள். 'க்ருதாநுக்ரஹவிக்ரஹ꞉' அங்கும், இங்கே 'கருணா பரிணாம' என்றது போல 'அனுக்ரஹ விக்ரஹத்தை அமைத்துக்கொண்டு' என்றார். ருத்ரன் அங்கே 'தவ வரத வராங்க்ரிணா' என்று வரதத் திருநாமத்தைக்கொண்டு ஸம்போதநம் செய்தார். அவருக்கு யஜ்ஞபாகம் உண்டு. 'நீர் கொடுப்பது மட்டும் வரமல்ல. உம்முடைய திருவடி (அங்க்ரி) வரம். அந்த வரமான திருவடியைக் கொடுத்து நீர் வரதனானீர்' என்று அந்த ஸ்லோக தாத்பர்யம். இந்த்ரன் அங்கே, 'வபுஷா நயநாநந்தம் ததாஸ்யஸௌ' [மனத்துக்கும் கண்களுக்கும் ஆநந்தத்தை உம்முடைய திருமேனி உண்டுபண்ணுகிறது.] என்றார். அந்த அநுபவத்தைத் தான் இங்கே இப்பெருமாளை ஸேவித்துக் கொண்ட இந்த்ராதிகளின் அநுபவமென்று ஸாதிக்கிறார்.

வரத—இஷ்டப்பட்டதை (வரித்ததைக்) கொடுப்பவரே! எல்லாவற்றிலும் உயர்ந்ததைக் கொடுப்பவரே! முதல் பொருளைக் கொண்டு சங்கை; இரண்டாவது பொருளைக்கொண்டு பரிஹாரம். இந்த வரதப்பெருமாள் பாகம் என்னும் அல்பத்தைக் கொடுப்பரோ? பூர்ணத்தைக் கொடுப்பவரே யொழிய ஸ்வல்ப பாகத்தைக்கேட்டாலும் அவர் கொடார். பாகத்தை அபேக்ஷிப்பவர்களுக்கு அதைக் கொடாமல் தாம் அவதரிக்கும் காலத்தில் பூர்ணத்தையே கொடுத்தார். வரதனென்னும் பூர்ணப் பொருளை எத்தனை பேர் பாகம் பிரித்துக் கொண்டாலும் எல்லாருக்கும் பூர்ணமே கிடைக்கும். மூலதநமான வரதனும் அப்படியே பூர்ணமாக இருப்பர். 'கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்.'

புரஸ்தாத்—முன்பு. ஜயந்தி முதலிய பெருமாள் அவதார திநங்களில் அவதாரத்திற்கு முன் உபவாஸம் இருக்கவேண்டாவோ? பிறகல்லவோ ரஸபாரணை?

அம்ஶஹாரா꞉—பாகம் என்னும் பதத்தால் அவர்களுக்கு ப்ராப்தமான பாத்யப்பட்ட பாகம் கிடைக்காமற் போகலாமோ வென்னும் சங்கை கிளம்புகிறது. அதே பதத்தால் பரிஹாரமும் ஸூசிதம். 'பாகம் என்பது அல்பந்தானே. அவர் அல்பத்தை (ஏகதேசத்தைக்) கொடுப்பரோ? க்ருத்ஸ்நத்தை (பூர்ணத்தைக்) கொடுப்பரோ? 'அம்ஶ' என்பதால் பாகமே கிடைக்கவில்லையே; இவர் எதைக் கொடுப்பார்?' என்பது சங்கை. அதே பதத்தால் ஸமாதாந ஸூசநம்:—ரஸமென்னும் பதத்தை நாலாவது பாதத்தில் ப்ரயோகிக்கிறார். 'ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி' என்கிற தைத்திரீய ஸ்ருதியை இங்கே லப்து பதத்தால் ஸூசிக்கிறார். ஆநந்தமயமும் ரஸஸ்வரூபமுமான தம்மை லபிக்க (அடைய) வேண்டியவருக்கு இந்தத் துச்சமான அல்ப ஹவிஸ்ரஸத்தை அநுபவிக்கவொட்டுவரோ? தேவப் பெருமானுடைய அவதார பட்டமாகையால் தசாவதார ஸ்தோத்ரத்தில் எல்லா அவதாரங்களுக்கும் பூமிகையாக ஸாதித்த முதல் ச்லோகம் ஸ்வாமி திருவுள்ளத்தில் ஓடுகிறது.

'லப்தும் நிஹீநரஸமம்ஶமத்யக்ஷிதா ஹவிர்போகை꞉'

என்று அங்கே ஸாதித்த பதங்கள் அநேகமாய் இங்கேயும் வருவதை ரஸிகர்கள் கவனிக்கவேணும். 'லப்து, ரஸ, அத்யக்ஷித' என்கிற மூன்று பதங்களும் பொது.

அத்யக்ஷித—அதோக்ஷஜரென்று பெருமாளைச் சுகர் அடிக்கடி பேசுவர். அதோக்ஷஜர் இங்கே அத்யக்ஷிதரானார். இந்த்ரியங்களுக்கு எட்டாதவர் இங்கே கண்ணால் காணப்படுகிறார். 'பரமே வ்யோமந்' என்னும் பரமபதத்தில் அத்யக்ஷர் என்று பெருமாளை ஸ்ருதி பேசியது. அதைத்தான் ஆழ்வாரும் 'அயர்வறு மமரர்களதிபதி' என்றார். முதற் பத்தில் வரதனை வீக்ஷணம் செய்துகொண்டு (செய்துவிட்டு) திருவாய்மொழி பாடினார் என்று ஸ்வாமி ஸாதித்தபடி. ஆழ்வார் முதற் பாசுரமும் ஸ்வாமி திருவுள்ளத்தில் இங்கே உள்ளதை இந்தச் சப்தம் நிச்சயமாகக் காட்டுகிறது. அடுத்த பதமாகிய 'உபாகத꞉' என்பதை இந்தப் பதத்தோடு சேர்த்துக் கவனிக்கையில் இந்தப் பதத்திற்கு அத்யக்ஷன் ப்ரபு என்கிற அர்த்தத்தைக் கொள்ளாமலிருக்கக் கூடுமோ? ஒரு ஸ்ருதி 'இவ்வுலகில் அத்யக்ஷராயிருப்பவர் (ஈஸ்வரன்) குஹைக்குள் புகுந்துகொண்டு அத்ருஸ்யராக இருக்கிறார்' என்றது. அக்ராஸநம் வஹித்து நிர்வஹிப்பவர் மறைந்துள ரென்று அந்த ஸ்ருதி ஸ்வாரஸ்யம். (ஹ்ருதய) குஹையில் மறைந்திருக்கும் அத்ருஸ்யப் பொருள் இங்கே அத்யக்ஷ (ப்ரத்யக்ஷ) மாகையில், பெருமாள் ஸாக்ஷாத்தாக எழுந்தருளினதும், யஜ்ஞத்தில் கூடின தேவர்களும் யஜ்வாவான ப்ரஹ்மாவும் பெருமாளைத் தானே அத்யக்ஷராகக் கொள்வர். தர்மபுத்ரருடைய

ராஜஸூய யாகத்தில் பீஷ்மர், ‘ தர்மபுத்ர ! நீ தந்யன் ; யாகங்களில் தூரத்திலிருந்தும் (பரோக்ஷத்தில்) யஜ்வாக்களால் எவர் பூஜிக்கப்படுகிறாரோ அந்த ஹரி ஸமக்ஷமாக (கண்ணுக்கு நேராக) எதிரில் எழுந்தருளியிருக்கிறாரே. நீயே பாக்யவான். இந்தப் பூஜ்யருக்கு அர்க்கத்தைக் (பூஜையை) கொடுத்துப் புவநங்களில் ஸம்ஸார மண்டல முள்ளளவளவில் ஸாது என்ற பெயரை அடைவாய் ’ என்று ஸாதித்ததாக மாக கவியின் ஸ்லோகம். இந்த அஸ்வமேதத்தில் பெருமாள் ஸாக்ஷாத்தாக எழுந்தருளும் பாக்யம் நேர்வதால், அந்த மாக ஸ்லோகமும் ஸ்வாமி நெஞ்சில் ஓடுகிறது. ‘ ஸமக்ஷவத ’ என்று அங்கே உள்ளதை நினைத்து இங்கே ‘ அத்யக்ஷிதே ’ என்று ஸாதித்தார். அங்கே உள்ள ‘ யஜ்வா ’ என்னும் பதத்தை முன் ஸ்லோகத்தில் வைத்தார். ‘ விதியினால் யாகம் செய்பவர் யஜ்வா ’ என்று அமரம். இங்கே விதி என்னும் ப்ரஹ்மாவே விதியினால் யாகம் செய்து யஜ்வாவானார். ஸ்வாமி ஸ்ரீ ஸூக்தியில் எத்தனை தான் சேருமென்று கணக்கிட முடியாது. ‘ அவிஜ்ஞாதம் விஜாநதாம் ’ அறிந்தோமென்று நினைத்தால் நாம் அறியாதவரேயாவோம்.

மகபதே—‘யஜ்ஞபதிம் ஹவாமஹே ’ என்று வேதம். யஜ்ஞோ யஜ்ஞபதிர்யஜ்வா.’ யஜ்ஞரென்பது விஷ்ணுவே என்கிற ஸ்ருதியை ஆதாரமாகக்கொண்டு, ‘யஜ்ஞார்த்தமான கர்மங்கள் தவிர மற்றக் கர்மங்கள் தான் பந்தமென்னும் ஸம்ஸாரத்தைக்கொடுக்கும் ’ என்கிற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில், யஜ்ஞார்த்தமான என்பதற்கு விஷ்ண்வர்த்தமான என்று ஸ்ரீ சங்கரர் பொருள் உரைத்தார். நம்மிலும் பெரிய வைஷ்ணவர் அவர். ‘ யஜ்ஞ:, யஜ்வா ’ என்னும் திரு நாமங்களில் நிர்வாஹகனாக அந்தர்யாமியாகப் பொருள் கொள்ளவேண்டிய ஔபசாரிகத்வம் உண்டு. யஜ்ஞபதி சப்தம் ஸாக்ஷாத்தாகப் பெருமாளைத் தான் சொல்லும். ‘ நான் தான் ஸர்வ யஜ்ஞங்களுக்கும் போக்தாவும் ப்ரபுவுமாவேன் ’ என்று கீதை. அதிலுள்ள ப்ரபு சப்தத்தைத் திருவுள்ளம் பற்றி அத்யக்ஷ சப்தமும் பதி சப்தமும் இங்கே உபயோகிக்கப்பட்டன. ‘ ப்ரத்யக்ஷமானன் ’ என்னும் பொருளும் அத்யக்ஷித சப்தத்துக்கு இருப்பதால் புநருக்தி தோஷமில்லை. மேலும் யஜ்ஞஸதஸ்ஸில் பெருமாளை ப்ரஹ்மாதிதேவர்கள் அத்யக்ஷராகப் பாவித்தார்கள் என்ற பொருளும் உள்ளது. யஜ்ஞபதி என்ற ஸ்ருதி ஸ்ம்ருதி ப்ரஸித்தமான பதத்தைவிட்டு ‘மக’ பதத்தை ப்ரயோகித்ததில் ஸ்வாரஸ்ய முண்டு. இந்த்ரனுக்கு மாமூலான ஹவிர்ப்பாகம் கிடையாமற்போய், அதற்குப் பதிலாக அநந்தமென்ற பூர்ண ரஸத்தை அடைந்து பூர்ணராகி மகிழ்ந்தாரென்று சொல்லும் இந்த ப்ரகரணத்தில் ‘ முழுதும் இந்த்ரனுக்கே நிவேதநம் செய்யும் கோகுல கோபர் செய்யும் யாகத்தில் வண்டியாய் ஆக்கின முழுச் சோற்றையும் இழந்த இந்த்ரன் ப்ரீதி விஷ்பாரிதேக்ஷணனைக் கண்

ணனுடைய திருமேனியை ஸேவித்து ரஸித்து மகிழ்ந்தான் ’ என்று சுகரும் பராசரரும் வர்ணித்திருக்கும் வ்ருத்தாந்தத்தை ஸ்வாமி அநுபவிக்கிறார். ஸ்ரீ பாகவதம் தசமம் 24-வது அத்யாயத்தில் ‘மகம் ஆரம்பிக்கப்படலாம், மகம் ஸாதிக்கப்படலாம் ’ என்று பலகால் மக சப்தம் ப்ரயோகப்பட்டதால், அந்த சப்தத்தை இங்கே ப்ரயோகிப்பதால் ஸ்வாமி அந்த வ்ருத்தாந்தத்தை நமக்கு நினைப்பூட்டுகிறார். அந்த ப்ரகரணத்திற்கு ‘ மகபங்கம் ’ என்று பெயர்.

த்வயி—யார் மகபதி ? நீர் தான். அதெப்படி ? ‘ நான் ஸவநவேதியில் ஹவ்யவாஹந (அக்நி)’ என்று முதல் ஸ்லோகத்தில் சொன்னீரே. அக்நியும் யஜ்ஞபதியும் ஒன்றாவரோ ? அக்நி ஹவிர்ப்பாகமுள்ள தேவர்களுக்கு முகம் (வாய்). தேவர்களுக்கு அக்நி ஒரு தபாலாபீஸ் போன்றவர். கொடுத்ததை அப்படியே வாங்கித் தேவர்களுக்குச் சேர்ப்பிப்பர். ‘ஹவிஷே க்ருதே ஸ்வாஹா’ என்று கொடுப்பது மட்டும் அவருக்குக் கூலி. அவர் அதைத் தாமே அமுது செய்வர் ’ என்று பெரியோர் பணிப்பர். ஹவிர்ப்பாகம் வாங்கும் தேவர்கள் எனக்குத் தபாலாபீஸாவர். அக்நி முகமாய்த் தேவர்கள் வாங்கி அதை எனக்குச் சேர்ப்பிப்பார். முடிவான போக்தா நான் தான். இந்த யாகத்தில் எல்லாருக்கும் கீழே இருக்கும் அக்நியும் நான் ; எல்லோருக்கும் மேலே இருக்கும் ப்ரபுவும் நான் என்று செல்லலாமோ ? இப்படி ஆக்ஷேபம் வர, நீரே தான் மகபதி என்பதைக் காட்ட ‘ மகபதே த்வயி ’ என்று சேர்த்துப் பேசினார். நீரேதான் அத்யக்ஷர் என்றும் பேசினார். கர்மாத்யக்ஷர் என்று ஸ்ருதி உம்மைத் தானே பேசிற்று என்கிற அத்யக்ஷ ஸ்ருதியையும் இந்த யாகத்தில் ‘அத்யக்ஷிதர் ’ என்பதால் காட்டுகிறார். ஸ்ரோத்ரத்துக்கு ஸ்ரோத்ரம், மநஸ்ஸுக்கு மநஸ், வாக்குக்கு வாக், கண்ணுக்குக் கண் என்று அந்தந்த கரணங்களுக்கு இவரே நிர்வாஹகரான கரணமாவதாக கேந ஸ்ருதி. அக்நி யென்னும் முகத்திற்கும் (வாய்க்கும்) நீர் தானே முகம் வாய்க்கு வாய்.

சக்ஷுஷைவ—கண்ணாலேயே. ‘ உம்மிடத்திலேயே கண் பதிந்து ’ என்று ‘ த்வயி சக்ஷுஷைவ ’ எனச் சேர்த்தும் அந்வயிக்க வேணும். அபிபேயுர் சக்ஷுஷா. எந்த ப்ரஹ்மத்தை அநுபவிக்கையில் மற்றொன்றைப் பாரானோ ’ என்று நிரதிசய ஸுகமான தன்மையை விளக்கும் பூமவித்யை இங்கே ஸ்மாரிதம். இவ்வமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே. ‘ கண்ணாலேயே ’ என்பதற்கு ‘ நாக்கினால் அல்ல ’ என்று தாத்பர்யம். பெருமாளை அநுபவிப்பதில் இன்னின்ன இந்த்ரியத்திற்கு இன்னின்ன விஷயத்தில் தான் செல்லுதல் என்கிற வ்யவஸ்தையில்லை. ‘முடியானே ’ என்னும் திருவாய் மொழியில் ஆழ்வார் அப்

படி அநுபவிப்பதை அநுஸரித்து, ஆழ்வானும் ஸ்ரீ வரதராஜ ஸ்தவத்தில் ஆரம்பத்திலேயே 'தோளும் கண்ணும் உம்மைப் பாநம் செய்ய ஆசைப் படுகின்றன' என்றார். ஆழ்வானுடைய இப்பெருமாள் விஷயமான அநுபவத்தை ஸ்வாமி இங்கேயும் ஆரம்பத்திலேயே தமதாக்கினார். இந்த்ராதி தேவர்கள் இந்தப் பெருமாள் விஷயத்தில் இந்த்ரிய வ்யவஸ்தையை மீறிக் கண்ணாலே ரஸத்தைச் சுவைத்தார்கள்(பருகினார்கள்) என்பதையும் காட்டுகிறார். 'என் னமுதினைக் கண்ட கண்கள்' என்ற நம் பாணநாதனும் இவ்வநுபவத்தில் முழுகினவர். 'மற்றொன்றைக் காணாதே இவ்வமுதினையே காணும் கண்கள்' என்று அமுதத்தைக் காண்பதால் அநுபவிப்பதாகப் பேசும் பாணநாதன் அநுபவமும், 'தூய வமுதைப் பருகிப்பருகி யென் மாயப் பிறவி மயர்வறுத்தேனே' என்ற ஆழ்வார் அநுபவமும் ஒன்றே. 'லோசநாப்யாம் பிபந்நிவ' [இரு கண்களாலும் பாநம் செய்துவிடுபவர் போல] என்பர். 'இவ' என்னும் உபமாந பதம் எதற்கு? கண்களாலேயே பாநம் செய்கிறார்கள் என்றார். 'சக்ஷுஷா' என்னும் ஏக வசநத்தில் கொள்ளை ஸ்வாரஸ்யமுண்டு. ஆயிரம் கண்கள் இந்த்ரனுக்கு. ருத்ரனுக்கு மூன்று. ப்ரஹ்மாவுக்கு எட்டு. இத்தனை கண்களுக்கும் ஒரே விஷயமானார்; ஏக லக்ஷ்யமானார். ஒரு கண்ணேனும் மற்றொன்றைப் பாராது. ஸ்ரீ ஸ்துதியில்,

'யஸ்யாம் நித்யம் நயநஶதகைரேகலக்ஷ்யோ மஹேந்த்ர:।

என்றதின் ஸ்வாரஸ்யத்தை அதன் வ்யாக்யாநத்தில் விவரித்திருக்கிறோம். இந்த்ரன் உடம்பில் பத்துத் திக்குகளிலும் நூறு நூறு கண்கள். பக்கங்களிலும் முதுகிலும் மார்பிலும் கைகளிலும் தலையிலும் கண்கள் திக்குத் திக்காய் இருப்பனவெல்லாம் பிராட்டியின் கடாக்ஷலேசத்தால் இந்த்ராணி ஒருத்தியிடமே சென்றன. அப்படியே இங்கே அழகுக் கடலையே பத்துத் திக்குகளிலே போகும் கண்கள் (ஒரே கண்ணைப் போலக்) கண்டு அதில் மூழ்கின. ஒரே கண்ணிருந்தால் எப்படியோ, அப்படியே எல்லாக் கண்களும் சேர்ந்து அழுந்தின. முன் ஶ்லோகத்தில் கண்களுக்கெல்லாம் 'சக்ஷுஷாமவிஷயம்' என்று பரத்வத்தால் அத்ருஶ்யமான ஸ்வரூபத்தை யுடையவரென்று பன்மையால் காட்டினார். இங்கே அருள்வடிவான திருமேனியால் ஸௌலப்யத்தால் 'ஒரு கண்ணாலேயே காணக் கூடியவரானார்' என்று வேடிக்கை. ஹவிஸ்ஸுக்கும் அம்ருதமென்று பெயர். தேவதைகளுக்கு ஹவிஸ்ஸை நிவேதநம் செய்யும்பொழுது 'அவர்கள் தின்பதில்லை; குடிப்பதில்லை. இந்த அம்ருதத்தைப் பார்த்ததனால் மட்டும் த்ருப்தி யடைகிறார்கள்' என்று வேதம் சொல்லுகிறது. ஹவிஸ்ஸைப் பாகம் பாகமாய், அந்தந்தத் தேவர்கள் அவரவர்கள் பாகத்தை மட்டும் அவரவர் கண்களால் வெவ்வேறு

க்ஷணங்களில்தனித் தனியே பார்த்து த்ருப்தியடைவர். ஒருவர் பாகத்தை மற்றொருவர் பாரார். இத்திருமேனி அம்ருத ரஸத்தை எல்லோரும் சேர்ந்து ஒன்றாகவே பார்த்து அநுபவித்தார்கள். 'விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் கண்ணாவானைக்' கண்ணாலேயே சுவைத்தார்கள். 'திவ்யம் ததாமி தே சக்ஷு:' என்று பெருமாள் அர்ஜுநனுக்குத் தம் விஶ்வ ரூபத்தைக் காண ஞானக் கண் ஒன்றே கொடுத்தார். அங்கே ஏக வசநத்தைப் போல இங்கேயும் ஒருமை. இங்கும், பெருமாள் கொடுத்த ஒரு ஞானக் கண்ணால் ஆநந்த கநமான ரஸத்தைப் பருகினார்கள் என்பதைக் காட்ட ஏக வசநம் ப்ரயோகிக்கப்பட்டது. ஞானக் கண்ணால் அநுபவிக்கும்போது கண்ணால் பாநம் செய்யலாம்.

ஹைரண்யகர்ப்பஹவிஷாம் ரஸம்—'அஹம் ஔஷதம்।' என்றார் பெருமாள் கீதையில். 'நானே ஹவிஸ்' என்று உடையவர் பாஷ்யம். 'ரஸோऽஹமப்ஸு கௌந்தேய' [ஜலத்தில் ரஸம் நான்] என்று கீதை. ஹவிஸ்ஸுக்கள் ரஸமாவது பெருமாள் ஸம்பந்தத்தாலே. 'பெருமாளுடைய ஆநந்தத்தின் மாத்ரையை (லேசத்தை) உலகத்திலுள்ள ரஸங்களும் ஸுகங்களும் உபஜீவிக்கின்றன' என்று ஶ்ருதி. தங்கத்தில் பிறந்த கர்ப்ப ஸ்ரீமாந் பூமியிலுள்ள உயர்ந்த த்ரவ்யங்களைத் தேடி, அதைக் கொண்டு உயர்ந்த ஹவிஸ்ஸைச் செய்வித்தார். அவருடைய ஐஶ்வர்யத்துக்குத் தக்க ஹவிஸ். ஸ்ருஷ்டிப்பவரும் அவரே. உயர்ந்த பொருள்களை இதற்கென்று ஸ்ருஷ்டித்து உத்தமமான ஹவிஸ்ஸுக்களைச் செய்தார். 'காஞ்சீ நகரமே ப்ரஹ்மாவின் இச்சாவசத்தால் இந்த யாகத்துக்கென்றே பிறந்தது' என்று ஹம்ஸ ஸந்தேசத்தில் வர்ணிக்கிறார். ஊரையே இச்சாவசத்தால் அமைக்கையில், பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும் ஹவிஸ்ஸைத் தம் ஆசையை யெல்லாம் கொண்டு ஆக்கினார் என்பது நிச்சயம். இந்த ஹவிஸ்ஸுக்களெல்லாம் தேவர்களுக்குப் போயினவே என்று ஆக்ஷேபம். அதற்கு ஸமாதாநமும் இங்கே கிடைக்கிறது. பெருமாள் எல்லா ஹவிஸ்ஸுக்களையும் வாங்கி அவைகளின் ரஸத்தை அவர்களுக்கு அநுபவிக்கக் கொடுத்தார். பெருமாள் தான் எல்லாப் பொருள்களின் ரஸம்; எல்லா ஹவிஸ்ஸுக்களின் ரஸம். தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பொருள். அவர்தான் முக்யமும், உண்மையும், அளவில்லாததும், தெவிட்டாததுமான ரஸம். 'ஹவிஸ்ஸைப் பார்த்து த்ருப்தி யடைகிறார்கள்' என்று ஶ்ருதியைக் காட்டினோம். இந்த ரஸத்தைக் காணக்காண த்ருப்தியில்லை. போது மென்கிற புத்தியில்லை. கண்ணன் திருவீதிகளில் எழுந்தருளுகையில்,

'த்ருப்தயைவ நாத்ருப்யந் ப்ரேக்ஷமாணா ஜநார்தநம்।'

என்றார் சுகர். பெருமாளைக் கண்டு அநுபவித்த ஜநங்கள் அம்ருதத்தின்

அநுபவத்திற்போல த்ருப்தி யடைய வில்லை. ‘அம்ருதம் போல’ என்னும் த்ருஷ்டாந்தத்தை அந்வயமாகவும் வ்யதிரேகமாகவும் கொள்ளலாம். தசரதர் ராமனை உப்பரிகையிலிருந்து பார்க்கையில்,

‘ந ததர்ப ஸமாயாந்தம் பஶ்யமாநோ நராதிப: ।’

என்றார். ‘குழந்தை திருவீதிகளில் ரதத்தில் வருவதைப் பார்த்து த்ருப்தி யடையவில்லை’ என்றார். இங்கேயும் போதுமென்ற பர்யாப்தி யில்லாமல், தொடர்ந்த ஓயாத அநுபவ மென்பதை அடுத்த பதத்தில் காட்டுகிறார். 44-வது ஸ்லோகத்தில் ‘ஸ்ருஹீயமாநம்’ என்று தொடங்கிய ஸ்லோகத்தை இங்கே கவனிக்கவேணும். பெருமாளைத் தான் ப்ரஹ்மா ஹவிஸ்ஸுக்காகக் கூப்பிட்டாரென்று அங்கே ஸ்பஷ்டம்.

‘ஹைரண்யகர்ப்பஸ்ய ஹவிர்புஜாம் வரம்’

என்று அங்கே பெருமாளே ஹவிஸ்ஸுக்களைப் புஜித்ததாக ஸாதிக்கிறார். பெருமாள் ஹவிஸ்ஸுக்களை அமுது செய்து, அவற்றின் ரஸமாகிய (ஸாரமாகிய) தம்மையே தேவர்களுக்குக் கொடுத்தார். சக்கை தமக்கு, ஸாரம் தேவர்களுக்கு என்று தாத்பர்யம். குடகுக் கிச்சிலிப் பழத்தை சாப்பிடுகையில், பிழிந்து சக்கையை எறிந்துவிட்டு, ரஸத்தை மட்டும் சாப்பிடுவர் மனிதர். பெருமாள் அமுது செய்து அதன் உச்சிஷ்டமே சேஷருக்குப் போக்யம். ரஸம் என்பதால், ரஸமென்கிற ஆநந்தமய ஸ்ருதியை காட்டுவதை முன்பே காட்டினோம்.

அநுஸம்பபூவு:—அநுபவித்தார். ‘அநு’ என்பது தொடர்ச்சி; அநுவ்ருத்தியைச் சொல்லும். தொடர்ந்து ஓயாது அநுபவித்தார்கள் என்றபடி. ‘அநு’ என்பது ‘பின்பு’ என்பதையும் சொல்லும். பெருமாள் அநுபவித்துப் பின்பு தாமும் அநுபவித்தார். ‘அநு’ என்பது தாழ்வையும் சொல்லும். பெருமாளுக்குச் சேஷராய் சேஷத்தை ரஸித்தார்கள். ‘பின்பு’ என்னும் அர்த்தத்தால் இன்னும் ஒரு ஸ்வாரஸ்யம். ‘ஸம்பபூவு:’ என்பதற்கு, ‘ஸத்தை யுடையவரானார், உளரானார், பிறந்தார்’ என்பதும் பொருள்கள். ரஸஸ்வரூபனை ஆநந்தமயப் பெருமாளைக் காணவே தாமும் உளரானார். ஆநந்தமயனை ரஸ விஷயத்தில் ‘‘ஸந்தமேநம் ததோ விது:’’ என்று ஸ்ருதி பேசியது. பெருமாள் பிறந்ததை ஸேவித்துத் தாங்களும் பின்பு பிறந்தார்கள் என்றபடி.

ஸ்ரீ:

திருவாய் மொழியின் முதலும் முடிவும்

[ஸ்ரீ. உ.ப. வி. நரஸிம்ஹாசார்யர், அட்வொகேட், மதிராஸ்]

1. நம்மாழ்வார் சரம ப்ரபந்தமான திருவாய் மொழியின் உபக்ரம உபஸம்ஹாரங்கள் பரமதத்வார்த்தப்ரதிபாதகமாய் இருக்கும் என்று “மோர் முன்னாக முப்பதிரண்டு ஆசார்ய சிச்ருஷை பண்ணி” அணி அத்திகிரியில் வாழ்ந்த சில அபியுக்தர்கள் அருளிச்செய்வார்கள். அவ்வருளிச்செயலின் ஸ்வாரஸ்யம் அறியவேண்டுமானால் ப்ரணவத்தின் அமைப்பும் (constitution) அர்த்தமும் அறியவேண்டும்.

“யஸ்ஸ்வர: ஸ்யாதி ப்ரணவோ வேதாதௌ ச ப்ரதிஷ்டித:
தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய: பரஸ்ஸ மஹேஶ்வர: ”

என்பது ச்ருதி வசனம். அவ்வசனத்தால் (i) வேதாத்யயனம் செய்யும் போதெல்லாம் முதலிலும் முடிவிலும் “ஓம்” என்கிற ப்ரணவ அக்ஷர ஸ்வரத்தோடு ஆரம்பித்து முடிக்கவேண்டும் என்பதும் (ii) அந்த “ஓம்” என்னும் ப்ரணவ அக்ஷரமானது தன்னுடைய ப்ரக்ருதியில் (root) லயமடையும்போது “அ” கார சப்தமாய் நிற்கும் என்பதும் (iii) அந்த “அ” காரம் மஹேஶ்வரனைக் குறிக்கும் என்பதாம்.

3. “ஓம்” என்னும் ப்ரணவ அக்ஷரம் “அ,” “உ,” “ம்” என்கிற மூன்று அக்ஷரங்கள் சேர்ந்த ஏகாக்ஷரம். எல்லா பாஷைகளிலும் உள்ள அக்ஷரங்கள் அல்லது எழுத்துக்கள் சப்தங்களைக் காட்டும் குறிகளாம். எல்லா சப்தங்களுக்கும் முதற் காரணமான சப்தம் “அ”கார சப்தந்தான். வாய் திறக்கும்போது முதல் முதல் உண்டாகும் சப்தம், இந்த “அ”கார சப்தம் சப்தக் கருவிகளாகிய நாக்கு, பல், மேல் வாய், உதடு முதலியவைகளின் சலனத்தால் நீட்டல், குறுக்கல், மடக்கல் முதலிய வேறுபாடுகள் அடைந்து ஏனைய எழுத்துக்களாக மாறும். “அ”கார சப்தத்தை நீட்டி இரண்டு உதடுகளையும் குவித்தால் “உ”கார சப்தம் உண்டாகிறது. அவ்வுதடுகளை மூடித் திறந்தால் “ம”கார சப்தம் உண்டாகும். ஆகையால் எல்லா சப்தங்களும் “அ”கார சப்தத்தின் வேறுபாடுகளே யன்றி வேறில்லை. “அ”கார சப்தம் இல்லாவிடில் வேறு சப்தங்கள் உண்டாக மாட்டா. அதுபோல் ஏனைய சப்தங்கள் எல்லாம் தந்தாமுடைய ப்ரக்ருதி யாகிற (Root) “அ”கார சப்தத்தில் லயம் (merge) அடைகின்றன. ஆகையால் “அ”காரம் ப்ரக்ருதி ப்ரணவம் என்றும் “ஓம்” விக்ருதி ப்ரணவம் என்றும் சொல்லுவார்கள். தமிழரும் இதனையே பகுதி ப்ரண

வம், விகுதி ப்ரணவம் என்றும் பகருவார்கள். அகாரம் பரிணமித்து ஓங்காரமாகவும் ஓங்காரம் லய மடைந்து அகாரமாகவும் நிற்கும். இதுபோல் தான் ஈஸ்வரதத்வமும். "அ"கார வாச்யனான எம்பெருமான் பரிணமித்து ப்ரபஞ்சங்களாகிறான் என்றும் ப்ரபஞ்சங்களெல்லாம் ப்ரளய காலத்தில் ஈஸ்வரனிடத்தில் லயமடைகின்றன என்னும் தத்வம் மேற்கூறிய ச்ருதி வசனத்தால் ஏற்படுகின்றது. மேற் சொல்லிய தத்வத்தின் உண்மையை உணர்ந்த நம்மாழ்வார் சரம ப்ரபந்தமாகிய திருவாய்மொழியை "ஒழி" என்று ஆரம்பித்து "அ"காரத்தோடு முடித்துள்ளார். திருவாய் மொழியின் முதல் பாசுரத்தின் முதல் மூன்று பாதங்களின் முதல் அக்ஷரங்கள் "உ", "ம", "அ" என்னும் ப்ரண வாக்ஷரங்களாம். இதனையே நம் பூர்வாசாரியர்கள் "உத்கீத ப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி" என்று அ, உ, ம என்கிற வரிசை க்ரமத்தில் சொல்லாமல் உ, ம, அ என்று மாறாடிச் சொன்னார் என்பர்கள். இதன் காரணம் ஆழ்வாருக்கு "அ"கார "ம"காரங்களால் சொல்லப்படும் ஈஸ்வரதத்வம் ஜீவதத்வம் இவைகளைக் காட்டிலும் "உ"காரத்தால் குறிக்கப்படும் அநந்யார்ஹ சேஷத்வத்மாகிற ஜீவ ஸ்வரூபத்தில் நோக்கு அதிகம் என்பதாம். "நான்" போய் "அடியேன்" ஆயினார். இப்படி தம் திருவாய்மொழியை உபக்ரமித்து பக்திவளம் மேன்மேலும் பெருகிப் பெருகி பர பக்தி, பரஜ்ஞாந, பரம பக்தி தசையடைந்து முடிவில் "உன்னோடு உயிர் வேறின்றி ஒன்றாகவே" என்னும்படியான ஸாயுஜ்ய பதவியை யடைந்து எம்பெருமானோடு லயித்தபடியால் கடைசி பாசுரத்தின் நான்கு பாதங்களின் முதல் அக்ஷரம் "அ"காரமாகவே முடித்துள்ளார். அதாவது விக்ருதி ப்ரணவத்தில் ஆரம்பித்து ப்ரக்ருதி ப்ரணவத்தில் திருவாய்மொழியைத் தலைக்கட்டினார் என்பதாம். "சென்று சென்று பரம்பரமாய் யாதும் இன்றித் தேய்ந்து அற்று நன்று தீது என்று அறிவு அரிதாய் நன்றாய் ஞானங்கடந்த" தசைதான் ஸாயுஜ்ய பதவியாகும். ஸம்ஸாரமாகிற பிறவிக்கடலில் மூழ்குபவர்களுக்கு மோக்ஷம் அப்பிறவித்துயர் அற, ஞானத்துள் நிற்றலேயாம். அங்நிற்றல் "எல்லாம் விட்ட இறுகல் இறப்பாய்" "மறுகலில் ஈசனைப் பற்றி விடாவிடில்" உண்டாகும்.

5. இந்த ஸூக்ஷ்ம தத்வார்த்தத்தை தமிழர்கள் நன்கறிந்தார்கள். திருவள்ளுவர் திருக்குறளில் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார். இதன் பொருள் எல்லா சப்தங்களுக்கும் "அ"கார சப்தம் முதற் காரணமாவதுபோல் (முதல்), எல்லாப் பிரபஞ்சங்களுக்கும் அகாரவாச்யனான ஆதிபகவன் முதற் காரணமாவன் என்பதாம். "அ"காரத்திலிருந்து ஏனைய சப்தங்களைக் காட்டும் எழுத்துக்கள் எல்லாம் உண்டாவதுபோல் சகல ப்ரபஞ்சங்களாகிற உலகு ஆதிபகவனிடமிருந்து உண்டாயின என்பதாம். பிரபஞ்சங்களனைத்தும் "மித்யை" அல்லது பொய் என்கிற மாயாவாதம் இவர் ஒப்புக்கொள்ளவில்லை போலும். ச்ருதி வசனத்தை அடியொற்றிப் போந்த தலைமைப் புலவர் இவரேயாம்.

இக்குறளுக்குச் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர் "தலைமை பற்றி வந்த அகாரத்துக்கும் ஆதிபகவனுக்கும் பிம்பபிரதிபிம்ப பாவம் காட்டுதலால் எடுத்துக் காட்டுவமையணி" என்றார். பிம்பபிரதி பிம்ப பாவத்தில் பிரதிபிம்பம் பிம்பத்தின் சாயையே யொழிய உண்மையான வஸ்து ஆகாது. அகாரத்திலிருந்து ஏனைய எழுத்துக்கள் உண்டாதலால் அகாரம் ஏனைய எழுத்துக்களுக்கு முதற் காரணம் என்றால் ஏனைய எழுத்துக்கள் அகாரத்தின் பிரதிபிம்பம் என்று சொல்ல முடியாது. அகாரம் எவ்வளவு உண்மையான வஸ்துவோ அவ்வளவு உண்மையானதாம் ஏனைய எழுத்துக்களும். ஆகையால், "முதல்," "முதற்றே" என்னும் பதங்களுக்கு காரண காரிய பாவம் பொருள் கொள்ளவேணுமேயன்றி பிம்பப் பிரதிபிம்ப பாவத்தில் பொருள் கொள்ளாது. மகா ப்ரளயத்தில் ஸர்வேஸ்வரன் ஸூக்ஷ்ம சித் அசித் விசிஷ்டமாயும் பரிணமத்தில் ஸ்தூல சித் அசித் விசிஷ்டமாயும் நிற்பன். ஸூக்ஷ்ம தசையை "அ"காரத்தாலும் ஸ்தூல தசையை ஓங்காரத்தாலும் குறிப்பிடப்படும்.

அன்றியும், திருக்குறள் கடவுள் வாழ்த்தில் 'தான் வணங்கும் வழிபடு கடவுளைச் சொல்லவில்லை, தான் செய்த கிரந்தத்துக்கு ஏற்ற ஏற்புடைக் கடவுளை வாழ்த்தினார்' என்றார் பரிமேலழகர். தர்மம், அர்த்தம், காமம் என்கிற முப்பாலுக்கும் மும்மூர்த்திக்கும், ஸாத்விக, ராஜஸ, தாமஸமாகிற முக்குணங்களுக்கும் யாது ஸம்பந்தம்? இக்கடவுள் வாழ்த்து வழிபடு கடவுளேயாம் என்று பல தமிழறிஞர்களின் அபிப்ராயம். வழிபடு கடவுளானால் "ஆதிபகவன்," "வாலறிஞன்" முதலிய தொடர்கள் ஸகுண பிரம்மத்தையே குறிக்குமன்றி நிர்குணப் பிரம்மமும் ஆகாது. பரிமேலழகர் மும்மூர்த்திகளையும் பொதுவில் நோக்கும் ஒரு சிறந்த அத்வைதியாய் இருக்கவேணும். ஆனது பற்றியே அம்மதத்துக்கு ஏற்றவாறு பொருளாகப் பொருள் படுத்துவார்போலும். அறிஞர் ஆராய்க.

6. இலக்கணப் புலவர்கள் "மொழி முதற் காரணமாம் ஒலி எழுத்தாகும். அது முதல் சார்பு என இருவகைத்தே" என்றும், உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் முதல் எழுத்தாகும் என்பர்கள். வேதாந்திகள் "அ"காரம் ஒன்றே முதல் எழுத்து என்றும் மற்றைய எழுத்துக்கள் எல்லாம் சார்பெழுத்து என்பர்கள்.

7. திருவாய் மொழியைத் "தாய்மொழி" என்றும் திருக்குறளைச் "சேய்மொழி" என்றும் சிலர் நிர்வாஹகம். திருவாய் மொழியில் சாரீரக தத்வத்திலிருந்து பாரமார்த்திக தத்வத்தை நிஷ்கர்ஷித்தார். திருக்குறளில் சப்த சாஸ்திரத்தில் நின்றும் பரம தத்வத்தை நிஷ்கர்ஷித்தார். உயிருக்கும் உடலுக்கு முள்ள ஸம்பந்தமே பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தம். அம்மாதிரியே "அ"காரத்துக்கும் ஏனைய எழுத்துக்களுக்கும் உள்ள ஸம்பந்தம் போல் ஜீவபர ஸம்பந்தம். இரண்டு வகையாலும் வேத சாஸ்திரங்களில் சொல்லிய தத்வார்த்தத்தை ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிரூபிப்பார்கள். படைத்த பொருளில் நின்றும் படைத்தோனைப் பண்பைப் பகரும் நியாயம் பண்டு பண்டே.

ஸ்ரீ:

வான்சிறப்பு

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரிய தரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

1. அவதாரிகை.

"பொன் னுலகத்தினிற் புவியிலந்தரத்
தென் னுடை யுட்புறத்தி லங்குகின்றது
மன்னு சிற்சோதியே வடிவமியாவுமாய்த்
துன் னுவதப் பொருடொழுதிறைஞ் சுவாம்."

மனம், மொழி, மெய் என்ற திரிகரணங்களுக்கு அப்பாற் பட்டதே கடவுள். அவன் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுவதே அறிஞர் கடன். இக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்கு உறுதியைத் தருவதாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்குத் துணைக் காரணமாகியது மழை. ஒவ்வொரு சிருட்டியின் ஆரம்பத்திலும் எல்லாம் வல்ல இறைவன் ஜீவர்களின் காலகன்மபரிபாகத்திற்குத் தக்கவாறு இவ்வளவு காலம் மழை, குளிர், வெயில் முதலியன உண்டாகுக என்று சங்கற்பிக்கிற முறையை அனுசரித்து அங்ஙனம் நடைபெறுகிறதென்பது நூற் கொள்கை. வான் என்பது ஒரு அழகிய தமிழ்ப் பதம். ஆகாயம், மேகம், மழை, பெரிது, பரம பதம் என்பன அதன் பொருளாம். வான் சிறப்பு எனவே மழையினது சிறப்புக் கூறுதல் என்னுகும். இதனைக் கூறுவதும் ஓர் வகைக் கடவுள் வாழ்த்தென்பது ஆன்றோர் அபிமதம். எனவே அது கூறுமிடத்துண்டாகும் குற்றங்களைந்து குணமே கொள்க.

2. மழையும் தமிழ்க் கவிகளும்.

ஒவ்வொரு கவியும் தானியற்றிய கிரந்தத்தில் மேகத்தையும், மழையையும், ஆற்றையும் வருணிப்பது மரபு. வெள்ளை மேகம் கருமேகமானதைக் குறித்து நந்தமிழ்க் கவிகள் கூறுவதைச் சற்று விவரிப்பாம். அதிவீர ராம பாண்டியன் நைடதத்தில் மேகங்கள் கலைமகள் உருவம் போற் சென்று பார்வதி மேனிபோல் மீண்டன என்றும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் விபூதியைத் தரித்த ஈசுவரன் போலப் போய் உமை மேனிபோற் பசந்து அருளென்ன எழுந்தன என்றும் கூறுகின்றனர். அச்செய்யுட்கள் பின் வருமாறு:

"கருவிமா மழை கலைமகள் உருவென விளங்கி
இருவிசும் பிடைப் பரந்து சென்று அங்கின மணிகொழிக்கும்
பரவை வெண்திரை மேய்ந்து உயர் பனிவரை யுயிர்த்த
உருவ வோடரித்தடங்கணாள் உருக்கொடு மீண்ட."

"தெய்வ நாயகனீறணி மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்து பல்லுயிர்க்கும்
எவ்வ மாற்று வான் சுரந்திடு மின்னருளென்னக்
கௌவை நீர் சுரந்தெழுந்தன கனைகுரன் மேகம்."

கவிச் சக்ரவர்த்தியாய கம்பர் மேகங்கள் சிவனைப் போலப் போய் திருமாலைப் போலத் திரும்பினவென எவ்வளவு அழகாக வருணிக்கிறார் பாருங்கள்.

"நீறணிந்த கடவுணிறத் தவான்
ஆறணிந்து சென்றார் கலிமேய்ந்தகிற்
சேறணிந்த முலைத்திரு மங்கை தன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே."

(விபூதியை மேனி முழுதும் பூசிய ருத்ர மூர்த்தியின் வெண்ணிறத்தையுடையனவாகிய மேகங்கள் போகும் வழியை அலங்கரித்துக்கொண்டு போய் கடல் நீரைக் குடித்து அகிற் குழம்பைப் பூசிய தனங்களையுடைய இலக்குமியாகிய மங்கைப் பருவப் பெண்ணை தனது மேம்பாட்டுக்குக் குறியாக தரித்திருப்பவனாகிய திருமாலின் திருமேனி நிறம் போலக் கறுத்துத் திரும்பின.)

இராமாயண ஆரம்பத்தில் ஒரு மேக வருணனையில் எம்பெருமானைப் பிராப்தி ஸமேதனாக அனுபவிக்க இக்கவிக்கே பாக்யமும் பரத்யமும் உள்ளனபோலும். பகவத் விஷயத்தை எளிதில் புகட்டும் ஆற்றல்

இவருக்கே அமைந்தது. 'பொன்னார் மேனியன்'; 'எரிபோன் மேனிப் பிரான்'; 'பவளத் தடங்குன்று'; 'முக்கட்பவளமலை' எனப் பிரசித்தியாகக் கூறப்படும் அம் மூர்த்திக்கு வெண்ணிறம் வருதற் பொருட்டு நீறணிந்த கடவுள் என்றார். 'வடிவாய் வல மார்பினில் வாழ்கின்ற மங்கை'; 'அகலகில்லேனென்றிறையும் அலர்மேல் மங்கை' என ஆழ்வார்கள் அனுஸந்தித்தபடி 'திருமங்கை' எனக் கூறினார். ருத்ர மூர்த்தியைக் 'கடவுள்' என்றும் நம் பரந்தாமனை 'அகிற் சேறணிந்த முலைத்திரு மங்கை தன் வீறணிந்தவன்' எனக்கொண்டாடி யுள்ளதற்கு நாம் என்ன கைம்மாறு கொடுக்கமுடியும்? உள்ளதை மஹாகவி உள்ளவாறுணர்த்தினன். இக்கவியல்லவா வான் சிறப்பை நன்கு உணர்ந்தவர்?

மேல் மேகங்கள் நெருங்கிப் பரவினதை மலையரையனுக்குத் திருமஞ்சனம் செய்யக்கடல் எழுந்தது போன்றதென்கிறார்.

"பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பினாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரியெழுந்தது போன்றதே."

(மேகங்கள் நெருங்கிப் பரவினது 'நமது துதித்தற்குறிய மாமனாகிய பருவதராஜன் சூரியனால் வெப்பத்தை அடைந்தான். ஆகையால் அவ்வெப்பத்தைத் தணித்தற் பொருட்டு நீராட்டுவோமென்று' விசாலமாகிய அவ்விமயமலையின்மேல் இவ்வுலகத்திலுள்ள கடலானது எழுந்ததை யொத்தது.)

நதிகள் மலையினின்று தோன்றிக் கடலில் ஸங்கமமாவதால் மலையை அவற்றிற்குப் பிதாவென்றும் கடல் கொழுநன் என்றும் கூறுவது முறை. கங்கை மலையரையனுக்கு மூத்த குமாரத்தி. சமுத்திரராஜன் கங்கையின் மணாளன். இதனை வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில் விசதமாகக் காணலாம்.

பின்னர் மேகம் வள்ளியோர்போலச் சொரிந்தன வென்பதை

"புள்ளி மால் வரை பொன்னென நோக்கி வான்
வெள்ளி வீழிடை வீழ்த் தெனத்தாரைகள்
உள்ளி யுள்ள வெல்லா முவந்தீயும்வ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே."

(சிறப்பித்துக் கூறப்படும் புகழுள்ள பெரிய அவ்விமயமலையானது பொன்னென்பதைப் பார்த்து விண்ணுலகினர் வெள்ளிக் கம்பிகளை அப்பொன்

மலையின்மேல் அழகாக வீழ்த்தினாற் போலத் தோன்றும்படி செல்வத்தின் நிலையாமை மறுமைப் பயன் முதலியவற்றை யாலோசித்து தம்மிடத்துள்ள பொருள்களை யெல்லாம் மனமுவந்து வரையாதும் கைம்மாறு கருதாதும் கொடுக்கின்ற அவ்வள்ளன்மையை யுடையவர் போல மழைத் தாரைகளை மேகங்கள் சொரிந்தன.)

3. மழை உலக நடத்தற் கேதுவாதல்.

உயிர்கள் நிலைபெற்று வருதற் கேது மழையே. அமிழ்த முண்டார் அமரராயினர். அஃதேபோல் மழை உயிர்களுக்கு அமிழ்த மென்று அறிஞர் கூறுவர். உயிர்கள் நிலைபெற்று வருதலாவது பிறப்பு நடுவே நீக்காமல் எந்நாளும் உடம்போடு காணப்பட்டு வருதல். உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி அவ்வுணவுகளை உண்பவருக்குத் தானும் உணவாய் நிற்பதும் மழைதான்.

"துப்பார்க்குத் துப்பாயதுப் பாக்கித்துப் பார்க்குத்
துப்பாய தூஉ மழை."

மழை பெய்தல் தவறுமாயின் பசியால் உயிர்கள் வருந்தி இறக்கும் 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை.' மக்களைக் கொடுப்பதும் காப்பதும் மழையாம். மழை பெய்யாவிடின் கடலுந்தன் வளங்குறையும். "கடலுக்குப் பெருமை முத்தும் பவளமும் படுவது. வைகாசியிலே ஞாயிற்றுச் சோதியின் மழையிலே முத்திற்குக் கரு, ஐப்பசிப் பூசத்து மழையிலே பவளத்திற்குக் கரு; ஆகலின் மழையில்லாத விடத்துக் கடல் பெருமை குன்றும்" என்பர் கடலியல் புணர்ந்தார்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு."

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்."

"நீரின் றமையாது லகெனின் யார்யார்க்கும்
வானின் றமை யாதொழுக்கு."

மழைபெய்யா தொழியின் தேவர்கட்குத் திருவிழாவுடன் கூடிய பூசை நடவாது. தானமும் தவமும் உண்டாகா. வானஞ் சுருங்கில் தானம் சுருங்கும். தானமாவது தரும வழியால் வந்த பொருள்களைப் பெரியோர்க்கு மகிழ்ச்சியோடுங் கொடுப்பது. தவமாவது மனம் முதலிய பொறிவழியிற் போகாமல் நிற்கும் பொருட்டு விரதங்களால் உணவைச் சுருக்குதல் முதலானவையாம். எனவே மழை அறம் பொருள் இன்பங்கள் இனிது நடைபெறுவதற்குத் துணைக் காரணமாகின்றது.

4. ஆண்டாளும் ஆழிமழைக் கண்ணனும்

கிங்கரனைக் குறித்து யம தரும ராஜன்,

‘ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

(பகவத் பக்தர்களை விட்டு விடு. நான் இதர மனுஷ்யர்களுக்கே யஜமானன். விஷ்ணு பக்தர்களுக்கு யஜமானனன்று) என்று அவனுடைய காதினடியில் சொன்னான்.

“திறம்பேன் மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.”

இவற்றால் பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணினாரை இதர தேவதைகள் அநுவர்த்திக்கக் கடவர் என்பது பெற்றாம். வர்ஷ தேவதையான பர்ஜந்யன் வந்து ‘நாம் இங்குத்தைக்குச் செய்யவேண்டும் அடிமையை நியமிக்க வேணும்’ என்ன செய்யக் கடவபடியை கையோலை செய்துகொடுக்கிறார்கள்.

“ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆரத்தேறி
ஊழி முதல் வனுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்ப நாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்.”

இப்பாசுரத்தை மணிவாசகர் திருவெம்பாவையிலுள்ள

“முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடை யாளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலை குலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமானன் பர்க்கு

முன்னிய வணமக்கு முன் சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.”

என்ற செய்யுளோடு ஒப்பிடுக.

5. எம்பெருமானுக்கு உவமை

‘முகிலுருவம் எம்மடிகளுருவந்தானே’; ‘கார்வண்ணம் திருமேனி’ ‘இலங்கொலி நீர்ப்பெரும் பௌவம் மண்டியுண்ட பெருவயிற்ற, கருமுகிலை யொப்பர்வண்ணம்’; ‘மின்னுமாமழை தவழும் மேகவண்ணா’; ‘காமனைத்தான் பயந்தகருமேனியுடையம்மான்’; ‘கார்மேனி’ என்று ஆழ்வார்களெல்லாம் எம்பெருமானுடைய திருவுருவத்தை மேகத்துக்கு உவமை கூறுவர். மேகம் தன்னையே அழியமாறிப் பிறர்க்குதவுதல் போல எம்பெருமான் தன்னையே தமர்க்கு நல்கும் தனிப்பெருந்தேவன்.

6. மேகவிடு தூது.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் விண்ணீலமேலாப்பு என்ற தொடக்கத்துள்ள பதிகத்தால் மேகவிடுதூதின் வழக்கு தெற்றெனத் தெரியலாகும்.

“நாகத்தினணை யானை நன்னுதலாள் நயந்து உரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை தமிழ்
ஆகத்து வைத்துரைப்பாரவர் அடியராகுவரே.”

7. வைகுந்தச் சிறப்பு.

வான் என்பது பரமாகாசமாகி கலங்காப்பெருநகரான பரமபதத்தையும் குறிக்கும்.

“சிறுகாலை யிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம் வேறுபடா
உறுகால் கிளர் பூதமெலா முகினும்
மறுகா நெறி.”

என்பது பரமபதச் சிறப்பு.

8. முடிவு.

“எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்தமா முகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டா விடினும் விற்றுவக்கோட்டம்மா! என்
சித்தம் மிக உன் பாலே வைப்பன் அடியேனே.”

“தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடி தொடு கடலே
புக்கன்றிப் புறம் நிற்கமாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்! விற்றுவக் கோட்டம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன் காண் புண்ணியனே.”

ஸ்ரீ:

மாதுலஸுதா பரிணயம்

[பண்டித ஸ்ரீ. உப. அரங்காசார்யர், மதிராஸ்]

வேதாந்த தீபிகையில் தர்ம சாஸ்த்ரங்களை எழுதுவானேன் என்று சிலர் நினைக்கக்கூடும். ப்ரும்ம ஞானத்திற்கு லோக அறிவும் ஆத்ம ஞானமும் அங்கமாகும் என்பது வேதாந்த சாஸ்த்ரங்களால் தர்மங்களில் நன்கு விளங்கும். பற்பல விதங்களான விவாஹ விஷயம் முக்கியமாய் கவனிக்கத் தக்கதாகும். நமது தேசத்தில் மாதுலஸுதா பரிணயம் ஸாதாரணமாய் நடந்து வருகிறது. இதற்கு இடம் கொடுத்தவர் வைத்யநாத தீக்ஷிதர். தர்ம சாஸ்த்ரத்தில் அளவற்ற பாண்டித்யமும், தர்மானுஷ்டானத்தில் கபடமற்ற நம்பிக்கையும் வாய்ந்த இந்த வைத்யநாத தீக்ஷிதர் விவாஹ விஷயத்தில் மாத்திரம் மிகவும் ஆக்ரஹத்தைக் காட்டியிருக்கிறார் என்பது நன்கு விளங்குகிறது. இதில் உள்ள ஆக்ஷேப ஸமாதானங்களை பின்வருமாறு கவனிக்கவும். தர்மானுஷ்டானத்திற்கு சுருதி, ஸ்மிருதி, ஆசாரம், அவரவர் இஷ்டம், இந்நான்கையும் ப்ரமாணமாகக் கொள்ளவேணும். வேதம், "மாதுலஸ்யேவ யோஷா" என்ற வாக்யத்தால் இதற்கு இடம் தருகிறது. ஆனால் ஸ்மிருதிகள் இந்த மாதுலஸுதாவிவாஹத்தை மறுக்கின்றன. போதாயநர் வட தேசத்தில் ஐந்து அநாசாரங்கள் நடை பெறுகின்றன வென்றும், தென் தேசத்தில் நடக்கும் ஐந்தில் மாதுல ஸுதா பரிணயம் ஒன்று என்றும், எங்கெந்த தேசத்தில் எதெது வழக்கத்தில் இருக்கிறதோ அந்தந்த தேசத்தில் அந்தந்த நடத்தைகள் ஒப்புக் கொள்ளக் கூடியவை என்றும் வேறு தேசத்தில் செய்தால் தவறு ஆகும் என்றும் சொல்லி, "**मिथ्यैतदिति गौतमः**" என்று கௌதமர் கீழ்ச் சொன்னதை ஒப்புக்கொள்ளவில்லை. அதாவது 'கீழ்க்கண்ட பத்து அநாசாரங்களும் எல்லா தேசங்களுக்கும் ஒவ்வாதவை, மறுக்கப் படவேண்டியவை என்று' சொல்லி இருக்கிறார். வைத்யநாத தீக்ஷிதரும் இந்தப் போதாயந வசநத்தை எடுத்து தனக்கு அநுகூலமாக வ்யாக்யாநம் பண்ணினார். பூர்வ மீமாம்ஸையில் சில க்ரந்த கர்த்தாக்கள் இவ்விஷயத்தை விசாரித்திருக்கிறார்கள். அதையும் எழுதுகிறேன். அதாவது ச்ருதி ப்ரபலமா? ஸ்மிருதி ப்ரபலமா? என்று விசாரம்.

இதில் பொது விதி:-ஸ்மிருதியைக் காட்டிலும் ச்ருதி ப்ரபலம், என்பது; ஆனால் இதற்கு விலக்கு விதி உண்டு. அதாவது ச்ருதியில் இரண்டு விதம் உண்டு. ப்ரத்யக்ஷ ச்ருதி என்றும், அநுமித ச்ருதி என்றும். இங்கு அம்

மான் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ப்ரத்யக்ஷ ச்ருதி இல்லை. ஆனாலும் "மாதுலஸ்யேவ யோஷா" என்று வேறு விஷயத்தில் உபமாநமாக எடுத்த வாக்யத்தைக்கொண்டு அம்மான் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று அநுமாநம் ஏற்படுகிறது. இதற்கு அனுமித ச்ருதி எனப் பெயர். ப்ரத்யக்ஷமாய் காணப்பட்ட ஸ்மிருதி, ப்ரபலமா? அநுமிதச்ருதி ப்ரபலமா என்று விசாரிக்கப் புகுமளவில் அநுமித ச்ருதியை விட, ப்ரத்யக்ஷஸ்மிருதி தான் ப்ரபலம் எனத் தீர்மானிக்கப்படுகிறது. இதற்கு உதாகரணம்—மாதுலஸுதா பரிணயம். இதில் அநுமித ச்ருதிக்கும் ப்ரத்யக்ஷ ஸ்மிருதிக்கும் விரோதம். ஆகையால் கீழ்ச்சொன்ன ந்யாயப்படி ஸ்மிருதியே ப்ரபலமாகிறது. ருதுமதீ விவாஹத்தையும் இந்த ந்யாயந்தான் தடுக்கிறது. வைத்யநாத தீக்ஷிதர் இந்த ந்யாயத்தைக் காட்டாமல் ச்ருதியை மாத்திரம் எடுத்து தனக்கு அநுகூலமாக்கிக் கொண்டார். "**मातुलस्य सुतामूढ्वा नरः पतनमृच्छति**" இது முதலிய பல ஸ்மிருதி வசநங்கள் சந்தேகமற மாதுலஸுதா பரிணயத்தைக் கண்டிக்கின்றன. இதெல்லாம் இருக்கட்டும். நமது பரமாசார்யனான ஸ்ரீவேதாந்ததேசிகன் இவ்விஷயத்தில் எப்படி அபிப்ராயம் கொண்டு இருக்கிறார் என்பதை விசாரிப்போம். ஸ்ரீஸச்சரித்ரரக்ஷையில் பகவந்நிவேதிதோபயோக விதி என்னும் ப்ரகரணத்தைப் பார்த்தால் இவ்விஷயம் நன்கு விளங்கும். அங்கு ருதுமதீ விவாஹத்தையும் மாதுலஸுதா பரிணயத்தையும் சந்தேக மறக் கண்டித்து இருக்கிறார். 'கேரளதேசத்தில் உள்ள ப்ராம்மணர்களுடைய ஆசாரம் நமக்கு ப்ரமாண மன்று. ஏனெனில். அவர் ஸர்வ சாஸ்திரங்களிலும் நிஷேதிக்கப் பட்ட ருதுமதீ விவாஹத்தையும் மாதுல ஸுதா பரிணயத்தையும் இப்போதும் செய்து வருகிறார்கள்' என்று. ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குப் பரமாசார்யனான ஸ்ரீ தேசிகன் கண்டிப்பாய் நிஷேதித்திருக்கிறபோது ஸ்ரீ வைஷ்ணவர்களாவது இந்த வழக்கத்தை முற்றும் ஒழிக்கவேணும்.

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கென்று தனித்து தர்ம சாஸ்த்ரநிபந்தந க்ரந்தங்கள் அநேகம் எழுதிய வைதிகஸார்வபௌமரும் தசநிர்ணயத்தில் மாதுல ஸுதா பரிணயம் செய்வது தவறு என்பதற்கு அநேக ப்ரமாணங்களைக் காட்டி யிருக்கிறார். இதுவும் தவிற—போதாயநர் தென் தேசங்களில் அம்மான் பெண்ணை மணக்கும் வழக்கம் நிகழ்கின்றது என்று சொல்லி யிருப்பதைப் பற்றி சற்று விசாரிப்போம். இப்போது தென் தேசத்தில் வசிக்கும் ப்ராம்மணர்களுக்கு வடமர்கள் என்று பெயர் வழங்குவதுண்டு. பாண்ட்ய தேசத்தில் வசித்துவரும் ஸ்ரீவைஷ்ணவ ப்ராம்மணர்கள் கூட இப்பெயரை தங்களுக்குக் குடிப்பெயராகக் கூறுவதுண்டு. போதாயநர் வசித்திருந்தகாலத்தில் எந்த ப்ராம்மண குடும்பங்கள் தென்

தேசத்தில் வசித்தனவோ, அக்குடும்பங்களே இப்போது தொடர்ந்து வருகின்றன என்று ஒப்புக்கொள்வது அஸாத்யம். ஆகையால் இப்போது நமது தேசத்தில் காணப்படும் ப்ராம்மண குடும்பங்கள் அனைத்தும் வட தேசத்திலிருந்து குடியேறி வந்தவை என்று சொல்லுவதற்கு அநேக ஆதாரங்கள் உண்டு. மேலும் போதாயநர் தென் தேசத்து வழக்கத்தைக் கூறும் வாக்யத்தில் ஜாதியைக் குறிப்பிடாமல் சொல்லியிருக்கிறார். ஆகையால் அவ்வழக்கம் ப்ராம்மண ஜாதியை ஒழித்து மற்ற ஜாதிக்குத் தகும் என்று சொல்லுவது பொருந்தும், ஆர்யர்களான வைச்யர்கள் இப்போதும் மாதுலஸுதா பரிணயத்தை மிகப் பிடிவாதமாக அநுஷ்டித்து வருகிறார்கள். அவர் குடும்பத்திற்கு இவ்வழக்கம் ஒற்றிருக்கிறது என்ற விஷயமும் ஆலோசிக்கத்தக்கது.

தர்மங்களை அநுஷ்டிக்கும் முறையில் மற்றும் ஒரு ரஹஸ்யம் கூறுகிறேன். தர்ம சாஸ்த்ரங்களில் உரைக்கப்படும் தர்மங்கள் அனைத்தும் நமது குடும்பங்கள் செழித்து ஓங்குவதற்கு இன்றியமையாதவை என்பதை மறக்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரியவையான தர்மங்கள் இன்னவை என்பதை அநுபவத்தைக்கொண்டு அறியலாம். இதற்கு சாஸ்திரப் பயிற்சி தேவையில்லை. எந்த தர்மம் குடும்பத்திற்கு நன்மையைத் தருகிறது? எது தீமையை விளைவிக்கிறது? என்பதை சூக்ஷ்மமாய் ஆராய்தல் வேணும். இவ்வாராய்ச்சியும் நமது கொள்கையையே உறுதிப் படுத்துகிறது. அதாவது. நமது அம்மான் பெண்ணை மணப்பது, ஸஹோதரியின் பெண்ணையே மணப்பது (இவ்வாசகத்தை எழுதும்போது கூட எனது மனம் நடுக்கமுற்றது) இப்படிப் பட்ட விவாஹங்கள் கணக் கற்றவையாய் நடந்திருக்கின்றன. இவற்றில் எத்தனை குடும்ப விருத்திக்குக் காரணமாயின, எத்தனை க்ஷீணதிக்குக் காரணம் ஆயின என்பதை தேடிப்பாருங்கள். உங்களுக்கே தெரியவரும். நான் பார்த்தவளவில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு விவாஹங்கள் க்ஷீணதிக்குக் காரணமாயின.

ஒரு பங்கு அப்படியல்லாமல் இருப்பதற்குக் காரணம், இதன் பாப சக்தியை வெல்லக்கூடிய நற்செயல்கள்தான் என்பது நிச்சயம். ஆகையால் நமது ஆஸ்திகர் அனைவரும் தங்கள் தங்கள் குடும்பம் செழித்து ஓங்குவந்தக் கருதி, உடன் பிறந்தாள் பெண்ணை மணப்பது, அம்மான் பெண்ணை மணப்பது என்ற இரண்டு கொடிய வழக்கங்களை நீக்க வேணுமாய் வணங்கி வேண்டுகிறேன். இதில் சாஸ்த்ர விசாரங்கள் மிக்க விரிவாதலால் அவச்யமானால் உரைக்க சித்தமாயிருக்கிறேன். धर्मो रक्षति रक्षितः

ஸ்ரீ:

தீண்டாமையைத் தீர்க்கும் இயக்கம்.

(அம் முறையிலுள்ள முரண்பாடுகள்.)

[வைத்ய ரத்நம், பண்டித எம். தொரைஸ்வாமி ஐயங்கார், மதிராஸ்]

வைதிக மதத்தில் வீண் வெறுப்பு.

வைதிக மதத்தின் வைபவம் நிலைகுலையுமாறு வைரிகள் பலர் தோன்றி விஷமப் பிரசாரம் செய்து நம்மை வைது வருகிறார்கள். வைதிக மதத்தில் வெறி பிடித்தாற்போற் சிலர் வெறுப்பையும், வேறு மதங்களில் வீண் புரளிக்கொள்கைகளைக் காட்டி ஆபாத ஹ்ருத்யமாக விருப்பையும் நம் மக்களிடையே உண்டு பண்ண, நயவஞ்சகர் அநேகர், நண்டையும் ஆட்டிடம் ஆதரவு காட்டிய நரி போல இந்து மதத்திற்கு இன்னலிழைத்து இதர மதங்களை வலுப்படுத்த நாடெங்கும் நாநாவிதமாகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் விதம் விதமான பாரிபாஷிக வாக்கியங்களால் வேதாந்த விஷயங்களையே தம் தம் திறமைகளுக் கேற்ப விளக்கிக் கொண்டு வியாஸங்களை எழுதி வெளியிடுவதால் மாத்திரம் வைதிக ஸம்பிரதாயம் நிரபாயமா யிருக்குமென்று நினைத்து வாளாயிருப்பது விவேகிகளால் விரும்பத் தக்கதல்ல. வைதிக ஸம்பிரதாயத்திற்கு வேறு நாடுகளில் நாட்டமும் பிரசாரமும் இல்லாமலிருப்பதுடன், அதற்குப் பிறப்பிடமான பரதகண்டத்திற் கூட அச் சம்பிரதாயம் ஸமாளித்து நிற்க வியலாத நிலைமை நேர்ந்துவிடுமானால், ஸம்பிரதாய மறிந்த சிலர் மாத்திரம் அதன் சீர்மையைக் கூறிப் புகழ்ந்துகொண் டிருப்பதிற் பயனென்ன?

தீண்டாதார் தீர்மானம்.

இப்பொழுது சில காலமாகத் 'தீண்டாமை விலக்கு' என்னும் விஷயமாய் நாடெங்கும் நடந்துவரும் ஏனைய இயக்கங்களைப் பற்றியும் நான் ஏதும் விரித்துரைக்கவோ ஆக்ஷேபித்து எழுதவோ உத்தேசிக்கவில்லை. ஆனால் ஸமீபத்தில் சில நாட்களுக்கு முன் யுவோலா என்ற (நாஸிக் ஸமீபத்திலுள்ள) ஊரில் கூடிய தீண்டாதார் ஸபை யொன்றில் டாக்டர் அம்பெட்கர் தலைமையில் இந்து மதத்தை வெறுத்து இயற்றிய தீர்மானத்தையும், அதன் பயனாக நாடெங்கும் அதற்கு அநுகூலமாகவும் பிரதிகூலமாகவும் நிகழ்ந்துவரும் கிளர்ச்சியின் தன்மையையும் உற்று நோக்கிய எனக்கு, உத்வேகம் ஒரு பக்கமும், வைதிக மதத்திற்கு விப்லவ ஹேதுவாக விஷயம் நடந்தேறுகையிற் கூட நம்மவர் உதாஸீநமாயிருப்பதைப் பார்த்து உள்ளத்தில் உத்க்லேசம் மற்றொரு பக்கமும் எழவே இந்நிரு

பத்தை எழுதியாவது ஸங்கடத்திற்குச் சாந்தியுண்டு பண்ணிக்கொள்ள நினைத்தேன். "**पुरोत्पीडे तटाकस्य परीवाहः प्रतिक्रिया**" என்று பிரதீகாராந்தரம் தோன்றாமையால், பிரலாபித்தாவது மனப் பிரசாந்தி யுண்டாக்கிக் கொள்ளலாம் என்பது என் கருத்துபோலும் என்று வாசக நேயர்கள் கருதினாலும் கருதுக.

இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர் எனப்படுவோரை உயர்த்தவும், தீண்டாமையை ஒழிக்கவும் இன்னும் பலன் தரக்கூடிய பணி எதையும் செய்யவில்லையாகையால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது தீண்டாதார் இனி இந்து மதத்தை விட்டு விட்டு வேறு மதத்தைக் கைப்பற்ற வேண்டியது தான் என்று அச்சபையில் தீர்மானம் செய்தனர். இதைக் கேட்டதும் இந்துக்களுக்கு அனுகூலமாயிருப்பதாகக் கருதப்படுபவர் அதை ஆக்ஷேபித்தும், முகம்மதியரிலும், கிறிஸ்துவரிலும், பௌத்தரிலும் சிலர்—சுயமரியாதையினர் என்பவர் உட்பட—அதை ஆதரித்தும் கிளர்ச்சி செய்யத்துவக்கி விட்டனர். ஹிந்து மஹாஸபை யெனப்படும் ஸங்கத்தின் அங்கத்தினரும் வேறு சில கூட்டத்தாரும் வானமே இடிந்து விழுந்தாற் போலெண்ணி அம்பெட்கர் அவர்களிடம்—அரசனிடம் அல்லது அஸாதாரணமான அதிகாரியினிடம் செல்வதுபோல்—பேடி காணச் சென்று, இந்து மதத்திலிருந்து ஹரிஜனம் எனப்படுவோரை மதாந்தரத்திற் சேர்த்துவிட முயலவேண்டாமென வேண்டிக்கொள்ள, அவர் ஸிம்ஹாவலோகந ரீதியில், எல்லாச் சக்தியும் தன் பிடியில் அடங்கியிருப்பது போலக் கருதி, விஷயம் ஆலோசிக்கப்படுமென்று ஆக்கிரஹத்துடன் விடையளிப்பதும் ஆக எல்லாம் விவேகிகளுக்கு விந்தையாகவே தோன்றும். மதம் மாறிவிடுவதாகக் கூறும் மாயவார்த்தையை—அச்சமுறுத்தும் அநீதி மொழியைக்—கேட்டு மஹா புருஷர்களென்று நாம் நினைத்திருக்கும் மதனமோஹன மாளவீயப் பெரியார் முதலாகப் பலர் மயங்கி மனந்தடுமாறி அம்பெட்கருக்கு அஸாதாரணச் சக்தியும் அதிகாரமும் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு, அவரை வேண்டிக் கொள்ளவும், தீண்டாமையைத் தீர்க்கவும் பெரு முயற்சி செய்ய ஸங்கல்பித்திருப்பதை நோக்குங்கால், ஸர்வத்ர ஸாவதாந புத்திக்குச் சாவுமணி யடித்துவிட்டாற் போலத் தோன்றுகிறது.

தர்ம சாஸ்திராதிகளைத் தீயிலிடல்.

மாத்ஸர்யம் மேலிட்ட மாந்தரது மனப்போக்கைப் பற்றி நாம் என்னென்று எழுதுவது? மநு ஸ்ம்ருதி முதலான மாபெரும் நூல்கள் சிலவற்றைத் தீண்டாதாரிடையே கிளர்ச்சியைத் தூண்டியவர் சிலர் தம் கூட்டங்களில் தீயிலிட்டெரித்துத் தம் தீய கோபத்தைத் தீர்த்துக்கொண்டனராம். "**विवेकभ्रष्टानां भवति विनिपातः शतमुखः ।**" இரண்டொரு

மநுஸ்ம்ருதி முதலிய நூற் பிரதிகளை எரித்துவிட்டால், ஏனைய பிரதிகளும் மற்றும் பல புராணேதிஹாஸ தர்ம சாஸ்திரக் கிரந்தங்களும் புவனமெங்கும் பாழ்த்தழிந்ததாக இத்தீண்டாதாரின் தீர்மானமா? வீணில் வெறுப்படைந்து பதறிப் பகுத்தறிவு இழந்தவருக்கு உண்மையை உற்றறிய உள்ளம் இடங்கொடுப்பதில்லை. "**मत्सराणां हि नोदेति वस्तुयाथात्म्यचिन्तनम्**" என்று அக்கொள்கையை வாதிபஸிம்ஹன் போன்ற விவேகிகள் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழிற் பண்டைக் காலத்தில் பண்டிதோத்தமர்களால் இயற்றப்பட்டுள்ள பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, திருக்குறள், நீதி வெண்பா, த்ரிகடுகம், நாலடியார் முதலிய நூல்கள் பலவும் மநுஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்திரங்களை ஆதாரமாகக்கொண்டு ஏற்பட்டனவென்னும் உண்மையைத் தமிழ்ப் புலவர்களே தயங்காமல் அங்கீகரித்திருக்கின்றனர். (ஸ்ரீமான்கள் ஸி. இராஜகோபால பிள்ளை, கே. குப்புசாமி முதலியார், பி. ஏ. இவர்கள் நாலடியார்க்கு இயற்றிய முகவுரையைப் பார்க்க.) அதே தர்மங்களையும் நீதி நெறிகளையும் விளக்கும் தமிழ் நூல்கள் நூற்றுக்கணக்கா யிருக்க, வேறு பாஷைகளிலும் அவ்வித தர்ம முறைகளைத் தாங்கியெழுதும் கிரந்தங்கள் விசேஷமாக வெளியா யிருக்க வடமொழி தர்ம சாஸ்திராதிகளை மாத்திரம் நெருப்பிலிட்டு நாசம் செய்யப் புகுந்தது நேர்மையா? வீணில் வேதியரை வெறுக்கும் இக் காலத்தியவர் வடமொழியையும் அவர் பாஷையெனப் பகைத்துப் படத்துச் செய்யும் வெறிச்செயலே யல்லாது வேறல்ல. ஆனால் நெறிதவறி நடக்க நோக்கங் கொண்டவருக்கு நேர்மை யெங்கே? "**क्रूराः किं किं न कुर्वन्ति कर्म धर्मपराङ्मुखाः ?**"

தாழ்ந்தோர் உயர்வை உவப்பவர் வைஷ்ணவர்.

தீண்டாதார் உயர்நிலை அடைவதை வேண்டாமெனக்கூறி விரோதங்காட்டி வேலை செய்யும் வைதிகர் எவருமிலர். ஸகல வைதிகர்களும், அதிலும் வைஷ்ணவர்கள் வரையறையின்றி இஹ-பர சிரேயஸ்ஸுக்களை இறைவனருளால் அடைய உலகத்திலுள்ள உயிர்களனைத்துக்கும் உரிமையுண்டென்கிற கொள்கையை உறுதியாகக் கொண்டவர்கள். "**निरंकुशं हि जीवानां श्रेयस्साधनचिन्तनम्**" என்றபடி ஒவ்வொருவரும் கடைத்தேற வழி தேடுவதற்கு இடையூறாக எவரும் இருக்கவியலார். இடைக்காடர், நக்கீரர், ஔவை, திருவள்ளுவர் முதலாகிய அறிஞர்களை அந்தணர் அஸாதாரண கௌரவங்காட்டிக் கொண்டாடவில்லையா? நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருக்கச்சி நம்பி முதலானோர் தாழ்ந்த வர்ணத்திற் பிறந்தவராயினும் அவர்களது அடக்கத்தையும், அறிவையும், ஆசாரத்தையும் ஆலோசித்து, அவர்களை ஆசார்யர்களாகவும், அவர்கள் முக்தியடைந்த பிறகு அவ்வுத்தமாத்மாக்களைக் கோயில்களில் தைவமாகவும் வைத்து

நாம் பெருமையுடன் பூஜிக்கவில்லையா? இது மாத்திரமா? பகுத்தறிவைப் படைத்து, பகவத் பக்தி செய்து, பரமைகாந்தி பதவியைப் பெற்ற எம்பாடுவான் என்னும் கைசிகன் பஞ்சம குலத்தவராயிருந்தும், அவரது ஆத்மோத்கர்ஷாதிகளைக் கருதி, ஆதிகாலந்தொட்டு ஆர்யோத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் இன்றைக்கும் ஆண்டாண்டு தோறும் அக் கைசிகமுனி முக்தியடைந்த ஏகாதசியை முக்கியமான விரத தினமாகக் கொண்டாடி, அவரது பெயரை நிரந்தரமும் நிகரற்ற ஞாபகச் சின்னமாக நிலைநிறுத்திக் கொண்டாடிவருகிறார்கள். அவ்வேகாதசியை வருஷந்தோறும் வைஷ்ணவர்கள் வைகுண்ட ஏகாதசியினும் விசேஷித்ததாகப் பாராட்டி விரதமனுஷ்டிப்பது உலகறிந்த உண்மை. தாழ்ந்த குலத்தவரின் ஏற்றத்தை இதினும் உயர்வாக உலகத்தில் உள்ளன்புடன் விரும்பும் வகுப்பினர் வைஷ்ணவர்களைத் தவிர்த்து வேறுண்டென்று இப்போதைய கிளர்ச்சிக்காரர் நிரூபிக்க முடியுமா? பரிசுத்தமாயிருந்து, பகவத் பக்தியில் ஈடுபட்டுவந்தால் பிராம்மணன் முதல் பஞ்சமரீறாகப் பிரபத்தியாகிற பிரசஸ்தோபாயத்தைக் கொண்டு அனைவரும் மோக்ஷம் என்னும் நித்யைச்வர்யமீறாகவுள்ள நிச்ரேயஸ்ஸுக்களை யெல்லாம் அடைய அதிகாரிகளாவார்கள் என்று நமது ஸம்பிரதாயம் அவ்வளவு விசாலமும் விளக்கமுமான நோக்கமுள்ள தென்பதை இத்தென்னிந்தியர்களிலேயே பலர் நன்கறியா ரென்றால், தமிழையும் ஸ்ரீவைஷ்ணவ மதத்தையும் சற்று மறியாத வடநாட்டுப் பிரஜைகள் அப் பெருமையை அறிய வகையொன்றுமில்லை. அந்தணர் முதல் அந்திமகுலத்தினர் வரையிலுமுள்ள எந்த ஜாதியினரும் திடசித்தத்துடன் திருமாலிடம் பக்தியைச் செய்தாலும் சரணடைந்தாலும் ஸர்வேச்வரன் அவரை உள்ளன்புடன் ஏற்று மோக்ஷமளிக்கும் ஆற்றலுடையான் என்றும், நம் ஆசார்யர்கள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்கிற குலவேற்றுமைகளைக் கருதாது எப்பக்தர்களையும் ஆர்த்தியுண்டானதும் ஆச்ரிதர்களாக ஏற்று ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் வைஷ்ணவ மதம் விளங்கக் கூறுவதைத் தீண்டாதாரிடம் அபிமானமுள்ளவர் தீர விமர்சிப்பாராக.

> "அந்தணரந்திய ரெல்லையி னின்ற வனைத்துலகும்
> நொந்தவரே முதலாக நடங்கியனன்னியராய்
> வந்தடையும் வகை வண்டக வேந்தி வருந்திய நம்
> அந்த மிலாதியை யன்ப ரறிந்தறி வித்தனரே."
>
> (ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரம்.)

தீண்டாதாரை உயர்த்துவதற்காகக் கருதி உலகெல்லாம் கேட்குமாறு உரத்துக் கூவும் கூட்டத்தாரில் எவரும் இவ்வுபயோக முள்ள உண்மை

ரஹஸ்யங்களை உணர்ந்தாரில்லை. அம்பெட்கர் போன்றவர் ஆழ்ந்தரமான அபிமானத்துடன் அந்திம ஜாதியினரை உயர்த்த ஊக்கங்கொண்டால், நாடெங்கும் ஸஞ்சரித்து வைஷ்ணவ மதாதிகளில் தாழ்ந்த வகுப்பினர் மேலெழுவதற்கு யாதேனும் உபாயங்களும் பிரமாணங்களும் உண்டா என்று உற்றுப் பரிசிலனை செய்து அறிந்து, அதன் பின்பு அவர் இப்போது நினைத்துள்ளவாறே வேறு விதமாகவோ ஒரு முடிவுக்கு வருவதல்லவோ முற்றிலும் முன் யோசனையோடு செய்யும் செயலாகும்? ஆத்திரமும் ஆக்ரோசமும் அடைந்து ஆலோசனையின்றி அதிவிரைவிற் செய்யும் எக்காரியமும், அதிலும் ஒரு பெரும் ஜன ஸமூஹத்தையும் நாநாவித ஜாதிகளடங்கிய நாட்டையும் பாதிக்கும் படியான எம் முயற்சியும் முடிவிற் பெருந் தொல்லைக்கு முகாந்தரமாகும். கல்வியறிவிற் குன்றியவரைக் கூட்டி அவர்கள் மனக்கிளர்ச்சி யடையுமாறு ஆங்கிலம் படித்த அம்பெட்கர் போன்றவர் பேசி ஆடம்பரம் செய்வது அதிக கஷ்டமல்ல. "अनालोचितकार्यस्य वाग्जालं वाग्मिनो वृथा । निमित्तादपराद्धेषोः धानुष्कस्येव वल्गितम्" என்றவாறு அத்தகையவரது ஆத்திரப் பேச்சு, குறி தவறி அம்பெய்து வீணே கழைக் கூத்தாடுபவன் காரியம் போல் கேவலம் கேலிக்கிடமாகவே முடியும்.

ஆதி காலத்தில் தீண்டாக் கவிகளும் அந்தணரும்

உயர்குலத்தோரான பிராம்மணர்கள் உண்மையில் உலக வாழ்க்கையைப் பற்றிய வகையில் இப்பொழுது உயர் நிலைமையில் இல்லை. ஆகிலும் அவர்களைக் கண்டு அஸூயை கொண்டு, அவர்களது தூய்மையிற் பொறாமையுடன் அவர்களைத் தூற்றுவது நீதியல்ல. "[illegible] तद्धि दौर्जन्यलक्षणम्" என்று அத்தகையோரை வெறுத்துக் கூறுகிறார் ஒரு பௌத்த கவி. இக்காலத்திய ஆங்கிலக் கல்வி கற்ற அம்பெட்கர் போன்றவர் இவ்வாறு அந்தணரையும் அவரது மதத்தையும் அநீதியாக அஸூயை மேலிட்டுத் திட்ட, ஆயிரங்காலத்துக்கு முன் அறிவிற் சிறந்து விளங்கிய தெய்வப் புலவரெனப் புகழ்பெற்ற நம் தீண்டாக்குலத்துதித்த மஹான் திருவள்ளுவ நாயனார்,

> "அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்
> பிறவாழி நீந்தலரிது" என்றும்,

> "இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
> செப்பமு நாணு மொருங்கு" என்றும்

பொன்னே போன்ற இப்பாசுரங்களால் கடல் போன்ற அறநெறியுணர்ந்த அந்தணர்களின் அடிபணியும் ஆற்றலிருந்தாலன்றி ஸம்ஸாரக் கடலைக் கடப்பது ஆகாத காரியமென்றும், உயர் குடிப்பிறந்தவரிடமன்றி மற்றவரி

டம் நடு நிலைமையான நீதியும், பழிக்கஞ்சும் பான்மையும் இயற்கையில் ஒன்று சேர்ந்திருப்பதில்லை யென்றும் மொழிந்திருக்கிறார். தம் போன்ற அரும் பெரும் அறிவாளியைத் தீண்டாதவராகக் கருதி வந்த அந்தணர் குலத்தவரை அறநெறியில் அளவற்ற அபிமானங்கொண்ட இம்மஹான் எவ்வளவு ஏற்றமாகப் போற்றிப் பாராட்டி யிருக்கிறார் என்றும், அவர் அவ்வாறு பாராட்டியதற்குப் பிராம்மண்யத்திற்குச் சுயமாய் அமைந்துள்ள அந்யாத்ருசமான பிரபாவமே யன்றி வேறல்ல என்றும் விமர்சகர்களுக்கு விளங்காமலிராது. விவேகமும் வைதுஷ்யமும் படைத்த நம் நாயனார் அவ்விதம் உயர்குலத்தோரையும், வர்ணாச்ரம முறைகளையும் உள்ளங்கசிய உயர்வாகப் பாராட்டி உண்மையான விச்வாஸத்தை அவர்பால் விளக்கியதால் தான், களங்கமற்ற அக்கவி அந்தணரினும் குணத்திற் குறையாதவராக அந்தணருட்பட அனைவராலும் போற்றிப் புகழப்படுகிறார். **पूज्यत्वं नाम किन्नु स्यात् पूज्यपूजाव्यतिक्रमे ?**" 'ஸ்வர்க்கம் தீண்டுமாறுயர்ந்த மேற்குலத்திற் பிறந்து, பல நூற் கலைகளைக் கற்றவர்க்கே ஆளுந்தன்மையும், இயற்கைப் பெருந்தன்மையும், நல்லொழுக்கமும் சுயமேற்படுமே யன்றி, கீழ் மக்களுக்கு அக்குணங்கள் அமைவது அரிது' என்று

சான்றாண்மை சாயலொழுக்க மிவை மூன்றும்
வான்றோய் குடிப் பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

என்கிற செய்யுளால் நீதி நெறியில் ஸம த்ருஷ்டியைப் பெற்றிருந்த சமண முனிவர்களியற்றிய நாலடியார் நிஷ்பக்ஷபாதமாகத் திருக்குறளைப் போலவே ஜாதி த்வேஷம் பாராட்டாமற் பாடியிருக்கிறது.

தீண்டாதார்பால் பண்டைக் காலத்தியவரின் கொள்கை.

அந்தணர் குலத்தை ஆதராதிசயம் காட்டி கல்வியிற்றேர்ந்த அவர்ணிகள் கூடப் போற்றியிருப்பது மல்லாமல், உயர் குலத்தோரான விப்ரர்கள்—முக்கியமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் உள்ளும் புறமும் தூய்மையினால் உயர் குணம் பெற்று வாழ்ந்து அத்தீண்டாதாரை மேற் குலத்தாருக்குற்ற மேன்மையுடையவராகக் கருதி ஆசார்ய கோஷ்டியிலும் சேர்த்துக் கொண்டாடும் ஆற்றலுடையவராயிருந்தனர் என்பதை விளங்க விவரித்திருக்கிறேன். ஆனால் அநாதி காலந்தொட்டு அநுஷ்டானத்திலும், கிரந்தங்களிலும் இருந்து வரும் ஆதாரங்களையும் ஆசாரங்களையும் ஆய்ந்தோய்ந்து பார்த்தால் இப்பொழுது சில நூற்றாண்டுகளாகப் பிராம்மணர்கள் ஜகந்ய ஜாதியிர்பால் பாராட்டிவந்த விதி நியமங்களை வற்புறுத்தாது மிகத் தளர்த்தி, ஆசார-வ்யவஹாரங்களிற் சிறிது சீர்மையடைந்தவர்களைப் பொது ஜனங்களிடையே தாராளமாகப் பழகி வாழப் பெரிதும் அநுகூலமான வகையில்

நடந்து வந்திருக்கின்றனர் எனத் தெரியவரும். நான்கு வர்ணத்தாரைத் தவிர்த்து மற்ற எல்லாக் குலத்தவரும் ஸங்கீர்ண ஜாதியினரான பெற்றோர்க்குப் பிறந்தவராகையால், அக்கலப்பு ஜாதியினரைப் பரிசுத்த ஜாதியினரான ஸவர்ணிகளுடன் தீண்டிப் பழகாதபடி வெவ்வேறு சேரிகளில் தனித்தனியே குடியிருக்க விதிகள் ஏற்படுத்துவது அக்காலத்திய ஜன ஸமூஹ நன்மையை நாடியவருக்கு இன்றியமையாக் கடமையாயிருந்தது. அம்பட்டன், கரணன் (கிராம கர்ணம் எனப்படுவான்), மாகதன் (ஸ்துதி பாடகன்), க்ஷத்தா (தச்சன்), ஸூதன், சண்டாளன் முதலியவர்கள் தீண்டாதாரிலும் நிக்ருஷ்டமானவர் என்றும், "**आचण्डालात्तु संकीर्णा अम्बष्ठ-करणादयः**" என்று ஜைனரான அமரஸிம்ஹனே அவ்வகுப்பினரையெல்லாம் கலந்து கட்டித் தோன்றிய ஸங்கீர்ண ஜாதியினரென்றும் குல குணங்கள்- வ்ருத்திகள் முதலிய நிலைமைகளைக் கொண்டு நிர்ணயித்து வகுத்துக் கூறியிருந்தும், கரணர் முதலிய மிகக் கீழ் ஜாதியினர் கிராமங்களில் ஜகந்ய ஜாதியினராகக் கருதாதவாறு அவர்களது முன்னேற்றத்தை அந்தணர் முதலானோர் ஆதரித்து வந்திருப்பது அனுபவத்திற் பார்க்கக் கூடிய விஷயம்.

மேனாட்டு நாகரிகத்தில் தீண்டாமை.

அவ்வளவு பண்டைக்கால முதல் ஏற்பட்டு வழக்கத்தில் வந்துள்ள தீண்டாமையை இந்துக்கள் சில அசுத்த வகுப்பினரிடம் பாராட்டுவதற்கு வெகு நியாயமான காரணங்கள் அநேகம் நாம் உதாஹரித்திருப்பதுடன், இன்னும் பல நியாயங்களை விவேகிகள் அங்கீகரிக்குமாரு எடுத்துக் கூறவும் முடியும். ஆனால் இக்காலத்தில் நாம் நம் கண்ணெதிரில் நாகரிகத்தில் மேம்பட்டவராக மிக மிகப் புகழப்படும் மேனாட்டார் இந்தியர்களையும், தம்மினும் நிறத்தில் மாறுபட்ட மானிட ஜாதியினரையும் மானக் கேடாக நடத்தும் ரீதியைப்பற்றி அம்பெட்கர் போன்ற அந்தணரைத் திட்டும் வகுப்பினர் என்ன ஸமாதாநம் கூறுகின்றனர் என்று நாம் கேட்கிறோம். லண்டன் நகரத்திலுள்ள முக்கியமானதோர் ஏரியில் ஆங்கிலேயரைத் தவிர வேறு ஜாதியினர் இறங்கிக் குளிக்கக் கூடாதென்று செய்திருந்த நிர்ப்பந்தத்தைப்பற்றி இந்திய மாணாக்கர் பலர் இந்தியா மந்த்ரியினிடம் முறையிட்டதைப்பற்றி மும்முரமாகச் சில நாட்களுக்கு முன் இந்தியப் பத்திரிகைகள் வருந்தியெழுதியிருந்தும், இந்தியருக்குள் இருந்துவரும் தீண்டாமையைத் தூற்றிப் பேசிவருபவர் எவரும் ஏதும் பேசாது மௌனமா யிருந்ததேன்? நேடால், கெனியா முதலிய நாடுகளிலுள்ள காட்டுப் பிரதேசங்களில் நெற்றி நீர் வழிந்தோட தம் நாடு விட்டுச் சென்றுழைத்து அவற்றை

அருஞ்சோலைகளாகவும் அழகு பொருந்திய நகரங்களாகவும் சீர்திருத்திச் செம்மைப்படுத்திய நம் இந்திய மக்களையே அவர்களுடைய பரிச்ரமத்தால் உயர்வுபெற்ற மேனுட்டார்கள் சிறந்த பிரதேசங்களில் தம்முடன் குடியிருக்க யோக்யதை யற்றவராகக் கூறி, தமதிஷ்டப்படி சட்ட திட்டங்களை இயற்றிக்கொண்டு அடிமைகளைப் போலவும் ஸொத்து சுதந்திரங்களுடன் வாழ உரிமையற்ற உபயோகமிலாப் பிராணிகளைப் போலவும் நடத்துவதைப்பற்றி நம் தீண்டாதார் கூறும் நியாயமென்ன? ஆஸ்திரேலியாவில் செழித்துச் சீர்மையாயுள்ள ஸகல பூபாகங்களிலும் ஐரோப்பியரைத் தவிர்த்து ஆசியா கண்டத்தினரான வெண்ணிறமற்ற வேறு எஜ்ஜாதியினரும் குடியேற உரிமை யில்லை யென்றும் கூறப்படுகிறது. இஃதனைத்தும் தீண்டாமை யென்றும் தீமையல்லவோ? பம்பாயில் பைகுலா கிளப் என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. இந்த கிளப்புக்கு இராஜப் பிரதிநிதி வில்லிங்டன் பிரபு ஒரு விருந்தில் கலந்துகொள்ள, தம் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பு வரவேண்டுமென்று அழைக்கப்பட்டிருக்கிறாராம். ஸர் சிமன்லால் செதல்வாட் அவர்கள் மேற்படி கிளப்பு இந்தியர்களைத் தீண்டாதாராகப் பாவித்து, எந்த இந்தியரையும் எந்த நிகழ்ச்சிக்கும் அதில் வர இடங்கொடுப்பதில்லை யென்றும், இந்தியரின் நாட்டிலேயே ஐரோப்பிய ஸங்கங்களின் வாயிலை எட்டிப் பார்க்கவும் இந்தியருக்கு உரிமையில்லாமல் செய்யப்பட்டிருப்பது விந்தையா யிருக்கிறதென்றும் முறையிட்டு இராஜப் பிரதிநிதிக்கு நீண்டதோர் கடிதம் எழுதியிருக்கிறாராம். ஆயினும் ஆங்கிலேயரது கொள்கையையும், செய்கையையும், கட்டுப் பாட்டையும், ஆதிக்யத்தையும் அணுவளவும் அசைக்க இச்சீர்திருத்தக்காரர் எவராலும் ஆகாதெனக் கூறவும் வேண்டுமோ? இந்தியர்களுடைய ஊழியத்தைக் கொண்டு உஜ்ஜீவித்தவாறு, அவர்களுடைய நாட்டிலே ஊன்றி நிற்க உரிமைகளையும் பெற்று அவர்களையே இழிந்தவராகப் பொதுப்படக் கருதும் ஆங்கிலேயர்களை விடவா வேதியர்கள் தீண்டாமையை அதிகமாக ஆதரிக்கிறார்கள்? ஒருக்காலுமில்லை. ஆரோக்கியத்திற்கும், ஆத்ம சுத்திக்கும், ஆர்யர்கள் உவந்த ஆசாரத்திற்கும் வேண்டி பாரிசுத்யமும் பாரமார்த்திக குணமும் அமைந்திருந்தால் அவர்கள் தீண்டா வகுப்பினரைச் சேர்ந்திருந்தாலும் கிரமமாக உயர் ஜாதியினருடன் கலந்துப் பழகுமாறு உடையவர் முதலான நம் பரமாசார்யர்கள் நமக்கு அவகாசமளித்திருப்பது அனைவரும் அறிந்த விஷயம்.

பஞ்சமர் பெயர் மாற்றலும் மதமாற்றலும்.

அஃதனைத்தும் இருக்கட்டும். தீண்டாதார் தம் தீயகுணங்களையும் பரம ஹேயமான பழக்க வழக்கங்களையும் பரிஹரித்துக்கொண்டு உயர்

நிலைமை யடைய முயலாது, இந்து மதத்தை இகழ்ந்து விட்டு வேறு மதம் மாறத் தீர்மானிப்பது அவர்கள் மேன்மை யடைய உபயோகப்படுமா என்றும் ஊன்றிப் பார்க்கவேண்டாமா? உத்தேசித்துத் தழுவு முபாயம் அநபாயமா யிருந்தாலல்லவோ கோரிய காரியம் கைகூடும்? “पावके न हि पातः स्यादातपक्लेशशान्तये” அதாவது வெயிலாலான வேட்கையைத் தீர்த்துக்கொள்ள தீயிற் பாய்வது பகுத்தறிவாகுமா? கிறிஸ்தவர்களாகவோ வேறு மதத்தினராகவோ மாறினவுடனே மாதங்கர்கள் அல்லது பஞ்சமர்கள் பரிசுத்தர்களாக ஆய்விட்டதாகக் கருதுவாருமில்லை; அவர்களை அந்த க்ஷணமே உயர் நிலைமையிலுள்ள கிறிஸ்தவர்கள் அல்லது வேறு மதத்தினர் உள்ளே அழைத்து உணவுண்ணவும் உறவினராகக் கூடிக் குலாவவும் எவ்வேற்றுமையுமின்றி ஏற்றுக்கொண்டு விடுவார்களென்று எண்ணி அவ்விதம் செய்யத் துணிவது ஏமாற்றமாகவும் முடியும். அவர்ணிகளானத் தீண்டாதோர்க்குப் பறையடிப்பது பண்டைக்கால முதலேற்பட்ட பணியாயிருந்ததால் அவரைப் பறையர் என்று அவனைவம் அழைத்தனர். பிறகு சதுர்வர்ணத்தினரைச் சார்ந்தவரல்லாத வெளிப்பட்ட இனத்தினரென்பதைக் கருதி பஞ்சமர் என்றும் பல்லாயிரங்காலமாக அழைத்துப் பழக்கமாய் விட்டது. சண்டாளர் என்கிற ஆதிகாலப் பெயரைக் கூறாது பறையர் அல்லது பஞ்சமர் என்று அழைப்பதும் அவ்வினத்தினரிற் சிலருக்கு இழிவாகத் தோன்றியதால், சிறிது காலமாக அவர்களை ஆதி திராவிடர்களென்றும், ஆதி ஆந்திரர்களென்றும், ஆதி கர்ணுடகர்களென்றும் அழைக்கவேண்டு மென்று அதிகாரவர்க்கத்தார் உட்பட அநேகர் வற்புறுத்தினர். அவ்விதமாகவும் அவர்களை அழைத்தாய் விட்டது. அதன் பிறகு ஸமீபகாலந்தொட்டு வழக்கத்திலும் நூல்களிலும் வழங்காத நூதனமான ஹரிஜனம் என்னும் பெயரால் இவர்களை அழைக்கவேண்டுமென்று காந்திஜி கட்டளையிட்டதன் பேரில்—நூற்றுக் கணக்கான தீண்டாதார் அதை ஆக்ஷேபித்தும்—இந்த நூதனப் பெயராலும் பத்திரிகைகளும் பிறரும் அவர்களை அழைத்து வருகிறார்கள். இப்புதிய புதிய பெயர் மாற்றம் எதுவும் அவ்வினத்தாரின் ஏற்றத்திற்கு ஏதுவாகவில்லை. பெயர் மாற்றலாற் பயனில்லை யென்றறிந்து, நம் மாதங்க ஜாதி மக்களை மத மாறுதலுக்குத் தூண்டி அவர்களை மேன்மையுறச் செய்யலாமென மனப்பால் குடிக்க முன் வந்திருப்பவரை அம்முயற்சியிலிருந்து தாமே மனமொடிந்து அனுதாபத்துடன் வீழ்ந்து விடுமாறு விட்டு விடவேண்டுமே யன்றி, அது வீண் முயற்சி யென்று கூறி விவேகத்தை விளக்கி அவர்களை விழிக்கச் செய்வது அநுபவ ஸாத்யமானதல்ல. “न ह्यत्र रोचते न्याय्य मीर्ष्या-दूषितचेतसे” என்றவாறு அஸூயையினால் உள்ளம் அழுக்கடைந்திருக்கையில் அரிய நீதிச்சொல் எதுவும் சுவைக்காது. நமக்குக் கிறிஸ்தவர்

முதலிய மற்ற மதத்தினருடன் பிரக்ருத போராட்டம் ஏற்படவில்லை. அப்பிற மதத்தினர் வைதிக மதங்களுக்கு எதிரிகளான போதிலும், அம்பெட்கர் முதலிய அகவைரிகளை அனுகூலமாக்கிக்கொள்ள வகையில்லாமலிருக்கிறோம். அவர்களை அனுகூலமித்திரர்களாக்குவதும் ஆகாத காரியம். “उपकर्त्रारिणा सन्धिर्न मित्रेणापकारिणा । उपकारापकारौ हि लक्ष्यं लक्षणमेतयोः” என்று மிகக் கேடு செய்யும் மித்திரனோடு தோழமை பேசுவது தொல்லையெனக் கூறுகிறார் மாக கவி.

மத மாறுதல் தீண்டாமைக்கு மருந்தல்ல.

காந்திஜியின் கொள்கையைக் கண்ணெனக் கருதும் கேலப்பன் போன்றவர் கூட அம்பெட்கருடைய அஸம்பாவிதமான அபிப்பிராயமும் தீர்மானமும் தீண்டாதார்க்குத் தீமையையே இன்னும் பெருமிதமாக விளைவிக்குமென்றும், கிறிஸ்தவ-முகம்மதிய மதங்களுக்கு ஆத்திரப்பட்டு மாறிய அநேகம் தீண்டா வகுப்புக் குடும்பங்கள் கேரளத்திலும் வேறிடங்களிலும் தாம் தஞ்சமடைந்த மதத்தினரோடு முற்றிலும் ஒன்றுபட்டு வாழ வகையின்றி, வேறு சேரிகளிலேயே தனித்து வாழ வேண்டியிருப்பதுடன், அவர்களுக்கு மாதா கோவில் முதலியனவும் மற்றொரு புறமாகத் தம் தம் சேரிகளுக்கருகிலேயே தனியாகக் கட்டித் தொழவேண்டியிருப்பதால், அவ்விதம் மதமாறியவர் நிலைமை இன்னும் துன்பமாய் முடிந்ததென்றும், ஆகவே அம்பெட்கர் அம் முயற்சியைக் கைவிட்டு விடுவதே கீழ் ஜாதியினரைக் கை கொடுத்துயர்த்துவது போலாகுமென்றும் உரைத்துக் கடிதமெழுதி அம்பெருட்கக்கு அனுப்பியிருப்பதாகப் பத்திரிகைகளிற் படித்ததும், ஒருவன் தான் தொழும் தைவத்தை விட்டுவிட்டு மற்றொரு தைவத்தை ஆச்ரயித்தால் அவன் அவ்விரு தைவங்களாலும் கைவிடப்பட்டுப் போவதுடன், கடும் பாவத்திற்கும் ஆளாகின்றான்— “अतियजेत निजां यदि देवताम्……उभयतश्च्यवते जुषतेऽप्यघम्” என்கிற நிகமாந்த தேசிகனுடைய நிகரற்ற நீதிமொழி நினைவுக்கு வந்தது. ஆகையால் அம்பெட்கர் முதலானோர் அங்கீகரித்தாலும் அறவே எதிர்த்தாலும், மதமாறுதலானது தீண்டாமை முதலிய தீமைகளுக்குப் பரிஹாரமாகாது.

தாழ்ந்தோர் உயரும் உபாயம்.

மாதங்கர் முதலிய ஜாதியினரும் மானிடப் பிறப்பினர் என்பதைக் கருதி, அவர்கள் மேம்பாடடையும் உபாயங்களை மேற் குலத்தினரனைவரும் உள்ளன்புடன் விளக்கிக் காரியத்திலும் காட்ட ஆற்றலுடையோரென்பதை அனைவருமறியச் செய்யவேண்டும். ஆனால் பரிசுத்தமான பிராம்மணர்கள் அழுக்கடைந்த இழி குலத்தாருடன் உடனே கூடிக் கலந்து உண்டு

உறவாடித் தம்மையும் அபரிசுத்தர்களாக ஆக்கிக்கொள்வதை ஆதரிக்கும் கொள்கை எதையும் நாம் அணுவளவும் அங்கீகரியோம். “स्त्रीस्वभावा हि दुस्सहा” என்று பெண்மக்களைப் பெரிதும் கௌரவிக்கும் இந்துக்கள் அம்மாதர்களைக் கூட மாதவிடாய் காலங்களில் தீண்டாதவரெனத் தீர்மானித்து மூன்று நாட்கள் முற்றிலும் அகத்திற்கப்புறம் விலக்கிவைக்கும் விதிகளை இயற்றி, இன்றைக்கும் அனுஷ்டானத்தில் அதை மாதரின் மனமொப்ப நிறைவேற்றி வருகின்றனர். தீண்டாதார் எனப்படுவோர் உள்ளும் புறமும் சுத்தமாயிருக்கவும், உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் நிர்மலமாயிருக்கவும், தாம் சேர்ந்துள்ள சேரியைப் பொதுவாகவும் வஸிக்கும் வீட்டை முக்கியமாகவும் கூடியவரையிற் கச்மலங்களைக் கழித்துச் செம்மையாகச் சீர்திருத்தியும் வைத்துக்கொள்ள அவர்களுக்குக் கற்பித்து கிரமமாக அவர்களது நிலைமையை உயர்த்தினால், உயர் குலத்தோர் அவர்களுடன் அருவருப்பின்றி கூடிப்பழகவும், தீண்டாமை தானே தீர மறையவும் இயற்கையிலேயே மனிதர் இசைவர். இதற்கு மாறாக வேறெது செய்யினும் வீணில் தீங்காய் முடியும்.

“பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.” (திருக்குறள்.)

ஸர் ஜான் உட்ராவ் [Sir John Woodroffe] என்பவரின் மரணம்

சென்ற ஜனவரி மீ 17-உ இந்த மஹான் மரணமடைந்து விட்டதாக நாம் கேள்வியுற்றோம். இவர் வேறொரு தேசத்தில் மதாந்தரத்தைத் தழுவியிருந்த தாய் தந்தையர்களுக்குப் பிறந்திருந்தும், இவர், நம்முடைய சாஸ்த்ரங்களிலும் ஸம்ப்ரதாயங்களிலும் மிக்க ச்ரத்தை வாய்ந்தவராக இருந்தார். ஆர்தர் அவ்லான் (Arthur Avalon) என்னும் கை யொப்பத்துடன் இவர் எழுதி வந்த வ்யாஸங்களை இங்க்லீஷ் ஜ்ஞானம் பெற்ற எல்லா ஆஸ்திகர்களும் படித்திருக்கலாம். பஹு காலமாக அநேக ஜனங்களுக்குத் தவறுதலான அபிப்ராயத்துக்குப் பாத்ரமாயிருந்த நம்முடைய தந்த்ர சாஸ்த்ரத்தை இவர் நன்றாகப் படித்து, அதன் ரஹஸ்யத்தை உள்ளபடி ஜகத்திற்கு க்ரந்த ரூபமாக வெளியிட்டிருக்கிறார். இது இவர் நமது மதத்திற்குச் செய்த உபகாரங்களுள் மிக ப்ரதாநமானது. நமது மதத்தைப் பற்றிப் பரிஹஸித்துப் பேசினவர்க்கெல்லாம் சரியான ஸமாதாநம் கூறி பல புஸ்தகங்களையும் இவர் எழுதி இருக்கிறார். இப்படி இரண்டொரு மஹான்கள் இன்னுமும் இந்த ஜகத்தில் காணப்படுகிறார்கள் என்பது நமக்கு மிக்க ஆச்வாஸத்தை ஜநிப்பிக்கின்றது. சற்றேறக்குறைய 17, 18 வர்ஷகாலம் இவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜ் பதவியை அலங்கரித்துவிட்டுப் பிறகு நிவ்ருத்தி மார்க்கத்தைக் கைப்பற்றியிருந்தார்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் ராமாயணமும் ஆச்ரய ப்ராதான்யமும்.

(ஸ்ரீ. உப. டி. சுந்தராச்சார்யர், வக்கீல், சீர்காழி)

ஸ்ரீமத் ராமாயணத்தை ஸ்தூலமாக நோக்கும் போது, அதற்கும் ஸ்ரீ பாகவதம் போன்ற கிரந்தங்களுக்கும் ஓர் முக்யமான அம்சத்தில் வ்யத்யாஸ மிருப்பதாய் தோன்றக் கூடியது. அதாவது, ஸ்ரீ பாகவதாதிகள் ஆச்ரய ப்ராதான்யத்தை உணர்த்துவதாயும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயோ **रामादिवत् वर्तितव्यम् न रावणादिवत्** என்று ஆசார ப்ராதான்யம் அமையப் பெற்றிருப்பதாயும் காணப்படுவதே யாகும். ஆனால் அந்த வ்யத்யாஸம் உண்மையில் உள்ளதுதானு வென்பதை இங்கு ஸங்கிரஹித்து விசாரிப்போம்.

முதலில் ஸ்ரீ பாகவதத்தை எடுத்துக்கொள்வோம்: புராணங்கள் பொதுவாய் பஞ்சலக்ஷணங்கள் என்று கூறப்பட்டாலும், ஸ்ரீ பாகவதம் பத்து லக்ஷணங்கள் அடங்கிய மஹா புராண மென்பதும், அந்த லக்ஷணங்களில் 'ஸர்க்காதி' 'முக்தி' பர்யந்தமுள்ள ஒன்பது லக்ஷணங்களும், பத்தாவது லக்ஷணமான 'ஆச்ரயம்' என்பதைத் தெளிவுற உபதேசிப்பதற்கே துணைக்கருவிகளென்பதும், **दशमे दशमं प्रोक्तं** என்று, அந்த ஆச்ரய மென்பது அதில் பத்தாவது ஸ்கந்தத்தில் விசேஷிக்கப்பட்டதான ஸ்ரீ க்ருஷ்ணன் என்னும் தத்வமே ஆகுமென்பதும், 'ஆசாரம்' இவ்வாச்ரயத்திற்கு எந்த அளவுக்கு அங்க மாகுமோ அந்த அளவுக்குத்தான் உபாதேயமாகு மென்பதும் ஆசாரத்திற்கு ஆச்ரயாதிரிக்தமான ஸத்தை ஒன்றும் கிடையா தென்பதுமே ஸ்ரீ பாகவதத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ஸார ஸர்வஸ்வமாகும். அதற்குப் ப்ரமாண வாக்யங்களாக அடியில் கண்ட ச்லோகங்களை உதாஹரிக்கலாம்:

1. **धर्मः स्वनुष्ठितः पुंसां विष्वक्सेनकथासु यः ।**
   नोत्पादयेद्यदि रतिं श्रम एव हि केवलम् ॥
2. **प्रायश्चित्तानि चीर्णानि नारायणपराङ्मुखैः ।**
   न निष्पुनन्ति राजेन्द्र सुराभाण्डमिवापगाः ॥
3. **त्यक्त्वा स्वधर्मं चरणाम्बुजं हरेर्भजन्नपक्वो निपतेत् क्वचिद्यदि ।**
   अत्र क्वाऽभद्रमभूदमुष्य किं को वार्थ आप्तोऽभजतां स्वधर्मतः ॥

4. **किरातहूणान्ध्रपुलिन्दपुल्कसा आभीरकङ्का यवनाः खसादयः ।**
   येऽन्ये च पापा यदुपाश्रयाश्रयाः शुध्यन्ति तस्मै प्रभविष्णवे नमः ॥

இந்தப்படி ஆச்ரயப்ராதான்யபரமான ஸ்ரீபாகவதமதமானது, ஸ்ரீ பகவத் கீதையின் சரமச்லோகார்த்தம் ஸ்ரீ ஸஹஸ்ரநாம அத்யாய ஸாரம் இவை போன்றதை முற்றிலும் அநுஸரித்திருப்பது ஸுஸ்பஷ்டமாய் இருப்பது பற்றி அது இங்கு விஸ்தரிக்கப்படவேண்டியதில்லை. ஆகையால் நாம் எடுத்துக்கொண்ட விஷயமான ஸ்ரீமத் ராமாயணார்த்தத்தையே இனி இங்கு பிரஸ்தாவிப்போம்.

ஸ்ரீமத் ராமாயணகவியான ஸ்ரீ வால்மீகிமஹரிஷியின் வதனாரவிந்தத்திலிருந்து திருவவதாரம் செய்த '**मानिषाद**' என்னும் முதல் சுலோகமே, பிரதிஷ்டை யென்பது ஹிம்ஸா த்யாகாதி ஆசாரைக ஸாத்யமெனப் பொருள் படக்கூடியதாய் இருப்பதால், அந்த ப்ராதான்யத்தை முன்னிட்டுக் கொண்டு தான், அவ்வாதி காவ்யம் பிரவிருத்திக்கப்பெற்றதென கருதப் படுவது ஸகஜமே யாகும். இது காரணம் பற்றியே சில வ்யாக்யாதாக்கள் **मानिषाद** என ஒரே ஸமஸ்தபதமாகச் சேர்த்து ஆச்ரயத்திற்கு மங்களாசாஸனமாக இந்த சுலோகத்திற்கு அர்த்தம் சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் அது அத்யந்தம் க்லிஷ்ட கல்பனை. அப்படி அர்த்தம் சொல்பவர்கள் க்ரௌஞ்ச என்பதற்கு அரக்கரென பொருள் கூறி **क्रौञ्चमिथुनात्** என்பது ராவண மண்டோதரிகளை குறிப்பிடுகிறது என்பார்கள். ஆனால் **क्रौञ्चमिथुनात्** என்பது ஆதி பாடமா என்பதே ஸந்தேஹாஸ்பதம். பாத்ம புராணத்தில் **यत् क्रौञ्चपक्षिणोरेकं** என்னும் பாடம் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. ஆகையால் நாம் இந்த இடத்தில் விமர்சனீயாம்சமாகக் கொள்ளவேண்டியது இந்த ச்லோகம் வாச்யப் பிரதானமா, அல்லது வ்யங்கியப் பிரதானமா என்பதே தான். கேவலம் வாச்ய ப்ரதானமாய் இருக்குமாயின் ஆசார ப்ராதான்யத்தை குறிப்பிடுகிற தென்பது ஒருவாறு உபபன்னமாகும். இது ஆதிகவியின் ஆதி ச்லோகமாய் இருத்தலால், வாச்யாதிசாயியான வ்யங்கிய வைபவத்தை யுடையதாய் வ்யாக்யானம் செய்யப்படுவது தான் மிகவும் பொருத்த முள்ளது. **शोकार्तस्य प्रवृत्तो मे श्लोको भवतु नान्यथा** என்று ஸ்ரீ வால்மீகி பகவான் சொன்னதாலேயே இந்த ச்லோகம் சோகரஸ ப்ரதானமான உத்தம காவ்யமே யன்றி கேவலம் விதி நிஷேதாத்மகமான சாஸ்திர ப்ரக்ரியையைப் பின் பற்றிய தாகாது. **निषादविद्धाण्डजदर्शनोत्थः श्लोकत्वमापद्यत यस्य शोकः ।** என்று ஸ்ரீ காளி தாஸரும்,

काव्यस्यात्मा स एवार्थस्तथा चादिकवेः पुरा ।
क्रौञ्चद्वन्द्ववियोगोत्थः शोकः श्लोकत्वमागतः ॥

என்று ஸ்ரீ ஆனந்தவர்த்தனரும் இந்த ச்லோகம் வ்யங்கிய ப்ராதான்யம் பெற்றிருப்பதை நன்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதில் வ்யங்கியமாய் உள்ள. சோகம், எது பற்றி ஏற்பட்ட தெனில், கேவலம் க்ரௌஞ்ச க்ரௌஞ்சிகளின் ஆபன்ன தசையைப் பொருத்து மட்டில் உண்டான தெனக் கொள்வது உசிதமாகாது. ஆச்ரய ஹைன்யத்தால் அகில ஜகத்தும் படும் துயரத்தையே அது அடிப்படையாகக் கொண்டிருக்கிற தென்பது தான் பொருத்தமாகும். இதற்குப் பூர்வ வ்ருத்தமாக ஸ்ரீ வால்மீகி-நாரத ஸம்வாதம் சொல்லப் பட்டதும் இதற்கு அடுத்ததாக ப்ரும்மா ப்ரத்யக்ஷமாகி ஸ்ரீ ராம கதையைச் சொல்லும் பொருட்டே **मा निषाद** என்னும் ச்லோக வடிவம் பூண்டு ஸ்ரீ வால்மீகியிடம் ஸாக்ஷாத் ஸரஸ்வதி ப்ரஸன்ன மானாள் என்று சொன்னதாகக் கூறப்பட்டிருப்பதும் அந்த ச்லோகத்தினுட் புகுந்து மறைந்து கிடக்கும் ஆச்ரய ஸம்பத்தியை த்யோதிப்பிக்கின்றன. ஸ்ரீ வால்மீகி-நாரத ஸம்வாதத்தில் **कोन्वस्मिन् सांप्रतं लोके गुणवान्** என்பதால் இந்த லோகம் எக்காலத்திலும் ச்ரேயஸ்ஸைப் பெறுவதற்கு **निखिलहेयप्रत्यनीकानन्तकल्याणगुणैकतानः** என்று நிர்தேசிக்கப் பெற்ற ஓர் ஆச்ரயம் ஸாதனமாகுமே தவிர, அதன் அவலம்பத்தைப் பெருத ஆசாரம் எதுவும் உதவி புரியாதென உபதிஷ்டமாகிறது. இதற்கிணங்கவே ப்ரதி காண்டங்களிலேயும் ஆச்ரயத்துக்கே ப்ராதான்யம் இருப்பதும் அதை அவலம்பித்து இருப்பதாலேயே **यथैव श्लाघ्यते गङ्गा पादेन परमेष्ठिनः ।** என்னும் ந்யாயப்படி ஆசாரத்திற்கு ஆதிக்ய மேற்படுகிற தென்பதும் த்வனிதமாகிறது.

இம்மாதிரியாக ஸ்ரீ பாகவதம் போன்ற கிரந்தங்களுக்கும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கும் ஆச்ரய ப்ராதான்யம் என்பது பற்றி மறுக்க முடியாததோர் ஏகவாக்யதை இருப்பினும் அதைப் பிரதிபாதிக்கும் முறையில் பேதம் இருக்கிறது. ஸ்ரீ பாகவதாதிகளைப் போல் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஆச்ரயப்ராதான்யம் வாச்யார்த்தத்தையே முற்றிலும் தழுவியதாய் இல்லை. ஆசார ப்ராதான்யம் வாச்யமாயும் ஆச்ரயப் பிராதான்யம் என்பது அதனுட் புலப்படும் த்வனியுமாகவே அமைக்கப் பெற்றிருக்கிறது. இது பற்றியே தான் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு ஆதி காவ்யமென அரியதோர் ப்ரஸித்தி ஸித்தித்திருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் கேவலம் ஆசார ப்ராதான்யத்தை அங்கீகரிப்பவர்கள் அதற்கு காவ்யத்வ ஹானியையே கற்பிப்பவர் ஆவார்கள். அந்த ப்ராதான்யத்தையே முன்னிட்டு ஸ்ரீ ராமாதிகளுடைய மகிமையை அளவிடப் புகுபவர்கள் கேவலம் பாலர்கள்; பண்டிதம் மன்யர்கள் என்று அபிப்ராயப்பட்டு ஸ்ரீ பவபூதி மஹாகவி, புதிதாய் ராமாயணம் படித்து அதன் அர்த்த விசேஷத்தில் இன்னும்

பக்குவத்தை அடையாத 'லவன்' என்னும் குழந்தை வீரன் சொல்லாக அடியிற் கண்ட சுலோகத்தை "உத்தர ராம சரித்திர" த்தில் எழுதியுள்ளார்.

वृद्धास्ते न विचारणीयचरिताः तिष्ठन्तु किं वर्ण्यते
सुन्दस्त्रीदमनेऽप्यखण्डयशसो लोके महान्तो हि ते ।
यद्व्रिश्राण्यपराङ्मुखानि च पदान्यासन् खरायोधने ।
यद्वा कौशलमिन्द्रसूनुनिधने तत्राप्यभिज्ञो जनः ॥

காயத்ரீ மஹா மந்திர த்ரஷ்டாவான விசுவாமித்ர மஹரிஷியால் **अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमं** என்று ஐயம் திரிபற ஸித்தாந்திக்கப் பெற்றதோர் ஆச்ரயத்தின் முன்பாக **यत्त्वत्कृतं तदिह पुण्यमपुण्यमन्यथान्यत्तयोर्भवति लक्षणमत्र जातु ।** என்னும் மனப்பான்மைதான் ரஸிகோத்தமர்களின் நிஜஸ்வரூபமாகும். அப்பான்மை பெருதவர்கள் **प्राज्ञंमन्यमना हठेन पठितीमाऽस्मिन्खलःखेलतु ।** என்று ஸ்ரீ ஹர்ஷ கவி கூறியபடி ஸ்ரீமத் ராமாயணம் போன்ற உத்தம காவ்யங்களை ஆராய்ந்தறிவதற்கு அத்யந்தம் அனதிகாரிகளே.

ஆனால் **रामादिवत् वर्तितव्यं, न रावणादिवत्** என்று சொல்லப்படு கிறதே, அதன் வாஸ்தவமென்ன? சேதனர்கள் அனைவர்களும் பக்தி அதி சயத்தால் தங்களிடத்தில் ராமபாவனையை நிலை பெறச் செய்ய வேண் டுமே யொழிய இன்னுளில் சில பெரியார்கள் கைக்கொள்ளுவது போல் ராவண பாவனுதிக்கியத்தை வளர்க்கக் கூடா தென்பதுதான் இதற்குரிய பொருள். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ப்ரஹ்லாதாழ்வானும் ஸ்ரீ பாகவதத் தில் கோபிகைகளும் பகவானைப் போல் வர்த்தித்தப் ப்ராகாரம் இதுவே யாகும். இதே ப்ரகாரந்தான் **रामो रामो रामइति प्रजानमभवन् कथाः । राम-भूतं जगदभूत् रामे राज्यं प्रशासति** என்கிற ஸ்ரீ ராமாயண சுலோகத்தாலும் உத்கோஷிக்கப்படுகிறது.

---

(1) ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தீ, (2) ஸ்ரீதேசிக ஸூக்தி ஸம் ரக்ஷிணீ, (3) ஸ்ரீதேசிக ஸூக்தி ஜயத்வஜமாலை, (4) திருவரங்கம் பெரிய கோயில்: இந்த நான்கு பத்ரிகைகளும் அந்தந்தப் பத்ராதிபர்களால் கிருபையுடன் ஒவ்வொரு மாஸமும் நமக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவைகளின் குணவிசேஷம் முதலியவை அடுத்த ஸஞ்சிகையில் விவரிக் கப்படும்.

ஸ்ரீ:

உபய வேதாந்தங்கள்

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு—

சென்ற மார்கழி மாதத்திய தீபிகையில் "உபய வேதாந்தங்கள்" என்ற நிர்தேசத்துடன் என்னால் எழுதப்பட்டிருந்ததைப்பற்றி பத்ராதிபர் குறிப்பு பின்வருமாறு ஏற்பட்டிருந்தது. அதாவது, த்வி வேதாந்தங்கள் என்றுரைக்காத போதிலும் உபய வேதாந்தங்கள் என்றூர் இவ்வாசிரியர். உபயவேதாந்தம் என்று ஒருமைப் பதமாகவே சொல்லியிருப்பின் அழகாயிருக்குமோவென்று யோசிக்கத்தகுந்த இவ்விஷயத்தில் நன்கு கண்டறிய நமக்கு பகவான் இரண்டு கண்கள் ஒரே திருஷ்டியோடு கூடியதாய் கொடுத்திருப்பதே உதாஹரணமும் நிதர்சனமுமாகும். இவ்விஷயத்தில் இவ்வாசிரியர் உத்ஸாஹத்துடன் எழுதியிருப்பது மிகவும் அபிநந்தநீயம்." என்று.

இக்குறிப்பினால் த்விவேதாந்தங்கள் என்று சொல்லியிருந்தால் சப்தப் பிழையில்லாமலிருக்குமென்றும் அப்படிச் சொல்லாமல் உபய வேதாந்தங்கள் என்று ப்ரயோகித்தது சரியல்லவென்றும் அபிப்பிராயம் ஸூசிக்கப் படுவதாக நினைக்கிறேன். உஹள வ தள வெஹாஹள வ உஹய வெஹாஹள என்கிற வ்யுத்பத்தி சரியாயிருக்குமென்று நினைத்து நான் அப்படி எழுதினேன். ஷிவெஹாஹள என்பது பிழையற்றதாயிருந்தால் உஹய வெஹாஹள என்பதும் சரியென்றே நினைக்க இடமிருக்கிறது. 'உஹ' ஶப்தம் ஸமாஸத்தில் 'உஹய' ஶப்தமாக மாறுவது சாஸ்த்ரஸித்தம். 'உஹயவடள', 'உஹயவக்ஷள' என்கிற ப்ரயோகங்களும் காணப்படுகின்றன. ஆனால் இது விஷயத்தில் ஶப்த சாஸ்திரத்தில் பரிச்ரமப் படாத நான் நிர்ணயம் செய்வது யுக்தமல்லவாகையால் ஶப்த சாஸ்த்ரஜ்ஞர்களான வித்வான்கள் ஆவிஷ்கரிக்கும் அபிப்பிராயத்தை ஶிரஸா பரிக்ருஹிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

சப்த விஷயமான சங்கை ஒருபுறமிருக்க அர்த்த ஸ்வாரஸ்யத்தைக் கணிசித்தால் உபய வேதாந்தம் என்று ஒறுமைப் பதமாகவே கூறியிருந்தால் அழகாயிருக்குமோவென்று அதிபரால் அபிப்ராயம் வெளியிடப் பட்டிருக்கிறது. ஆனால் இது விவக்ஷா விசேஷத்தைச் சார்ந்ததென்று விநயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உபய வேதாந்தம் என்று ஸாதாரணமாய்க் கூறுவதை விட்டு உபய வேதாந்தங்கள் என்று சொன்னதற்கு முக்கிய காரணம் இவ்விரண்டுக்கும் இன்றியமையாத பேதங்களை நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் மறந்தார்களல்லவென்பதைக் குறிப்பாய் விளக்குவதற்காகவே. ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்துக்குப் புறம்பாயுள்ளவர்களில் சிலர் ஆழ்வார்களுடைய த்ராவிட திவ்ய ஸூக்திகளை நாம் ஸர்வ ப்ரகாரமாயும் வேதங்களுக்கு ஸமமாகவோ அல்லது மேலாகவோ கொண்டாடுகிறோமென்றும் இது

காரணமாக நமக்கு ச்ரௌத ஸ்மார்த்த கர்மாநுஷ்டானங்களை யதோக்தமாய் நடத்துவதற்குக் கூடக் குறைவு நேரிடுகிறதென்றும் த்ரைவர்ணிக ப்ரதி நியதமான மந்த்ரமயமான வேதாக்ஷரராசியை ப்ராஹ்மணர்கள் பரித்யாகம் பண்ணவாவது தத்ஸ்தானத்தில் தத்ஸமமாக பாஷாந்தர சப்தங்களை ப்ரயோகிப்பதாவது கேவலம் ஸங்கேதமாகுமே தவிர ஶாஸ்த்ர ஸம்மதமான ஆர்யாசாரத்தில் சேராதென்றும் பலவிதமாக ஆக்ஷேபித்து வருவதால் அதற்கு என் சக்திக்கெட்டியவரையில் ந்யாயபுரஸ்ஸரமான ஸமாதானமளிக்கவேணுமென்றே இவ்விஷயம் என்னால் எழுதப் பட்டது. அது பற்றியே இவ்விரண்டு வேதாந்தங்களுக்கும் ஏற்பட்டுள்ள ஸ்வரூபபேதம் அதிகாரி பேதம் முதலியவற்றை நாம் முற்று முணர்ந்தே அவைகளுக்குள்ள அர்த்தைக்யத்தையும் அவைகள் வ்யாக்யாந வ்யாக்யேயரூபமாய் நிற்கும் சீர்மையையும் அவ்வகையில் அத்யந்த பிந்ந ஸ்வரூபமுள்ள இவ்விரண்டிலும் ஸ்ரீ ராகவனுக்கும் ஸுக்ரீவனுக்கும் ஏற்பட்டிருக்கும் அந்யாத்ருசமான ஸாமரஸ்யத்தையும் கண்டு வியந்தே நம் பூர்வாசார்யர்கள் சாஸ்த்ர விரோதம் கிஞ்சித்தும் இல்லாத ஸந்தர்ப்ப விசேஷங்களில் இவ்விரண்டுக்கும் ஸமஸம்பாவனம் பண்ணத் தகும் என்று நினைத்து நமக்கு அவ்வகை அநுஷ்டாநக்ரமம் ஏர்ப்படுத்தி யிருக்கிறார்களே தவிர பிறர் ஆரோபிக்கிறபடி யாதொரு தோஷத்துக்கும் இடமில்லையென்று விசதமாக்குவதற்காகவே ஆரம்பத்தில் இவ்விரண்டையும் த்விவசநத்தால் குறிப்பிட நேர்ந்தது. பின்பு அவைகள் பிந்நஸ்வரூப முள்ளவைகளாயிருந்த போதிலும் கங்காயாமுந ஸங்கமம்போல் ஏகார்த்தபர்யவஸாயியாய் நிற்கும் நிலையைத் தெரிவிப்பதற்காகவே அவைகளின் ஐகரஸ்யம் ப்ரதானமாக ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. இவ்வகையான காரணங்களை முன்னிட்டு இரு வேதாந்தங்களையும் பிரித்தும் ஒன்று சேர்த்தும் சொல்ல வாய்த்ததென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயமும் இத்தருணத்தில் சொல்லிக் கொள்ளவேண்டியதவசியமாகிறது. பத்ராதிபர் குறிப்பில் நான் இவ்விஷயத்தை உத்ஸாஹத்துடன் எழுதியிருப்பதாகக் கண்டெழுதப்பட்டிருக்கிறது. அதனால் உத்ஸாஹ வசநத்தினால் அதிவாதம் செய்யப்பட்டிருக்கலாமோ வென்கிற சங்கைக்கு இடமுண்டாகிறது. ப்ரதிபக்ஷிகளின் ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்ல உத்தேசித்து எழுதியதில் ந்யாயங்களைக் கொண்டு யதாவத்தாய் வஸ்து ஸ்வரூபத்தை நிரூபிக்க வேண்டியது பொருந்துமே. தவிர உத்ஸாஹத்தினாலும் அபிமானத்தினாலும் அதிவாதம் செய்வது கொஞ்சமும் பொருந்தாது. ஆகையால் ப்ரக்ருதத்தில் உத்ஸாஹாவிஷ்கரணம் அபிநந்தநீயமென்று பத்ராதிபரால் கூறப்பட்டிருந்த போதிலும் உண்மையில் அது நிந்தநீயமென்றே தத்வஜ்ஞர்கள் நிர்

மானிக்கவேண்டியதாகும். ஆனால் என்னுடைய மனதில் இவ்விஷயத்தில் சிலர்க்கிருக்கும் மயக்கத்தைத் தெளிவிக்க வேண்டியதற்காக தத்வத்தை யதாவத்தாய் எடுத்துரைக்க வேணுமென்கிற எண்ணந் தவிர அனுவச்ய மாக எதையும் புகழ்வாவது தூறவாவது மற்றவிதமாய் அதிவாதம் செய்ய வாவது அபிப்பிராயம் இருந்ததில்லை. அப்படிச் செய்திருப்பதாகவும் எனக்கெட்டியவரை புலப்படவில்லை. இது விஷயத்திலும் நான் நிர்ணயிக்க அதிகாரமற்றவனாகையால் தத்வ வித்துக்களே அதைப்பராமர்சிக்க ப்ராப்த மென்றும் அப்போது புலப்படும் ந்யூநாதிரேகங்களை ப்ருதுகஜல்பித விஷயத்தில் போல் அவர்கள் க்ஷமித்தருள வேணுமென்றும் வணக்கத்துடன் ப்ரார்த்திக்கிறேன்.

தி. ஈ. சடகோபாசார்யர்.

பத்திராதிபரின் விவரண ப்ரத்யுத்தரம்.

ஸ்ரீமான் சடகோபாசாரியார் உபயவேதாந்தங்கள் என்று எழுதின வ்யாஸ விஷயமாய் அபிப்ராயபேதம் சிறிதும் உண்டாவதற்கு இடமே இல்லாமலிருக்க அதில் ஏதோ அவ்வித பேதம் உண்டாகிவிட்டதென்று நினைக்கக்கூட அவகாசம் ஏற்பட்டுவிட்டது ஓர் துரதிருஷ்டம். ஒரு வித மான அபிப்ராய பேதமும் இல்லாத விஷயத்தில் இவ்விதம் தென்படுவது கூட கூடாது. சப்தங்களின் வ்யாகரண விஷயமாகவாவது தோஷா ரோபண புத்தியோடாவது அடியேன் எழுதினவனல்லன். ஸ்ரீ வைஷ்ண வர்களுக்கென்று அஸாதாரணமாய் ஏற்பட்டுள்ள பகவான் ஸ்ரீமந் நாராய ணனைப் போலவே வேதாந்தமும் ஒன்றே ஒன்றென்றும், அதே இரண்டு பாஷைகளிலும் மகர்ஷிகளாலும் ஆழ்வார்களாசார்யர்களாலும் மிகவும் அழகாய் கட்டியமைக்கப் பட்டிருக்கிறதென்றும், ஒரு கட்டிடத்திற்கு இரண்டு வாசல்கள் இருப்பதுபோல் இரண்டு பாஷைகளிலும் ஏற்பட்டிருக் கிறதென்றும் உள்ள யோஜனையைத் தான் தெரிவிக்க முயன்றது பத் ராதிபரின் முன்னுரை. 'த்வி' என்கிற பதத்தால் வெவ்வேறான இரண்டு என்று ஸந்தேஹிக்க இடமுண்டாவதாலும் உபய என்கிறபதத்தால் அந்த வேறான தன்மை சிறிது பரிஹரிக்கப்பட்டபோதிலும், வேதாந்தங்கள் என் கிற பன்மைப் பதத்தினால் திரும்பவும் இருவகைப்பட்ட வெவ்வேறாக நினைக்க இடமுண்டாகுமாதலால் உபய வேதாந்தம் என்று ஒருமைப் பதத் தினாலேயே வ்யவஹரித்து, வேதாந்த விஷயம் ஒன்றே என்கிற முக்யமான அம்சத்தைத் தெரிவித்தால் அது ரஸமாயிருக்குமோவென்று எழுதப் பட்டதே யொழிய வேறொரு விதமான சங்கைகூட கிடையாது. ஒரு கால் அடியேனுக்கும் தெரியாமல் எவ்விதமான அபசாரம் நேரிட்டிருப்பி னும் இதை இவ்வாரியர் க்ஷமித்தருள வேண்டியதே கடமை.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்.]

(சென்ற சஞ்சிகையின் தொடர்ச்சி)

எட்டாவது அத்தியாயம்

1-வது பாதம்

218. இப்படி அநுமானத்தாலே பொதுவாய் அதிதேசம் பண்ணலாம் என்று காட்டின பிறகு, இன்னப்ரகிருதியாகத்திலிருந்து அங்கங்களை விகிருதியாகங்களுக்கு எடுத்துக் கொள்ளவேண்டியது என்று சொல்லப்படு கிறது.

முதலில் விசாரிக்கப்படுகிறது— எந்த ப்ரகிருதி யாகத்திலிருந்தாவது அவைகளை யெடுத்துக்கொள்ளக் கூடாதா? இன்னயாகத்திலிருந்துதான் என்று கட்டுப்பாடு பண்ணுவதற்குக் காரணமில்லையே— என்று. பதில்— லிங்கங்களைக் கொண்டு இன்னதிலிருந்துதான் என்று தீர்மானம் பண்ண முடியும் (அதி—1)

பூர்வபக்ஷத்தின் கருத்து— லிங்கம் என்றால் ஹேது, அதைக் கொண்டு ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், ஹேதுவும் ஸாத்யமும் சேர்ந்திருப்பதைப் பலவிடங்களில் பார்த்திருக்கவேண்டும். கண்ணால் பார்க்க முடியாமல், வேதத்தைக் கொண்டே அறியவேண்டிய விஷயத்தில் இந்தச் சேர்க்கையைக் கண்டு பிடிக்க முடியாது— என்பது. இதற்குப் பதில்— இங்கே அநுமான வழியாய்த் தெரிந்து கொள்ளவேண்டாம், உப மானம் வழியாய்த் தெரிந்து கொள்ளலாம். ப்ரகிருதியிலிருக்கும் லிங்கங் கள் (அதாவது அடையாளங்கள்) விகிருதியாகத்திலிருந்தால், ப்ர கிருதியின் அங்கங்களைக் கொண்டு விகிருதியாகத்தைச் செய்யலாம். (சா— வ்யா— 551)

219. ஸௌரிய தேவதையின் சருயாகத்தில் தத்தி(ஸி)தம் என்கிற ப்ரத்யயத்தாலே தேவதை காட்டப்படுவது; யாகத்துக்கு தேவதை ஒன்றா யிருப்பது, தானியம் த்ரவ்யமாயிருப்பது; "நிர்வபேத்" என்கிற சொல்— இவைகள் அடையாளங்கள். இந்த அடையாளங்கள் தர்சபூர்ணமாஸ

இஷ்டியில் சேர்ந்த அக்னிதேவதையின் புரோடாச யாகத்திலும் இருக்கின்றன. இதனாலே 'அக்னிதேவதையின் யாகத்தைப் போல ஸௌர்ய தேவதயையின் யாகத்தையும் செய்யவேண்டியது. என்று ஒரு விதி வாக்யம் இருப்பதாகக் காட்டப்படுகிறது. ஆகையால் அக்னிதேவதையின் யாகத்திலிருந்துதான் அங்கங்களை ஸௌர்ய தேவதையின் யாகத்துக்கு எடுத்துகொள்ள வேண்டியது. (அதி—2)

இப்படி லிங்கத்தால் காட்டப்படும் விதிவாக்கியத்தை சோதகம் என்று சொல்லுகிறது.

இப்படியே அனேக தேவதைகளை உடைய யாகங்களுக்கு அக்னீஷோமீயயாகமும், ஸௌர்யயாகமும் ப்ரகிருதிகள்; நெய்த்ரவ்யமான யாகங்களுக்கு உபாம்சுயாஜம்; பால், தயிர், ஆமிக்ஷா இவைகளுக்கும், அக்நீஷோமீயபசு யாகத்துக்கும் ஸாந்நாய்ய யாகம்; இப்படியே மற்றவைகளுக்கும். இந்த தீர்மானத்தையே மேல் அதிகரணங்கள் விவரமாய்ச் சொல்லுகின்றன. (சாஸ்—552)

220. அக்னிஹோத்ரத்தில் தோஹநம் (பால் கறப்பது) முதலான அங்கங்கள்; தர்சபூர்ண மாஸங்களில் அவஹநநம் முதலானவைகள்; அக்னிஷ்டோமத்தில் அபிஷவம் முதலானவைகளிருக்கின்றன. இவைகளின் ப்ரயோஜனங்கள் எல்லாருக்கும் தெரியக் கூடியவைகள்; அந்தக் கர்மங்களை எப்படிச் செய்கிறது என்கிற தேட்டத்தையும் தீர்க்கச் சக்தியுள்ளவைகள். அவைகளைக்கொண்டே அந்தக் கர்மங்களைச் செய்யலாம். ஆகையால், அவைகளுக்கு அதிதேசம் வேண்டியதில்லை, இவைகளை மூல ப்ரகிருதி யென்று சொல்லுகிறது.

இப்படியிருந்தபோதிலும், சிலர் ஏதோ யுக்தியாலே ஸோமயாகமான அக்னிஷ்டோமத்துக்குத் தர்சபூர்ணமாஸங்களிலிருந்து அதிதேசமுண்டு என்று ஸந்தேஹப்படலாம், அதைத் தீர்ப்பதற்காக இந்த அதிகரணம்.

இந்த யுக்தி என்னவென்றால், தீக்ஷணீய இஷ்டி முதல் அவப்ருதம் வரையிலுள்ள இஷ்டிகளிலும், பசுயாகத்திலும், தர்சபூர்ணமாஸ அங்கங்கள் அதிதேசத்தாலே வருகின்றன. இந்த விஷயம் மனதில் பட்டிருகிறது, அவைகளுக்கு நடுவிலிருக்கும் ஸோமயாகத்திலும் அவைகள் வரலாம் என்று ஸந்தேஹமுண்டாகிறது. "தஸ்யைகஶதம் ப்ரயாஜாநூயாஜா:" (அதற்கு 101 ப்ரயாஜ அநுயாஜங்கள்) என்றும் ஒருவாக்யம் காணப்படுகிறது—என்று. இந்த ஸந்தேஹத்தைத் தீர்க்கும் வழி—தேட்டமிருந்தாலன்றோ அங்கங்கள் வரவேண்டும். தேட்டமோ இல்லை. ப்ரயாஜமும்,

அநுயாஜமும் ஸோம யாகத்துக்கு அங்கமான தீக்ஷணீய இஷ்டி முதலானவைகளில் இருக்கின்றன. அவைகள் வழியாய், வாஜபேய நியாயப்படி அங்கியான ஸோம யாகத்துக்கு வருகின்றன. சொன்ன வாக்யம் இதை அநுவாதம் பண்ணுகிறது. ஆகையால் ஸோம யாகத்துக்கு அதிதேசமில்லை. (அதி-3) (சாஸ்-552—553)

(221) "ஸௌர்யம் ஏககபாலம் நிர்வபேத் ப்ரஹ்மவர்சஸகாம:" முதலான இடங்களில் நிர்வாபம் கபாலம் முதலான லிங்கங்கள் இருப்பதால், தர்சபூர்ணமாஸங்கள் நினைவுக்கு வருகின்றன. அவைகளிலிருந்துதான் அதிதேசம் (அதி—4).

2. அப்படியே அக்னிஷோமீய பசுயாகத்திலும் திரவியமும் தேவதையும் சொல்லப்படுகின்றன, ப்ரயாஜங்கள் இருப்பது; ஆகா(வா)ர ஹோமத்தின் மீதியால் அஞ்ஜனம்; ஸ்ப்ருஷ்டி (தொடுவது) இவைகளால் இரண்டுக்கும் ஒத்துமை. இஷ்டியில் "நாஸிகே உபஸ்ப்ருஶதே" (மூக்கணையைத் தொடுகிறான்) என்கிற வாக்யமிருக்கிறது. பசுயாகத்தில் ஆலம்பனம் என்பது உபாகரணம் (அதி—5).

(222) தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளில் நான்கு விஷயங்களிருக்கின்றன—ஸ்வர்க்கமாகிய பலன், உயிரோடிருக்கிறவரையில் இஷ்டிகளைச் செய்வது, ஸ்வர்க்கத்தை ஆசைப்படும் யஜமானன், அக்னிதேவதையின் யாகத்துக்கு மற்ற ஐந்து யாகங்களோடு சேர்க்கை. இவைகள் நாலும் ஸௌர்ய தேவதையின் யாகத்தில் ப்ரயாஜங்கள் முதலான அங்கங்கள்போல அதி தேசத்தால் வருமா என்று ஸந்தேஹம்.—

பூர்வபக்ஷம்—ப்ரயாஜம் முதலான வைகளுக்கு எப்படி ப்ரகிருதியோடு ஸம்பந்தமிருகிறதோ அப்படியே சொன்னவைகளுக்கும் அது உண்டு, ஆகையால், அதிதேசம் பண்ணலாம்.

ஸித்தாந்தம்—சொன்ன நான்கும் ப்ரகிருதியான இஷ்டிகளுடன் புணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் விகிருதிக்கு வரமாட்டா, அதிதேசத்தாலும் வரமாட்டாது. எப்படி விகிருதியாகத்தைச் செய்கிறது என்கிற தேட்டத்துக்கு அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. ஏன் என்றால்,—பலனும். உயிரோடிருப்பதும் புருஷார்த்தம்; யாகத்துக்கு அவைகளால் ப்ரயோஜனமில்லை. ஸ்வர்க்கத்தில் ஆசை இஷ்டிகளுக்காக ஏற்பட்டதன்று, ஆசைக்காகவன்றோ இஷ்டிகள் செய்யப்படுகின்றன. அப்படியே அக்னி தேவதையின் யாகத்துக்கு மற்ற ஐந்து யாகங்களால் செய்யப்படும் உபகாரம் ஒன்றுமில்லை. ஆறு யாகங்களும் சேர்ந்து பலனுக்கு ஸாதனமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று மற்றவைகளுக்கு அங்கமன்று. ஒன்று செய்யவேண்டிய உபகார விஷயத்தில்

மற்றவைகள் வேலை செய்கிறதில்லை. அப்படி யிருக்கும் போது அவைகளின் சேர்க்கை எதற்கு வேண்டியது. ஆகையால் சொன்னவைகளுக்கு அதிதேச மில்லை.

2. உபகரணமாக பலனை அதிதேசம் பண்ண வேண்டாம். விச்வஜித் முதலான யாகங்களுக்குப் பலன் சொல்லப்படவில்லை. அவைகள் பலனைத் தேடுகின்றன. ஆகையால் பலனை அதிதேசம் பண்ணலாமே என்று கேள்வி. பதில்—அதிதேசத்தால் விகிருதிக்கு வருவது அங்கமாக அன்றோ ஆகும். பலனாக இருக்காதே, ப்ரக்ருதிக்காக பலன் விதிக்கப்படுகிறதில்லை.

3. மறுபடியும் கேள்வி—ப்ரகிருதியினுடைய பலனைக்குறித்து விகிருதியை விதிக்கலாமே என்று. பதில்—விக்ருதியாகம் அதற்கு ஸாதனமாகத்தகுந்தது அன்று. அந்தப்பலன் ப்ரகிருதியுடன் அதை விதிக்கும் வாக்யத்தால் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால், விக்ருதியாகத்துக்கு ப்ரகிருதியாகத்தின் பலனுடன் ஸம்பந்தமில்லை. (அதி—13, சா. 556—557).

223. முக்யமான பலனுக்கு அதிதேசம் வேண்டாம். குண பலனை அதிதேசம் பண்ணலாமே? ப்ரணீதாவின் ப்ரணயநம் அதிதேசத்தால் விகிருதி யாகத்தில் வருகிறது. அதற்கு ஸாதனமான கோதோஹனமும் (பால் கறக்கும் பாத்திரம்) ஸாதனமா யிருப்பதால் சமஸம்போல் வரலாமே? அப்போது, அத்துடன் அது கொடுக்கும் பசுபலனும் வரலாமே என்று ஸந்தேஹம்.

பதில்—யாகத்துக்கு அங்கமான சமஸம் என்பதே ப்ரணயனத்துக்கு ஸாதனம், அது தான் வேண்டியது. கோதோஹநம் அங்கம் அன்று; அது புருஷார்த்தம். ஆகையால் கீழ்ப்பாராவில் சொன்னவைகளுக்குப் போல் குணபலனுக்கும் அதிதேசமில்லை. (அதி—14).

224. "ஸௌர்யம் சரும் நிர்வபேத் ப்ரஹ்மவர்சஸகாம:" என்று ஒரு விகிருதியாகம் விதிக்கப்படுகிறது. தேவதையின் ஒற்றுமையிருப்பதால், இந்த்ர தேவதையின் ஸாந்நாய்யயாகத்திலிருந்து அதிதேசமும், த்ரவ்யத்தின் ஒற்றுமையால், அக்னி தேவதையின் புரோடாச யாகத்திலிருந்து அதிதேசமும் ஏற்படும். இவைகளில் எந்த யாகத்தை எடுத்துக் கொள்ளுகிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—த்ரவ்யத்தைக் காட்டிலும் தேவதை ப்ரபலம், ஏன் என்றால், வாக்கியத்தில் முதல் சொல்லாலே அது சொல்லப்படுகிறது; அதிலும் ப்ராதிபதிகம் என்று சொல்லப்பட்ட முன்பாகத்தாலே காட்டப்படுகிறது; த்ரவ்யம் இரண்டாவது சொல்லாலே சொல்லப்படு

கிறது. அதிலும் ப்ரத்யயத்தின் பொருள். ஏகாதசகபாலம் என்கிற சொல்லுக்கு பதினொரு கபாலங்களில் ஸம்ஸ்காரம் பண்ணப்பட்டது என்பது பொருள். ஆகையால் தேவதையின் ஒற்றுமையையே கவனிக்க வேண்டியது.

ஸித்தாந்தம்—யாகம் என்பது த்ரவ்யத்தைக் கொடுத்து விடுவது. அந்த வியாபாரத்தில் த்ரவ்யம் கிட்ட இருக்கிறது. தேவதையோ அதைப் பெற்றுக் கொள்வதாக மனதால் நினைக்கப்படுகிறது. கொடுப்பது என்கிற வியாபார்த்துக்கு வேண்டியிருந்தாலும் வெளியிலிருக்கிறது. கேள்வி—தேவதை ப்ரபலம் என்று சொல்லவில்லையா என்று. அது சொற்களைக் கொண்டு சொல்லப்பட்டது. ஸ்வபாவத்தால் தேவதை முக்யம் அன்று. ஆகையால் திரவ்யத்தின் ஒற்றுமையே ப்ரபலம், புரோடாசத்தின் தர்மங்களைச் செய்ய வேண்டியது. (அதி-17)

முதல் பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்

225. ஒரு விகிருதியாகத்தில் மூன்று ஹவிஸ்ஸுக்கள் விதிக்கப்படுகின்றன—ஆக்நாவைஷ்ணவம் 11-கபால புரோடாசம்; ஸாரஸ்வதி-சரு; ப்ருஹஸ்பதி-சரு-என்று. இங்கே அக்நாவிஷ்ணுவின் ஹவிஸு முதலாயிருப்பதால், தர்ச பூர்ணமாஸ இஷ்டியில் முதலான அக்னி தேவதையின் ஹவிஸுடன் ஒற்றுமையிருக்கிறது. அதைப் போல் முதல் யாகத்தைச் செய்யலாமா? என்று ஸந்தேஹம். பதில் - முதல் யாகத்தில் தேவதை இரண்டு பேர்களானதால், அக்னீ ஷோம தேவதையின் யாகத்துடன் ஒற்றுமையிருக்கிறது. இந்த யாகத்தை விதிக்கும்போதே இந்த ஒற்றுமை சீக்கிரம் தோன்றுகிறது. இடத்தினால் ஒற்றுமையை அறிய இன்னொன்றின் தேவையிருக்கிறது. இது தாமதித்துத் தோன்றுகிறது. ஆகையால் அது துர்பலம். தேவதையின் ஒற்றுமையைக் கொண்டு, அக்னீ ஷோம தேவதையின் யாகத்தைப் போல செய்ய வேண்டியது. (அதி—1, சா—565)

மூன்றாவது பாதம் முற்றிற்று

நான்காவது பாதம்

226. 'யதேகயா ஜுஹுயாத் தர்விஹோமம் குர்யாத்' என்று ஒரு வாக்யமிருக்கிறது. தர்விஹோமம் என்பது ஒரு கர்மத்தின் பெயரா? அல்லது தர்வி என்கிற குணம் விதிக்கப் படுகிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்:—தர்வி ஹோம: என்பது அந்தச் சொல்லின் பொருள். 'யூபம் ஜுஹோதி'' என்கிற விடத்தில் எப்படி 'யூப' என்கிற

குணம் விதிக்கப் படுகிறதோ, அப்படியே ஹோமத்தை அநுவாதம் பண்ணி ஊர்வீ என்கிற குணம் விதிக்கப் படுகிறது.

ஸித்தாந்தம் :—ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட ஸ்தாலீ பாகம் முதலான கர்மங்களில் இதை விதிக்கவேண்டியதில்லை. பெரியோர்களுடைய ஆசாரத்தாலேயே உவீதி என்பது ஹோமத்துக்கு ஸாதனமாக ஏற்பட்டிருக்கிறது. வேதத்தினால் விதிக்கப் பட்ட அக்னிஹோத்ரம், நாரிஷ்ட ஹோமம் முதலான அவைகளுக்கு உவீதி வேண்டியதில்லை. அவைகளுக்கு ஜுஹ்வா முதலானவைகள் விதிக்கப்பட்டிக்கின்றன. அவைகளுக்குப் பாதம் வரும். ஆகையால் அக்னிஹோத்ரந்யாயப்படி ஊர்விஹோமம் என்பது பெயர். (அதி—1)

227. (1) ஊர்விஹோமம் என்கிற பெயர் ஸ்மிருதிகளிலும் வேதத்திலும் கர்மங்களுக்குப் பெயராகச் சொல்லப் படுவதால், எல்லா ஹோமங்களுக்கும் பெயர். (அதி—2)

2. இது "ஜுஹோதி" என்கிற சொல்லால் விதிக்கப்பட்ட ஹோமங்களுக்குப் பெயர் என்பது எல்லாரும் ஒப்புக்கொண்டது. "யஜதி" என்கிற சொல்லால் விதிக்கப்படும் யாகங்களுக்கும் அது பெயரா என்று ஸந்தேஹம்.

பதில் :—ஊர்விஹோமம் என்பது ஹோமத்தின் பெயர். இதுதான் அதற்கு முக்யமான பொருள். யாகத்தைச் சொல்லுவதானால், லக்ஷணை யென்கிற குற்றமுண்டாகும்.

(3) ஒருகேள்வி—யஜதி என்கிற சொல்லால் விதிக்கப்பட்ட யாகங்கள் விஷயத்தில் "யதாரவதம் ஜுஹோதி" என்று ஒரு வாக்ய மிருக்கிறதே. ஆகையால், அந்த யாகங்களும் ஹோமங்கள் தாமே—என்று. பதில்—யாகம் வேறு; ஹோமம் வேறு. இந்தவாக்யம் விதிக்கிறது யாகம் அன்று. வேறு கர்மம். தேவதைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஹவிஸுக்களுக்கு அக்னியில் சேர்ப்பதால் ஒரு ஸம்ஸ்காரம் செய்யப் படுகிறது. ப்ரோக்ஷணம் செய்வதினால் போல. (அதி. 3 சா. 569)

குறிப்பு—தேவதையை உத்தேசித்து திரவியத்தைவிட்டு விடுவது யாகம். விட்டுவிடப் பட்டதை அக்னியில் சேர்ப்பது ஹோமம். 'உபாம்சு பௌர்ணமாஸ்யாம் யஜேத' என்று யாகத்தை விதித்து, மேலே, "யதாரவதம் ஜுஹோதி" என்று ஹோமத்தை விதிப்பதால், த்ரவ்யத்தை விடுவது மாத்ரம் யாகம் என்றும், அத்துடன் அக்னியில் சேர்ப்பது ஹோமம் என்றும் ஏற்படுகிறது. (4. வது. அத்தியாயம், 2, பாதம், 12-அதிகரணம்)

228. தர்விஹோமங்களுக்கு அங்கங்கள் வேண்டியவைகளா ? எதிலிருந்து அவைகளை எடுத்து கொள்ளுகிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஸோமயாகத்திலிருந்து. ஸோமயாகத்தில் யாகத்தை விதிக்கும் வாக்கியத்தில் தேவதையின் பெயரில்லை 'ஸோமேந யஜேத" என்பது வாக்யம். ஜய—அப்யாதாந—நாரிஷ்டம் முதலான ஹோமங்களிலும் அவைகளை விதிக்கும் வாக்யங்களில் தேவதைகளின் பெயரில்லை. இந்த ஒற்றுமையால் ஸோமயாகம் தர்வி ஹோமங்களுக்கு ப்ரகிருதி.

ஸித்தாந்தம் :—ஸோமயாக விஷயத்தில் "யஜதி" என்கிற சொல் விதி வாக்யத்திலிருப்பதால்,அது யாகம்.ஆகையால் அதற்கும் தர்விஹோமங்களுக்கும் ஒற்றுமையேயில்லையே ; எப்படி ஸோமயாகம் தர்விஹோமங்களுக்கு ப்ரகிருதியா யிருக்கலாம்.

2. **கேள்வி :**—ஸோமயாகம் வேண்டாம்; அக்னி ஹோத்ரம்,நாரிஷ்ட ஹோமங்கள், பிஷ்டலேப பலீகரணஹோமங்கள் இருக்கின்றனவே. அவைகளிருந்து அங்கங்களை அதிதேசம் பண்ணலாலாமே—என்று. பதில்—அக்னிஹோத்ரம் ப்ரகிருதி யன்று. அதிலிருந்து தான் அதிதேசம் பண்ண வேண்டியது என்று காட்டக் கூடிய பிரமாணமில்லை. ஹோமம் என்பது அதற்கும் நாரிஷ்ட ஹோமங்களுக்கும் பொது. நாரிஷ்ட ஹோமங்களுக்கு வேதி, இத்மம் முதலான அங்கங்கள் உண்டு. அவைகள் ப்ரதான யாகங்களுக்கும், அங்கங்களுக்கும் பொது என்று கீழே சொல்லி யிருக்கிறது. இவைகள் ப்ரகிருதியா யிருந்தால், தர்வி ஹோமமான த்ரயம்பக ஹோமங்களிலும் இத்மம் முதலான அங்கங்கள் வரவேண்டுமே. அவைகளில் அந்த அங்கங்கள் இல்லை. ஆகையால்: நாரிஷ்ட ஹோமங்கள் ப்ரகிருதியன்று. பிஷ்டலேபபலீகரண்ஹோமங்கள் ப்ரதிபத்தி கர்மங்கள். அவைகள் அங்கங்களைக்கொண்டு வரமாட்டா.

3. மறுபடி கேள்வி—ஒற்றுமையுள்ள கர்மங்கள் ப்ரகிருதியாயிருப்பதற்கு அகப்படவில்லை. ஒற்றுமையில்லாத ஸோம யாகமே ப்ரகிருதியாக இருக்கட்டுமே—என்று. பதில்—இதுவும் கூடாது. தேவதையின் பெயர்கள் சொல்லப் படவில்லையென்பதைக் கொண்டு ஒற்றுமை சொன்னீர். அதுவுமில்லை. தத்திதம் என்கிற ப்ரத்யயத்தாலும், சதுர்த்தீவி பக்தியாலும், மந்திரங்களில் படித்திருப்பதாலும் தேவதைகள் இருக்கின்றன. மேலும், ஸோமயாகம் ப்ரகிருதியா யிருந்தால் 'வௌஷட்' என்று சொல்லி ஹவிஸுக்களைக் தேவதைகளுக்குக் கொடுக்கவேண்டும். அப்போது "ஸ்வாஹா" என்கிற சொல் பாதிக்கபடும். தர்விஹோம மந்திரங்களில் இந்தச் சொல் இருப்பதை விடவேண்டியதாக வரும். ஆகையால், தர்வி

ஹோமங்களுக்கு ஒன்றிலிருந்தும் அதிதேசமில்லை. அவைகள் அபூர்வ கர்மங்கள். (அதி—4) (சா. 570)

நாலாவது பாதம் முற்றிற்று

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்யாயம்

229. கீழ் அத்யாயத்தில் விக்ருதி யாகங்களுக்கு வேண்டிய அங்கங்களை ப்ரகிருதி யாகங்களிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது என்று சொல்லப்பட்டது. அப்படி யெடுத்துக்கொள்ளும்போது விக்ருதி யாகங்களுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட மந்திரங்கள் ஸாமங்கள், ஸம்ஸ்காரங்கள் இவைகளுக்குப் பொருத்தமில்லாமல் இருக்கலாம். பொருத்தமுண்டாவதற்காக மந்திரங்கள் முதலானவைகளை மாற்றவேண்டும். அப்படி மாற்றுவதற்கு ஊஹம் என்று பெயர். அது இந்த அத்யாயத்தில் விசாரிக்கப் படுகிறது.

முதல் பாதம்

230. அதிதேசம் பண்ணினாலன்றோ ஊஹத்துக்கு இடமுண்டாகும். அதிதேசம் பண்ணுவதற்காக அங்கங்கள் அபூர்வத்துடன் சேர்ந்திருக்கின்றன என்று கீழே சொல்லப்பட்டது. அதையே நினைவுமூட்டி, இரண்டு மூன்று அதிகரணங்களால் உறுதிப் படுத்தப்படுகிறது.

வ்ரீஹீனவஹந்தி (நெல்லைக்குத்த வேண்டியது,) என்கிற வாக்யத்தில் 'வ்ரீஹி' என்கிற சொல்லால் என்ன சொல்லப்படுகிறது? அதின் ஸ்வரூபமா? அல்லது, அபூர்வத்துக்கு ஸாதநமாயிருப்பதான ஆகாரமா? வ்ரீஹியின் ஸ்வரூபமானால் நீவாரம் என்னும் தானியத்தை த்ரவ்யமாகவுடைய விக்ருதியாகத்தில் வ்ரீஹிக்குச் சொன்ன அவஹநநம் நீவாரத்துக்கு வராது. அபூர்வ ஸாதநமான ஆகாரமானால், நீவாரத்துக்கும் அந்த ஆகாரமிருப்பதால் அவஹநநமுண்டு.

பூர்வபக்ஷம் வாக்யம் சொல்லுவது வ்ரீஹியின் ஸ்வரூபம். அதைச் சொல்லுவதில் தான் கருத்து.

ஸித்தாந்தம்—வ்ரீஹியின் ஸ்வரூபத்தைச் சொன்ன போதிலும், அதினிடத்தில் அபூர்வஸாதநம் என்கிற ஓர் ஆகாரமிருக்கிறது. அதைத் தள்ள முடியாது. அந்த ஆகாரமில்லாவிட்டால் அவஹநநத்துக்கு ப்ரயோஜன மில்லாமல் போகும். ஆகையால் அதைச்சொல்லுவதில் கருத்து இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். வ்ரீஹியின் ஸ்வரூபத்தையும் வாக்யம் சொல்லவந்தது என்றால், கௌரவம் என்கிற குற்றம்வரும். நீவாரத்தையும் த்ரவ்யமாக விதித்திருப்பதால், அதுவும் அபூர்வஸாதநம். அதுக்கும் அவஹநநமுண்டு. (அதி—1)

ஸ்ரீ:

சாந்தோக்யே ப்ரபாடக: ஷஷ்ட: ।

ச்வேதகேதுர்ஹாருணேய ஆஸ । தம் ஹ பிதோவாச "ச்வேதகேதோ! வஸ ப்ரஹ்மசர்யம் । ந வை ஸோம்ய! அஸ்மத்குலீனோऽநநூச்ய ப்ரஹ்மபந்துரிவ பவதி' இதி ॥

ஸ ஹ த்வாதசவர்ஷ உபேத்ய சதுர்விம்சதி வர்ஷ: ஸர்வான் வேதானதீத்ய மஹாமனா அனூசானமானீ ஸ்தப்த ஏயாய । தம் ஹ பிதோவாச ॥

ஸ்ரீ:

ஸத்வித்யா

[மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ. உப. தேசிகாசார்ய ஸ்வாமி, திருப்பதி]

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம: ।

ரக்ஷாதீக்ஷாவிசேஷைரவஹ்ருதவிபதே யஸ்ய ஸத்ஸித்தய: ।

யஸ்மிந்நிர்வைஷம்யஹாவா ஜயதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்ஸ: ॥

[இது உபநிஷத் ஸித்தாந்த சந்த்ரிகையில் ஒன்பதாவது ப்ரகரணம். சாந்தோக்யோபநிஷத்தில் ஸத் வித்யா ப்ரகரணத்தால் கிடைக்கும் உபநிஷத் ஸித்தாந்தம் இங்கு விவரிக்கப் படுகின்றது.]

[ச்வேதகேது:]:—அருண புத்ரரான உத்தாலகருடைய புத்ரர் ச்வேதகேது என்பவர், பன்னிரண்டு வயது வரையில் அத்யயநத்தில் ப்ரஸக்தி இல்லாதவராய் இருந்தார். ['ஆஸ' என்ற வாக்யப் பிரிவினால் இவ்வர்த்தம் கிடைக்கின்றது]. உத்தாலகர் தன் பிள்ளையைப் பார்த்து இவ்வாறு சொன்னார். 'ச்வேத கேதுவே! வேதாத்யயனத்துக்காக குருகுல வாஸத்தைப் பண்ணு. கண்ணுக்கு ப்ரியனான புத்ரனே! நம் வம்சத்தில் பிறந்தவன் வேதாத்யயனம் செய்யாமல் ப்ராஹ்மபந்துவைப்போல் இருக்கிறதில்லை.' (ப்ராஹ்மபந்து: தான் ப்ராஹ்மணன் ஆகாமல் ப்ராஹ்மணர்களைத் தன் பந்துக்களாகச் சொல்லிக்கொள்ளுபவன்.)

(ஸ ஹ த்வாதச) அந்த ச்வேதகேது பன்னிரண்டாவது வயதில் ஆசார்யனிடத்துக்குப்போய் அவரிடத்தில் உபநயன ஸம்ஸ்காரத்தைப் பெற்று ஸர்வ வேதங்களையும் ஸாங்கமாக அத்யயனம் பண்ணி இருபத்திநாலாவது வயதில் மஹா புத்திமானாய் ஸாங்கமாக ஸர்வ வேதங்களையும் அத்யயனம் பண்ணினோம் என்று எண்ணங்கொண்டவனாய் நாம் பரிபூர்ணனாய்

'𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑍇𑌤𑍋! 𑌯𑌨𑍍𑌨𑍁 𑌸𑍋𑌮𑍍𑌯! 𑌇𑌦𑌂 𑌮𑌹𑌾𑌮𑌨𑌾 𑌅𑌨𑍂𑌚𑌾𑌨𑌮𑌾𑌨𑍀 𑌸𑍍𑌤𑌬𑍍𑌧𑍋𑌽𑌸𑌿। 𑌉𑌤 𑌤𑌮𑌾𑌦𑍇𑌶𑌮𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌃 𑌯𑍇𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌮𑌤𑌂 𑌮𑌤𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿। '𑌕𑌥𑌂 𑌨𑍁 𑌭𑌗𑌵𑌃 𑌸 𑌆𑌦𑍇𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿?' 𑌇𑌤𑌿॥

விட்டோம்; இனி நமக்கு செய்யவேண்டிய கார்யம் ஒன்றும் இல்லையென்கிற எண்ணத்தால் அஹங்காரம் கொண்டு வ்யாபாரம் ஒன்றுமில்லாதவனாய் பிதாவிடத்துக்கு வந்தார். அவரைப் பார்த்து தந்தை இவ்வாறு சொன்னார்.

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑍇𑌤𑍋) ஓ ச்வேதகேதுவே! நீ உன்னைப் பரிபூர்ணனாக நினைத்து ஒரு வ்யாபாரமும் இல்லாமல் இருக்கிறாயே. இதற்கு என்ன காரணம். (𑌉𑌤 𑌤𑌮𑌾𑌦𑍇𑌶𑌂) உபநிஷத்துக்களில் ப்ரஸித்தனான ஆதேஷ்டாவைக் குரு முகமாய்க் கேட்டறிந்தாயா? (𑌯𑍇𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌂) இங்கு 𑌯𑍇𑌨 என்பதற்குப் பிறகு 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 என்றும் 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 என்னும் பதங்களும் வரவழைத்துக்கொள்ளவேண்டும். 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌅𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿. எந்த ஆதேஷ்டாவைக் கேட்டறிந்து கொள்வதால் இந்த ப்ரபஞ்சமெல்லாம்ஒரு ஆகாரத்தால் கேழ்க்கப் படாததாயும் மற்றொரு ஆகாரத்தால் கேழ்க்கப் பட்டதாயும் ஆகிறதோ.' (ஆதேஷ்டா நியமிக்குமவன்.) உபாதான காரணமும் கார்யமும் ஒன்றே யாகையால் உபாதான காரணத்தை அறிந்தால் காரியம் அறியப் பட்டதாகிறது. ஆகையால் பிதாவினுடைய இந்த வாக்யத்தால் 'ஜகத்துக்கு உபாதான காரணமாயும் நிமித்த காரணமாயுமுள்ள ப்ரஹ்மத்தை கேட்டறிந்தாயா? என்று கேட்டதாகிறது. (காரிய ரூபமாய் மாறுதல் அடையும் காரணம் உபாதான காரணம் என்றும் அந்த மாறுதலை உண்டாக்கும் காரணம் நிமித்த காரணம் என்றும் சொல்லப்படுகிறது) இங்கு நியமிக்குமவன் என்பதால் ப்ரஹ்மத்துக்கு நிமித்த காரணத்வமும் கிடைக்கிறது. லோகத்தில் பானை முதலிய கார்யங்களுக்கு மண் முதலானது உபாதான காரணமாகவும் குயவன் முதலானவை நிமித்த காரணமாயும் இருக்கும். இங்கு அப்படி யன்றிக்கே ப்ரபஞ்சமான கார்யத்துக்கு ப்ரஹ்மம் ஒன்றே உபாதான காரணமாயும் நிமித்த காரணமாயும் ஆகிறது, என்று, கேட்டவருக்கு அபிப்ராயம். ஆனால் ஜகத்துக்கு உபாதான காரணமாயும் நிமித்த காரணமாயுமுள்ள வஸ்துவை அறிந்தாயா என்று நேராகக் கேட்காமல் இப்படிக் கேட்டதற்கு அபிப்ராயம் என்னவெனில், 'காரியம் வேறு உபாதான காரணம் வேறு என்று கணாதர் முதலியவர்கள் சொல்லுகிறார்கள். அது அப்படியல்ல. கார்யமும் உபாதான காரணமும் ஒன்றே

'𑌯𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯! 𑌏𑌕𑍇𑌨 𑌮𑍃𑌤𑍍𑌪𑌿𑌣𑍍𑌡𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌾𑌚𑌾𑌰𑌮𑍍𑌭𑌣𑌂 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑌮𑍍। 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑍇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍' ॥

என்று வேதாந்திகளான நம்முடைய ஸித்தாந்தம்' என்று அறியப் படுத்துவதற்காக, இப்படிக் கேட்டார்.

(𑌕𑌥𑌂 𑌨𑍁) பிதாவினுடைய இந்த அபிப்ராயத்தை அறியாமல் ச்வேதகேது, 'ஒன்றையறிந்தால் எல்லா வஸ்துக்களையும் அறிந்ததாக எப்படியாகக் கூடும்?' என்று கேட்டார்.

(𑌯𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯) அதற்குப் பிதா பதில் சொல்லுகிறார். 'ஒரு மண் உருண்டையை அறிந்தால் அதன் கார்யமான பானை முதலானவை அறியப்பட்டதாகிறாப்போல் ஜகத்துக்கு உபாதான காரணத்தை யறிந்தால் ஜகத்தெல்லாம் அறியப்பட்டதாகக் கூடும். மண் உருண்டை வேறு. பானை முதலானதுகள் வேறு. ஆகையால் கீழ்ச் சொன்ன திருஷ்டாந்தம் எப்படி உபபன்னமாகிறது? என்னும் சங்கையைப் பரிஹரிப்பதற்காக சொல்லுகிறார். (𑌵𑌾𑌚𑌾𑌰𑌮𑍍𑌭𑌣𑌂) இந்த வாக்யத்தில் 𑌮𑍃𑌤𑍍𑌪𑌿𑌣𑍍𑌡𑍇𑌨 என்றும் பதம் 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌿க்கிறது. பானை முதலான ஆகாரங்களும் அந்தந்தப் பேர்களும், மண் உருண்டையாலேயே பானை சட்டி என்றிவை முதலிய வ்யவஹாரங்களுக்காக அடையப் படுகிறது. இது பானை, இது சட்டி என்றிவை முதலிய லோக வ்யவஹாரம் நடப்பதற்காக மண் என்கிற ஒரு த்ரவ்யமே உருண்டையென்கிற ஆகாரத்தை விட்டு பானை முதலிய ஆகாரத்தையும் பெயரையும் அடைகிறது. ஆகையால் மண் உருண்டையும் பானை முதலானவையும் எல்லாம் ஒரே த்ரவ்யம், வேறன்று என்று அபிப்ராயம். அத்யயனத்துக்காக வஸிக்கிறான் என்று சொல்லவேண்டிய இடத்தில் அத்யயனத்தால் வஸிக்கிறான் என்று சொல்வதும் வ்யாகரண சாஸ்த்ர ஸம்மதமாகையால் அதைப் போல் இங்கு வ்யவஹாரத்துக்காக அடையப்படுகிறது என்று சொல்லவேண்டிய இடத்தில் வ்யவஹாரத்தால் அடையப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. (𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑍇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍) ஆகையால் இந்தப் பானை சட்டி முதலானவையெல்லாம் ம்ருத் த்ரவ்யம் தான் என்கிற வசனமே யதார்த்தம். மண்ணின் கார்யமான உருண்டை பானை முதலானவையெல்லாம் மண்ணே யென்று ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் கிடைக்கிறது. குயவன் வீட்டில் காலையில் மண்ணை ராசியாகக் குவித்து வைத்திருக்கக் கண்டவனொருவன் ஸாயங்காலத்தில் அந்தக் குயவன் வீட்டுக்குப் போய்ப் பார்க்கும்போது அங்கு பானை சட்டி முத

,, யதா ஸோம்ய! ஏகேந லோஹமணிநா ஸர்வம் லோஹ மயம் விஜ்ஞாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் । லோஹமித்யேவ ஸத்யம் ॥

' யதா ஸோம்ய! ஏகேந நகநிக்ருந்தநேந ஸர்வம் கார்ஷ்ணாயஸம் விஜ்ஞாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் । கார்ஷ்ணாயஸமித்யேவ ஸத்யம் । ஏவம் ஸோம்ய ஸ ஆதேஶோ பவதி ' இதி ॥

லானவைகளைக் கண்டு இவையெல்லாம் காலையில் மண் ராசியாக இருந்தன. அந்த மண் இப்போது பானை முதலானவைகளாக ஆயிற்று என்று அவனுக்கு ப்ரத்யக்ஷம் உண்டாகிறது. இதனுல் மண்ணும் உருண்டையும் பானை முதலானவையும் ஒரே வஸ்து என்று கிடைக்கிறது. ஆகையால் இவையெல்லாம் மண்ணே யென்னும் வசனமே யதார்த்தம். மண் வேறு பானை முதலியவை வேறு என்னும் வசனம் அயதார்த்தம் என்று பிதாவுக்கு அபிப்ராயம். காரணத்தை அறிந்தால் கார்யம் அறியப்பட்டதாகிறது என்று கீழ் சொன்னதற்கு இன்னும் இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிருர்.

(யதாஸோமைகேந லோஹமணிநா) (யதாஸோம்யைகேந நகநிக்ருந்தநேந) பொன் கட்டியை அறிந்தால் காப்பு குண்டலம் முதலான அதின் காரியங்கள் அறியப் பட்டனவாக ஆகிருப்போலவும், எஃகின் கட்டியை யறிவதனுல் நகத்தீண்டி (நகத்தை வாங்கும் ஆயுதம்) முதலான அதின் காரியங்கள் அறியப்பட்டனவாகிருப் போலவும், ஜகத்துக்கு உபாதான காரணத்தை யறிந்தால் ஜகத்தெல்லாம் அறியப்பட்டதாகக் கூடும் என்று கருத்து.

இவ்வளவால் மண் முதலில் உருண்டையாய் பிறகு அந்த ஆகாரத்தை விட்டு பானை சட்டி முதலானவையாக மாறுதலடைகிறது. அங்கு மண் ஒன்றே உருண்டையென்னும் ஆகாரத்தால் காரணமாயும் பானை சட்டி முதலிய ஆகாரத்தால் கார்யமாயும் ஆகிறது. ஆகையால் கார்ய காரணங்களுக்கு ஆகாரபேதமே யொழிய வஸ்து பேதமில்லை. ஆனதால் காரணமான மண் உருண்டையை அறிந்தால் கார்யமாகிற பானை முதலானவை தன் ஆகாரத்தால் (கார்யாகாரத்தால்) அறியப் படாததாய் மண்ணுகிய தன் காரண ஸ்வரூபத்தால் அறியப் பட்டதாகிறது.

" நவை நூநம் பகவந்தஸ்த ஏதத்வேதிஷு: । யத்த்யேதத வேதிஷ்யந் கதம் மே நாவக்ஷ்யந் ' இதி । பகவாம்ஸ்த்வேவ மே தத் ப்ரவீது ' இதி । ' ததா ஸோம்ய! ' இதி ஹோவாச ॥

இதி ப்ரதம: கண்ட: ।

அப்படியே ப்ரஹ்மம் ஒன்றே ப்ரபஞ்ச ரூபமாய் மாறுதல் அடைந்து காரணமாயும் கார்யமாயும் ஆகிறது. ஆகையால் காரணமான ப்ரம்ஹத்தை யறிந்தால் ப்ரபஞ்சரூப கார்யமும் ப்ரபஞ்ச ரூப கார்யாகாரத்தால் அறியப் படாததாய் காரணமான ப்ரம்ஹ ஸ்வரூபத்தால் அறியப்பட்டதாகிறது. முன் உள்ளது காரணம் பின் உண்டாவது கார்யம் என்றன்றோ கார்ய காரணங்களின் வ்யவஸ்தை? அப்படியிருக்க ஒரே வஸ்து எப்படி காரணமாயும் கார்யமாயுமாகக் கூடும் என்கிற சங்கையைப் பரிஹரிப்பதற்காக (வாசாரம்பணம்) என்று சொல்லப் பட்டிருக்கிறது. கார்யாகாரத்தால் அறியப் படாததாய் காரணுகாரத்தால் அறியப்படுகிறது என்று அதின் பொருள். இதனுல் ஒரே வஸ்து ஆகார பேதத்தால் காரணமாயும் கார்யமாயும் ஆகக் கூடும் என்று முன் சொன்ன சங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. ஆகையால் ப்ரஹ்மம் ஒன்றே காரணமாயும் கார்ய ரூப ப்ரபஞ்ச ரூபமாயும் இருக்கிறது என்று புத்திரனுக்கு தெரிவித்ததாயிற்று.

(நவை நூநம்) என்னுடைய ஆசார்யர் இந்த விஷயத்தை அறிந்தவர் அன்று. அறிந்திருந்தால் ப்ரியனுன எனக்கு ஏன் சொல்லி யிருக்க மாட்டார்? ஆகையால் தாங்களே எனக்கு சொல்லவேண்டுமென்று புத்ரனுன ச்வேதகேது பிதாவைப் பார்த்துச் சொன்னுர். பிதாவும் அப்படியே சொல்லுகிறேன் என்றுசொல்ல ஆரம்பித்தார்.

சாந்தோக்யம் ஆருவது அத்யாயம் முதல்கண்டம் முற்றிற்று.

ஃயஉ஀ி தீயஃ வண்ஃ ॥

‘ ஸ஡ெவ ஸொஜெ)ஃ௨ ஞ ஆஸீ஡ெகஜெவா஀ி தீய௴ ।

ப்ரபஞ்சத்துக்கு ப்ரஹ்மம் ஒன்றே உபாதான காரணமாயும் நிமித்த காரணமாயும் இருக்கிறது என்று பிதா முன்பு தாம்சொன்ன அர்த்தத்தை நிரூபிக்கத் துடங்குகிறார். பானை, சட்டி முதலானவைகளுக்கு ம்ருத் உபாதான காரணம் என்பதை நிரூபிக்கத்துடங்குகிற ஒருவன் இந்த பானை சட்டி முதலான இவையெல்லாம் காலையில் மண்ணாக இருந்தது அது குயவன் வ்யாபாரத்தால் பானை சட்டி முதலானவையாக ஆயிற்று என்று காட்டுகிறாப்போல் இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்குமுன் இப்படியிருந்த தென்று முன் ஆகாரத்தைக்காட்டி இப்பொழுது இப்ப்ரபஞ்ச ரூபமாயிருக் கிறதென்று காட்டுகிறார்.

(ஸ஡ெவஸொஜ்ய) தேவன் மனுஷ்யன் இது முதலிய ரூபங்களோடும் பெயர்களோடும் பஹுவாயிருக்கும் சேதனா சேதன ரூபமான இப் ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முன் ஒன்றாயும் இரண்டாவது இல்லாததாயுமான ஸத்தாகவே யிருந்தது என்பது இந்த வாக்யத்தின் பொருள்.

இது ப்ரம்ஹத்துக்கு ப்ரபஞ்சத்தைக் குறித்து உபாதான காரணத் வத்தை நிரூபிக்கவந்த ப்ரகரணமாகையால் இங்கு ஸத் என்னும் பதம் ப்ரஹ்மத்தை சொல்லுகிறது. ஆகையால் இந்த சேதனா சேதனரூப ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரம்ஹமாயிருந்தது என்று மேல் பார்வையில் அர்த்தம் தோன்றுகிறது. இதனாலும் முன் காட்டிய மண் உருண்டை, பொன்கட்டி, எஃகின்கட்டி இம்மூன்று த்ருஷ்டாந்தங்களாலும் ப்ரஹ்மம் இந்த ப்ரபஞ்சரூபமாக மாறுதலடைந்திருக்கிறது என்றும் இப்போது பஹுவாயிருப்பது முன் ஏகமாயிருந்தது என்றும் சொல்வதனால் ஏகத்வம் அதற்கு காரணாவஸ்தையென்றும் பகுத்வம் அதற்குக் கார்யா வஸ்தை யென்றும் மேல் பார்வையில் தோன்றுகிறது. இந்த வாக்யத்தின் உண்மையான தாத்பர்யம் இதே அத்யாயத்தில் எட்டாவது கண்டத்தில் ஐத தாத்ம்யமிதம் ஸர்வம் தத் ஸத்யம் ஸ ஆத்மா என்கிற வாக்யங்களால் ஸ்பஷ்டமாகிறது. ஐததாத்ம்யம் ஏதத் ஆத்மா யஸ்ய தத் ஐததாத்ம்யம் ஐததாத்மைவ ஐததாத்ம்யம். இங்கு ஐதத் சப்தத்தால் முன் ஸத் என்கிற சப்தத் தால் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது. இங்கு ஆத்மா என்பது உயிர். ஆக இதனால் இச்சேதனாசேதனரூப ப்பரபஞ்ச மெல்லாம் இந்த ப்ரஹ்மத்தை உயிராக உடையது. ப்ரஹ்மத்துக்கு இந்தச் சேதனா சேதனரூப ப்ரபஞ்சமெல்லாம் சரீரம் என்று அர்த்தம். தத் ஸத்யம். தத்

‘ தஸெக்ஷத ஆஹாஃஸ஡ெவஜ௨ ஞ ஆஸீஜெகஜெவா஀ி தீயஃ;
தஸ்யாஃஸத்யஜாயத । கஃதஸ்யஃ ஸஂஃஸொஜெ)வஷ்ஸா)

அந்த ப்ரஹ்மம் ஸத்யம்; ஸ்வரூபத்தில் விகாரமில்லாதது என்று அர்த்தம் (ஸத்யவமாவது ஸ்வரூபத்தில் எப்பொழுதும் மாறுதல் இன்றிக்கே ஏகரூபமாயிருக்கை) ஸ ஆத்மா; ஸஃ அந்த ப்ரம்ஹமானது ஆத்மா இந்த சேதனா சேதனரூப ப்ரபஞ்சத்துக்கு உயிர் என்று இந்த வாக்யங்களுக்கு அர்த்தம்.

இங்கு ப்ரம்ஹத்துக்கு ஸ்வரூபத்தில் மாறுதல் இல்லை என்று சொல்லியிருக்கிறபடியால் ஏகத்வமாகிற காரணாவஸ்தையும், பகுத்வமாகிற கார்யாவஸ்தையும் ப்ரம்ஹத்துக்கு ஸ்வரூபத்தில் இல்லையென்று கழிக்கப் பட்டதாகிறது. ப்ரம்ஹத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் சரீராத்மபாவம் (உடலும் உயிருமாயிருக்கும் நிலை) சொல்லியிருப்பதால் பால்யம் யௌவனம் முதலான அவஸ்தைகள் சரீரத்தின் வழியாக ஜீவாத்மாவுக்குச் சொல்லப்படுகிறாப்போல் ஏகத்தம் பகுத்வம் என்கிற காரணாவஸ்தை கார்யாவஸ்தைகள் ப்ரஹ்மத்துக்கு சரீரமாகிய ப்ரபஞ்சத்தின் வழியாக ப்ரஹ்மத்துக்கு சொல்லப்படுகிறது என்றும் ப்ரஹ்மத்துக்கு சரீரமான ப்ரபஞ்சத்தை சொல்லும் சப்தங்கள் எல்லாம் பாலன் யுவா இது முதலிய சரீரத்தைச் சொல்லும் சப்தங்கள் அதற்கு உயிரான ஜீவாத்மாவின் பர்யந்தம் சொல்லுகிறாப்போல் ப்ரஹ்மபர்யந்தம் சொல்லுகிறது என்றும் காட்டப்படுகிறது. இங்கு ப்ரஹ்மத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் சரீராத்ம பாவம் சொல்லுவதற்கு இதுதான் ப்ரயோஜனம். இங்கு, ‘ ஆத்மசப்தம் ஸ்வரூபத்தை சொல்லுகிறது. ஆகையால் இந்த ப்ரபஞ்சமெல்லாம் ப்ரஹ்மஸ்வரூபம் என்று ஏன் அர்த்தம் கொள்ளக்கூடாது?’ என்னில் அப்போது சேதனமான ப்ரஹ்மத்துக்கும் அசேதனமான ப்ரபஞ்சத் துக்கும் ஸ்வரூபைக்யம் சொன்னதாகும். ஸத் என்று துடங்கப்பட்ட ப்ரஹ்மத்துக்கு தஸெக்ஷத என்று ஸங்கல்பமாகிய ஜ்ஞானவிசேஷம் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் ஹந்தாஹமிமாஸ்திஸ்ரொ தேவதாஃ என் கிற இடத்தில் ப்ரஹ்மம் நான் என்று தன்னைச் சொல்லிக்கொண்டதாக சொல்லியிருக்கிறபடியாலும் அந்த ப்ரஹ்மம் சேதனம் என்று கிடைக் கிறது. ஆகையால் இந்தச் சேதனமான ப்ரஹ்மத்துக்கும் அசேதனமான ப்ரபஞ்சத்துக்கும் ஸ்வரூபத்தில் ஐக்யம் அனுபபந்நம். ஆத்ம சப்தமும் சேதனன் விஷயத்தில் ஸுப்ரஸித்தம். ஆகையால் ப்ரஸித்த அர்த்தத்தை விட்டு அப்ரஸித்தமான அர்த்தத்தை க்ரஹிப்பதில் காரணம் இல்லை. ஆகையால் ஆத்ம சப்தத்துக்கு உயிர் என்றே அர்த்தம். ஐதம் ஸர்வம்

ஜிதிஷொவாவ । கயஉஷ தஷஜாயெதெதி । ஷதெவ ஷொஜெ-
உஊரு ஆஷீதெகமெவாஷிதீயடி ,।

என்கிற இடத்தில் அசேதனம் மாத்ரம் சொல்லப்படுகிறது என்று சொல்லவும் கூடாது. அப்போது எல்லாவற்றையும் சொல்ல ஸாமர்த்ய முள்ள ஸர்வசப்தத்தின் ஸாமர்த்யத்தைக் குறைக்க வேண்டிவரும். ஆகை யால் ப்ரு ஹதாரண்யகோபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் யஸ்யா த்மாஶரீரம்,என்று பரமாத்மாவுக்கு சரீரமாகச் சொல்லப்பட்ட ஜீவாத்மாக் களையும் கூட்டி சேதனசேதனங்கள் எல்லாம் இந்த ப்ரஹ்மத்துக்கு சரீரம் என்றே இந்த வாக்யத்துக்கு அர்த்தம். ஆகையால் "ஸதெவஸொ ஜெஉடி" என்னும் இந்த வாக்யத்தில் பகுத்வமாகிற ப்ரபஞ்சத்தின் கார்யாவஸ்தையைச் சொல்லும் "ஊடி" பதத்தால் நாமரூப விபாகத்தை உடைத்தாயிருக்கையாகிற பகுத்வத்தையுடைய சேதன சேதன ரூப ப்ரபஞ்ச சரீரக ப்ரஹ்மத்தைச் சொல்லுவதில் தாத்பர்யம்.

ஏகத்வமாகிய காரணவஸ்தையைச் சொல்லும் ஷகடி என்கிற சப்தத்தால் நாமரூப விபாகத்தை இழந்திருக்கையாகிற ஏகத்வத்தை யுடைய சேதன சேதனரூப ப்ரபஞ்ச சரீரகம் என்று சொல்வதில் தாத்பர்யம். ஆக மொத்த வாக்கியத்தில் நாமரூப விவாகத்தையுடைய விந்த சேதனசேதனப்ரபஞ்சசரீரக ப்ரம்ஹம் ஸ்ருஷ்டிக்கு முன் நாமரூப விபாகத்தை யிழந்த சேதன சேதனரூப ப்ரபஞ்ச சரீரகமான ப்ரம்ஹமாயிருந்தது என்று சொல்வதில் தாத்பர்யம் என்று இந்த வாக் யங்களால் ஸ்பஷ்டமாகிறது. தடைக்ஷதவஹு ஸ்யாடி. என்கிற மேல் வாக்யத்தில் "தக" ஏகமாயிருந்த அந்த ப்ரம்ஹம் பகுவாகக் கடவோம் என்று ஸங்கல்பித்தது என்று சொல்லி நாமரூபெவ்யாகரொக என்று அதற்கு மேல் வாக்யத்தில் நாமரூபங்களை உண்டாக்கிற்று என்று சொல்லி யிருக்கிறபடியால் நாமரூபவிபாகத்தை யுடைத்தாயிருக்கை பகுத்வம் என்றும், நாமரூபவிபாகமற்றிருக்கை ஸ்ருஷ்டிக்கு முன் இருந்த ஷகத்வம் என்றும் கிடைக்கிறது. இவ்வளவால் ப்ரபஞ்சரூப கார் யத்துக்கு உபாதானகாரணத்தைக் காட்டிற்று. (பானை, சட்டி முதலான கார்யங்களுக்கு உபாதானகாரணம் என்றும் நிமித்தகாரணம் என்றும் இரண்டு காரணங்கள் உண்டு. கார்யரூபமாய் மாறுதலடைவது உபாதான காரணம். மாறுதலை யடையும்படி செய்யும் காரணம் நிமித்த காரணம் என்று சொல்லப்படுகிறது.) இங்கு ப்ரபஞ்சரூபகார்யத்துக்கு நிமித்த காரணம் எது என்னில் ப்ரம்ஹம் தவிர வேறு நிமித்த காரணம் இல்லை. நிமித்த காரணமும் ப்ரம்ஹமே என்று காட்டுகிறது அஷிதீயம் என்னும் பதம்.

ஸ்ரீ:

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. ந்யாயஸித்தாஞ்ஜனம்—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 0 (வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்த்தி களுக்கும் அரைவிலை).
2. வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் (விலை. ரூ. 3 0 0
3. ஸ்ரீ. பஞ்சஸ்தவம் (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவா சார்யரின் உரையுடன் ரூ. 0 2 0
4. ஜிதந்தே ஸ்தோத்ரம்—(ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை யின் வ்யாக்யானத்துடனும் புத்தங் கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வான். ஸ்ரீநிவாஸாசாரியருடைய வ்யாக்யா னத்துடனும் கூடியது). ரூ. 0 6 0
5. ஸ்தோத்ர ரத்னம்—(ஸ்ரீ ஆளவந்தார்—ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8 0
6. ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தத்வடீகை (ஸ்ரீ பாஷ்யத் திற்கு விரிவானவ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளியாகும்.

हिंगु
காயம்

"हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥"



சுத்தமான பெருங்காயம் ஹ்ருதயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரமி களையும் வாத தோஷத்தையும் கப தோஷத்தையும் போக்கும்; மலபந்தம் வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகாரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No M. 916

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்ஞ சாஸ்திரமே ப்ரமாண மென்கிறூர் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனுல் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படா் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சுடமா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत् ।
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல்பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினுல் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதருஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

Vol. 24] MARCH 1936 [Part 9

Editors: S. VASUDEVACHARIAR / V. V. SRINIVASA AIYANGAR

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

JUL 1936 MADRAS

யுவ ஹு

மாசி மீ

பத்ராதிபர்கள்:

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபை
(லிமிடெட்)

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 39, முத்தியாலு செட்டி தெரு, வெப்பேரி, சென்னை).

டைரேக்டர்கள்.

வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ப்ரஸிடெண்டு.	டி. டி. ஸ்ரீநிவாஸாசாரியர், (அட்வொகேட்)
பி. ரங்கஸாமி ஐயங்கார், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) ஜெனரல் ஸெக்ரிடரி.	என். டி. சாமண்ணு, (ஸொலிஸிடர்).
டி. ராஜகோபாலாசாரியர், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) எக்ஸிக்யூடிவ் ஸெக்ரிடரி.	எம். ஸுதர்சன ஐயங்கார், (எம். டி. பிரதர்ஸ்).
எஸ். ஜகன்னுதாசாரியர் ஷை	ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார், (கோயமுத்தூர்).
எஸ். ஆராவமுதய்யங்கார், (அட்வோகேட்) டிரெஷரர்.	டி. ஈ. சடகோபாசாரியர், அட்வொகேட் திருப்பாபுலியூர்
	டி. ஆர். வி. சர்மா, ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யவும் ஷை ஸித்தாந்த க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்வதற்காகவும் முக்கியமாக இச்சபை ஏற்பட்டுள்ளது. தத்காலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திற் கெனவே சுமார் 25 வருஷ காலமாக நடைபெற்றுவரும் **வேதாந்த தீபிகை** யென்னும் மாதத் தமிழ் பத்ரிகையை இச்சபையார் ஏற்றுக்கொண்டு விஷயங்களை எல்லோரும் எளிதில் அறியக் கருதி இனிய தமிழ் நடையில் ப்ரசுரம் செய்து வருகிறார்கள்.

வருஷச் சந்தா. ரூ. 3—0—0   **தனி ப்ரதி** 0—4—0

ஸபையில் அங்கனத்தினர்களாகச் சேருகிறவர்கள் ஷேர் 1 க்கு ரூ. 50 செலுத்த வேண்டும். இதை சௌகரியமான தவணைகளிலும் செலுத்தலாம். அங்கத்தினர்களுக்கு ஸபையின் ப்ரசுரமான **ந்யாயஸித்தாஞ்ஜனமும்** இவ்வருஷத்திய தீபிகையும் விலை யன்னியில் கொடுக்கப்படும்.

ஸ்ரீ:

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. ந்யாயஸித்தாஞ்ஜனம்—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 0 (வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்திகளுக்கும் அறைவிலை).
2. **வேதார்த்த ஸங்க்ரஹம்**—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் (விலை. ரூ. 3 0 0
3. ஸ்ரீ பஞ்சஸ்தவம் (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவாவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8 0
4. ஸ்ரீ **வேதாந்த தேசிகரின் தத்வடீகை** (ஸ்ரீ பாஷ்யத்திற்கு விரிவானவ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளியாகும்.

हिंगु

காயம்

" हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
त्रिबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥ "



சுத்தமான பெருங்காயம் ஹ்ருதயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரமிகளையும் வாத தோஷத்தையும் கப தோஷத்தையும் போக்கும்; மலபக்தம் வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் **L. G.** குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய்   சென்னை   கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ ஹூ—மாசி மீ [ஸஞ்சிகை 9

விஷய ஸூசிகை.

1. ஸம்பாதகரின் குறிப்புகள் 436
2. கீதா ஸ்வரூபம் 439
[ஸ்ரீ. உப. டி. ஸுந்தராசார்யர்]
3. கம்பரும் கோதையும் 443
[ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.]
4. ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் 456
[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
5. விவாஹத்திற் குரிய வயது 465
[ஸ்ரீ. உப. வே. அநந்தாசார்யர்]
6. மீமாம்ஸா ஸங்க்ரஹம் 469
[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]
7. வித்தியாஸ்தாநங்கள் யாரால் நிறம்பெற்றன ? 480
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசாரியார்.]
8. விசார விவாத பக்கங்கள் 490
9. ஸத்வித்யை 9—16
[ஸ்ரீ. உப. கபிஸ்தலம் மஹாமஹோபாத்யாய தேசிகாசார்ய ஸ்வாமி]
10. திவ்யஸூரி சரிதம் 201—216
[வங்கீபுரம் கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸசார்யர்]

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் கார்யதர்சி, 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, 'வேப்பேரி, 'மதிராஸ்' என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றை கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணி விலாஸ் போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன் மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஏஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புகள்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

நமது மதத்தின் உண்மை

" In Hinduism God is above morality ; to Him it is an irrelevance." " God is not essentially and centrally righteous." "There is no necessary connection between Bhakti and character." " The type of devotion advocated by Hindu Sastras gives no positive help to the living of the moral life." " The ethical problem is not central in the thought of the Hindu saints ; the fervent glow of emotion makes all else seem trivial."

[' ஹிந்துக்களால் ஒத்துக்கொள்ளப்படும் பகவான், தர்மம் அதர்மம் என்னும் வ்யவஸ்தையைத் தாண்டி நிற்கிறான்; அவன் எவ்வித அதர்மத்தைச் செய்த போதிலும், அதனால் அவனுடைய மஹிமைக்கு எவ்வித குறைவும் நேரமாட்டாது என்பது ஹிந்துக்களின் மதக் கொள்கை. அவர்களுக்கு, பக்தி ஒன்றே பகவத் க்ருபையின் ஸம்பாதநத்திற்குப் போதுமான ஸாதநம். பக்தன் எவ்வித அக்ரமங்களைச் செய்தாலும், அவனுடைய பக்தி அவனைக் கரையேற்றி விடுமென்றும், பக்திக்கும் நன்னடத்தைக்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.] இவ்வாறு ஒரு பாச்சாத்ய கிருஸ்தவப் பாதிரி வித்வான், தாம் இயற்றியிருக்கும் ஒரு க்ரந்தத்தின் முகவுரையில் எழுதி இருக்கிறார். இப்படிச் சொல்வது உண்மையன்று என்பதை நாம் கொஞ்சம் விவரிக்கிறோம்.

நமது சாஸ்த்ரங்களெல்லாம் நமது பகவானை உபய லக்ஷணன் என்று ப்ரதிபாதிக்கின்றன. எவ்வித தோஷமுமற்றும் ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாகவும் அவன் இருக்கிறான் என்பதே உபய லக்ஷணன் என்பதன் பொருள். ச்ருதி, பகவானுடைய ப்ரதாந குணங்களைச்

சொல்லி வருகையில், அபஹத பாப்மத்வத்தை மிக ப்ரதாந குணமாகக் கூறியிருக்கின்றது. 'அபஹத பாப்மா' [अपहतपाप्मा] என்பதற்கு 'போக்கடிக்கப் பட்ட பாபங்களை [அதாவது, ஸுக்ருத துஷ்க்ருதங்களை உடையவன்' ध्वस्तपाप्मा] என்று பொருள் கொள்வது சரியன்று என்றும், 'ச்லேஷியாத பாபத்தை உடையவன்' [अश्लिष्टपाप्मा] என்று பொருள் கொள்வதே சரியாகும் என்றும் நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஏனென்றால், அந்த ச்ருதியே, 'அவனைப் பகல் இரவுகள் அடையவில்லை அதாவது, அவன் காலத்தால் அளவிடப்படக் கூடாதவன், அவனை ஸுக்ருத துஷ்க்ருதங்கள் அடையமாட்டா' [नैनं सेतुमहोरात्रे तरतो न सुकृतं न दुष्कृतम्] என்றும் சொல்லுகின்றதன்றோ? அதாவது, பகவானுடைய அபஹத பாப்மத்வம் ஒரு பொழுதும் ஒருவித திரோதாநத்தையும் அடையாமல் எப்பொழுதும் ஆவிர்ப்பூதமாகவே இருக்கின்றது என்று சொன்னதாயிற்று. பகவானை இவ்விதம் நிரஸ்த நிகில தோஷனாக நமது சாஸ்த்ரங்கள் ப்ரதிபாதிக்கையில், அந்தச் சாஸ்த்ரங்களை ப்ரமாணமாக அவலம்பித்து 'ஈச்வரன் ஒருவன் உண்டு' என்று நம்பும் நாம், அவனை அதர்மங்களுக்கு அதீதனென்றும் 'அவன் எவ்வித பாபத்தைச் செய்த போதிலும், அவனை அது பாதிக்கமாட்டாது' என்றும் ஒத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வது உண்மை ஆகுமோ? "रामो विग्रहवान् धर्मः" [ராமன், மூர்த்தீகரித்து வந்துள்ள தர்மமே] என்று நமது இதிஹாஸமும், பகவானுடைய தர்மிஷ்டத் தன்மையைப் புகழ்கின்றது. அந்த ராமனை தைவமென்று கொண்டாடும் நாம் அதர்மத்தை ஆதரிப்போமா? உண்மை என்னவென்றால், நமது பகவான், ஒருகாலும் ஒரு இடத்திலும் ஒரு ப்ரகாரத்தாலும் ஒருவித தோஷத்தாலும் ஸ்பர்சிக்கப்படாமலே ஸ்வபாவத்தாலேயே பரம சுத்தனாக இருக்கிறான் என்பதே. அவன் ஸமஸ்த கல்யாண குணங்களுக்கும் இருப்பிடம்.

இரண்டாவது, நாம், பக்திக்கும் நன்னடத்தைக்கும் ஒருவித ஸம்பந்தமும் இல்லையென்று சொல்லுகிறோம் என்று நம்மை நிந்திப்பதும் சரியன்று. நன்னடத்தை இராதவனுக்கு பக்தியானது உதவாது என்று நமது சாஸ்த்ரங்கள் பலவிடங்களில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றன.

"नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥"

[அக்ருத்ய கரணங்களிலிருந்து எவன் நிவ்ருத்தனாகவில்லையோ, எவனுடைய வாக் முதலிய பாஹ்யேந்த்ரியங்கள் சாந்தியைப் பெறாமல் இருக்கின்றனவோ, எவனுடைய சித்தமானது அவ்யாகுலமாக இல்லையோ,

எவனுடைய மநஸ்ஸானது அடங்காமல் இருக்கிறதோ, அவன் பக்தியினால் மாத்ரம் பகவானை அடைய மாட்டான்] என்பது ச்ருதியின் வார்த்தை. இந்த ச்ருதியின் அர்த்தத்தை விவரித்திருக்கும் நமது பூர்வாசார்யர்களும்,

"यस्तु दुश्चरितनिषेधमतिलङ्घ्य परमात्मोपासनमविगुणं चिकीर्षति, तस्य दुश्चरितविरतिरूपाङ्गवैगुण्यादुपासनसाद्गुण्यं न सिध्यति"

[ஒருவன் துச்சரிதத்திலிருந்து விலகாமல் இருந்தால், அவன் பரமாத்ம உபாஸநத்தை வேறு அம்சங்களில் திருப்திகரமாக அநுஷ்டித்த போதிலும், உபாஸநத்திற்கு அங்கமாக இருக்கும் நன்னடத்தை அவனிடம் நிறைவேறவில்லையாதலால், அங்கியாகிற உபாஸநம் அவனுக்கு ஸித்தியாமலே போய்விடும்] என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். புராணங்களில் சிலவிடங்களில், பாபிஷ்டர்களும் பக்தியின் மஹிமையால் மோக்ஷத்தை அடைந்தார்கள் என்று சொல்லப்பட்டிருந்த போதிலும், "**क्षिप्रं भवति धर्मात्मा**" என்னும் ந்யாய ப்ரகாரம் அந்தப் பாபிஷ்டர்களும் பக்தியின் மஹிமையால் சீக்ரத்திலேயே தர்மாத்மாக்களாகி, அதனால் அங்க பூர்த்தியை ஸம்பாதித்துக் கொண்டு பிறகு சுத்தமான பக்தியைச் செய்து நல்லகதியை அடைகிறார்கள் என்பதே அந்தப் புராணங்களின் தாத்பர்யம் என்று நாம் அறிதல் வேண்டும். இது தான் வஸ்து ஸ்திதி. இதற்கு விருத்தமாகச் சொல்லப் படுவதெல்லாம் பிசகான வார்த்தைகளே.

In Hinduism, the most prominent feature of God's character is His righteousness. He is perfectly holy Himself and from His will have sprung the moral nature and moral ideals of man. In His dealings with us He insists above all things on the supremacy of conduct. Worship, meditation, sacrifice, philosophy are all worthless in His eyes, ifdivorced from righteousness. What is good and what our Sastras require of us (Hindus) is 'to do justice, to love mercy and to walk humbly with our God.'

இது தான் நமது மதத்தின் ஏற்றத்திற்கு முக்ய காரணம். இதற்கு விருத்தமாகச் சொல்வதெல்லாம் நமது மதத்தை உள்ளபடி அறியாதவர்களின் வார்த்தைகளே.

ஸ்ரீ:

கீதா ஸ்வரூபம்

[ஸ்ரீ. உ.வ. டி. சுந்தராசாரியர், சீய்யாழி]

[இதுவோர் அழகாய் அமைக்கப்பெற்ற கட்டுரையென்றே கூறக்கூடும். கீதையை ஓர் தேவதா ரூபமாகவும் அங்கங்கள் அமைந்த ஒரே அங்கியாகவும் விஸ்தாரம் செய்திருப்பது ரஸவத்தானது; விசிஷ்டாத்வைதிகளான நம்மவர்களால் மிகவும் கொண்டாடத் தக்கது. ப.]

ஒன்றை அறிதல் என்றால் அதை வழிபடுதலே ஆகுமென்பது நம் ஆசார்யர் அருளிச்செய்ததோர் அருமையான ரஹஸ்யம். [**वेदनमुपासनमित्यवगम्यते**] ஒன்றை நாம் வழிபடுவதற்கு அதனிடத்திலுள்ள ப்ரேமையே முக்ய காரணமாகிறது. அப்பிரேமை என்பது தக்கதோர் ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை அவலம்பித்தே நிலை பெற்றிருப்பதை நாம் எங்கும் காண்கிறோம். ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு திருவாய் மலர்ந்தருளிய கீதை என்பதை எடுத்துக்கொண்டு அதில் இந்த ந்யாயத்தை ஆரோபித்துப் பார்ப்போம். அதைக் கேவலம் ஓர் வாக்ய ஸமூஹமாகக் கருதும் பர்யந்தம் அதை நாம் உபாஸிக்கவேண்டிய அளவுக்கு அதில் நமக்கு அன்பு பிறக்காது. ஆகவே அதற்கிசைந்த ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் நம் மனதில் ஏற்படவேண்டியது இன்றியமையாத தர்மமாகிறது.

கீதையை உபாஸித்தல் என்பதற்கு உபநிஷத்துக்களிலேயே ஸாத்ருச்யங்கள் பல காணப்படுகின்றன. முக்யமாக சாந்தோக்யோபநிஷத்தில் உபக்ரம கௌரவத்தைப் பெற்றதான **ओमित्येदक्षरमुद्गीथमुपासीत** என்பதை நாம் உபமானமாகக் கொள்ளலாம். உத்கீதத்திற்கு நாஸிகை முதலிய பற்பல ஸ்வரூபங்களைக் கற்பித்து, தேவர்கள் உபாஸிக்க ஆரம்பித்தபொழுது, அதை அஸுரர்கள் கெடுத்ததைக் கண்டு முக்யப்பிராண ஸ்வரூபமாக அதை அவர்கள் உபாஸித்து க்ருதார்த்தர்களானார்களென்று அவ்வுபநிஷத்தில் வர்ணிக்கப்படுகிறது. கீதை போன்றதை அத்யந்தப் பிரேமையுடன் உபாஸித்தல் சாஸ்த்ரீயம் என்பதும், ஆனால் அதற்குரியதோர் ஸாக்ஷாத்காரத்தை நம் மனதில் பெறவேண்டியது அவசிய மென்பதும் இதனால் நமக்கு உணர்த்தப்படுகின்றது.

ஸ்ரீ பகவத்கீதைக் குரியதோர் ஸ்வரூப ப்ரகாரத்தை உபநிஷத்துப் பாகங்களிலேயே நாம் தேடப் புகுந்தால் தைத்திரீயத்தில் அதை நன்கு காணலாம். '**इदमेव शिरः, अयं दक्षिणः पक्षः, अयमुत्तरः पक्षः, अयमात्मा, इदं**

पुच्छं प्रतिष्ठा' என்று பஞ்சாவயவ விசிஷ்டமான ஓர் அவயவியாய் நிர்த்தாரணம் செய்துகொள்வதே, அந்த உபநிஷத்தில் ஒருவன் ஒன்றின் யதார்த்த ஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதற்கு ஸாதனமாக உபதேசிக்கப் படுகிறது. அவ்வித ப்ரகாரத்தையும் ப்ரக்ரியையையும் அநுஸரித்து கீதைக்கு ஏற்படும் ஸ்வரூபம் ஏதே யாகும்? கீதையானது, **न योत्स्ये** என்று தனக்குரிய கர்மாவை விட்டொழியப் புகுந்த அர்ஜுநனுக்கு **क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप** என்னும் சோதனையை முன்னிட்டு அவதரித்ததாகையால் அதற்கு '**कर्म**' என்பதே சிரஸ்ஸாகிறது. அதுவேதான் ப்ரதம ஷட்கத்தின் முக்ய விஷயமாய் இருப்பதையும் அடையப் பெற்றிருக்கிறது. அதற்கடுத்துள்ள மத்யம ஷட்கத்தின் ஸாரஸர்வஸ்வமான **भक्ति** என்பதே—**अयं दक्षिणः पक्षः** என்னும் நிர்தேசத்தைப் பெறக்கூடியதாகும். அதற்கு மடுத்துள்ள அந்திம ஷட்கத்தில்* விவரிக்கப்பட்ட **ज्ञानम्** என்பது—**अयमुत्तरः पक्षः** என்பதாகும்*. யாவற்றிற்கும் இறுதியில் பூர்வாசார்யர்களால் சரம ச்லோக மென்று கொண்டாடப் பெற்ற **सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज । अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।** என்பதால் ப்ரதிபாதிதமான '**சரணாகதி**' (**शरणागति**) **इदं पुच्छं प्रतिष्ठा** என்பதற்குரிய தாகும். இப்படிக்கோர் ஸாக்ஷாத்காரத்தைப் பெற்ற கீதையென்னும் பரதேவதைக்கு **अयमात्मा** என்றிருக்கப் பெற்றது ஸ்ரீ க்ருஷ்ணனே. ஆனால், இங்கோர் சங்கை உண்டாகலாம். சிரஸ், பக்ஷங்கள், புச்சம் இவைகளால் ரூபிக்கப் பெற்ற கர்ம, பக்தி, ஞானம், சரணாகதி, இவைகள் ஸாதந கோடியில் உள்ள யோகங்களென பொதுவாய் பாவிக்கப் படுகின்றன. ஸ்ரீ க்ருஷ்ணனோ இவைகளால் ஸாதிக்கப் படவேண்டியவர் ஸாதந யோகங்களுக்கு '**आत्मा**' அல்லது நடு உடலாக ஸாதிக்கப்பட வேண்டியது எப்படியிருக்கக் கூடுமென்பது தான். இதற்கு ஸமாதானம். ஸ்ரீ க்ருஷ்ணனை ஸாதிப்பதற்கு **यमेवैष वृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्** என்கிற உபநிஷத் வாக்யப்படி ஸ்ரீ க்ருஷ்ணனே முக்ய ஸாதநமாகிறார். மேலும், ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் எப்படியோ அதே ப்ரகாரம் அவரைப் பற்றுதற்குரிய யோகங்களிலேயும் ஸாத்யபுத்தி பண்ணுவது ஸாதுக்களுக்கு இயல்பாய் இருக்கிறது. உதாஹரணமாக:—

याप्रीतिरविवेकानां विषयेष्वनपायिनी ।
त्वामनुस्मरतस्सा मे हृदयान्नापसर्पतु ॥

---

*பூர்வ ஷட்கத்தில் ஜ்ஞாந யோகம் கர்மயோகம் இவை இரண்டின் விவரணமும், மத்யம ஷட்கத்தில் பக்தியோகத்தின் விவரணமும், அந்திம ஷட்கத்தில் முதல் இரண்டு ஷட்கங்களிற் சொல்லப்பட்டுள்ள தத்வஹிதங்களின் விசோதநமும் செய்யப்படுகின்றன என்பது பூர்வாசார்யர்களுடைய வ்யாக்யாநம். (ப.)

नाथ योनिसहस्रेषु येषु येषु भवाम्यहम् ।
तेषु तेष्वच्युता भक्तिरच्युतास्तु सदा त्वयि ॥

என்று ப்ரஹ்லாதாழ்வான் தனக்கு பரம ப்ராப்யமாய் பக்தியை ப்ரார்த்தித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகையால் ஸ்ரீ க்ருஷ்ணனை கீதாஸ்வரூபத்துக்கு ஆத்மா அல்லது மத்ய தேக பாகமாய் ரூபிப்பதில் அநுபபத்தி ஒன்றும் இல்லை. ஆகவே கீதையின் ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் அல்லது **पुरुषविधताम्** என்பது அடியிற்கண்டவாறு உள்ளது:—

तस्याः कर्मैव शिरः । भक्तिर्दक्षिणः पक्षः । ज्ञानमुत्तरः पक्षः । श्रीकृष्ण आत्मा । शरणागतिः पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ।

गीता सुगीता कर्तव्या किमन्यैः शास्त्रसंग्रहैः ।
या स्वयं पद्मनाभस्य मुखपद्माद्विनिःसृता ॥

இனி இந்த ஸ்வரூபத்தைச் சற்று நிதானிப்போம். மானவாதி சாஸ்திரங்கள்கூட கேவலம் பௌருஷேயங்கள். ஸ்ரீ பகவத் கீதையோ பரம புருஷனின் வதனாரவிந்தத்திலிருந்து வெளிவந்தவள். அந்த ஸர்வேச்வரனுடைய வர்ண ஸ்தானங்களிலிருந்து புறப்பாடுடைய யாவும் திவ்ய ஸம்ஸ்கார ஸம்பன்னையான ஸாக்ஷாத் ஸரஸ்வதியின் பரஸ்வரூபமென்று ஸ்ரீ காளிதாஸர் போற்றுகிறார்:

पुराणस्य कवेस्तस्य वर्णस्थानसमीरिता ।
बभूव कृतसंस्कारा चरितार्थैव भारती ॥

ஆகவே ஸ்ரீ கீதாதேவியை ஓர் சொற்றொடராகக் கருதி அதில் உள்ள முக்யப் பொருள் ஞானமா? கர்மாவா? அல்லது இவ்விரண்டின் ஸமுச்சயமா? பக்தியே அல்லது சரணாகதியேதானா? என்று எழும் பரிச்சின்னமான ப்ரச்நங்களெல்லாம் முழு கீதையையும் ஓர் திவ்ய ஸ்வரூபிணியாய் உபாஸிக்கும் ரஹஸ்யமறிந்து ஸாக்ஷாத்கரிக்க வல்லமை யல்லாதார் வம்பேயாகும். அப்படிப்பட்ட ஸாக்ஷாத்கார ஞானம் உண்டானபோது, ஓரே சரீரத்தில் அவயவங்களால் இருக்கப்பெறும் எதுவும் அதற்கு இன்றியமையாதது என்கிற ந்யாயம் தலையெடுத்து அதில் உள்ள ப்ரத்யக்ஷாங்களும் அந்த திவ்ய ஸ்வரூபத்தில் உள்ளவைகளே யாகையால் ஸமப்ராதான்ய முள்ளவைகளென நம் மனதிற்குப் புலப்படும். ஆனால், கீதாஸ்வரூபத்தில் உள்ள அவயவங்களில் மத்யம தேக பாகம் அல்லது ஆத்மாவாய் இருப்பது பற்றி ஸ்ரீ க்ருஷ்ணனுக்குள்ளதோர் ஆதிக்யத்தை உபநிஷத் வ்யாக்யாதாவான ஸ்ரீ ரங்க ராமானுஜர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—'**मध्यं ह्येषामङ्गानामात्मेति श्रुतेः धारकत्वेन प्रधान भूत इत्यर्थः।** சரணாகதியென்பதை **पुच्छं प्रतिष्ठा** என்றோமே. அதன் ஸ்வாரஸ்யம் ஏதாகும்? ஸ்ரீ க்ருஷ்ணனை ஆத்மாவாகப்பெற்ற கர்ம, பக்தி, ஞானங்களை அபேக்ஷித்து **पुच्छवत् पुच्छं, प्रतिष्ठा पक्षनीडं** என்னும் வ்யாக்யானத்திற்

கிணங்க சரணாகதி ஒன்றே பகவத் சரணாரவிந்த ப்ராப்திக்கு ஆதாரமாயும் முக்ய காரணமாயும் ஆகிறதென்பதேதான்.

இந்தப்படி நாம் கீதாஸ்வரூபத்தை விசாரிக்கும்போது முக்யமாய்த் தோன்றும் மற்றொரு விஷயம் யாதெனில், அந்த ஸ்வரூபம் கீதையில் உள்ள அத்யாய ஸங்க்யையை அபேக்ஷித்து அஷ்டாதசாத்மகமாய் இருக்கப்பெற்றதேயாம். இப்படிக் கொத்ததோர் அஷ்டாதசாத்மகத்வம் **यज** என்பதால் தெரிவிக்கப்படுகிற யாக கர்மாவிற்கு உரியதென முண்டகோபநிஷத்திலிருந்து நாம் அறிகிறோம். [**प्लवाह्येते अदृढा यज्ञरूपाः अष्टादशोक्तम वरं येषुकर्म**] ஸ்ரீ கீதா தேவியும் தன் ஸ்வரூபாதிசயத்தால் யஜ(**यज**) என்பதின் தத்வத்தைத் தான் அதிகரிக்கப் பெறுகிறாள். ஆனால் வேதத்தின் பூர்வ பாகத்தில் யக்ஞரூபங்களாக ப்ரதிபாதிக்கப்படும் தத்வம் '**अवरं**' எனக் குறைவு பாடுள்ளது, ஏனெனில், அந்த ரூபங்கள் ஸ்வர்க்கம் முதலிய அல்பமும் அஸ்திரமுமான பல ப்ராப்திக்கு ஹேதுவாகின்றன. எது அவ்வித பல ஹேதுவோ அது க்ருபணமென்று * பகவானே சொல்லுகிறார் [**कृपणाः फल हेवतः**]. ஸ்ரீ கீதையின் ஸ்வரூப உபாஸனையால் ஏற்படும் பலம் யாதெனில் கையும் உழவு கோலும் பிடித்த சிறு வாய்க்கயிறும் ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும் தேர்த்தட்டிலே நாற்றிய திருவடிகளையும் உடையதோர் ஜ்யோதிஸ்ஸில் நம் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் **जुहोमि स्वाहा** என்று நாம் வஷட்கரிப்பதே யாகும். இதை ஸ்ரீ பாரதத்தில் பீஷ்ம ஸ்துதியில் விவரணம் செய்திருக்கிற ப்ரகாரம் யாதெனில்:—

कृष्णव्रताः कृष्णमनुस्मरन्तो रात्रौ च कृष्णं पुनरुत्थिता ये ।
ते कृष्णरूपाः प्रविशन्ति कृष्णमाज्यं यथा मन्त्रहुतं हुताशे ॥

ஆகையால் ஸ்ரீ பகவத் கீதாதேவி, தன் ஸ்வரூபத்தில் வாய்ந்த அஷ்டாதசாத்மகத் தன்மையால் **यज** என்பதை அதிகரித்தவளானாலும், அதன் பராத்பரமான தத்வத்தை ப்ரகாசிப்பிக்கிறாள் என்பது மெய்யினும் மெய்யே யாகும்.

[குறிப்பு: **याद्यष्टौ, कादिनव** என்னும் ஸங்கேதப்படி **यज** என்பதிலுள்ள அக்ஷரங்கள் முறையே 1, 8 எண்களைத் தெரிவிக்குமாகையால் அவ்வக்ஷரங்கள் சேரப்பெற்று **यज** என்றாகும்போது அஷ்டாதசாத்மகம் உண்டாவது பொருத்த முள்ளது.]

---

* கீதா பாஷ்யத்தில் "**फलसङ्गादिना कर्म कुर्वाणाः कृपणाः संसारिणो भवेयुः**" [எவர்கள் பலத்தை உத்தேசித்து கர்மங்களைச் செய்கிறார்களோ அவர்கள் க்ருபணர்கள் (ஸம்ஸாரிகள்) ஆகிறார்கள்] என்று க்ருபண சப்தம் புருஷபரமாக வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தச் சப்தம் புருஷ விசேஷத்திலேயே ரூடமென்பது ஸ்வாமியின் திருவுள்ளம். ப.

ஸ்ரீ:

கம்பரும் கோதையும்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

'கற்பனைக்குக் கம்பன்'; 'கம்பன் கவியின் செம்பொருள் இன்பம்' என்பன நாடறிந்த பழமொழிகள். 'கன்னன் பிறப்பும் பின்னாளிற் றலகிற்று கம்பன் பிறப்பு இன்னம் தெரிந்தார்களில்லை யில்லை முக்காலு மிது மெய்ம்மையே'. சோழவள நாட்டுத் திருவழுந்தூர் என்னும் க்ஷேத்திரத்தின் கோவிலின் கம்பத்தி னடியில் ஒரு குழந்தை கிடந்தது. மகப்பேறின்றி வருந்திய உவச்சன் சங்கூதுகையில் அச்சிசுவைக் கண்டு எடுத்துச் சென்று தன் மனைவிபாற் கொடுத்தான் என்றும், அதனை அவள் அன்போடு பேணி வளர்த்தாள் என்றும், அக்குழந்தையே கம்பர் என்றும் புலவர் புராணம் கூறும். அதனை,

"ஈடார்த ருஞ்சோழ நாடதிலு றுந்திருவ ழுந்தூரினிற்
பீடாரு மோச்சக்கு லத்தொருவ னவ்வூர்ப்பெ ருங்கோயில்வாய்
நாடானு திக்குந்தொ றுஞ்சென்று சங்கூது நல்வேலையான்
கோடாம லதுசெய்து வருநாளி லொருநாளிற் கூறுயிடை.

கம்பத்தி னருகோர்சி சுக்கண்டு பெருகுங்க ளிப்போடெடுத்
தம்பத்த னையும்வென்ற விழியுற்ற மனையாள்கை யதினல்கினன்.

* * * *

நம்பத்தி கண்டீச னருள்செல்வ மிதுவென்ன நனியெண்ணினர்
கம்பத்தி னடியிற்கி டந்திட்ட தாற்கம்ப னென்னப்பெயர்
உம்பர்க்கு மெய்தாத பேறான பிள்ளைக்கு வந்தோதினர்"

என்பனவற்றால் உணர்க. எனவே கம்பர் அயோனிஜர் என்பது பெற்றாம்.

வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்த பட்டர்பிரான் பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருத்துழாய்ப் பாத்தி யமைத்தற் பொருட்டுக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவனத்தைக் கொத்துகையில், அக்கொத்தின நிலத்தில் ஸ்ரீ தேவி பூதேவிகளின் அம்சமான ஒரு மகள் ஆடி மாஸத்துப் பூர்வ பல்குனி நாளிலே தோன்ற, அவளை அவ்வாழ்வார் தமது மகளாகப் பாவித்துக் 'கோதை' என்று நாமகரணஞ் செய்து வளர்க்கலானார் என்பது ஸ்ரீ ஆண்டாள் அவதார வைபவம்.

" இன்றோ திருவாடிப் பூரமெமக்காக
அன்றோவிங் காண்டா ளவதரித்தாள்—குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்
தாழ்வார் திருமகளா ராய்.
பெரியாழ்வார் பெண்பிள்ளை யாயாண்டாள் பிறந்த
திருவாடிப் பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்
குண்டோ மனமே யுணர்ந்துபா ராண்டாளுக்
குண்டாகி லொப்பிதற்கு முண்டு.
அஞ்சு குடிக்கொரு சந்ததியா யாழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய்ப்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுட னாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து."

கம்பர் பாடியது காசில் கொற்றத் திராமன் கதை. கோதை அருளிச் செய்தது வேதஸாரதமமான திருப்பாவை.

மார்கழி நீராட்டம் என்று ஒரு வ்யாஜத்தைக்கொண்டு, நோன்பு என்று ஒரு வ்யாஜத்தாலே எம்பெருமான் பக்கலிலே சென்று, 'உனக்கு சேஷமாயிருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப்படாதபடி பண்ணி, இதுக்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யங்களையுங் கொடுத்து, அது தானும் யாவதாத்மபாவியாம்படி பண்ணியருளவேணும்' என்று அபேக்ஷிக்கிறது.

" மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் "

" நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து "; " மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் " என வருதல் காண்க. " நீராடுதலாவது—க்ருஷ்ண விரஹத்தால் பிறந்த தாபம் ஆறும்படி போய்க் குளிக்கை; இத்தால் இவர்கள்நினைக்கிறது க்ருஷ்ண ஸம்ஶ்லேஷம் (கண்ணபிரானுடன் கலவி). தமிழரும் கலவியைச் சுனையாடல் என்றார்கள். சுனையாடலாவது பர்வதத்திலே தேங்கின சுனைகளிலே குளிக்கை.

" சூதார் குறுந்தொடிச் சூரமை துடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
யாடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே "
" அம்ம வாழியோ மகிழ்ந நின்மொழிவல்
பேரூரலரெழ நீரலைக் கலங்கி

நின்னொடு தண்புன லாடுது
மெம்மொடு சென்மோ செல்லநின் மனையே "

" புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவநனி சிவந்தன மகிழ்ந நின்கண்ணே "

என்ற பண்டைச் சங்கத் தமிழ் நூல்களைக் காண்க.

கம்பர் பாலகாண்டம் சிறப்புப்பாயிரம் இரண்டாவது கவியான

" சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
யெற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுண்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ."

என்பதை நன்கு நோக்குக. ஞான குணத்தினராகிய பெரியோரால் நன்கு அறியப்பட்ட இறைவனது நன்னிலையை என்னால் உணர்த்துதல் முடியாததாகும். எண்ணப்பட்ட ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில் முன்னர்ச் சொல்லப்பட்ட ஸத்வகுண முடையவனே முதற் கடவுளாவான். அவனது கல்யாணகுணக் கடலில் ஆடுதல் நன்மையைத் தருவதாம் என்பது இச்செய்யுளின் பொழிப்புரை. சத்துவம், இராஜசு, தமசு என்ற முக்குணங்களையும் முறையே கொண்ட அரி, அயன், அரன் என்னும் மும்மூர்த்திகளுள் சத்துவகுண மூர்த்தியாகிய திருமாலின் நிலைமையை உள்ளபடி அறிந்து சொல்லுதல் பேரறிஞர்க்கும் இயலாதது. ஆதலால் அற்ப அறிவினனாகிய என்னால் அறிந்து சொல்லுதல் இயலுமோ? இயலாது. ஆயினும் அம்முதல் மூர்த்தியின் மங்கள குணங்களை இடைவிடாது அநுபவித்தல், செய்யவேண்டிய செயலாகும் என்பது இதன் கருத்தாகும்.

இப்பாசுரத்தின் ஈற்றடி விசேடவுரை தருதும். அத்வாரக ஸ்ருஷ்டி ஸத்வாரக ஸ்ருஷ்டி முதலிய முத்தொழில்களையும் விளையாட்டாக வுடையவரும், எவர்க்குந் தலைவரா யுள்ளவரும், சிற்குணத்தவராலேயும் நன்கு அறியக்கூடாத நன்னிலையை யுடையவரும், முக்குணங்களுள் முதன்மை பெற்ற சத்துவ குணமுடைய முதற் கடவுள் 'அவர்' என்றதால் குறிப்பிடப்படுகிறார். முற்குணத்தோரே அவர்; முதலோரே அவர்; என்று இயைத்து, ஏகாரம் மற்றைய ரல்லர் என்னும் பொருள் தருதலால் பிரிநிலை யென்க. தானே செய்யும் ஸ்ருஷ்டி அத்வாரக

சிருஷ்டி; பிரம்மாதிகட்கு அந்தராத்மாவா யிருந்து செய்யும் சிருஷ்டி ஸத்வாரக சிருஷ்டி.

நற்குணக்கடல்—கடல், குணக்கடல், நற்கடல், குணநற்கடல், நற்குணக்கடல் என்று பிரித்தும் இயைத்தும் நயங் காண்க. கல்யாண குணங்களாகிற கடல் 'உயர் நலம்' என்றதன் பொருள். நற்குணம்—நன்மையாகிய குணம், நன்மை பயக்கும் குணம். 'ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன்'; 'ஞானானந்தமயமாய், ஞான பல ஐசுவரிய சீலாத்யநந்த கல்யாண குணகண மஹோததி' என்பன ஈட்டு வாக்கியங்கள். ஈச்வரன் என்பதற்கு—இப்பிரபஞ்சம் எல்லாவற்றையும் உடையவன்; நியமிக்கிறவன்; வஸ்துக்களைத் தன்னிஷ்டப்படி உபயோகப் படுத்திக்கொள்ளவல்லவன் என்பன பொருள்கள். ஸ்வாமித்வம் முதலான அநேக குணங்கள் இவனுக்கு ஸ்வாபாவிகமாய் எப்பொழுதும் உள்ளதாயுமிருக்கும். இவன் ஸ்வரூபம் தனக்கும் பிறருக்கும் அனுபவிக்கத் திருப்தியில்லாதபடி மேன்மேல் அனுபவத்தில் ஆசையை யுண்டாக்குகிற ஆனந்தரூபம். 'அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதம்' என்றார் ஆழ்வார். இவனுடைய குணங்களெல்லாம் பிறருக்கு உதவுவதற்காகவே இருக்கின்றன. அதனால்தான் இவனைக் கல்யாண குணவான் என்று எல்லா சுருதிகளும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன. இவனது குணங்களை இவ்வளவு என்று எண்ணமுடியாது.

குணசப்தம் நல்ல குணங்களுக்கும் துர்க்குணங்களுக்கும் பொதுவானது. நிர்க்குணம் என்றால் துர்க்குணமில்லை என்று கருத்து. கடல் ஒருவனால் அளவிட்டறிதற்கு அருமையுடையதா யிருத்தல்போல, ஸர்வேசுவரன் குணங்கள் அளவிட முடியாவென்று கருத்துத் தோன்றக் குணக்கடல் என்கிறார். கடலுக்கு ஆழி என்று ஒரு பெயரும் உண்டு. எம்பெருமானுடைய குணமும் ஆழமுடைத்து. ஆடுதல் - மூழ்குதல். வழக்காடல், உரையாடல் என்பவற்றிற்குச் சொல்லல் என்று பொருள் கொள்வது மரபு. நற்குணக் கடலாடுதல் என்பதற்குக் கணக்கற்ற கல்யாண குணங்களைச் சொல்லுதல் எனினும் பொருந்தும். கடல் என்பதற்கேற்ப ஆடுதல் என்று கூறிய நயம் பொருத்தமானது. நன்று—நல்லது, நன்மை யுண்டு, நன்மை பயக்கும், நல்ல உபாயம், உய்யும் வகை. ஆத்மாவுக்கு ஈசுவர விஷய ஜ்ஞானமுண்டாகி, அவனுடைய குணங்களை வழுத்துவதே முறை. குணக்கடலாடுதல் நன்று எனவே, அது ஒழிந்த பிறவெல்லாம் நன்மை பயக்காது என்பதும் பெற்றாம்.

"வாய் அவனை யல்லது வாழ்த்தாது;" "என் செவியிரண்டும் கேள்வனது இன்மொழியே கேட்டிருக்கும், நா நாளும் கோனைகணையான் குரை கழலே கூறுவதே;" "நாவாயி லுண்டே நமோ நாரணாவென்று ஓவா துரைக்கும் உரையுண்டே"; மற்றவன்பேர் ஓதுவது நாவினாலோத்து"; "மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு"; "மொய்த்த வல் வினையுள் நின்று மூன்றெழுத் துடைய பேரால், கத்திர பந்து மன்றே பராங்கதி கண்டு கொண்டான்"; "குலந்தரும் செல்வந் தந்திடும்"; "துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின், துயரிலீர் சொல்லினும் நன்றாம்" என்னும் ஆழ்வார் பாரசுரங்கள் இவண் அனுசந்தேயம்.

"அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் பாடிய லற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்."

"என்றைக்கு மென்னையு யக்கொண்டு போகிய
அன்றைக்கன் றென்னைத்தன் னாக்கியென் னால்தன்னை
இன்றமிழ்ப் பாடிய வீசனை யாதியாய்
நின்றவென் சோதியை யென்சொல்லி நிற்பனோ?"

ஆண்டாள் திருப்பாவையில்

"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!"

என்றருளிச் செய்வதையும், கம்பராமாயணம் பாலகாண்டம் நாட்டுப் படலத்திலுள்ள

"சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா ராட்டும் பண்ணை"

என்ற செய்யுளையும் ஒப்பிடுக.

[வயல்களில் சேல்போன்ற விளக்கமாகிய கண்களையுடைய மாதர்கள் போல் நடக்கிற செம்மையாகிய கால்களையுடைய அன்னங்கள், பெருமை பொருந்திய தாமரை மலர்களாகிய சயநத்தில் வளர்த்தின இளங் குஞ்சுகள் காலிற் பட்ட சேற்றையுடைய எருமைகள் ஊரில் விட்டு வந்த கன்றுகளை நினைத்துக் கதற அன்பு மிகுதிபால் ஒழுகின பாலைக் குடித்து நித்திரை செய்யப் பச்சைத் தவளைகள் தாலாட்டும்.]

மேலும்

"ஈர நீர்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்னவ ருங்கரு மேதிகள்

ஊரி னின்றகன் றுள்ளிட வுண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே ”

என்று கம்பர் கூறுவதையுங் காண்க.

[குளிர்ச்சி பொருந்திய நீரில் விழுந்து இந்த நிலவுலகத்தில் சிறு மேகங்கள் வருதல் போல வருகின்ற கருநிற முள்ள எருமைகள் ஊரிலிருக்கின்ற கன்றுகளை நினைப்பதினால் அவைகளுண்ணத்தக்க முலைகள், பால் தாரை பொழிதலைப் பொருந்த அந்தத் தாரைகளால் நெற்பயிர்கள் தழையா நிற்பன.]

ஆண்டாள்

“ ....பேய்ப்பெண்ணே !
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ ? ”

என்பதைக் கம்பர்,

“தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட்ட ரற்றவும்
தேயு நுண்ணிடை சென்றுவ ணங்கவும்
ஆய மங்கைய ரங்கைவ ருந்துவார் ” என்பதனோடு ஒப்பிடலாம்.

[தோய்ந்த வெண்தயிர்த் தாழிகளில் மத்துக்களின் ஓசையானது விட்டு விட்டு மிக்கொலிக்கவும், வெண்மையாகிய சங்கவளையல்கள் மிக்கொலிக்கவும், மெலிந்த நுட்பமான இடைகள் போய் வளையவும், இடைப் பெண்கள் அகங்கைகள் வருந்தக் கடைவார்கள்.]

ஆண்டாள் திருப்பாவையில் இராமாவதாரத்தைக் குறித்துப் பின் வருமாறு ஈடுபடுகிறாள்.

“சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை ”; “பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடி ” “சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி ” என்பன. கம்பர் கூறுகின்றவற்றையுங் காண்க.

“ ஆசைபற்றி யறைய லுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத்தி ராமன் கதையரோ.”

“ நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு

நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.”

“ வென்றிசே ரிலங்கை யானை வென்றமால் வீர மோத
நின்றரா மாயணத்தி னிகழ்ந்திடு கதைக டம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமு முரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது வென்றோர் தாமு நரகம தெய்தி டாரே.”

“ இராவணன் றன்னை வீட்டி யிராமனாய் வந்து தோன்றித்
தராதல முழுதுங் காத்துத் தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னு நமனையும் வெல்லு வாரே.”

“ அலங்கலிற் றோன்றும் பொய்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவில் லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.”

“ வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோற்றுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேந்தை.”

வாமன திரிவிக்ரமாவதாரங்களைக் குறித்து ஆண்டாள்:—

“ ஓங்கியுல களந்த வுத்தமன் ; அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த உம்பர் கோமான் ; அன்றிவ் வுலக மளந்தா யடி போற்றி ”
எனப் பேசுகிறாள். கம்பர் கூறுவதைச் செவி சாய்மின்.

“ கால நுனித்துணர் காசிப னென்னும்
வாலறி வற்கதி திக்கொரு மகவாய்
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தி னருங்குற ளானான்.”

“ கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே.”

“ நின்றகான் மண்ணெலா நிறப்பி யப்புறம்
சென்றுபா விற்றிலை சிறிது பாரென
ஒன்றவா னகமெலா மொடுக்கி யும்பரை
வென்றகான் மீண்டது வெளியெ றாமையே.”

"உலகெலா முள்ளடி யடக்கி யோரடிக்
கலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் சிறியன் சாலவே."

"உரியதிந் திறக்கிதென் றுலக மீய்ந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினான்
கரிய வனுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் செவந்து காட்டவே."

"வாம்பரி விரிதிரைக் கடலை வள்ளுவன்
தேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான்."

திருப்பாற்கடல் கடைந்த விருத்தாந்தம், 'வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை' என்பதில் விளக்கப்படுகிறது. கவிச்சக்ரவர்த்தி இதனை,

"மலைபி டுங்கினர் வாசுகி பிணித்தனர் மதியம்
நிலைபெ றும்படி நட்டன ரோடதி நிறைந்தார்
அலைபெ றும்படி பயோததி கடைந்தன ரவனி
நிலைத ளர்ந்திட வனந்தனுங் கீழுற நெளித்தான்."

"திறல்கொ ளாமையாய் முதுகினின் மந்தரந் திரிய
விறல்கொ ளாயிரந் தடக்கைகள் பரப்பிமீ வலிப்ப
மறனி லாமுனி வெகுளியின் மடிந்தன வரவே
அறனி லாமனத் தடையலா நெடுந்தகை யமைத்தான்."

"இறந்து நீங்கின யாவையு மெம்பிரா னருளால்
பிறந்து வவ்வயிற் சுராசுரர் தங்களிற் பிணங்கச்
சிறந்த மோகினி மடந்தையா லவுணர்தஞ் செய்கை
துறந்து மாண்டன ராரமிர் தமரர்கள் துய்த்தார்."

"வெருவு மாலமும் பிறையும்வெவ் விடையவற் கீந்து
தருவும் வேறுள தகைமையுஞ் சதமகற் கருளி
மருவு தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
திருவு மாரமு மணிந்தனன் சீதர மூர்த்தி." என்கிறார்.

ஆண்டாள், திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் கண்ணன் அவதார வைபவங்களைப் பரக்க அருளிச்செய்து அனுபவிக்கிறாள். அவை விரிக்கிற் பெருகும். கம்பர் தாம் பாடிய இராமாவதாரத்தில் ஆற்றுப் படலத்தில் கண்ணனை உவமை முகத்தால் அனுபவிப்பது மிகவும் அருமையானது.

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேர்ந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி
மறியுடை யாயர் மாதர் வனைதுகில் வாரு நீரால்
பொறிவரி யரவினாடும் புனிதனும் போலு மன்றே."

[வெள்ளமானது, புள்ளிகளையும் வரிகளையுமுடைய பாம்பின் மேல் ஆடினது பரிசுத்தனாகிய கண்ணனை ஒக்கும். எப்படியெனின்: உறைந்த நன்மணமுள்ள தயிரையும், பாலையும், வெண்ணெயையும், தொலையாமல் சேர்ந்த நெய்யையும் கட்டித் தூக்கி யிருந்த உறியொடு வாரிப் பருகிக் குருந்த மரத்தொடு மருத மரத்தைத் தள்ளி ஆடுகளைத் தமக்குச் செல்வமாகப் பெற்ற இடையர்களுடைய பெண்களது உடுக்கின்ற வஸ்திரங்களை வாரிக் கொண்டு போகின்ற நீரினால் என்க.]

மாயவனை மணஞ்செய்து கொள்வதாகத் தான் கண்ட கனவைத் தலைவி தோழிக்குக் கூறுவதாக 'வாரணமாயிரம்' என்ற பதிகத்தாலனுபவிக்கிறாள் கோதை. கல்வியிற் பெரிய கம்பர் களித்த கடிமணம் மிக அற்புதமானது.

"எண்ணரு நலத்தினா ளினைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்."

"நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்திற் றைத்தவே."

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்."

"மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ."

அர்ச்சாவதார ரங்கநாதனை மணந்தமையாற் கனவிற் கண்டுரைத்தாள் நாச்சியார். விப்வாவதார இராமனை அடைந்த ஸீதா விருத்தாந்தத்தைக்

கவி அழகியதாகப் பாடியுள்ளார். வான்மீகத்தி லில்லாத ஒரு கற்பனையைச் சிருட்டித்து அனுபவிக்கிறார் கம்பர்.

மேலும் "அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்துப் பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்" என்ற ஆண்டாள் அனுபவத்தை நன்குணர்ந்த கம்பர், நரசிங்கமூர்த்தியைத் தாம் அனுபவிக்க இரணியன் வதைப்படலத்தைச் சிருட்டித்துள்ளார். 'நாரணனம்பீ' என்ற ஆண்டாள் பாசுரப்படி கம்பர் அநேக இடங்களில் ஸ்ரீராமபிரானைக் குறிக்கும் போதெல்லாம் 'நம்பி' என்றழைப்பர்.

திருப்பாவையில் "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக் கினியானை" என்றவிடத்துப் பெரியவாச்சான் பிள்ளை, 'தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சின முண்டோ வென்னில்; ஆஶ்ரித ஶத்ருக்கள் இவர்க்கும் ஶத்ருக்களிறே. மஹாராஜர்க்குச் சீற்றம் பிறந்தபோது வாலியை யெய்தார்; அவ ரழுதபோது கூட அழுதாரிறே. ஓரம்பாலே தலையைத் தள்ளிவிடாதே படையைக் கொன்று, தேரை அழித்து, ஆயுதங்களை முறித்து, "தான் போலும் இத்யாதி கோன்போலு மென்றெழுந்து கிளர்ந்துவந்த மனத்தையழித்து, நெஞ்சாரல் பண்ணிக் கொன்றபடி; சத்ருக்களுக்கும் கண்ண நீர் பாயுமவனை" என்று ஈடு படுகிறார்.

முதல் நாள் யுத்தக் கடைசியில் நிராயுதபாணியாய் நின்றிட்டான் தசமுகன். அவ்வேளை இராமபிரான் அவனுக்கு அறமுரைத்தல்.

"அறத்தி னாலன்றி யமரர்க்கு மருஞ்சமங் கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வலித்தி
பிறத்தி நின்னெடும் பதிபுக்க கிளையொடும் பரவி
இறத்தி யானது நினைக்கிலென் றனிமைகண் டிரங்கி."

"உடைப்பெ ருங்குலத் தினரொடு முறவொடு முதவும்
படைக்க லங்களு மற்றுநீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண் டாற்றுதி யாயின்
கிடைத்தி யல்லையே லொளித்தியாற் சிறுதொழிற் கிழோய்."

"சிறையில் வைத்தவ டன்னைவிட் டுலகினிற் றேவர்
முறையில் வைத்துநின் றம்பியை யிராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்ததற் கேவல்செய் திருத்தியே லின்னும்
தறையில் வைக்கிலெ னின்றலை வாளியிற் றடிந்து."

"அல்லை யாமெனி னாரம ராற்றெனுந் தோற்றம்
வல்லை யாமெனி னுனக்குள வலியெலாங் கொண்டு

நில்லை யாவென நேர்நின்று பொன்றுதி யெனினும்
நல்லை யாகுதி பிழைப்பினி யுண்டென நயவேல்."

"ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின னாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்."

என்பன கம்பர் பாசுரங்கள். இராமபிரான் தசக்ரீவனோடு போர் புரிந்த காலை அவன் மிகவும் எளிவரவு பட்டான். தாசரதி அதனைக் கண்டு நனி இரக்க முற்று, "அரக்கர் கோமானே! போரில் மிகவும் வருத்த முற்றாய்; ஆதலின் இன்று நின் னிருப்பிடஞ் சென்று சிறிது தேறி நாளைப் போர்க்கு வா; அப்போது என் வலியைக் காண்பாய்" என்று நியமநம் தந்து போக விட்டருளினான். இது போன்ற பல கல்யாணகுண முடையவன் என்பது 'மனத்துக்கினியானை" என்பதி லுள்ள தென்பதைக் கவி அழகு படுத்துகிறார்.

திருப்பாவையில் "நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய், சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் பங்கயக் கண்ணானைப் பாடு" என வருகிறது. 'நாவுடையாய்' 'இவள் எல்லாம் படுத்தினாலும் விடவொண்ணாத நாவீறுடைமை' என்பது மூவாயிரப்படி.

இராகவன் பஞ்சவடியிற் பிராட்டியைப் பிரியலுற்றுத் தம்பியுந் தானுமாகக் கிட்கிந்தையுட் புக்குச் சிறிய திருவடியைக் கண்டு அவனுடன் சற்றுச் சம்பாஷித்த வளவிலே அவனது நாவீறுடைமையை நன்கு தெளிந்து இளையாழ்வாரை நோக்கி,

"இல்லாத வுலகத் தெங்கு மிங்கிவ னிசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சோல்லின்
வில்லார்கொ லிளையவீர விரிஞ்சனோ விடைவலானோ." [செல்வன்

"மாணியாம் படிவ மன்று மற்றிவன் வடிவ மைந்த
வாணியிவ் வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக் கண்ணன்."

"மற்றுமிவ் வுலகத் துள்ள முனிவர்வா னவர்க ளாரிச்
சொற்றிற முடையார் மற்றுச் சுருதியின் றுறுகுதி யாவு
முற்றறி தருமிம் மாணி மொழிக்கெதிர் முதல்வ ராய
பெற்றியார் மூவர்க் கேயும் பேராற்ற லரிது மன்னோ."

என்று பலவாறாகப் புகழ்ந் துரைத்ததாகக் கம்பர் கூறுவர்.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில்,

"வானிடை வாழுமவ் வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென் றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே."

என அருளிச்செய்கிறாள்.

இராவணன் மாயத்துறவி வேடத்தைத் விடுத்துத் தன் கருத்தைப் புலப்படுத்துகிறான்.

"குலைவுற லன்ன முன்னம் யாரையும் கும்பிடா வென்
தலைமிசை மகுட மென்னத் தனித்தனி யினிது தாங்கி
அலகில்பூ ணரம்பை மாத ரடிமுறை யேவல் செய்ய
உலகமீ ரேழு மாளுஞ் செல்வத்து ளுறைதி யென்றான்."

இதனைக் கேட்ட ஜானகி இராவணனை நிந்திக்கிறாள்.

"செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக் காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை யொழுக்க நோக்காப் பொங்கெரி புனித நீயும்
அவியைநாய் வேட்ட தென்ன வென்சொன்னா யரக்க வென்னா."

என்ற கம்பர் பாசுரம் ஆண்டாள் பாசுரத்துக்கு இயைந்திருத்தலைக் காண்க.
கோதை :—

"தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன்
பழுதின்றிப் பாற்கடல் வண்ண னுக்கே
பணிசெய்து வாழப்பெ றாவிடில்நான்
அழுதழு தலமந்தம் மாவழங்க
ஆற்றவு மதுவுனக்குறைக்குங் கண்டாய்
உழுவதோ ரெருத்தினை நுகங்கொடுபாய்ந்
தூட்டமின் றித்துறந் தாலொக்குமே."

இதனை,

"கோமுனி யுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணினா னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய நீங்கினாள்
வாமமே கலையினுள் வளர்ந்த தல்குலே."

"இல்லையே நுசுப்பென்ப ருண்டுண் டென்பவும்
மெல்லியன் முலைகளும் விம்ம விம்முவாள்
சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்து ளுன்னினாள்."

என்று கம்பர் கூறுவதனோடு ஒப்பிடுக.

ஆண்டாள் 'சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்'; 'பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியம்' என்கிறாள்; கம்பர் 'சங்குறை கரத் தொரு தனிச்சிலை தரித்தான்'!

'இருசுடர் இருபுறத்தேந்தி'; 'வளையொடுதிகிரியும்......
வடிபரவேகி நாம் வளைமதி லயோத்தியில் வருதும் என்றனன்'

என்கிறார்.

'பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்' என்பள் ஆண்டாள். 'அலை கட னடுவணோ ரனந்தன் மீமிசை மலையென விழிதுயில் வளரு மாமுகில்' திரைகெழு பயோததி துயிலும் தெய்வவான் மரகதமலை' என்பர் கம்பர்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு'. ஆழ்ந்து நோக்கின் அநேக மணிகள் பொறுக்கலாம்; விரிவஞ்சி இத்துடன் நிறுத்துவாம்.

"ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரன் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை"

"தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவும் அரமாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்பினால் வீழ்வித்தா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி."

"ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டன்மால் தன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்."

"இம்பரும் உம்பர் தாமும் ஏத்திய விராம காதை
தம்பமா முந்தி சேர்தல் சத்தியம் சத்தியம்மே
அம்பரந் தன்னின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பாதம் கருத்துற விருத்து வோமே."

“பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகுங்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்து மறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.”

“வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப்பூர
மேன்மேலு மிகவிளங்க விட்டுசித்தன்
தூயதிரு மகளாய்வந் தரங்கனார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்தமாதே
நேயமுடன் திருப்பாவை பாட்டாறைந்தும்
நீயுரைத்த தையொருதிங் கட்பாமாலை
ஆயபுகழ் நாற்றுநாற் பத்துமூன்று
மண்புடனே யடியேனுக் கருள்செய்நீயே”

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய:, அட்வொகேட், திருச்சி]

ஸர்கஸ்திதிப்ரளய விப்ரமநாடிகாயாம்
சைலூஷவத்விவிதவேஷபரிக்ரஹம் த்வாம் ।
ஸம்பாவயந்தி ஹ்ருதயேந கரீச தந்யா:
ஸம்ஸாரவாரிநிதிஸந்தரணைகபோதம் ॥

கரீச - கரிமலை ப்ரபுவே! ஆனைப் பெருமாளே! ஸர்கஸ்திதிப்ரளய விப்ரமநாடிகாயாம் - ஸ்ருஷ்டி ஸ்திதி (ரக்ஷணம்: இருப்பு) ப்ரளயம் (முடிவு) ஆகிய விளையாட்டான நாடகத்தில், சைலூஷவத் - கூத்தாடி போல் (நடன்போல்), விவிதவேஷபரிக்ரஹம் -அநேக விதமான வேஷங்களைப் போட்டுக்கொள்பவரான (அநேக விதமான வேஷங்களோடு கூடிய : பத்நியோடு கூடிய, த்வாம் - உம்மை, ஸம்ஸாரவாரிநிதி ஸந்தரணைக போதம் - ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்கு (த்தாண்டிவைப்பதற்கு) ஒரே (முக்யமான) ஓடமாக, ஹ்ருதயேந - மனத்தினல், தந்யா: - தநவானவார் (பாக்யசாலிகள்), ஸம்பாவயந்தி - நன்றாய்ப் பாவநம் (தந்மயமாக த்யாநம்) செய்கிறார்கள்.

அவதாரிகைகள் :—அச்வமேத யாகம் (க்ரது) பஹுகாலம் நடந்தது. யஜ்ஞாராத்யனும் யஜ்ஞ மூர்த்தியுமான விஷ்ணுவே யாக வேதியில்

ஹவிஸ்ஸை நேராக வாங்கிக்கொள்ள அக்நியாக அவதரித்தார். யஜ்ஞ ஸதஸ்ஸில் யஜ்ஞ பதியின் பெருமாள் எழுந்தருளி யஜ்ஞம் நிறைவேறிற்று. யஜ்ஞம் முடிவடையும் காலங்களில் யஜ்ஞ ஸதஸ்ஸில் கூடியிருக்கும் தேவர்களையும் பூமிதேவர்களான ஜனங்களையும் கண்களுக்கும் மனத்துக்கும் இனிய நாடகங்களைப் போடச் செய்து ஸந்தோஷத்தை உண்டு பண்ணுவது நம் ஸிந்து தேசத்தில் அநாதி வழக்கமாயிற்றே. யஜ்ஞங்களில் நாடகங்கள் நடத்தி வைப்பதும் ஒரு வைதிகமான கார்யமாகையால், மஹர்ஷிகளும் நாட்யம் ந்ருத்தம் இவற்றுக்கெல்லாம் ஸூத்ரங்கள் இயற்றியிருக்கிறார்கள். ‘சிலாலி’ என்னும் ஒரு ரிஷி இயற்றிய நடஸூத்ரத்தை அத்யயநம் செய்பவர் ‘சைலாலிகள்’ என்றும், ‘க்ருசாச்வர்’ என்னும் ரிஷி இயற்றிய நடஸூத்ரத்தை அத்யயநம் செய்பவர் ‘க்ருசாச்விகள்’ என்றும் யோக ஸூத்ரம் பண்ணின பதஞ்ஜலி வ்யாகரண மஹாபாஷ்யத்தில் கூறுகிறார். ஸங்கீதத்தால் ஈச்வரனை ஆராதித்து மநஸ்ஸை அவர் விஷயமாக லயிக்கும்படி செய்வதுபோல், நர்த்தநத்தாலும் அபிநய முறையாலும் அங்கங்களின் அழகான அசக்கினாலும் ஈச்வரனை ஆராதித்து, மனத்தையும் அவரிடம் லயிக்கச் செய்யலாம். நர்த்தநமும் நாடகமும் நம் தேசத்தில் உயர்ந்த கலைகளாக ஸ்த்ரீ புமான்களால் அப்யஸிக்கப்பட்டு வந்தன. மாளவிகாக்நிமித்ரத்தில் காளிதாஸர், ‘நாட்யம் தேவர்களுக்கு நேத்ராநந்தமான யாகம்; அது அவர்களுக்கு மிகவும் ப்ரியமான சாக்ஷுஷக்ரது (கண்ணால் சுவைத்து அநுபவிக்கும் யஜ்ஞம்) என்று முனிவர்கள் ஓதினார்கள். உமையோடு கூடிய ருத்ரர், தம்முடைய திருமேனியில் இதை லாஸ்யம் தாண்டவம் என்று இருவகையாகப் பிரித்துத் தாமும் அநுபவித்துப் பக்தர்களையும் அநுபவிக்கச் செய்கிறார். தம்பதிகளாகச் சேர்ந்து, நாட்யக் கலைப்படி நர்த்தநம் செய்து ரஸிக்கலாம். இருவரும் சேர்ந்து நர்த்தநத்தில் ஓர் உடம்பே இரண்டு பாகமாக நர்த்தநம் செய்வதுபோல் இருக்கவேண்டும். தம்பதிகள் சேர்ந்து நாட்யக் கலையை அப்யஸிப்பது ரிஷிகள் ஸம்மதமேயாம். இது உமாமஹேச்வர நர்த்தநத்தால் உலகத்திற்குக் காட்டப்படுகிறது. முக்குணங்கள் கலப்பினால் உலக வ்ருத்தாந்தங்கள் பல விதமான ரஸங்களோடு கூடியதாயிருந்தாலும், ஜநங்கள் வேறு வேறு பல ருசிகள் உடையவராயிருந்தாலும், நாட்யம் ஒன்றே அவர்களெல்லோர் மனத்தையும் ஸந்தோஷப்படுத்துகிற சிறந்த ஓர் ஆராதநமாகும்’ என்று பணித்தார்.

‘தேவாநாம் காந்தம் க்ரதும் சாக்ஷுஷம் ॥’

என்பது காளிதாஸர் வார்த்தை. இங்கே முன் ச்லோகத்தில் ‘சக்ஷுஸ்ஸாலேயே இந்த்ராதி தேவர்கள் ரஸத்தை அநுபவித்தார்கள்’ என்பன

ஸ்வாமியின் பதங்கள். நாடகத்தை த்ருஸ்ய காவ்யம் என்பர். கண்ணால் அநுபவிக்கப்படும் இன்ப ரஸம் நாட்யமாகும். யஜ்ஞத்திலும், முடிவில் நாடகங்களாடித் தேவர்களையும் ஜநங்களையும் இன்பப்படுத்தவேண்டும். ஜகத் ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மதேவன் செய்த இந்த அரும்பெரும் வேள்வியில் முடிவில் நாடகங்கள் ஆடவேண்டாவோ? அந்த நாடகத்தில் யார் வேஷம் போட்டுக்கொண்டு ஆடுகிற நடன்? அந்த நாடகத்தை நன்றாய்ப் பாவனை செய்து ரஸிக்கும் பாவுகர்கள் யாவர்? அந்த நாடகத்தில் நாயகன் ஒருவன் மட்டும் வேஷங்களைத் தரிக்கிறானா? அல்லது அவனுடைய பரிக்ரஹமும் (பத்நியும்) கூட நடியாக வேஷ பரிக்ரஹம் பண்ணுகிறாளா? முக்குணங்களுடைய லோக சரிதம் நாடகத்தில் ரஸமாகக் காட்டப்படுகிறது என்றார் காளிதாஸர். இங்கே ஆடப் போகிற நாடகமென்ன? முக்குணங்களில் ஒவ்வொரு குணத்துக்குத் தக்க வேஷமுண்டோ? அல்லது முக்குணங்களும் மிஸ்ரமான வேஷங்களா? இந்த நாடகம் உலகத்திலுள்ள ஜநங்களின் சரிதமா? அல்லது உலகத்தின் சரிதமென்று சொல்லக்கூடிய ப்ரபஞ்ச நாடகமா?

நாட்யம் ஆடுவதில் நிரம்பவும் ஸமர்த்தர் நடராஜர் என்பரே. அவர் ரஸிக ஸார்வபௌமர். இந்த யஜ்ஞ ஸபையில் நடந ஸபாபதியான அந்தத் தேவரும் ஹவிர்ப்பாக முள்ளவராய் ஸதஸ்ஸை அலங்கரிக்கிறாரே. அவரையும் ரஸிக்கும்படி செய்யவல்ல ரஸமய புருஷனா யிருந்தா லல்லவோ இந்த ஸதஸ்ஸில் நடராயிருக்க ஏற்கும். இந்த்ரன் எத்தனையோ நாட்யங்களையும் நாடகங்களையும், அப்ஸரஸ்ஸுக்களும் கந்தர்வர்களும் ஆடப் பார்த்திருக்கிறார். இவர்களுக்கெல்லாம் பூர்ண ரஸ முண்டாகவேண்டுமே.

இப்பொழுது இங்கே ஆடவேண்டிய நாட்யத்தில் (நாடகத்தில்) என்ன வேஷம் பரிக்ரஹிக்கப்படும்?

இந்த நாடகம் எத்தனை அங்கங்களை யுடையது? முன் ஸ்லோகத்திலிருந்தும் யாக முடிவு ப்ரகரணத்திலிருந்தும் கிளம்பும் இந்தச் சங்கைகளுக்கு உத்தரம் ஸாதிக்கிறார்.

ஸஹ்ருஷ்டிஸ்திதி ப்ரளய விஹ உநாடிகாயாம்—ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயம், ஸாஸ்வத பூர்ணாநந்த ப்ராப்தியாகிய மோக்ஷம், என்னும் நான்கு அங்கங்களுடைய நாடிகை. நாடகங்களில் நாடிகை என்பது நான்கு அங்கங்களுடையது. ப்ரளயம் என்பது மூன்று விதம் என்பர். திநம் திநம் தூக்கத்தில் ஸர்வ கரணங்களும் ஒடுங்கி ஒரு விதமாய் லயமடைந்து, பகவானுக்குள் அடங்கியிருப்பது ஒரு ப்ரளயம். கல்பாந்தத்தில் புண்ய பாபங்கள் தொலையாமல் மிகுந்திருந்து, ஸரீரம் முதலியன இல்லாமல் ப்ரக்ருதியோடு ப்ரக்ருதியாய் ஈஸ்வரனுக்குள் லீநமாய் இருப்பது ஒரு ப்ரளயம். புண்ய பாபங்களென்னும் கர்மபந்தம் அடியோடு நசித்து, ஸ்தூல ஸூக்ஷ்ம ஸரீரமெல்லாம் அடியோடு தொலைந்து, ப்ரஹ்மத்தினிடத்தில் அவிபாகமாய், எல்லையி லந்நலத்தை ஸாஸ்வதமாகப் புல்கி, நித்யமாக ஆநந்தத்தை அநுபவிக்கும் மோக்ஷம் ஒரு லயம். அது ஆத்யந்திக லயம். 'ப்ரளயம்' என்பதால், மஹா ப்ரளயத்தையும் மோக்ஷமென்னும் உத்க்ருஷ்டமான ஸாஸ்வதமான லயத்தையும் சேர்த்துக்கொள்ளவேணும். ஆக நான்கு ஆகிறது. இந்த நாடகம் ஒரு விப்ரம நாடகம். இது விளையாட்டுக்காகவும் விநோதத்துக்காகவுமே ஆடும் நாடகம்; இது த்ரவ்யம் ஸம்பாதிப்பதற்காக அல்ல. இந்த நாடகத்தைப் பார்க்க ஒரு காசு செலவில்லை. நாடகம் ஆடும் பெருமாள் பிறருக்கு ஆத்யந்திகமாக எல்லையில்லாத மோக்ஷ நிர்வாணம் என்னும் ஆநந்த ரஸத்தை அளிக்கவே ஆடுகிறார். ப்ரஹ்மம் வேஷ மெடுத்து ஆடுவதற்குத் தக்க நாடக சாலை எது? அகில புவநமும் தான் நாடகசாலை. இங்கு ஸ்ரீ பாஷ்ய ரசனையே கவி நெஞ்சில் ஓடுகிறது. பாஷ்ய மங்கள ஸ்லோகத்தின முதல் அடியை இங்கே அநுஸரிக்கிறார் ஸ்வாமி. அங்கே இதெல்லாம் லீலை யென்பதை அநுஸரித்து இங்கே விநோத நாடகம் என்றார்.

ஸௌஷவஜ—நடனைப்போல. சிலூஷ ரென்னும் ருஷியின் குமாரன் சைலூஷன். ஒரு ருஷி குமாரன் அத்புதமாய் நாட்ய மாடினதைக் கொண்டு அவன் பெயர் நடஸாமாந்யத்திற்கு வழங்கிவிட்டதாக நினைக்கவேணும். நாட்ய சாஸ்த்ரமும் நாட்ய கலையும் பரம வைதிகமே; இது ஆர்ஷமே. ருஷி குமாரர்கள் நடர்களாய் ப்ரஸித்தி பெற்றார்கள். மஹர்ஷிகளே நடஸூத்ரங்களை இயற்றினவர். பரதமுநியின் கலையை அப்யஸிப்பவருக்குப் பாரதர் என்று பெயர். 'ஸிஹதிஃ ஊம்ஹு' என்று பரத சப்தத்தின் ஒரு வ்யத்பத்தி. ஒவ்வொரு அங்கமும் ந்ர்த்தநாப்யாஸத்தால் மிக்க அழகையும் ஆரோக்யத்தையும் உறுப்பையும் பெறும். தேஹத்தை ஆரோக்யமாயும் அழகாயும் பரிப்பதற்கு இந்தப் பரதகலை முக்ய ஸாதநமாகும். யஜ்ஞவாடத்தில் அவதரித்த இந்த வைதிகப் பெருமாள் நடராக வேஷ பரிக்ரஹம் பண்ணலாமோ வெனில், ருஷி குமாரர் நடரா யிருக்கலாமென்பதை ஸூசிக்கும் சைலூஷ சப்தத்தின் ப்ரயோகத்தால் ஸமாதாநம் செய்தருளும் அழகை ரஸிகலோகம் கவனிக்கவேணும்.

விவியவெஷவரிம ஹூ—சைலூஷ னென்னும் நடன், தோட்டி முதல் தொண்டைமான் வேஷம் வரையில் பரிக்ரஹிப்பான். அல்ப வேஷங்களை அணிந்துகொண்டதால் தேவராஜனுக்கு யாதொரு இளப்பமும் இல்லை. அடுத்த ஸ்லோகத்தில் ப்ரஹ்மாதிகள் வேஷங்களையும் சிவாதிகள்

வேஷங்களையும் குறிப்பிடுகிறார். ப்ரஹ்மா வேஷம் ரஜோ குணத்தின் ப்ரஸரம். சிவ வேஷம் தமோ குணத்தின் ப்ரஸரம். இரண்டும் வெவ்வேறு விதம். கடைசி அடியில் ஸாதிக்கப்போகிற வேஷம் 'பொதம்' என்னும் ஓட வேஷம். 'விவித' என்பதால் பல விதம் என்பதை ஸாதிப்பதால் ஓட வேஷமும் கூடுமென்று ஸூசிக்கிறார். ப்ரஹ்மா வேஷம் உலகத்தையெல்லாம் உண்டாக்குபவர் வேஷம். சிவ வேஷம் உலகத்தை ஸம்ஹாரம் செய்பவர் வேஷம். இப்படி ஒன்றுக்கொன்று விரோதமாக வுள்ள பலவித வேஷங்களையும் (நீரே) பரிக்ரஹிக்கிறீர். 'பரிக்ரஹம்' என்னும் சப்தம் பத்நியையும் சொல்லும். லோகரக்ஷணார்த்தமாகப் பலவித வேஷங்களைப் பரிக்ரஹித்துப் பலவித அவதார நாடகங்களைச் செய்யுங் காலத்தில், பத்நியும் அந்தந்த வேஷத்துக்குத் தக்க வேஷத்தைத் தானும் பரிக்ரஹித்துக் கொண்டு கூடவே நடிக்கிறாள். தசாவதார ஸ்தோத்ரத்தின் முதல் ஸ்லோகத்தில் ஸ்வாமி இதை விளக்கி யுள்ளார். அங்கே, 'தேவ நிர்விச்யமாநே ரத்நாகரே...' 'லக்ஷ்மீ நர்த்தயந் ஸந்ததம்' என்றிருக்கும் பதங்களைப் போலவே, இங்கே முன் ஸ்லோகத்தில் 'ரஞ்ஜயஸி' என்றும், 'ஸுரவர்கான்' என்றும், 'விஷ்ணோ ரஸ நடநவிதௌ' என்றும், 'விவிதவேஷபரிக்ரஹம்' என்றும் ஸாதித்தார். அடுத்த ஸ்லோகத்தில் 'ஸம்பாவயந்தி ஹ்ருதயேந ஸபாஜ்யா:' என்று பாவுகர்களால் பாவிக்கப்படுவதை ஸாதிக்கிறார். 'பத்து விதமாய்ப் பூமிகைகளைத் தரித்துக்கொண்டு' என்பதும், 'விவித வேஷங்களைப் பரிக்ரஹித்து' என்பதும் ஒன்றே. தேவர்களுக்குப் பாகம் கொடுக்காமல் பூர்ண ரஸத்தை அளித்தாரென்பது 'தேவ நிர்விச்யமாநே:' என்பதோடு ஒரே பொருளாம். இந்த இரண்டு ஸ்லோகங்களை ஸாதிக்கையில் தசாவதார ஸ்தோத்ரம் முதல் ஸ்லோகத்தின் அநுபவம் நெஞ்சில் ஓடுவது திண்ணம். அப்படியிருக்கையில் 'நாநாக்ருதியாக நாயிகையும் அந்தந்த வேஷத்திற்கு அநுரூபமான வேஷத்தோடும் தர்மத்தோடும் விஹரிக்கிறாள்' என்று அருளிச்செய்தபடி, இங்கேயும் பெருந்தேவியையும் பரிக்ரஹ சப்தத்தால் (சப்தசக்தி த்வநியால்) வாங்கிக்கொள்வது ரஸமே. 'விவித வேஷங்களோடு கூடிய பரிக்ரஹ முடையவர்' என்றும் பொருள் கொள்ளலாம். இங்கே 'அவளுடைய ஸஹசரணம் தத்வமாகையால், அவஸ்யம் அதற்கு அபேக்ஷை உண்டு. அந்த அபேக்ஷையை த்வநியினால் பூர்த்தி செய்வதாகக் கொள்வது உசிதம். மற்றொரு விஷயமும் கவனிக்கவேணும். சைலூஷ சப்தம் 'ஸ்ரீபலம்' என்னும் வில்வப் பழத்தையும் சொல்லும். 'ஸ்ரீபலம்' என்பதற்கு ஸ்ரீக்கு ப்ரியமான பலம் என்பது பொருள்.

'பில்வே சாண்டில்ய சைலூஷௌ மாலூர ஸ்ரீபலாவபி'

என்பது அமரகோசம். இந்த சப்தமுள்ள கோச நினைப்பினால் ஸ்ரீ நினைப்பும் ஒருவாறு வருகிறது. எந்த சப்தத்தால் 'நடன்' என்று பொருள் படுகிறதோ, அதே சப்தத்தால் ஸ்ரீயின் நினைப்பும் வரும்படி சப்த ப்ரயோகம் பண்ணின சாதுர்யம் ரஸிக்கத்தக்கது. கடைசியில் இங்கே ஸாதிக்கப் போகிற வேஷம், ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டுவிக்கும் ஓட வேஷம். அதற்கு 'ஸம்ஸாரார்ணவ தாரிணீ' என்கிற ஸ்ரீயும் கூடச் சேராமல் ஸாத்ய மல்ல. அந்தப் பலம் ஸ்ரீக்கு அத்யந்தம் ப்ரியமானது. அதற்காகவே மற்ற சப்தங்களை எடுக்காமல் சைலூஷ சப்தத்தையும் பரிக்ரஹ சப்தத்தையும் ப்ரயோகித்ததாகத் தோன்றுகிறது. ரஸிகர்கள் ஹ்ருதயம் ப்ரமாணம்.

ஸ்வாமிந்—வேஷம் போட்டுக்கொண்டு கூத்தாடித் தேவர்களை ரஞ்ஜிப்பித்துப் பூர்ண ரஸம் உண்டாக்குவது யார்? பரிக்ரஹத்தோடு (பத்நியோடு) கூட நடநம் செய்யும் கூத்தாடி யாவன்? ஸ்வாமிந்! நீர் தானே. பரிக்ரஹ சப்தத்துக்கு அடுத்தாற்போல் 'ஸ்வாமிந்' என்றார். பரிக்ரஹத்தோடு இவருக்குள்ள நித்யயோகத்தை நாடகத்திலும் மறப்பரோ? ஜ்ஞாநமாவது ஸ்ரிய: பதியை யல்லாது நிற்காது என்பரே. 'தாமரையாள் கேள்வ னொருவனையே நோக்கு முணர்வு'. பிரித்து நினைக்கவே முடியாதே; பிரித்துப் பேசக்கூடுமோ? பேசாவிடினும் அந்தர்ப்பாவ ந்யாயத்தால் சேர்த்தல்லவோ பொருள் கொள்ளவேணும். அடுத்த அடியில் த்யாநமென்னும் பாவனையையும், அதற்கு அடுத்த அடியில் ஸம்ஸார ஸமுத்ரத்தின் தாரணத்தையும் பேசுவதாலும், இது உறுதியாகும். த்யாநத்திற்கும் ஸம்ஸார தாரணத்திற்கும் இருவரும் சேர்ந்தே யிருக்கவேண்டு மென்பதைத் தெளிவாக்கினார். நாடகத்தில் இவரைக் காட்டிலும் வல்லவர் இல்லை. நடந ஸபாபதியையும் ரஞ்ஜிப்பிக்கும் மக பதி இவர். 'ரஸோ வை ஸ:' என்னும் ரஸஸ்வரூபனும் ஆநந்தமயனு மானவர் இவர். 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' என்று ஆநந்தப்படுத்துபவர் இவரே. 'ஸர்வரஸ:' என்று ஓதப்பட்டவர் இவர். 'கலிகல்மஷ...நந்தந' என்று காளியனது 101 சிரஸ்ஸுக்களில் நர்த்தநம் பண்ணப் போகையில், இவரை, 'எல்லாக் கலைகளுக்கும் ஆதி குருவானவர்' என்று சுகர் வர்ணித்துவிட்டு, 'அந்த நர்த்தநத்தைப் பார்த்து நாட்ய கலையின் ஸூக்ஷ்மங்கள் தெரிந்துகொள்ளவும் கூடப் பக்க வாத்யம் வாசிக்கவும், கந்தர்வர்கள் ஸித்தர்கள் தேவர்கள் சாரணர்கள் முதலியவர்க ளெல்லாரும் வாத்யங்கள் எல்லாவற்றுடனும் அங்கே வந்து கூடினார்கள்' என்று கூறினார். ஒன்றுக்கு ஆயிரம் கொடுக்கும் பரமோதாரன்; க்ருதஜ்ஞ ஸார்வபௌமன்.

ஸம்பாவயந்தி—நன்றாய்ப் பாவனை (த்யாநம்) செய்கிறார்கள். பத்நியோடு நடநம் செய்யும் உம்மைப் பாவுகர்களாகப் பாவனை செய்கிறார்கள்.

'மோக்ஷ பர்யந்தம் மநஸ் லயிக்கு மளவும் பாகவத ரஸத்தைப் பருகுங் கோள்; பூமியிலுள்ள ரஸிகர்களான பாவுகர்களே!' என்று கூவி யழைத்தார் சுகர் கலந்து ரஸபாநம் செய்ய.

ஹ்ருதயேந—இங்கே பாவனையை ப்ரஸ்தாவிப்பதில் ஹ்ருதயத்தால் பாவிப்பதைப் பேசுகிறுர். கண்ணால் காணும் காட்சியை ரஸிப்பதற்கும் ஹ்ருதயத்தின் ஸஹகாரம் வேணும். பாவனைக்கு அது ஒன்றே ஸாதநம்.

'ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தோ ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி'

என்கிற ஶ்ருதியையும்,

'த்ருஶ்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்ஶிபி:'

என்கிற ஶ்ருதியையும் இங்கே நினைக்கவேணும். 'ஹ்ருதயேந தந்யா:' என்றும் சேர்த்து அந்வயித்து 'உம்மைப் பாவனை செய்து பாவுகர்களாய் ரஸிக்கும் ஹ்ருதயமே அவர்களுக்குத் தநமாகும்'. இப்படிக் கூட உடன்படும் நெஞ்சத்தை 'நெஞ்சமே நல்லை நல்லை' என்று புகழ்வதுபோல் இங்கே இந்நன்னெஞ்சத்தால் தந்யரென்கிறுர். தநத்தை அடைபவர் தந்யர். இந்நெஞ்ச மென்னும் தநத்தை அடைபவர் உம் ரஸத்தையும் அடைகிறுர். 'உம்மை ஸம்பாவனை செய்பவர் தந்யரென்று இங்கே ஸாதிப்பதுபோல, 16-வது ஶ்லோகத்தில் 'உம்முடைய ஸ்வரூபத்தை ஶாந்தியோடு கூடிய ஹ்ருதயத்தால் தந்யர்கள் ஸஞ்சிந்தநம் செய்கிறுர்கள்' என்றும், 46-வது ஶ்லோகத்தில் 'உம்முடைய பச்சைமாமலைபோல் மேனியைத் தந்யர்கள் விலோகநம் செய்றுர்கள்' என்றும் ஸாதிக்கிறுர்.

கரீஶ!—கரிமலை ப்ரபுவே! நான்காம் அடியில் இவரை ஓடமாக நிரூபிக்கிறுர். இது மலைமேல் உள்ள ஓடம். தயாசதகத்தில் தயை வ்ருஷகிரி என்னும் வாரத்தில் (கரையில்) சேர்ப்பிக்கும் ஓடம் (போதபாத்ரீ) என்று ஸாதித்தார். இங்கே பெருமாளே ஓடம். அவரே ப்ராப்யமான பாரம் என்கிறுர்.

தந்யா:—பாக்யவாங்கள். ஓடமே நாம் சேரவேண்டிய அக்கரையாய் விட்டால் அதனிலும் பாக்யமுண்டோ? 'பாரம் கதி:' என்றும் அடையப் படவேண்டிய ஸம்ஸாரத்தின் அக்கரை நீர்தானே. நீரே அக்கரை சேர்க்கும் ஓட வேஷத்தைத் தரித்தால் உமக்குள் மனத்தால் உட்கார்ந்தால் (லயித்தால்) போதுமே ஸம்ஸாரம் தாண்டி அக்கரை சேர. சேரவேண்டிய அக்கரை நீரே யாகையால், ஓடம் ஓரடிகூட நகரவேண்டியதில்லை அக்கரை சேர்க்க. ஸ்தாவரமாகவே இருக்கலாம்; சிலையாகவும் இருக்கலாம். மலையோடு கூடச் சேர்ந்தே மலையை அடியாக வுடைய ஓடமா யிருக்கலாம் என்பதைக் காட்ட 'கரீஶ!' என்னும் ஸம்போதநம் அழகாக உபயோகப்படுகிறது.

ஸம்ஸாரவாரிநிதிஸந்தரணைகபோத:—ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்ட பரிக்ரஹத்தோடு கூடிய நீரே ஓடம் என்று ஸம்பாவனை செய்கிறுர்கள் பாக்யவாங்கள். 'விஷ்ணுபோதம் விநா நாந்யத்' என்னும் ப்ரமாணமும்,

'விஷமவிஷயதோயே மஜ்ஜதாமப்லவாநாம்
பவதி ஶரணமேகோ விஷ்ணுபோதோ நராணாம்'

என்னும் ஶ்லோகமும் இங்கே திருவுள்ளத்தில் உள்ளன. 'ஸஞ்ஜீவநம்' என்பது போல 'ஸந்தரணம்'. 'த்ருஷ்ணாதோயே' என்னும் ஶ்லோகத்தில் 'ஸம்ஸாரமென்னும் பெயருடைய பெருங்கடலில் முழுகினவருக்கு ஹே வரத! பக்தியென்னும் ஓடத்தைக் கொடும்' என்று கேட்கப்பட்டது. ஸம்ஸார ஸமுத்ரத்தில் த்ருஷ்ணை (ஆசை) என்பது தான் ஜலம் என்று அங்கே ஸாதிக்கப்பட்டது. அடுத்த ஶ்லோகத்திலும் விஷயந்தான் தோயம் என்று கூறப்பட்டது. அந்த ஶ்லோகத்தின் பிற்பாதியில் 'வேறு ஓடமொன்றும் கதியில்லை; விஷ்ணுதான் ஓடம்' என்கிறுர். அதில் விஷயம் ஜலம். விஷய ஸமுத்ரத்தையும் விஷய த்ருஷ்ணு ஸமுத்ரத்தையும் தாண்ட ரஸமயனுன ஈஶ்வர தத்வம்தான் ஓடமாகும். ஜலமில்லாத ஸமுத்ர மாதலால் இப்பெருமானுடைய திவ்ய விக்ரஹமே ஓடமாகலாம்.

'விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: ।
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥'

என்று கீதையில் ஸாதித்தபடி பரதத்வத்தை ஸேவித்துக்கொண்டதும் விஷய ருசி யெல்லாம் ஓடிப்போம். ஆசை தொலைந்தால் ஸம்ஸாரம் தாண்டி யாயிற்று. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு'. இங்கே 'போத' சப்தத்தால் 'ப்லவா ஹ்யேதா அத்ருடா யஜ்ஞரூபா:' என்கிற ஶ்ருதியை நினைப்பூட்டி அதற்குப் பரிஹாரமும் ஸாதிக்கிறுர். 'யஜ்ஞங்க ளென்பன கெட்டியான ஓடங்களல்ல' என்பது ஶ்ருதி. காமனையோடு கூடிய யஜ்ஞங்கள் கெட்டியான ஓடமாகா. அவை நஶ்வரமான பயனைத்தான் கொடுக்கும். 'யஜ்ஞோ வை விஷ்ணு:' என்று ஓதப்பட்ட யஜ்ஞனென்னும் பெருமாளோ முன் சொன்ன வசநத்தால் அவர் ஒருவரே ஸம்ஸாரம் தாண்ட ஓடம் என்று பணித்தது. இந்த யஜ்ஞப் பெருமாள் ஓடமாகத் தடை

யில்லை. இவரே ஓடமென்பதைக் காட்ட ‘வங்கவொ தழ’ என்று கூறி அந்த வசநத்தை நினைப்பூட்டுகிறார்.

நான்கு அங்கங்களுடைய நாடிகையென்றார். இங்கே நாடகத்துக்கு வேண்டிய ஐந்து ஸங்கதிகளையும் கொள்ளலாம். பெருமாள் கடாக்ஷித்துத் தேஹத்தை அருளிச் செய்கிறார். அது ஆரம்பம்; மோக்ஷத்திற்குப் பீஜாவாபம். இவை இரண்டும் சேர்வதில் முகஸந்தி. பெருமாளே கடைசி வரைக்கும் க்ருஷி செய்து இவனுக்கு நிர்வஹணம் என்னும் பலம் கிடைக்குமளவும் கூட உபகரித்து முயற்சி செய்கிறார். நம்மால் வரும் விக்நங்களையும் போக்குவதற்கும் உபகரிக்கிறார். விதைத்த விதையின் முளை கண்டும் காணாததுமாக இருக்கிறது; ப்ரதி முக ஸந்தி. அதில் பிந்துவும் ப்ரயத்நமும் ஒன்று சேரும். கார்யம் கெடும்போல வந்து கெடாமல் (சேதமடையாமல்) சேர்வது பிந்து. பயனை அடையவேண்டுமென்ற த்வரை யத்நம். இதெல்லாம் ஸ்திதியாகும். பகவத் கதைகளில் ரஸிக்கச் செய்வதும், முன்பு கொஞ்சம் கொஞ்சம் தெரிந்த இன்பத்தை மறுபடியும் மறுபடியும் தேடச்செய்வதும் கர்ப்ப ஸந்தி. இதில் ‘பதாகா’ என்னும் நீண்ட உபகதைகளும் ஆசைப்பட்ட பொருளை அடைய ஆசையும் சேரும். தம்முடைய நீண்ட அவதார கதைகளைக் கேட்பித்தும், ரஸவசத்தால் நேரே பார்ப்பதைப் போல் அநுபவிக்கச் செய்தும் இங்கே அந்வேஷணம் நடக்கிறது. ஜிஜ்ஞாஸை, விவிதிஷை, என்றும் அறிய ஆசை, அந்வேஷணம் எல்லாம் இங்கே உதவும். இதெல்லாம் ஸ்திதியில் சேர்ந்தது. பகவத் தத்வத்தை விமர்சிக்கும்படி செய்விப்பது விமர்ஶ ஸந்தி. இதில் ப்ரகரீ என்பதும், பலத்தின் அடைதலின் நிச்சயம் எனும் நியதாப்தியும் சேரும். ப்ரகரீ என்பது ஆசார்யனிடம் சேர்ப்பித்து ஸங்க்ரஹமாக அவர் மூலமாக உபதேசிக்கவும், அவரால் குளிரக் கடாக்ஷிப்பிக்கவும் செய்து, ப்ராப்திக்கு நிஶ்சிதமான உபாயத்தில் அந்வயிப்பித்து,

‘ஸம்ஸார நௌகாகாரேண ஹரிணா நிஹிதோ நீயதே நாவிகேந’

என்று ஓடத்திற்குள் உட்கார்த்தி வைக்கப்பட்டு என்று ஸாதித்ததுபோல் இங்கே பெருமாளையே ஓடமாகக் காட்டிக்கொடுக்கச் செய்து, அந்த ஓடத்தில் மநஸ் லயிக்கச் செய்வதென்னும் ஒரு சிறு கதை உண்டு. பெருமாளே அநுப்ரவேசித்து ஆசார்ய ரூபமாக இருந்து, அந்த வேஷத்தைத் தரித்து, ஸங்க்ஷேபமாக உபதேசித்துக் கடாக்ஷித்து, தானாகிய ஓடத்தையே மஹாவிஶ்வாஸத்துடன் பற்றும்படி செய்து வைக்கிறார். ஆசார்யனோடு கூடும் கதை ப்ரகரீ என்றும் (அதிக காலமில்லாத) ஸ்வல்பகால ஸமாகமமாய் இருந்தாலும் பலத்தின் அவாப்தியை நிச்சிதமாக்கிவிடுகிறது. நிர்

வ்ருதி நிர்வஹணமென்னும் ஐந்தாவது ஸந்தியில் பலாகமும் கார்யமும் சேர்கின்றன. அவித்யை தொலைவது கார்யம். ஆநந்த கனமான ப்ரஹ்மத்திற்குள் ப்ரவேசித்து அவனுள் ஒடுங்கிப் பிரிவில்லாமல் முழு இன்பத்தையும் ஶாஶ்வதமாய்ப் பெறுவது பலாகமம். இந்தப் பலத்தைப் பெருமாளும் பிராட்டியும் தம் பேறாக ரஸிக்கிறார்கள். ஜீவன் ப்ரபந்ந வேஷம் தரித்து, ஒரு நாடகம் போட்டு, ப்ரபுவை ஸந்தோஷப்படுத்தி, அவன் திருமார்பில் கௌஸ்துபமாக மின்னும் பரிசு பெறும் க்ரமத்தை ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதம் முடிவில் ஓர் அத்புதமான ஶ்லோகத்தில் ஸாதித்திருக்கிறார். அங்கே இந்த ஐந்து ஸந்திகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இவர் ஆடும் நாடகம் ஶாந்தி ரஸ ப்ரதாநம். ஶாந்தி ரஸம் ஒன்பதாவது ரஸம். இங்கே ஒன்பதாவது ஶ்லோகத்தில் இந்த ரஸமுள்ள நாடகத்தைப் பேசுவதைக் கவனிக்கவேணும். ஶமத்தோடு கூடிய ஹ்ருதயத்தால் பாவுகர் இந்த ரஸத்தை அத்யக்ஷணம் செய்ய ப்ராப்தம்.

ஸ்ரீ:

விவாஹத்திற் குரிய வயது

[ஸ்ரீ. உப. வே. அனந்தாசார்யர்]

இச்செய்தியைப் பற்றிப் பலர் பல விடங்களில் பலவாறாய்ப் பேசியிருக்கிறார்கள். இவ்வளவு பேசப்பட்டிருந்தும், விவாஹத்தின் தத்வம் வெளிப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆதலால் இன்னமும் கொஞ்சம் அதைப் பற்றிப் பேசவேண்டி இருக்கிறது. இக்காலத்தில் சாஸ்த்ரம் என்னும் வார்த்தையைச் சொன்னால் ஜனங்களுக்கு மஹாகோபம் வருகிறது. ஆகையால் சாஸ்த்ரத்தைப் புறக்கணித்துப் பேசுவதும் காலாநுகுணம்.

விவாஹத்தால் இரண்டு ப்ரயோஜநங்கள் கருதப்படுகின்றன. அவை: 1. க்ருஹஸ்தாச்ரமத்திற்குரிய தர்மாநுஷ்டாநமும், 2. ஸந்ததி விருத்தியும். இவ்விரண்டில் முதலிற் சொன்ன ப்ரயோஜநம் இக்காலத்திற்கு ஒவ்வாதது என்றே சொல்லவேண்டும். சிற்றின்பம் தற்செயலால் கிடைக்கக்கூடியதேயல்லாமல் ப்ரதாந ப்ரயோஜநமாகாது. ஆகவே, ஸந்ததி ஒன்றே விவாஹத்தால் உண்டாகக்கூடிய உலக நன்மை. சரீரத்திலும் மனத்திலும் திடம் வாய்ந்த ஸந்ததியைப் பெறவேண்டுமானால், தம்பதிகளின் வயதை முக்கியமாய்க் கவனித்தல் வேண்டும்.

இவ்வயதி னவைப் பற்றிப் பல நூலாசிரியர் பலவிதமாய்ப் பேசியிருக்கின்றனர். ஒருவர், முப்பது வயது புருடன்

பன்னிரண்டு வயது பெண்ணை மணக்கவேண்டும் என்றார். மற்றொருவர் இருபத்து நான்கு வயது புருடன் எட்டு வயது பெண்ணை மணக்க விதித்திருக்கிறார். மற்றும் சிலர், மூன்றில் ஒரு பங்கு வயது பெண்ணை மூன்று மடங்கு அதிக வயதுள்ள புருடன் கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றார். சிலர் ஆண் வயதை விடப் பெண் வயது குறைந்திருக்கவேணும் என்று மாத்ரம் குறிப்பிட்டனர். மற்று மொருவர், புருடனைக் காட்டிலும் பெண் ஒரு வயதாவது சிறியவளா யிருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நமது தேசத்தில் வெகு பழமையான வழக்கத்தை ஆராய்ந்து நோக்கும்போது ஆச்சரியம் உண்டாகிறது. ஆபஸ்தம்பர் என்னும் மஹர்ஷி விவாஹத்திற்குரிய புருடன் வயது ஐம்பத்தாறு என்கிறார். இது முக்ய பக்ஷம் என்றும், இதில் அஸௌகர்யம் ஏற்பட்டால் 44-ம், 32-ம், 20-ம், கௌண பக்ஷமாகக் கொடுத்திருக்கிறார். மற்றும் சில ரிஷிகள் வயது இன்னதென்று குறிப்பிடாமலே, வித்யைகளைக் கற்று முடிந்த பிறகு ஒரு பெண்ணை மணக்கவேண்டும் என்கின்றனர். ஸ்ரீ பாத்ம புராணத்தில் ஸ்ரீ வ்யாஸ பகவான் விவாஹ விஷயத்தை உபதேசிக்கும்போது, மற்றொரு அருமையான விஷயம் சொல்லியிருக்கிறார். வயதின் தாரதம்யமும் குலம் ரூபம் முதலிய குணங்கள் ஒரு பக்கம் இருக்க, சரீரத்தினுடைய உயரம் பருமன் இவைகளில் புருடனைக் காட்டிலும் ஸ்த்ரீ குறைந்தவளா யிருக்கவேண்டும் என்கிறார்.

முன்னோர்கள் எவ்வளவு ஆழ்ந்த ஆலோசனைக்காரராக இருந்தார்கள் பாருங்கள். வயது விஷயத்தில் பல ரிஷிகள் பல விதமாகக் கூறி யிருப்பதைக் கவனித்தால், நாம் அதிலிருந்து நிர்ணயத்தைத் தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டியதென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதாவது: அவரவருடைய சரீர தத்வங்களுக்கும், மனத்திடத்திற்கும் காலதேசங்களுக்கும் ஏற்றவாறு தம்பதிகளின் வயதை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் என்பதே. சரீரவன்மையை மாத்திரம் கவனித்தால் போதாது. மனோதைர்யத்தையும் கூடக் கவனிக்கவேணும். தாம்பத்யத்திற்குரிய சரீர நிலைமையை ப்ரத்யக்ஷமாய்க் காணலாம்; மனோபாவத்தின் நிலைமையை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. அதனை நுட்பமான ஊஹ சக்தியால் அறியவேண்டும்.

சிலருக்கு இளம் பருவத்திலேயே குடும்பங்களை நிர்வஹிக்கக் கூடிய திறமையும், சிலருக்குத் தக்க வயது வந்த பிறகுகூட அத்திறமை இல்லாமல் இருப்பதையும் காண்கிறோம். அவரவர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு சாஸ்த்ரங்களை உபயோகிக்கவேணும். கர்ப்பாதானகால விஷயத்திலும் இப்படியே. தர்ம சாஸ்த்ரங்கள், பெண்கள் ப்ரௌடையானவுடன் தாமதமின்றிக் கர்ப்பாதானம் செய்ய விதிக்கின்றன. ஆயுர்வேதமோவெனில்: பெண்கள் பதினாறு வயது நிரம்பிய பிறகுதான் கர்ப்பாதானத்திற்கு உரிமை வாய்ந்தவர் என்று விதிக்கின்றது. இவ்விஷயத்தில் தர்ம சாஸ்த்ரத்தைக் காட்டிலும் வைத்ய சாஸ்த்ரத்திற்குத் தான் ப்ராமாண்யம் அதிகம் கொடுக்கவேணும் என்பது எனது அபிப்ராயம். ஏனெனில்: 'ശരീരമാദ്യം ഖലു ധർമസാധനം' என்று காளிதாஸன் கூறியபடி, சரீராரோக்யம் ப்ரதானமாகக் கவனிக்கத் தகுந்த தாகையால் ஆயுர்வேதத்தையே பின் பற்றுவது ந்யாயம். இவ்விஷயத்தை அஷ்டாங்க ஹ்ருதயத்தில் சாரீரஸ்தானத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அதில் பதினாறு வயது நிரம்பிய பெண்ணும், இருபது வயது நிரம்பிய புருடனுமே கர்ப்பாதானத்திற் குரியவர்கள் என்றும், இதில் குறைந்த வயதுள்ளவர்களுக்கு உண்டாகும் கர்ப்பம் வியாதி யுள்ளதும், அல்பாயுளாகவும், துரத்ருஷ்டமாகவும் இருக்கும் என்றும் கூறியுள்ளது. பெரும்பாலும் பெண்களுக்குப் பன்னிரண்டு வயதுக்குப் பின் ரஜஸ்வலை யாகும் காலம் என்றும் கூறி, ஆனாலும் அவர்கள் பதினாறு வயதுக்கு முன் கர்ப்பாதானத்திற்குத் தகாதவர்கள் என்றும் கண்டிப்பாய் விதிக்கக் காண்கிறோம்.

காமசாஸ்த்ரத்தை இயற்றிய வாத்ஸ்யாயந மஹர்ஷியும் ஸ்த்ரீ புருட ஸம்யோகத்திற்கு மேற்கூறியபடி 16-ம் 20,ம்தான் குறைந்த வயதளவு என்று உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார். இதில் மற்றொரு விஷயம் கவனிக்கத்தக்கது. ஆண் பெண் இவர்களுடைய வயது வித்யாஸத்தைப்பற்றித் தர்மசாஸ்த்ரத்தை ஆதாரமாக எடுத்துக்கொள்வது மிகவும் உசிதம். மூன்றில் ஒருபங்கு வயதுள்ள பெண்ணை மூன்று மடங்கு அதிக வயதுள்ள புருடன் கல்யாணம் செய்துகொள்ளவேணும் என்பது. இவ்விஷயத்தை வைத்யசாஸ்த்ரமும் காமசாஸ்த்ரமும் மறுக்கவில்லை. தர்மசாஸ்த்ரங்கள் இவ்வளவு வயது வித்யாஸத்தை வற்புறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால், இதை இரண்டு விதமாக விவரிக்கக்கூடும். புருடன் கற்கவேண்டிய வித்யைகளை யெல்லாம் கற்ற பிறகு தான் விவாஹம் செய்ய உரிமையை அடைகிறான் என்ற விஷயத்தில் தர்மசாஸ்த்ரங்களுக்குப் பிடிவாதம் உண்டு. பெண்களுக்கு, எட்டு வயதுக்குமேல் ரஜஸ்வலையாகும் வயதுக்குள் விவாஹ காலம். அவர்கள் வித்யாப்யாஸத்திற்காக விவாஹத்தை விளம்பிக்கக்கூடாது. ஸ்த்ரீகளுக்கு வித்யாப்யாஸம் இல்லை என்பது முற்றும் தவறு. ஆனால் அவர்கள் ஆண்பிள்ளைகளைப்போல் வீட்டைவிட்டுச் சென்று குருகுலவாஸம் செய்ய விதியில்லை. பால்யத்தில் தகப்பன் ஸஹோதரன் மார்களும், யௌவந வயதில் கணவனும் அவர்களைக் கற்பிக்கக் கடமைப்பட்டவர்கள் என்று தர்மசாஸ்த்ரங்களின் அபிப்ராயம். எல்லா ஸ்ம்ருதிகளும் கூடி ஏகமனதாய்ப் பெண்களுக்கு ருதுவாகுவதற்கு முன்னரே

விவாஹத்தை முடிக்கவேணும் என்று வற்புறுத்தினதற்குக் காரணத்தைச் சற்று ஆராய்வோம்.

இதிஹாஸ புராணங்களில் கூறப்படும் அநேக கதைகளில் நல்லொழுக்கமுள்ள தம்பதிகளுக்கு உண்டாகும் கர்ப்பத்தைப் பாவநம் என்றும், பரிசுத்தமானது என்றும் பலவிதமாய் ஸ்துதிக்கக் காண்கிறோம். இப்புகழ்ச்சி, தம்பதிகளுடைய வ்யபிசாரதோஷம் இல்லாமையை மாத்ரம் கருதினதல்ல. தம்பதிகளுடைய பரஸ்பராநுராகம் (அதாவது காதல்) அவ்வளவு சுத்தமானது என்பது அதின் உள் கருத்து. பெண், ருதுமதீ ஆன பிறகு கல்யாணம் செய்யப்படாமல் தகப்பன் வீட்டில் இருந்தால், இவள் பல புருடர்களைக் காதலித்தும், பல புருடர்களால் காதலிக்கப்பட்டும் இருப்பாள். ஆகையால் அவளுடைய காதல் எச்சில் ஆகும். சாப்பிடும் அந்நத்தை ஒருவனை உத்தேசித்துப் பாகம் செய்தால், மற்றவனுக்கு அது எச்சில் ஆகும்; மற்றவன் அதை உண்ணக்கூடாது. இந்த ந்யாயம் பெண்களின் காதலுக்கும் உண்டு. இந்த ந்யாயத்தையே ஸாவித்ரீ முதலான பதிவ்ரதாசிரோமணிகள் அநுஷ்டித்துக் காட்டினார்கள்.

இப்படி மநோவாக்காயங்கள் என்னும் த்ரிகரணங்களாலும் ஒரு பொழுதும் மாறாத அநுராகத்திலிருந்து உண்டான ஸந்ததியே பாவநம் எனப்படும். ஆகவே பெண்களுக்கு ருதுகாலத்திற்கு முன்னரே விவாஹ காலம் என்றும், புருடர்களுக்குக் கற்கவேண்டிய வித்யைகளைக் கற்ற பிறகே விவாஹ காலம் என்றும் நன்கு விளங்குகின்றன. இவ்விதியை இனியாவது வைதிகர் லௌகிகர் அனைவரும் நிர்ப்பந்தமாய்ப் பின்பற்றுவாரானால் உலகத்திற்கு மிகவும் க்ஷேமம் உண்டு.

———

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

231. “[illegible]” (ப்ரோக்ஷிக்கப்பட்ட உரல் உலக்கையால் அவஹநநத்தைச் செய்யவேண்டியது) என்கிற வாக்யத்தில் ப்ரோக்ஷணம் அவஹநநத்துக்காகவா? அல்லது அபூர்வத்துக்காகவா என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—வாக்யம் என்கிற ப்ரமாணத்தால் ப்ரோக்ஷணமானது உரல் உலக்கையாகிய வஸ்துக்களின் வழியாய் அவஹநநத்துக்காகச் செய்யப்படுகிறது என்று காட்டப்படுகிறது.

ஸித்தாந்தம்—ப்ரகரணம் என்கிற ப்ரமாணத்தாலே ப்ரோக்ஷணம் அபூர்வத்துக்குச் சேஷம் என்று காட்டப்படுகிறது. வாக்யம் ப்ரகரணத்தைக்காட்டிலும் ப்ரபலம்தான்; ஆனால் அபூர்வத்துக்குச் சேஷமாக இராவிட்டால், ப்ரோக்ஷணத்துக்கு ப்ரயோஜனமில்லை. இதின் ப்ரயோஜநம்-அவஹநநத்துக்காக ப்ரோக்ஷணம் என்றால், நகத்தால் உரித்து அரிசி பண்ணிச் சருவைச் செய்கிற யாகத்தில் நகத்துக்கு ப்ரோக்ஷணம் வராது. அபூர்வத்துக்காக ப்ரோக்ஷணம் என்றால், நகத்துக்கும் ப்ரோக்ஷணம் வரும். (அதி-2)

சொன்ன வாக்யத்தின் பொருள்—எந்த வியாபாரத்தாலே அரிசியாகப் பண்ணி, அதின் வழியாய் அபூர்வமுண்டுபண்ணப்படுகிறதோ, அந்த வியாபாரத்துக்கு ஸாதநமானதை ப்ரோக்ஷித்து, அதைக் கொண்டு அந்த வியாபாரத்தைச் செய்யவேண்டியது—என்பது. நகத்தாலே உரித்து அரிசி பண்ணி, அது வழியாய் அபூர்வ முண்டுபண்ணப்படுவதால், அந்த வியாபாரத்துக்கு நகம் ஸாதநமாயிருக்கிறது. நகத்தை ப்ரோக்ஷித்து அப்புறம் அதைக் கொண்டு அந்த வியாபாரத்தைச் செய்யவேண்டியது. (சா. 577)

232. தர்சபூர்ணமாஸ இஷ்டி விஷயத்தில் இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன—“[illegible] (ஸ்வர்க்கம் எனக்கு வரட்டும்)” “[illegible]” (அக்னி தேவதைக்கு வரும் ஜயத்துக்குப்

பின்னாலே எனக்கு ஜயமுண்டாகட்டும்) என்று. இந்த மந்திரங்களுக்கு எது ப்ரயோஜகம்? ஸ்வர்க்கமும் அக்னி தேவதையுமா? அல்லது அபூர்வமா? என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஸ்வர்க்கமும், அக்நிதேவதையும் ப்ரயோஜகங்கள். அவைகளின் லிங்கம் காணப்படுகிறது. "ஸௌர்யம் சருந் நிர்வபேத் ப்ரஹ்மவர்சஸகாம:" என்று விதிக்கப்பட்ட யாகத்தில் ஸ்வர்க்கமும் அக்னி தேவதையும் இல்லாமையால் அந்த மந்திரங்கள் அதில் வரமாட்டா.

ஸித்தாந்தம்—வாக்யத்தால் சொல்லப்பட்ட அபூர்வம் தான் பலனைக் கொடுப்பது. அதைத்தான் உண்டுபண்ணவேண்டியது. அது அங்கங்களைத் தேடுகிறது. ஆகையால் அபூர்வம் தான் மந்திரங்களுக்கு ப்ரயோஜகம். ஸௌர்யதேவதையின் யாகத்தில் அந்த மந்திரங்களைச் சொல்ல வேண்டியது. (அதி - 3)

மந்திரம் பலனைத் தெரியப்படுத்துகிறது உண்மையே. ஆனால், அதினாலேயே (அதாவது யாகமில்லாமல்) பலன் உண்டாகும் என்று ப்ரமாணமில்லை. உண்டாவதானால், பலனுக்காக மந்திரம் என்று சொல்லலாம். ப்ரகரணத்தாலே மந்திரமானது யாகத்துக்குச் சேஷமாயிருந்துகொண்டு, அதின் வழியாய்ப் பலனுக்குச் சேஷமாகிறது. ஆகையால் யாகத்தில் உண்டாகவேண்டிய அபூர்வம்தான் ப்ரயோஜகம். அப்படியே தேவதையும் யாகத்துடன் சேர்ந்துதான் பலனைக் கொடுக்கவேண்டியது. மந்திரங்களால் காட்டப்பட்ட பலனையும் தேவதையையுமுடைய யாகம் தன்னுடைய அபூர்வத்தை உண்டுபண்ணுகிறது என்று ஏற்படுகிறது. (சா. 579)

233. இப்படி ப்ரகரணம் என்கிற ப்ரமாணத்தாலே த்ரவ்யம் முதலானவைகள் அபூர்வஸாதநங்கள் என்கிற ஆகாரத்தாலே விதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. இந்த விசாரம் செய்கையில், தேவதையும் யாகத்துடன் சேர்ந்துதான் பலனைக் கொடுக்கவேண்டியது என்று சொல்லப்பட்டது. அது ஸரிதானா என்று இப்போது விசாரிக்க வேண்டியது.

பூர்வபக்ஷம்—யாகத்தாலே பூஜிக்கப்பட்டு தேவதை பலனைக் கொடுக்கிறது. மந்திரங்களும், அர்த்த வாதங்களும் தேவதைகளுக்கு உடம்பு முதலான ஐந்து விஷயங்கள் இருப்பனவாகச் சொல்லுவதால் இது கூடும் என்று ஏற்படுகிறது. இவைகளாவன—(1) உடம்பு-"ஸஹஸ்ராக்ஷோ கோத்ரபிச்வஜ்ரபாஹு:" (ஆயிரம் கண்ணுடைய-மலைகளைப்பிளந்த வஜ்ராயுதக்கையினுடைய இந்திரன்); (2) ஹவிஸைப் பெற்றுக்கொள்ளுதல் -

"அக்நிரிதம் ஹவிரஜுஷத" (அக்னிதேவதை இந்த ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொண்டான்;) (3) அதைச் சாப்பிடுதல்—'அத்தீந்த்ர: ப்ரஸ்திதேமா ஹவிம்ஷி' (இந்திரன் ஹவிஸ்ஸைச் சாப்பிட்டான்). (4) த்ருப்தி அடைகிறது-"த்ருப்த ஏவைநமிந்த்ர: ப்ரஜயா பசுபிஸ்தர்பயதி" (திருப்தியடைந்த இந்திரன் பிள்ளை குட்டியாலும், பசுக்களாலும் அவனைத் திருப்தி பண்ணுவிக்கிறான்); (5) அநுக்ரஹம் செய்வது. இது நாலாவது வாக்யத்தாலேயே ஏற்படுகிறது. வேலைக்காரனிடம் வேலையைப் பெற்றுக் கொள்ளும் ராஜாவைப்போல், பூஜிக்கப்பட்ட தேவதை பலனைக் கொடுக்கிறது. இதுதான் முக்யம். அதன் ப்ரீதிக்காக அங்கங்களைச் செய்யவேண்டியது.

ஸித்தாந்தம்—தேவதை பலன் கொடுக்கிறதாகச் சொன்னீரே—எதைக் கொண்டு சொன்னீர்? வேதவாக்யத்தைக் கொண்டா? அல்லது வஸ்து ஸாமர்த்யத்தைக் கொண்டா? முதல் சொன்னதால் என்று சொல்ல முடியாது. "ஸ்வர்க்ககாமோ யஜேத" என்பது வாக்யம். அதின் பொருள்—யாகத்தால் ஸ்வர்க்கத்தை உண்டு பண்ணு என்பது. ஆகையால் யாகமானது பலனைக் கொடுக்கிறது என்று வாக்யத்தால் அறிகிறோம். பலம் வேறு காலத்திலன்றோ வரப்போகிறது; யாகம் அதின் கிட்ட இல்லாமல் ஒதுங்கியிருக்கிறதே என்றால், யாகத்துக்கு ஸாதநமான தேவதை இன்னும் ஒதுங்கியிருக்கிறது. பலன் எப்படி வரும் என்றால், அபூர்வத்தால் வருகிறது என்று சொல்லுகிறோம். இது ச்ருதியால், அல்லது அர்த்தாபத்தி என்னும் பிரமாணத்தாலே தோன்றுகிறதே; ஆகையால் யாகந்தான் பலனைக் கொடுக்கிறது என்று வேதவாக்யத்தாலேயே ஒப்புகொள்ள வேண்டியது.

2. வஸ்து ஸாமர்த்தியத்தாலும் நீர் சொன்னது ஏற்படாது. உடம்பு முதலான ஐந்து விஷயங்கள் இருப்பனவாகச் சொன்னீர். அவைகளைச் சொல்லும் மந்திரங்களும் அர்த்தவாதங்களும், இருக்கிற விஷயங்களைச் சொல்லுகின்றன என்று எப்படித் தெரியும்? அவைகளின் வேலை ஸ்தோத்ரம் பண்ணுவது. இருக்கிறதையும் சொல்லலாம்; இல்லாததையும் சொல்லலாம். இப்படியில்லாவிட்டால் "வநஸ்பதிப்ய: ஸ்வாஹா ஓஷதீப்ய: ஸ்வாஹா" என்று இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன. அவைகளின் விஷயத்தில் தேவதைகளும், அவர்களுக்கு உடம்பு முதலானவைகளும் இருப்பனவாக ஒப்புக்கொள்ளவேண்டும். இது ப்ரத்யக்ஷத்துக்கு விருத்தம். ஆகையால் ராஜாவைப்போல் தேவதைகள் பலன் கொடுக்கிறார்கள் என்று சொல்லமுடியாது.

3. மேலும், உடம்பு முதலானவைகளுடன் கூடின தேவதை பலன் கொடுக்கிறது என்று சொல்லுகிறவரும் யாகமில்லாமல் கொடுப்பதாகச்

சொல்லவில்லை. எது ஏற்பட்டது, எது ஏற்படவேண்டியது என்று பிரித்துப் பார்க்கவேண்டும். யாகம் என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. நாமிருவரும் அதை ஒப்புக்கொள்ளுகிறோம். அதைக் கொண்டே கார்ய மாகும்போது, தேவதை பலனைக் கொடுக்கிறது என்பதை ஏன் ஒப்புக் கொள்ளவேண்டும் ?

4. மேலும், தாய் தகப்பன் ஆசாரியன் முதலானவர்களுக்கு வேலை செய்து பலனை ஜனங்கள் அடைகிறார்களே. அங்கே தேவதை எங்கே யிருக்கிறது ? ஆகையால் பலனை அபூர்வம்தான் கொடுக்கிறது. அதுதான் தர்மங்களுக்கும் ப்ரயோஜகம். அப்படி ஏற்பட்ட தர்மங்களை அதிதேசம் பண்ணலாம். (அதி—4)

234. இப்படி விக்ருதி யாகங்களில் ப்ரகிருதி யாகத்திலிருந்து அங் கங்களை அதிதேசம் பண்ணலாம் என்று ஏற்பட்ட பிறகு, ஊஹம் விசாரம் செய்யவேண்டியது. முதலில் மந்திரங்களில் ஊஹம் பண்ணுவது—

நிர்வாபம் செய்யும்போது சொல்லும் மந்திரம் "அக்நயே த்வா ஜுஷ்டம் நிர்வபாமி" என்று இருக்கிறது. இதன் பொருள்—அக்னிதேவதை எப்படி ஸந்தோஷப்படுமோ, அப்படி உன்னைப் பிரித்து எடுக்கிறேன் என்பது. ஸூர்யதேவதையின் சருயாகத்தில் இந்த மந்திரம் பொருந்தாது. ஆகையால் 'அக்நயே' என்கிற சொல்லை எடுத்துவிட்டு "ஸூர்யாய" என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டியது.

2. இங்கே "ஜுஷ்டம்" என்கிற சொல்லும் பொருந்தாதே ; நிர் வாபம் செய்வதற்கு முன்னாலே ஹவிஸ்ஸு எப்படி ஜுஷ்டமாயிருக்கும் ? வாக்யத்துக்குப் பொருள்—"அக்னியால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஹவிஸ்ஸு ஆன உன்னைப் பிரித்துக் எடுக்கிறேன்" என்பது. நிர்வாபம் பண்ணி, புரோடாசம் செய்து, கொடுத்த பிறகு தானே அக்னிதேவதை அதைப் பெற்றுக்கொள்ளும். ஆகையால் அந்தச் சொல் பொருந்தாது. அதற்கு விசேஷணமான 'அக்நி' என்கிற சொல்லும் அப்படித் தான் பொருந்தாது. ஆகையால் ஜுஷ்டம் என்கிற சொல்லை வைத்துக்கொள்ளு வது போல, 'அக்நயே' என்கிற சொல்லையும் வைத்துக்கொள்ளலாமே. ஊஹம் பண்ணவேண்டியதில்லையே யென்பது கேள்வி. பதில்—ஜுஷ்டம் என்கிற சொல் க்ரியாவிசேஷணம். எப்படி ஸந்தோஷமுண்டாகுமோ, அப்படி நிர்வாபம் பண்ணுகிறேன் என்பது பொருள். அந்தச் சொல்லுக் குப் பொருத்தமில்லாமல் போகவில்லை. (அதி—13)

235. நிர்வா பமந்திரத்தில் முதல் பாகம்—'தேவஸ்ய த்வா ஸவிது: ப்ரஸவே அச்விநோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம்,' என்பது. அதன் பொருள்.—எல்லாரையும் ஏவுகிற தேவனால் ஏவப்பட்டு, அச்வினி தேவதையின் பாஹுக்களா (கைகளா)லும், பூஷன் என்னும் தேவதையின் கைகளாலும்—என்பது. இங்கே ஸவிதா, அச்விநௌ, பூஷன் என்பவை தேவதைகளின் பெயர்கள். இவைகள் செய்யப்படும் நிர்வாப வியாபாரத் துடன் ஸம்பந்தமுள்ள தேவதைகளைக் கொண்டிருக்கின்றனவா? அல்லது, ஸம்பந்த மில்லாதவைகளைச் சொல்லுகின்றனவா ? என்பது ஸந்தேஹம். முதல் பக்ஷத்தில் அவைகளை ஸூர்யதேவதையின் யாகத்தில் மாற்ற வேண்டும். இரண்டாவது பக்ஷத்தில் நிர்வாபம் என்கிற க்ரியைக்கு விசேஷணமாயிருந்து கொண்டு, அது உயர்ந்த க்ரியை என்று ஸ்தோத்ரம் பண்ணும்.

பூர்வபக்ஷம் :—மந்திரம் தேவதைகளைக் காட்டுகிறது. இது த்ருஷ்ட ப்ரயோஜநம். இது அகப்படுமானால், அத்ருஷ்டமான ப்ரயோஜநத்தைக் கல்பிக்கக்கூடாது. நிர்வாபத்தை ஸ்தோத்ரம் பண்ணுகிறது என்றால், அத்ருஷ்டமான பிரயோஜநத்தைக் கல்பிக்கவேண்டும்.

2. ஒரு கேள்வி—ப்ரகிருதி யாகத்தில் யாகத்தை விதிக்கிற வாக்யத் திலேயே அதற்குத் தேவதையாக அக்னி தேவதை சொல்லப்படுகிறதே. வேறு தேவதை எதற்காக வேண்டும் என்று. பதில்—ஸவிதாவோ, அக்னியோ, எவரை வேண்டுமோ, அவரைத் தேவதையாய் வைத்துக் கொள்ளலாம்.

ஸித்தாந்தம் :—இது எப்படிக் கூடும் ? யாகவிதியிலேயே அக்நி தேவதை ஏற்படுகிறது. ஸவிதா யாகம் விதிக்கப்பட்ட பிறகு மந்திரத்தினால் ஏற்படவேண்டும். உத்பத்தி சிஷ்டம் உத்பந்ந சிஷ்டத்தைக் காட்டிலும் ப்ரபலம். ஆகையால் அக்னிக்கும் ஸவிதாவுக்கும் பலம் ஸமம் அன்று. ஆகையால் விகல்பம் கூடாது. மேலும், ஒவ்வொரு தேவதைக்கும் வாக்யம் வேறாகுமே ? "ஜுஷ்டம், நிர்வாபம்" என்கிற சொற்களை ஒவ்வொரு வாக்யத்திலும் அநுஷங்கம் பண்ணவேண்டும். வாக்யமோ நிர்வாபம் என் கிற சொல்வரையில் ஒரே மந்திரமாகத் தோன்றுகிறது. ஜுஷ்டம் முத லான இரண்டு சொற்களும் ஒரே தடவை படிக்கப்பட்டவைகள் ; அவை அநுஷங்கத்தை ஏற்றுக்கொள்ளமாட்டா. ஆகையால் நிர்வாபம் என்னும் வியாபாரத்தில் உத்ஸாஹம் உண்டாவதற்காக, அதைச் செய்யும் வேளை யில் அதைத் தேவதைகளைச் சொல்லும் சொற்கள் ஸ்தோத்ரம் பண்ணு கின்றன. ஆகையால் அவைகளை மாற்றவேண்டியதில்லை. (அதி—12) ஸூ-591-592)

236. அக்நிஷ்டோமத்தில் ஸுப்ரமண்ய ஆஹ்வாந மந்திரத்தால் இந்திரனைக் கூப்பிடவேண்டியது. அக்நிஷ்டுத் என்கிற விக்ருதி யாகத்தில் சோதகத்தாலே இந்த மந்திரம் வருகிறது. "ஆக்³நேயீ ஸுப்³ரஹ்மண்யா ப⁴வதி" என்று ஒரு விதி. இந்த மந்திரத்துக்கு அக்னிதேவதையின் ஸம்பந்தம் இப்படி ஏற்படுவதால், 'இந்த்³ர ஆக³ச்ச²' (இந்திரனே வாரும்) என்கிற விடத்தில், "இந்த்³ர" என்கிற சொல்லை எடுத்து விட்டு "அக்³நே" என்கிற சொல்லைச் சேர்த்து, "அக்³ந ஆக³ச்ச²" என்று சொல்லவேண்டும். அந்த மந்திரத்திலேயே இந்திரன் என்கிற சொல்லுக்கு "ஹரிவ" முதலான விசேஷணங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஊஹமுண்டா என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் :—ஊஹம் பண்ணவேண்டும். விசேஷணங்களாலே இந்திரனுடைய செயல்கள் சொல்லப்படுகின்றன—சுக்ல பக்ஷமும், க்ருஷ்ண பக்ஷமும் அவனுக்குக் குதிரைகள்; செம்மறியாட்டின் உருவத்தை எடுத்துக்கொண்டு, மேதாதிதியை அபஹரித்தான்; வ்ருஷணச்வ என்பவனுடைய பெண்ணான மேநகையிடம் ஆசையுள்ளவனாயிருந்தான்; கௌரமிருகமாயிருந்து ஸோமரஸத்தைப் பானம் பண்ணினான். அஹல்யை என்கிற ஸ்திரீயைத் தொட்டான்—என்று. இந்த விசேஷணங்கள் இந்திரனிடத்திலே தான் பொருந்தும்; அக்னிதேவதையிடம் பொருந்தாது. ஆகையால் எல்லாவற்றையும் விட்டு விட்டு, அக்னிதேவதைக்குத் தகுந்த வேறு விசேஷணங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

ஸித்தாந்தம் :—சொன்ன விசேஷணங்கள் குணங்களைச் சொல்லி, இந்திரனை ஸ்தோத்ரம் பண்ணுகின்றன. இருக்கும் குணத்தைச் சொல்லியும் செய்யலாம்; இல்லாத குணங்களைச் சொல்லியும் ஸ்தோத்ரத்தை செய்யலாம். ஆகையால் அந்தச் சொற்களால் அக்னிதேவதையையும் ஸ்தோத்ரம் செய்யலாம். ஊஹம் பண்ணவேண்டியதில்லை. (அதி—16)

237. தர்ச பூர்ணமாஸ இஷ்டியில் ப்ரஸ்தரத்தை அக்னியில் எரிக்கும்போது, ஸூக்தவாகம் என்னும் மந்திரம் படிக்கப்படுகிறது. அதில் "அயம் யஜமாந ஆயுராஶாஸ்தே" என்று ஒரு பாகமிருக்கிறது. அதின் பொருள்-இந்த யஜமானன் ஆயுஸ்ஸை ஆசைப்படுகிறான் என்பது. ஸத்ரம் என்னும் ஸோம யாகத்தில் யஜமானன்கள் அனேகம் பேர்கள் இருக்கிறபடியால், சொற்களுக்கு ஊஹமுண்டா என்பது ஸந்தேஹம்.

பதில் :—எல்லா ப்ரகரணங்களிலும் மந்திரம் இரண்டு விதம். செய்யப் போகும் கார்யத்தைக் காண்பிப்பது ஒருவிதம்; அடையும் பலனைக் காண்பிப்பது மற்றொரு விதம். சொன்ன பாகத்தாலும், அதன் பின்னாலே படிக்கப்படும் நாலு ஐந்து வாக்யங்களாலும் இங்கே பலன் காட்டப்படுகிறது ஆகையால் பலனைச் சொல்லுவதில் கருத்து இருக்கிறது. பலனோ ஸத்ரயாகத்தைச் செய்யும் எல்லாருக்கு முண்டு. ஆகையால் எல்லாருக்கும் பலன்கள் வருவதற்காக யஜமாநன் என்கிற சொல்லைப் பஹுவசனமுள்ளதாக மாற்றவேண்டும். (அதி—15)

238. அக்னிஷ்டோமத்தில் ஒரு வயது பசுமாட்டைக்கொண்டு ஸோமத்தை விலைக்கு வாங்கவேண்டியது. அது விஷயமான மந்திரம்—'இயம் தே ஸோமக்ரயணீ தயா தே க்ரீணாமி' (இது ஸோமத்தை வாங்குகிற பசுமாடு; அத்தாலே உன்னிடமிருந்து வாங்குகிறேன்) என்பது ஸாத்யஸ்க்ரம் என்னும் ஏகாஹஸோம யாகத்தில் மூன்றுவயதுள்ள காளை மாட்டை ஸோமத்தை வாங்குவதற்குக் கொடுக்கவேண்டும். சொன்ன மந்திரம் அந்த யாகத்தில் சோதகத்தால் வருகிறது. அதற்கும் ஸோமத்தின் க்ரயத்துக்கும் பொருத்த முண்டாவதற்காக "அயம் ஸோமக்ரயண꞉, தேந தே க்ரீணாமி" என்னும் மந்திரத்தை மாற்றவேண்டும். மந்திரத்தின்மேலே ஒரு வாக்யமிருக்கிறது. "தஸ்யை ஶ்ருதம்" என்று ஆரம்பித்து "தஸ்யை வாஜிநம்" என்று முடிகிறது. காளைமாட்டுக்குப் பால் முதலானவை யில்லாமையால், இதையும் மாற்றவேண்டுமா என்பது ஸந்தேஹம்.

பதில்—மாற்றவேண்டாம். ஒரு வயது பசுமாட்டினிடத்திலும் பால் முதலானவைகள் கிடைக்காதே. ஆகையால் மந்திரத்துக்கு ப்ரக்ருதி யாகத்திலும் பொருத்தமில்லை. அது ஸ்தோத்ரம் பண்ணுகிறது. அது காளை மாட்டுக்கும் பொருந்துமாகையால் ஊஹம் கிடையாது.

2. கேள்வி—ஒரு வயது பசுமாட்டுக்குப் பால் முதலானவைகள் இல்லாமல் போனபோதிலும், இரண்டு வருஷமானால் அவைகள் உண்டாகுமே; அந்தக் குணங்களைக்கொண்டு மந்திரம் பசுமாட்டைக் காட்டுகிறது. காளைமாட்டுக்கு அவைகள் ஒருநாளு முண்டாகாதே என்று. பதில்—மேல் வரும் என்றது நிச்சயமில்லை. அது நடுவில் இறந்து போகலாம். காளை மாட்டினால் பசுமாடு உண்டாகலாம். அதினிடத்தில் பால் உண்டாகலாம். அதைக் காளைமாட்டில் உண்டானதாகச் சொல்லாம். (சா—596)

239. இப்படி மந்திரங்களுக்கு ஊஹம் சொல்லப்பட்டது. முதலில் ஒரு பதத்தை முழுவதும் எடுத்துவிட்டு வேறு பதம் சேர்க்கப்பட்டது. அதன்மேலே பதத்தை வைத்துக்கொண்டு வசநத்தையும், லிங்கத்தையும்,

மாற்றினால் போதும் என்று காட்டப்பட்டது. மேலும், எந்தப் பாகத்தாலே ஸ்தோத்ரம் மாத்திரம் செய்யப்படுகிறதோ, அதற்கு ஊஹம் கிடையாது என்றும் காட்டப்பட்டது. இப்போது ஸாமத்தில் ஊஹத்துக்கு உதாரணம் சொல்லவேண்டியது. அக்னிஷ்டோமத்தில் கடைசி ஸ்தோத்ரம் 'யஜ்ஞாயஜ்ஞீயம்' என்பது. அத்யயநம் செய்கிறவர்கள் 'கிரா கிரா' என்கிற எழுத்துக்களை "ஙாயிரா கிரா" என்று கானம் பண்ணுகிறார்கள். அதை யாகத்தில் ஸ்தோத்ரமாகக் கானம் செய்யும்போது, 'ங' என்கிற எழுத்தை விட்டு விட்டு "ஆயிராயிரா" என்று கானம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் உத்காதாவுக்குக் கெடுதல் உண்டாகும். (அதி—18)

முதல் பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்

240. மறுபடியும் மந்திரங்களில் ஊஹத்துக்கு உதாஹரணம். புரோடாசத்தை யெடுத்துப் பாத்திரத்தில் வைக்கும்போது சொல்லுகிற மந்திரம்—"வ்ரீஹீணாம் மேதஸுமநஸ்யமாநः" என்பது. ஸௌர்ய தேவதையின் யாகத்தில் த்ரவ்யம் நீவாரம். இந்த மந்திரம் அதில் அதிதேசத்தால் வருகிறது. த்ரவ்யத்துக்கும் மந்திரத்துக்கும் பொருத்த முண்டாவதற்காக "வ்ரீஹீணாம்" என்கிற சொல்லை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக 'நீவாராணாம்' என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டியது. (அதி—1)

இப்படியே கீழே சொன்ன "ஸமேதஸ்வர்ச்ஸவः" என்கிற மந்திரத்தில் ஸௌர்யதேவதையின் யாகத்தில் பலன் ப்ரஹ்மவர்ச்சஸமாகையால், "வர்ச்ஸவः" என்கிற சொல்லை யெடுத்துவிட்டு "ப்ரஹ்மவர்ச்ஸஸம்" என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டும்.

241. பாசநியாயம்:—அக்னிஷ்டோமத்தில் அக்னிஷோமீய பசுவின் ஸம்ஜ்ஞபநம் ஆனபின்பு அத்வர்யு போய்ப் பசுவின் காலில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்க்கிறான். அதற்கு மந்திரம். "அதிதிः பாசம் ப்ரமுமோக்து" என்பது. அதிதிதேவதை இந்தக் கயிறுகளை அவிழ்க்கட்டும் என்பது அதின் பொருள். ஒரே கயிற்றை அவிழ்க்கவேண்டும். மந்திரத்திலிருக்கும் பஹுவசநம் பொருந்தாது. ஆகையால் மந்திரத்தைப் ப்ரகரணத்திலிருந்து எடுத்து, அனேக பசுக்கள் உள்ள யாகங்களைச் சொல்லுமிடத்தில் சேர்க்கலாமா என்பது ஸந்தேஹம்.

பதில்—வேண்டியதில்லை. 'பாசாந்' என்கிற சொல்லில் மூன்று பாகங்க ளிருக்கின்றன. பாச என்கிற ப்ரக்ருதி, கர்மமாகிய காரகம், பஹுவசநம். இவைகளில் முதலிரண்டு பாகங்களுக்குப் பொருத்த மிருக்கிறது; மூன்றாவதுக்குத்தான் பொருத்த மில்லை. முதல் பாகம் தர்மியை(வஸ்துவை)ச் சொல்லுவதால் முக்கியமானது. விபக்தி அந்த வஸ்து கர்மமா, கரணமா என்று அதன் தர்மத்தைச் சொல்லுகிறது; ஆகையால் முதல் பாகத்துக்கு உட்பட்டது. (குணமானது). விபக்தி கர்மமா கரணமா என்று சொல்லுவதால் வசநத்தைக் காட்டிலும் முக்கியமானது. வசநம், கர்மம் கரணம் என்பதின் ஸங்கியையைக் காட்டுகிறது, ஆகையால் விபக்திக்கு உட்பட்டது முக்கியமான ப்ரகிருதிக்கும் விபக்திக்கும் பொருத்தமிருப்பதால், இவைகளுக்கு உட்பட்ட வசநத்தைக் கவனித்து இவைகளை அலக்ஷியம் செய்து ப்ரகரணத்தை விட்டு எடுப்பது நியாயமில்லை.

2. மேலும், கீழே வசநத்தைச் சொல்லுவதில் கருத்திருக்கிறது என்று வைத்துக்கொண்டு பதில் சொல்லப்பட்டது. அதைச் சொல்லுவதில் கருத்தே யில்லை. ஏனென்றால், அவிழ்க்கிறது என்கிற வியாபாரத்தில் எது கர்மம் என்று தெரியவேண்டும். முதலிரண்டு பாகங்களும் இதைக் காட்டுகின்றன. எத்தனையை அவிழ்க்கிறது என்கிற பேச்சே யில்லை. அதைத் தெரிந்துகொள்ளாமலே வியாபாரம் முடியும்.

3. பஹுவசநத்துக்கு என்ன ப்ரயோஜநம் என்றால், கயிற்றின் அவயவங்கள் பல என்று காட்டுகிறது என்று லக்ஷணையால் கல்பிக்க வேண்டும்.

(4) ஏகவசநமுள்ள மந்திரமும் ஒரு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் பலம் ஸமமாயிருப்பதால் எந்த மந்திரத்தையாவது படிக்கலாம். (அதி-5-சா-624)

242. கீழ்ப் பாராவில் விசாரித்த பாசமந்திரத்தை இரண்டு பசுவுள்ள விக்ருதி யாகத்தில் மாற்றாமல் சொல்லுகிறதா, அல்லது ஊஹம் செய்வதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன:—பாசம் என்கிற சொல்லையுடையது ஒன்று; "பாசாந்" என்ற சொல்லையுடையது மற்றொன்று. ஓரே மந்திரத்தாலே வியாபாரம் ஆகும்போது இரண்டையும் அதிதேசம் பண்ணவேண்டியதில்லை. அவைகளில் எதைக்கொண்டு வருகிறது என்று விசாரிக்கவேண்டும். எந்த மந்திரத்தை மாற்றாமல் படிக்கலாமோ, அதைக்

கொண்டு போகவேண்டியது. பாசம் என்கிற மந்திரத்துக்குப் பிரகிருதி யாகத்தில் பொருத்தமிருந்தது. அப்படியே விகிருதி வாக்யத்தில் பொருத்த மிருப்பதற்காக அதில் ‘வாஸஸா’ என்று சொல்லவேண்டும். பாசாந் என்பதற்கு ப்ரகிருதி யாகத்தில் பொருத்தமில்லை. ஆனபோதிலும் அதை மாற்றவில்லை. ஆகையால் விருக்ருதி யாகத்திலும் அதை மாற்றவேண்டிய தில்லை. அதைத்தான் கொண்டுபோகவேண்டியது.

2. பாசம் என்கிற பகுதி, விபக்தி, வசநம் ஆகிய எல்லாவற்றையும் சொல்லக்கூடிய இடத்தில் இரண்டைச் சொல்லி வசநத்தை விட்டு விடுவது நியாயம் அன்று. “பாசாந்” என்கிற மந்திரத்தைச் சொன்னால், அப்படிச் செய்யவேண்டியதாய் வரும். ஆகையால், “பாசம்” என்கிற மந்திரத்தைத் தான் கொண்டுபோகவேண்டும்.

(3) ப்ரகிருதி யாகத்தில் இரண்டு மந்திரங்களு மிருப்பதால் அதி தேசத்தால் அவைகள் வருவதைத் தடுக்கமுடியாது. ஆனால் பாசம் என் பதற்கு ஊஹமுண்டு. மற்றொன்றுக்கு ஊஹமில்லை. எதை வேண்டுமோ, அதைப்படிக்கலாம்.

ஸித்தாந்தம்—இரண்டு மந்திரங்களும் வரும் என்பதை ஒப்புகொள் வோம். “பாசாந்” என்பதற்கு ஊஹமில்லை யென்றது பிசகு. ப்ரகிருதி யாகத்தில் வேதம் “பாசாந்” என்கிற மந்திரத்தைப் படித்தபடியால், அதை அப்படியே-அதாவது மாற்றாமல்-ஒப்புக்கொண்டோம். விக்ருதி யாகத்தில். வேதம் அவைகளைப் படிக்கவில்லை. நாமாக அவைகளைக் கொண்டுபோகிறோம் ஸாதுவல்லாத சொல்லை ஏன் படிக்கவேண்டும்? ஆகையா லிரண்டிலும் “வாஸஸா” என்று படிக்கவேண்டும். (அதி-4-சா-623)

243. தர்சபூர்ணமாஸ இஷ்டியில் “பத்நீம் ஸந்நஹ்ய” என்கிற மந்திரத்தை அத்வர்யு ஆக்னீத்திரனைப் பார்த்துச் சொல்லுகிறான். யஜமாநனுக்கு ஒரேபத்நி யிருந்தால் “பத்னி” என்கிற சொல்லுக்கும், ப்ரயோகத்துக்கும் பொருத்தமுண்டு. அவனுக்குப் பத்நிகள் இரண்டு அல்லது மூன்று பேர்களிருந்தால், அர்த்தத்துக்குத் தகுந்தபடி ப்ரகிருதி யாகத்திலேயே ஊஹம் செய்யவேண்டுமா என்பது ஸந்தேஹம்.

பதில்—வேதம் இந்த வாக்யத்தை எல்லா ப்ரயோகங்களுக்கும் பொது வாய்ச் சொல்லியிருக்கிறது. ஆகையாலேதான் இரண்டு மூன்று பத்நி களுள்ள ப்ரயோகங்களுக்கு மந்திரம் சொல்லவில்லை. ஆகையால் ஏக வசனத்தைச் சொல்லுவதில் கருத்தில்லை. பாசநியாயப்படி “பத்நீ” என்கிற சொல்லில் ப்ரகிருதியையும் கர்ம காரகத்தையும் தான் வேதம் சொல்லுகிறது. வசநமில்லாமல் சொல்ல முடியாதாகையால், ஏகவசநம் சொல்லப்பட்டது. ஆகையால் எல்லா ப்ரயோகங்களிலும் பத்நீ என்கிற சொல் பொருந்துமானதால் ஊஹமில்லை. (அதி-6)

ஏகவசநத்தை கொண்டு ஒருபத்நி விஷயத்தில் மந்திரம்; மற்றவர் களுக்கு இல்லையென்று சொல்லகூடாது. பத்நீ என்கிற சொல்லின் ப்ரகிருதியின் பலத்தால் எல்லார் விஷயத்திலும் மந்திரம் வரும். ஸங் க்யையைச் சொல்லுவதில் கருத்து இல்லாமையால் அநேக பத்னிகள் விஷயத்தில் மந்திரம் வருவதைத் தடுக்கமுடியாது. (சா—625)

244. கீழ்ப் பாராவில் விசாரித்த மந்திரம் விகிருதி யாகங்களுக்கு வரும்போது, பத்நிகள் அநேகம் பேர்களிருந்தால், ஊஹமுண்டா என்று ஸந்தேஹம். **பதில்** — வசநமில்லாமல் சொல்ல முடியாமையால் ஏக வசநம் என்றும், செய்யும் வியாபாரத்துக்குப் பொருந்தின ஸங்க்யையைச் சொல்லுவதற்காகச் சேர்க்கப்பட்டது அன்று என்றும் சொல்லப்பட்டது. ஆகையால் விக்ருதியிலும் இந்த விஷயமுண்டானதால் ஊஹமில்லை.

ஒருகேள்வி—பாசமந்திரத்துக்கு விக்ருதி யாகத்தில் ஊஹமுண்டு என்றும், ஸாதுவல்லாத சொல்லைப் படிக்கக்கூடாது என்றும் சொன்னீரே. இங்கே அந்த நியாயம் வராதோ என்று. **பதில்**—இரண்டு மூன்று பத்னீ விஷயத்தில் ஏகவசனத்தை வேதம் சொல்லியிருப்பதைக் கொண்டு அப் படிச் சொல்லுவது வேதத்தின் ஸ்வபாவம் என்று எண்ணவேண்டியது. ஆகையால் ஏகவசனம் ஸாதுவான சொல். இது ப்ரகிருதி யாகத் துக்கும் விக்ருதி யாகத்துக்கும் பொது. பாசமந்திரத்தில் பஹுவச நத்தை ஒரே கயிற்று விஷயத்தில் உபயோகித்திருந்தது. இரண்டு கயிறு விஷயத்திலும் உபயோகித்திருந்தால், அது வேதத்தின் ஸ்வபாவம் என்றும், ஏகவசநமானசொல் ஸாது என்றும் சொல்லலாம். அப்படிக் காணப்படவில்லை. ப்ரகிருதி யாகத்தில் தீராது என்று ஒப்புக்கொண்டோம். விக்ருதி யாகத்தில் அது ஸாது வன்று. (அதி-7-சா-626)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

வித்யாஸ்தாநங்கள் யாரால் நிறம் பெற்றன?

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசாரியர்.]

"ஜயதி ஸகலவித்யாவாஹிநீ ஜந்மசைலோ
ஜநிபதபரிவ்ருத்தி ச்ராந்தவிச்ராந்தி சாகீ ।
நிகிலகுமதிமாயாசர்வரீபாலஸூர்யோ
நிகமஜலதிவேலா பூர்ணசந்த்ரோ யதீந்த்ர: ॥"

ஸ்ரீ யதிராஜஸப்ததியில் இந்த ச்லோகம் உள்ளது. ஸ்ரீ ராமாநுஜருடைய பலவிதமான பெருமைகளை எடுத்துப் பாக்கப் பேசும் அவஸரத்தில் ஸ்ரீ வேதாந்த தேசிகன் இந்த ச்லோகத்தை எழுதியுள்ளார். [ஸ்ரீ ராமாநுஜன் ஸகலமான வித்யைகளாகிற நதிகளுக்கு உத்பத்தி மலையாகவும், ஸம்ஸார மார்க்கத்தில் ஏறுவது இறங்குவதால் வருத்தமுற்ற ப்ராணிகளின் ஆயாஸத்தைத் தீர்க்கத்தகுந்த இடந்தரக்கூடிய மரவும், உலகத்திலிருக்கும் ஸமஸ்தமான குத்ருஷ்டிகள் மூலமுண்டான மாயையாகிற ராத்ரிக்கு ஸூர்யன் போன்றவராகவும், வேதமாகும் கடல் வேலைக்குப் பூர்ணசந்த்ரனாகவும் இருக்கிறார் என்பது இதன் கருத்து.]

இதில்: உலகத்திலிருக்கும் ஸமஸ்த வித்யைகளாகிற நதிகளுக்கு உத்பத்தி சைலம் என்பதால், ஒரு சிறந்த மலை (ஹிமயமலை) எப்படி நதிகளுக்கு உத்பத்தி ஸ்தாநமோ, அவ்வாறே ஸமஸ்த வித்யைகளுக்கும் இவர் உபத்பத்தி ஸ்தாநமென்று ஆயிற்று. அப்போது எல்லா வித்யைகளும் இவரிடமிருந்தே உண்டாயினவென்று பொருள் கொள்ளவேண்டியதாகும். பலவிதமாகவும் பல முகமாகவு முண்டான வித்யைகளுக்கு, இவர் ஒருவரே எவ்வாறு உத்பத்தி ஸ்தாநமா யிருக்கமுடியும்? அந்தந்த வித்யைகளும் பல முகங்களில் ஒன்றோடொன்று முரண்பட்டே யல்லவா இருக்கின்றன? நதிகளும் பெரும்பாலும் மலைகளிலிருந்தே உண்டாகக் காண்கிறோம். மலைகள் நதிகளுக்குப் பிறப்பிடம். இவ்வளவால் நமக்குக் கிடைத்த ப்ரயோஜநம் யாது? ஆகையால் இதன் அர்த்தத்தை இவ்வளவில் கொள்ளலாகாது. கவி ஸிம்ஹத்தின் கருத்து இவ்வளவுடன் நிற்காதென்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டமானதே. நதிகளுக்கு உத்பத்தி ஸ்தாநம் மலை யென்பதால், மலைக்குக் கிடைக்கும் சிறப்பைவிட, அப்படிப்பட்ட இடங்களில் மலையின் மூலம் நதிக்குச் சிறப்பு உண்டாவதைக் கண்டிருக்கிறோம். அதாவது—இது இமய மலையிலிருந்து உண்டாகும் நதி என்றால், இமய மலையில் விசேஷமாக மழை

பெய்யு மாதலால், அதன் மூலம் இந்த நதி யொருநாளும் வற்றாது என்பது போன்ற ப்ரயோஜந முண்டு. இது அவசியமானதே. பொதுவில் வஸ்துக்களின் சிறப்பைச் சொல்லுமிடத்தில், அவை எங்கு செழிப்பாகவும் அதிகமாகவும் உண்டாகக் கூடுமோ, அந்த விடத்தின் ஸம்பந்தத்தை முன்னிட்டு அவ்வஸ்துவை விளம்பரப்படுத்துவதை நாம் கண்டிருக்கிறோம். உதாரணமாகக் குங்குமப்பூவின் சிறப்பைத் தெரிவிக்க, 'இது காச்மீரத்தில் விளைந்தது' என்றால் அவ்வஸ்துவின் சிறப்பு நன்கு வெளியாவதுடன், அச்சிறப்புக்குக் காரணம் காச்மீர தேச ஸம்பந்தம் என்பதும் வெளியாகின்றது. இவ்வாறே மலையின் மூலம் நதிகளே இங்கு நிறம் பெற்றவைகள் என்று கொள்வது பொருத்தமாகும்.

ஆதிகாவ்யமான ஸ்ரீமத் ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில், தாரை வாலியிடம் ஸ்ரீராமனுடைய பெருமையை எடுத்துச் சொல்லுங் காலத்தில், 'தாதூநாமிவ சைலேந்த்ர: குணாநாமாகரோ மஹாந்' என்கிறாள். ஸாதாரண ரீதியில் இந்த வாக்யத்திற்கு 'காவிக், கற்களுக்கு இமய மலைபோல், ச்லாக்யமான குணங்களுக்குப் பெருமாள் நிதியானவர்' என்று பொருள் ஏற்படும். ஆனால் இங்கு த்ருஷ்டாந்தத்தின் ஸ்வாரஸ்யத்தைக் கவனிக்கும்போது, இதன் கருத்து வேறுவிதமாய்ப் புலனாகும். கணக்கில்லாத விலையுயர்ந்த ரத்நங்களுக்கு ஸ்தாநமாகிய இமயமலையைக் 'காவிக் கற்களுக்கு இருப்பிடம்' என்பதில் லாபம் அதிகமில்லை. காவிக் கற்களின் பெருமையை வெளியிட நினைத்து, 'இவை ஸாதாரண இடத்தில் விளைந்தனவல்ல; இமயமலையி லுண்டானவை' என்றால் இவற்றின் செழிப்பும் வர்ணங்களின் வளமையும் நன்கு வெளியாகும். மலையில் விளையும் வஸ்துக்களுக்கும் நாட்டில் விளையும் வஸ்துக்களுக்கும் வ்யத்யாஸ முண்டல்லவோ? அம்மாதிரியே, 'உலகத்தில் சிறந்தவைகளாகக் கருதப்படும் குணங்களுக்கு ஸ்ரீராமபிரானின் ஸம்பந்தமே காரணம்' எனப் பொருள் கொள்வது ஸ்ரீவால்மீகி பகவானின் அபிப்ராயமா யிருக்குமென்று ஊஹிக்க இட மிருக்கிறது. இங்கு 'சைல' என்று மாத்ரம் சொல்லாமல், 'சைலேந்த்ர:' என்ற பத ப்ரயோகத்தின் ஸ்வாரஸ்யம் கவனிக்கத்தக்கது. இக்காரணம் பற்றியல்லவோ பெருமாளுக்கு, பித்ருவாக்ய பரிபாலநம், ப்ராத்ரு வாத்ஸல்யம், ஏகபத்நீ வ்ரதம் முதலியன சிறந்தவைகளாக இன்றும் விளங்குகின்றன.

அவ்வாறே ப்ரக்ருதத்திலும், 'ஸகல வித்யைகளுக்கும் எம்பெருமானார் உத்பத்தி ஸ்தாந மென்பதால், ஸமஸ்த வித்யைகளும் எம்பெருமானாரின் ஸம்பந்தத்தால் தான் நிறம் பெற்றவைகளாயின' என்பதே கவிக்கு ஸம்மதமான பொருளாகும். இது உண்மையே. இதில் யாதொரு அதிசயோக்திக்கும் இடமில்லை. இங்கு வித்யா சப்தத்தால்,

'அங்கானி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர꞉ ।
புராணம் தர்மஶாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தஶ' ॥

என்று சொல்லப்படும் நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள் புராணம் ந்யாயம் மீமாம்ஸை தர்ம சாஸ்த்ரம் இப்பதினான்கும் வித்யா ஸ்தாநங்களெனப்படுகின்றன. இவற்றில் நான்கு வேதங்கள் ப்ரதாநமானவை. அவைகளுக்கு அங்கங்கள் ஆறு. வேதங்களின் பொருளை நன்கு அறிந்து கொள்ள இந்த ஆறு க்ரந்தங்களின் ஸஹாயமும் வேண்டியிருப்பதால், இவ்வாறும் அவ்வேதங்களுக்கு அங்கங்களாயின. அவை,

'ஶிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
கல்பஶ்சேதி ஷடங்கானி வேதஸ்யாஹுர்மனீஷிண꞉ ॥'

என்று ஆறு விதமாகின்றன. இவற்றில் வேதத்திற்கு வர்ணஶிக்ஷை (அக்ஷர சிக்ஷை) செய்யப்படுகிறது. வ்யாகரண நிருக்தங்களால், ப்ருக்ருதி ப்ரத்யய விபாகத்துடன் பதபதார்த்த விவேகம்செய்யப்படுகிறது. ச²ந்த³ஸ் என்பதால், காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் என்ற சந்தஸ்ஸுக்களின் ஸ்வரூபம் விவேசிக்கப்படுகின்றது. ஜ்யௌதிஷத்தால், அந்தந்த கர்மாநுஷ்டாநத்திற்கு அபேக்ஷிதமான காலநிர்ணயம் ஏற்படுகிறது. ஆபஸ்தம்பாதிகளின் கல்ப ஸூத்ரங்களின் மூலம், அக்கர்மங்களின் அநுஷ்டாந ப்ரகாரம் விசதமாக்கப் பட்டிருக்கிறது. ஆக இவ்வாறும் அவசியமாக(அந்தரங்கமாக) அபேக்ஷிதங்களாகையால் இவைகளை அங்கங்களென்றார்கள். இவைகளுடைய ஸஹாயத்தால் வேதங்களில் ஒருவாறு அர்த்த ஜ்ஞாநம் பிறக்க, அதை நிஷ்கர்ஷிக்கப் புறப்படும் காலத்தில் மற்றைப் புராணம் முதலிய நான்கும் உபகாரமாகின்றனவென்று அவைகளை உபகாரக கோடியில் வைத்தார்கள். இங்குப் புராண சப்தம் இதிஹாஸங்களுக்கும் உபலக்ஷணம். வேதார்த்தம் துரூஹமானது பற்றி, நம்போன்ற மந்தமதிகளின் புத்திக்கு எளிதில் அது புலப்படாதென வைத்து, அவ்வர்த்தத்தைத் தபோமஹிமையால் நன்கு ஸாக்ஷாத்கரித்த மநுமுதலிய பெரியோர்களின் நூல்களைக் கொண்டே வேதார்த்தத்தை உபப்ரஹ்மணம் செய்யவேணும். (உபப்ரஹ்மணம்: அர்த்தத்தை விசிதமாக்கிக்கொள்ளல்) ஆதலால் வேதத்தின் பூர்வ காண்டார்த்தத்தை தர்ம சாஸ்த்ரங்களைக்கொண்டும், உத்தர காண்டார்த்தமான உபநிஷதர்த்தத்தை இதிஹாஸ புராணங்களைக் கொண்டும் விசதமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வர்த்தத்தில்—

" ப்ராயேண பூர்வபாகார்த்தபூரணம் தர்மஶாஸ்த்ரத꞉ ।
இதிஹாஸபுராணாப்யாம் வேதாந்தார்த்த꞉ ப்ரகாஶ்யதே ॥" என்றும்

" இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத் ।
பிபேத்யல்பஶ்ருதாத்வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி ॥" என்றும்
'வேதோபப்ருஹ்மணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு꞉' என்றும்

ஸ்ரீமத் ராமாயணத்திலும் ப்ரமாணங்களின் போக்கைக் கவனிக்கவும். இங்கு வேதாந்தார்த்தத்தை விசதமாக்குகின்றனவென்கிற ஒரேவிதமான உபகாரத்தை முன்னிட்டுக்கொண்டு, இதிஹாஸ புராணங்களிரண்டிற்கும் உபயோக மேற்படுவதால்தான் இவை யிரண்டையும் தனித்தனி வித்யாஸ்தாநங்களாகக் கணக்கிடாமல் ஒரே வித்யாஸ்தாநமாக எண்ணி, இங்கு ஒரே புராண சப்தம் ப்ரயுக்தமாயிருப்பதால், இங்கு இதை இதிஹாஸத்திற்கும் உபலக்ஷண மென்றார்கள்.

ந்யாயமாவது—ஸந்தேஹத்தாலோ விபரீத ஜ்ஞாநத்தாலோ வேதார்த்தத்தில் போதம் மனத்தில் ப்ரதிஷ்டித மாகாமல் கலங்கி யிருக்கும்பொழுது அதை விஷயங்களில் ஸமீசீந யுக்திகளால் கலங்காமல் மனத்தில் நிலைக்கும்படி செய்யும் பொருட்டாகவே ஏற்பட்ட சாஸ்த்ரம். மீமாம்ஸை யென்பது, ஸாங்கமாக வேதாத்யயநம் செய்யும்பொழுது யாதாச்ருதமாக வேதத்தில் ஒருவிதமாக ஜ்ஞாந மேற்பட்டு அதிலுண்டான ஸம்சய விபர்யயங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக ஏற்பட்ட சாஸ்த்ரம். இது பூர்வ காண்டார்த்த விசார ரூபமாய்ப் பூர்வ மீமாம்ஸை யென்றும், உத்தர காண்டமான உபநிஷத்துக்களின் அர்த்தத்தை விசாரிக்கவந்த பாகமாய் உத்தர மீமாம்ஸையென்றும் பேர்பெற்று இருவகையானது. இது வேதவாக்யார்த்த நிர்ணயத்தின் மூலம் உபகாரக மாகின்றது. ஆக இப்பதினான்கு வித்யாஸ்தாநங்களும் பகவதாராதந ரூபமான கர்மங்களையும் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளையும் ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ ப்ரதிபாதநம் செய்யவோ அல்லது ப்ரதிபாதநத்திற்கு உபயோகிகளாக இருக்கவோ வந்தவைகளே யல்லாது, இவற்றில் ஒன்றாவது மற்றொன்றுடன் விரோதிக்கிறதென்றாவது ஸ்வதந்த்ரமாகச் சிலவிஷயங்களைப் ப்ரதிபாதிக்கிறதென்றாவது சொல்ல இடமேயில்லை. இப்படியாக: மற்ற பத்து வித்யாஸ்தாநங்களாலும் ஒவ்வொரு விதமான உபகார விசேஷத்தின் மூலம் உபக்ருதங்களான நான்கு வேதங்களும் ஸர்வேஶ்வரனையே விசாரிக்கின்றன வென்பது,

" ஶிக்ஷாயாம் வர்ணஶிக்ஷா பதஸமதிகமே வ்யாக்ரியா நிர்வசோப்யாம்
சந்தஶ்சந்தஸ்யவ்ருத்தே꞉ ஸமயம் ஜ்யௌதிஷம் ஜ்ஞாபநாய ।
கல்பேऽநுஷ்டாநஶக்தா ஹ்யுபசிதமசிதோ ந்யாயமீமாம்ஸ
யோர்ஹ்யா
தர்ம்யா꞉ க்லிப்தி꞉ புராணஸ்ம்ருதிஷு ததநுஸாரம் விவிஞ்சந்தி
வேதா꞉ ॥ "

என்கிற ஸ்ரீபராசர பட்டாரகருடைய ஸ்ரீஸூக்தியால் (ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம்: சுலோகம்—18.) ஸபஷ்டமாகிறது.

இப்படி ப்ராசீநமான வைதிக ஸம்ப்ரதாயம் நடந்துவர, பிற்காலத்தில் வந்த சில க்ரந்தகாரர்களும் சில ஸூத்ரகாரர்களும் (கணாத கபிலாதிகள்) இம்மார்க்கத்திற்கு விரோதமாக வேதாங்கங்களையும் சாஸ்த்ரங்களையும் தனித்தனியே வெவ்வேறு அர்த்த விசேஷ ப்ரதிபாதகங்களெனவும், ஒன்றுக்கொன்று ஸம்பந்த மற்றவைகளாகவும் மாற்றியும், வேதங்களிலும் சில பாகங்களை அநாவச்யகங்களென்றும், மற்றொன்றுக்குச் சேஷபூதங்களென்றும், இம்மாதிரி பலவிதமான க்ஷோபங்களை விளைவித்துவிட்டார்கள். அவைகளில் சிலவற்றை இங்கு விவரிக்கிறோம். ஸந்திக்த வேதவாக்ய நிர்ணயத்திற்காக ப்ரவ்ருத்தரானவர்கள் மீமாம்ஸகர்கள். பூர்வோத்தர காண்டங்களாக வேதம் பிரிந்திருப்பதை யொட்டி, அவற்றின் அர்த்த நிர்த்தாரணத்திற்கு ஏற்பட்ட மீமாம்ஸையும் இரண்டு விதமாகின்றன. பூர்வ மீமாம்ஸை யென்றும் உத்தர மீமாம்ஸை யென்றும் இவ்விரண்டிற்கும் ஸூத்ர மியற்றியவர்கள் ஜைமிநியும் அவர் குருவான வ்யாஸரும். இப்படி வேதார்த்த நிர்ணயத்திற்கு ஸாதகமென்னும் கருத்துடன் இருபாகங்களடங்கி ஒரே சாஸ்த்ரமாக ஏற்பட்டிருப்பினும், அதற்கிணங்க வித்யாஸ்தாநங்கள் பதினான்கில் இவ்விரு பாகத்தையு மொன்றென வைத்தே ஒரு மீமாம்ஸா சப்தத்தால் இரண்டையும் ஸங்க்ரஹம் செய்திருப்பினும், (இவையிரண்டும் தனி சாஸ்த்ரமானால் வித்யாஸ்தாநங்களைப் பதினைந்தெனச் சொல்லவேண்டிவரும்) இவற்றின் வ்யாக்யாதாக்களால் இவை வெவ்வேறு சாஸ்த்ரங்களெனவும், அதிகாரிகளும் வெவ்வேறானவர்களென்றும் எழுதப்பட்டும் உபதேசிக்கப்பட்டும் வருகின்றன. அவர்களில் கேவலம் பூர்வகாண்டத்துடன் நிற்குமவர்கள் நிரீச்வர மீமாம்ஸகர்களெனப்படுவார்கள். இவர்கள் ஈஸ்வரனை அங்கீகரியாமல், உபநிஷத் காண்டம் கர்மங்களில் அநுஷ்டாதாவா யிருக்கும் ஜீவாத்மாக்களின் ஸ்வரூபத்தை விசாரிக்கவந்தபடியால், அது யஜ்ஞங்களுக்குச் சேஷபூத மென்றார்கள். ஆக இவர்களுக்கு மோக்ஷார்த்தமாக உபநிஷத் விசாரம் அநாவச்யக மாயிற்று. இதைத் திருவுள்ளம்பற்றித்தான் ஸ்ரீதேசிகன் அதிகரண ஸாராவளியில், ‘ஜீமூலாயாஃ கவம்யம் க திவ நஜ க்ருஹா:’ என்றும், பூர்வ பாகத்தைத் தள்ளி உத்தர பாகத்தைமட்டும் எடுத்துக்கொண்டவர்களை ‘ராஹூகல்பம் ஶிரோ நு’ என்றும், ஒருவரைக் கபந்த மீமாம்ஸகர் என்றும் மற்றவரை ராஹு மீமாம்ஸகரென்றும் ஸாதித்தது. வேதாந்த பாகத்திற்கும் ப்ரஹ்மஸூத்ரத்திற்கும் மற்றும் ஸ்ம்ருதி புராணாதிகளுக்கும் விரோதமாக ஜீவாத்மாக்களை ‘விபு’ (எங்கும் நிறைந்த வஸ்து) வென்று அங்கீகரிக்கையாலும், தேவதைகளுக்குச் சரீரம் முதலியன பூர்வ காண்டத்திலேயே சொல்லப்பட்டிருக்க, அவைகளை யில்லையென்று அங்கீகரித்தும், க்ஷண விநாசியான கர்மங்கள் பல ப்ரதமாவதற்காக சாஸ்த்ரஸித்தம் தேவதா ப்ரஸாதத்தை ஒப்புக்கொள்ளாமல் தங்களிஷ்டப்படி அபூர்வ மென்றொரு பதார்த்தத்தைக் கல்பித்து, அது பலப்ரத மென்று கட்டியும், பலவிதமான கலக்கங்களை இவர்கள் உண்டாக்கிவிட்டார்கள்.

உபநிஷத் விசாரத்தை ப்ராதாநமெனக் கருதுமவர்களிற் சிலர், உபநிஷத் ஸித்தமான ப்ரஹ்மத்தை அங்கீகரித்தும், ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் உபாதி ப்ரயுக்தமாயும் ஸ்வாபாவிகமாகவும் பேதாபேதம் அங்கீகரிக்கையால், நித்ய நிர்த்தோஷ ப்ரஹ்மத்துக்கு அநந்தமான தோஷ ஸம்பந்தத்தை விளைவிக்கிறார்கள். மற்றும் சிலர், ஜ்ஞாந ரூபமாக ப்ரஹ்மத்தை யிசைந்து, அதைத் தவிர்த்த மற்றவை யாவும் மித்யாபூதங்களென்றும், அந்த ப்ரஹ்மத்தினிடமே கல்பிதமென்றும், அந்த ப்ரஹ்மத்திற்குத் தான் இசைந்த ஏகத்வ நித்யத்வாதி தர்மங்களும் மித்யா என்றும் அப்படிப்பட்ட ஸ்வயம் ப்ரகாச ப்ரஹ்மத்திற்கு அநிர்வசநீயமான அவித்யாமூலம் திரோதாந முண்டாகிற தென்றும், நிபுண நிரூபண தசையில் வேதங்களும் அவித்யா கல்பிதமாகையால் ப்ரமாணமாகாமல் அக்கர்மங்களின் பல ஸாதநத்வாம்சமும் மித்யையாகையாலே ப்ரஹ்மவித்துக்கு சாஸ்த்ர வச்யதை யில்லையென்றும், ஆகையால் நிர்க்குணோபாஸநத்துக்குக் கர்மங்கள் ப்ரதிபந்தங்களாகையாலே அவைகளை விசாரிக்கும் பூர்வ மீமாம்ஸையுடன் உத்தர பாக விசாரம் ஏக சாஸ்த்ரமாகக் கூடாதென்றும், ஸகல ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராண மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கும் விரோதமான ரீதியில் கல்பித்துவிட்டார்கள்.

இப்படியே ந்யாய சாஸ்த்ரமும் வேதார்த்த நிரூபணத்திற்கு அநுகூலமான ரீதியில் அமைக்கப்பட்டு வேதாபகாரகமா யிருக்கவேண்டியிருக்க, வேத விருத்தமான ரீதியில் வேத ஸம்ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்தரான ஸ்ரீ வேத வ்யாஸரால் ‘ஶாஸ்த்ர யோநித்வாத்’ என்கிற ஸூத்ரத்தால் சாஸ்த்ரைக ஸித்தனென்று அங்கீகரித்த ஈச்வரனை அநுமாந ஸித்தனெனக் கல்பித்தும், அவனுக்கு உபாதாந காரணத்வத்தை யிசையாமல் பரமாணுக்களுக்கு அதைக் கல்பித்தும், ஈச்வர ஸ்ருஷ்டமான ஆகாசத்தை நித்யமென அங்கீகரித்தும், நித்ய நிர்த்தோஷமான வேதத்தைப் பௌருஷேயமாக்கியும், இப்படியும் பல விதத்தில் ந்யாய சாஸ்த்ரத்தை வேத விருத்தமான நாஸ்திக சாஸ்த்ர துல்யமாக்கி விட்டார்கள்.

வேதாங்கமான வ்யாகரண ப்ரவர்த்தகர்களான வையாகரணர்களும் பரப்ரஹ்ம பரிணாமம் ப்ரபஞ்ச மென்கிற பரிணாமவாதிகளைப் போல்

வேத விருத்தமான ரீதியில் ஸ்போடமென்று ஒரு தத்வத்தைக் கல்பித்து அதை ப்ரஹ்ம ஸ்தாநத்திலே நிறுத்தி, அதைத்தானே சப்த ப்ரஹ்மமென்றும் சொல்லி, ஸர்வ ப்ரபஞ்சமும் அந்தச் சப்த ப்ரஹ்மத்தின் விவாதமாதல் அல்லது பரிணாம மாதல் என்று கல்பித்து ப்ரதாநமான வேதார்த்தத்தைக் கலக்கி விட்டார்கள்.

ந்யாய சாஸ்த்ரத்தை நிரூபணம் செய்ய வந்தவர்களில் ஏகதேசிகளான வைசேஷிகர்கள், வேதங்களைப் பௌருஷேயங்க ளாக்கியும், ஆகமத்தை அநுமாந விஷித்தார்த்தாநுவாதகமாகக் கல்பித்தும், வேதோக்தமான ப்ரக்ருதி மஹதாதி தத்வங்களை யிசையாமல் ப்ரமாண விருத்தமான அவயவ்யாதிகளை அங்கீகரித்தும், மற்றும் அநுமாநாபாஸங்களைக்கொண்டு கல்பிக்கும் அர்த்தங்க ளெல்லாம் வேத ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமாயும், ஈசுவரனை அநுமாநத்தால் கல்பித்தாலும் அவனைக் கேவலம் நிமித்த காரணம் என்பதாலும், பரமாணுகாரண வாதத்தாலும், பாஷாண கல்பமோக்ஷ வாதத்தாலும், இப்பக்ஷமும் வைதிக கோஷ்டியி லுள்ளவர்களுக்குப் பரிஹரணீயமே.

தர்ம சாஸ்த்ரகோடியில் சேர்ந்து லோகத்தில் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப் பட்டிருக்கும் ஸாங்க்யயோக சாஸ்த்ரங்களில், ஸாங்க்யம் பரிசுத்தாத்மசிந்தந ரூபமான ஜ்ஞாநயோகத்தை உணர்த்துவதற்காக ஏற்பட்ட போதிலும், இவர்கள் நித்யமாக வேதத்தை அங்கீகரித்து, அதை ப்ரமாணமாக அங்கீகரித்து வைதிகர் என்று பேர் பெற்றிருந்தபோதிலும், வேத ஸித்தனான ஈச்வரனை அபலபித்து ப்ரக்ருதி தத்வத்தை முக்குணங்களின் ஸமுதாய மென்கையாலும், குணங்களையே த்ரவ்யங்க ளென்கையாலும், ஆத்மாவுக்கு வேத ஸித்தமான ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை இல்லையென்றும், அவைகளை அசேதநமான ப்ரக்ருதி தர்மங்க ளென்றும், ஆத்மாவை நித்ய நிர்லேப னென்கையாலும், ப்ரக்ருதி புருஷர்களின் பரஸ்பர ஸ்வபாவாத்யாஸத்தால் ஜகத்ப்ரவ்ருத்தி யென்னும் அந்த அத்யாஸ நிவ்ருத்தியே மோக்ஷமென்றும், ப்ருக்ருதி புருஷ விவேகமே மோக்ஷ ஸாதந மென்றும் சொல்லி நாஸ்திக துல்யர்களானார்கள்.

அப்படியே ஸமாதி பர்யந்த கர்மயோக ப்ரதிபாதநத்திற்கென்று ஏற்பட்ட யோக சாஸ்த்ரமும் ஸாங்க்யர்களைப் போலில்லாமல் ஈச்வரனை அங்கீகரித்தாலும், அவனை நிமித்த மாத்ரமாகக் கொள்கையாலும், அவனுடைய ஐச்வர்யத்தை ப்ரதிபலனதுல்யம் என்கையாலும், அவ ஆத்ம கைவல்ய மாத்ரமே மோக்ஷமென்றும், அதற்கு ஸாதநம் பரம புருஷாராதந வேஷமில்லாத ப்ரத்யகாத்ம தர்சநமென்றும் கொண்டு வைதிக பரிஹாஸ்யரானார்.

இவ்வாறே மந்வாதிகளின் ஸ்ம்ருதிகளும் (தர்ம சாஸ்த்ரங்களும்) பகவதாராதந ரூபமான கர்ம பாகத்தை உபப்ரஹ்மணம் செய்து, அதன் மூலம் மோக்ஷோபாய பரிகர ப்ரதிபாதக மாகையாலே வேதாந்தத்துடன் ஏக வாக்யமாய் ஸாமரஸ்யம் பெறுகின்றனவாயிருக்க, பிறமதஸ்தர்கள் பலர் ஜ்ஞாந பாகத்துடன் இவற்றிற்கு யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்று கல்பித்து க்ஷேபப்படுத்தினார்கள். வஸ்து ஸ்திதியில் ஒவ்வொரு ஸ்ம்ருதியிலும் பரம ப்ராப்யமான பகவத் ஸ்வரூபத்தை உபக்ஷேபித்து, அந்த பகவதுபாஸநத்தால் பரம புருஷார்த்தமான மோக்ஷம் பெறுவதற்கு இக்கர்மங்கள் பரிகரங்கள் என்கிற ஆகாரம் தோற்றச் சில உக்தி விசேஷங்கள் அங்கங்கு இருப்பதைச் சற்றுக் கவனித்தால் நன்கு புலப்படும். உதாரணமாக, ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தில் அத்யாத்ம கண்டம் என்று ஒரு பாக மிருப்பதையும், மநுஸ்ம்ருதியிலும் அவ்வாறே மஹர்ஷிகள் மநுவிடம் சென்று, ‘ எங்களுக்கு

‘ 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾𑌵𑌦𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍋 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ’

என்று வர்ணாச்ரம தர்மங்களையும் ஜாதி தர்மங்களையும் உபதேசிக்க வேண்டுமென ப்ரார்த்திக்க, அதற்கு மநுவும், ‘ இம்மகர்ஷிகள் நம்மைக் கேவல கர்மங்களைக் கேட்டவர்க ளல்லர் ; இவர்கள் பகவதாராதந ரூபமான தர்மங்களையும் கர்மங்களையும் கேட்டவர்க ளாவர் ’ எனத் திருவுள்ளம் பற்றி, தம் அபிப்ராயத்தையும் கலந்து, ஜகத்காரணமான வஸ்துதான் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்ய மென்கிற வேத ஸித்தாந்தத்தையும், அதுவே உபாதாந காரணமாயும் நிமித்த காரணமாயு மிருக்கிறதென்றும், மற்ற ப்ரபஞ்சம் முழுவதும் அவருக்குச் சரீரமாய் அவர் அவற்றிற்கு அந்தராத்மாவாகவு மிருக்கிறார் என்கிற வைதிகர்களின் கொள்கையையு மநுஸரித்து, முதலில் ஜகத்காரண வஸ்துவை ப்ரஸ்தாபித்து, ‘ 𑌤𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 ... 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸𑍀𑌤𑍍𑌤𑌮𑍋𑌨𑍁𑌦𑌃 ’ என்றும், ‘ 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌮𑌯𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 ’ என்றும், ‘ 𑌸𑍋𑌽𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑍍 ’ என்றும், ஒன்றுக்கே உபாதாநத்வத்தையும் நிமித்தத்வத்தையும் காட்டி, இவ்வர்த்தத்திற்கு உபபாதகமாக நாராயண சப்தார்த்தத்தை நிரூபணம் செய்து, அம்முகத்தால் அந்த ஜகத்காரண வஸ்து இன்ன தேவதாவிசேஷ மென்பதையும் நிர்தாரணம் செய்து, ததாராதந ரூபங்களான தர்மங்களையும் கர்மங்களையும் விஸ்தாரமாக நிரூபித்து, இந்த வர்ணாச்ரம தர்மங்களைப் பரிகரமாகக் கொண்ட பக்தி ரூபமான உபாயமே பகவத்ப்ராப்தி ரூபமான மோக்ஷத்திற்கு உபாய மென்கிற வேதாந்த ஸித்தாந்தத்தைச் சாஸ்த்ரத்தைத் தலைக்கட்டும்போதும் ப்ரஸ

தாபித்து நிகமித்திருக்கிறார். இப்படியே மற்ற தர்ம சாஸ்த்ரங்களும் ப்ரவர்த்தித்த ரீதியைக் காண்க.

இதிஹாஸ புராணங்களும் ப்ராயேண வேதாந்தார்த்தத்தையே நிரூபிக்கின்றன வென்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டமான விஷயமே. சில புராணங்களில் சில அர்த்தங்கள் விபரீதமாக உபதேசிக்கப்பட்டிருப்பினும், நிபுண நிரூபணத்தில் அவை ஸோபாதிகங்க ளென்றோ அந்யபரங்க ளென்றோ சொல்லப் போதுமான காரணங்கள் அந்தந்த விடங்களிலேயே இருக்கின்றன.. இக்காரணம் பற்றியே பிற மதஸ்தர்கள் வேதாந்தார்த்தத்தை இதிஹாஸ புராணங்களைக்கொண்டு உபப்ரஹ்மணம் செய்யவேண்டியதில்லை யென்றும், நம்முடைய ராமாநுஜ தர்சநத்தில் அப்படிக்கில்லாமல் 'உபப்ரும்ஹணம் ஹி கார்யமேவ' என்று அங்கீகரித்திருப்பதையும் காண்க.

இவ்வளவால், இதர மதங்களில் இவ்வித்யாஸ்தாநங்கள் பத்தும் வேதார்த்த ஜ்ஞாநோபகாரகங்க ளாகாததுடன், இவைகளும் வித்யாஸ்தாநங்களாகாமலும், ப்ரதாநமான வேதங்களும் இவைகளால் உபக்ருதங்களாகாதபோது தமக்கு விலக்ஷிதார்த்த போதந க்ஷம மாகாமல் அவைகளும் ஸம்ஸாரார்ணவ மக்நர்களான சேதநர்களுக்கு உபகாரங்களாக மாட்டாமல் ஒழிவதுடன், தந்மூலம் ஸர்வேச்வரனுடைய ப்ரயத்நத்திற்கும் பிறர். வைகுண்யத்தை விளைவித்தவர்க ளாவார்கள் என்பது நிர்த்தாரித மாயிற்று.

பரம வைதிகாக்ரேஸரரான நம் ராமாநுஜரோவெனில், வேத மார்க்கத்தை அடியொற்றித் தம்முடைய ஸ்ரீ ஸூக்திக ளெல்லாவற்றிலும் வேத வாக்யங்களில் சிலவற்றிற்கு அப்ராமாண்யமும் ஆந்யபர்யமும் கல்பிக்காமல், பூர்வோத்தர பாகங்க ளடங்கிய வேதம் ஸபரிகரமான பகவதுபாஸநத்தை ப்ரதிபாதிக்கின்றன வென்றும், வேதாந்த பாகத்திலும் பேத ச்ருதிகளையும் கடக ச்ருதிகளையும் சிலர் நிராகரணம் பண்ணுவதுபோ லில்லாமல், பேதாபேத கடக ச்ருதிகளை அந்யோந்யம் ஸமரஸப்படுத்தி, பேத ச்ருதி வஸ்து பேதத்தைச் சொல்லுகிறதென்றும், கடக ச்ருதி சரீர சரீரி பாவமென்றதைச் சொல்லுகிறதென்றும், அபேத ச்ருதி இவ்விரண்டிற்கும் விரோதமில்லாமல் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுகிறதென்றும், ப்ரதிபாதித்து, ஒருவாக்ய ஸகலத்திற்குக் கூட வையர்த்ய மில்லாமல் செய்திருக்கிறார். ஸாங்க வேதாத்யயநத்தை அங்கீகரித்ததால், அங்கங்களுக்கு ஸார்த்தக்யத்தைக் கல்பித்தும் சாஸ்த்ர விஹித கர்மங்களை உபாஸநத்திற்குப் பரிகரமாக நியமித்ததால், வேதத்தில் பூர்வகாண்டத்திற்கு வேதாந்தத்துடன் ஸாமரஸ்யம் ஏற்பட்டதுடன், ஜ்யௌதிஷத்துடன் கல்பஸூத்ரங்களுக்கும் மற்றும் தர்ம சாஸ்த்ரங்களுக்கு முண்டான வேதார்த்த விசதீகார ரூபமான உபகாரத்தை ஸ்தாபித்தார்.

பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்ரங்களுக்குச் சாஸ்த்ர பேதத்தை இசையாமல், ஒரே சாஸ்த்ரமென்று ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதித்து, அவ்விரு ஸூத்ர வ்யாக்யாதாக்களால்ஏற்பட்ட கலக்கங்களைப் பரிஹரித்து, குருசிஷ்யர்களான வ்யாஸ ஜைமிநிகளுக்கு உண்டான குருசிஷ்ய பாவத்தை மித்யாவாக ஆக்காமல் காத்தருளினார். அருணாதிகரண அபச்சேதாதிகரணம் முதலிய ந்யாயங்களைச் சிக்ஷணம் செய்ததன்மூலம், பூர்வோத்தர மீமாம்ஸா ஸூத்ரங்கள் பரஸ்பர விருத்தம் என்கிற சங்கையை விடுவித்தார். சிற்சில விடங்களில் ஜைமிநி பக்ஷத்தை ஸ்ரீவ்யாஸர் கண்டித்திருப்பதை எடுத்துரைத்து, தந்மூலம் ஜைமிநி அந்யபரமாகச் சொன்ன வார்த்தையை உண்மையெனக் கருதி ஜனங்கள் கலக்க முறுவார்கள் என்று அவ்வபிப்ராயத்தை நீக்குவதற்காக அதையும் ஸ்ரீவ்யாஸர் கண்டிக்கிறார் என்று ஸாதித்து, அதன் மூலமாக ஸூத்ரங்களில் ஸ்பஷ்டமான பரஸ்பர விரோதத்தையும் பரிஹரித்து ஐகமத்யத்தையே ஸ்தாபித்தார்.

பகவான் ஒருவரே நிமித்தோபாதாந காரணம். அவருடைய உபாஸநமே மோக்ஷஸாதநம். கர்மங்கள் முற்றிலும் க்ஷீணங்களாகி, அப்ராக்ருத திவ்யதேசம் சென்று, உபய விபூதி விசிஷ்டனான ஸ்ரீமந்நாராயணனுடைய அநுபவமும் தத்கைங்கர்யமுமே புருஷார்த்தமென அங்கீகரித்ததாலும், கீழ் உபபாதநம் செய்த ரீதியில் ஸாங்க்யபக்ஷம் வைசேஷிக பக்ஷம். கௌதம ந்யாய மதம், யோகமதம், நிரீச்வர மீமாம்ஸக மதம் ஆகிய வைகளையும், விசேஷமாக சங்கர பாஸ்கர யாதவ மதங்களையும் நிரஸ்தங்களாகச் செய்து, பாஞ்சராத்ராதிகரணத்தில் இதராக்ம துல்யமாக இதற்கும் அப்ராமாண்யம் ப்ரஸங்கிக்க ஸமீசீந யுக்திகளைக் கொண்டும் ப்ரமாணங்களைக்கொண்டும் ஸர்வதோமுகமாக ப்ரமாண்யத்தை ஸ்தாபித்து, அதை வேத துல்யமாக நிலைக்கச் செய்தார். அத்துடன், மநு ஆபஸ்தம்ப யாஜ்ஞவல்க்யவால்மீகி சுக சௌநக வஸிஷ்ட பராசர ஜைமிநி வ்யாஸ போதாயநாதிகளாகிற பரம வைதிகர்களின் பக்ஷத்தை நிலைநிறுத்தினார். இவ்வளவுடன் நிற்காமல், விசேஷமாகவும் ஸ்போடவாத நிராகரணம் முதலியவற்றால் ப்ராதிஸ்விகமாகவும் மதாந்தரங்களைக் கண்டநம் செய்து, தன் பக்ஷத்திற்கு ச்ருதி ஸூத்ரங்களின் ஸ்வாரஸ்யத்தை ஸ்தாபித்து '[illegible]' என்கிற என்கிற ரீதியில் ச்ருதி ஸீமந்திநியை (ச்ருதி என்கிற ஸ்த்ரீயை)த் தன் கணவனுடன் சேர்த்து, அவனை இவளுக்கு ஸ்வாதீநமா யிருக்கும்படி செய்து, இவளுக்கு வேண்டிய ஸர்வாலங்காரங்களையும் செய்து, இவளை

மங்களி ஸ்தாநத்திலே நிறுத்தி, இவளுடைய பரிகரங்களையும் அவளுக்கு அநுகூலமாக்கி நிலைநிறுத்தினர். ஆனபடியால் ஸகல வித்யைகளும் தாம் ஏற்பட்டதன் ப்ரயோஜநத்தைப் பெற்றுப் பரிமளம் பெற்றபடியாலே, இவர் ஸகல வித்யைகளுக்கும் உத்பத்தி ஸ்தாநமென்று ஸ்ரீ தேசிகன் இத்தத்வ ஸ்திதியை நன்கு உணர்ந்து, தாம் அப்பெருமையை அநுபவித்தும், அது உள்ளடங்காதபடி வழிந்தோடி, யதிராஜ ஸப்ததி என்கிற ஸ்தோத்ரவ்யாஜத்தால் எழுபது முகங்களாக வெளியில் பாய்ந்து, அவற்றிலும் பலமுகமாகப் பூலோகத்தில் ப்ரவ்ருத்தமான கங்கா ப்ரவாஹங்களிலும் ப்ராதாந்யத்தை வஹித்த பாகீரதீ போல் ஆயிருக்கிறது இந்த 'ஜயதி ஸகல வித்யாவாஹிநீஜந்மசைலஃ' என்கிற ச்லோகம். இதன் அருமை தோற்றவே இந்த ச்லோகத்தை ஸ்தோத்ர படந காலத்தில் இரண்டு தரம் அநுஸந்திப்பது மஹநீயர்களின் ஸம்ப்ரதாயத்தில் இருந்துவருகிறது.

விசார விவாத பக்கங்கள்.

வேதாந்த ஸம்பந்தமான விஷயங்களின் விமர்சைக்கென்று ஏற்பட்ட இந்தப் பத்ரிகையில், முதல் ஆரம்பித்து ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் மேற்கண்டிருக்கும் தலைப்பெயருடன் சில பக்கங்கள் ப்ரத்யேகமாய் விவாத விஷயங்களுக்கென்றே ஏற்படுத்தி வைக்க யோசித்திருக்கிறோம். இப்பத்ரிகையைப் படிக்கும் அநேகர் அநேக விஷயங்களைக் குறித்து, சர்ச்சா ரூபமாயும், விவாத ரூபமாயும், தத்வ நிர்த்தாரணம் தர்ம நிர்த்தாரணம் முதலானவைகள் செய்ய ஆவலாய் இருக்கிறார்கள். அவைகள் யாவற்றையுமே பத்ரிகையில் முக்ய வ்யாஸங்களாக ப்ரசுரப்படுத்த ஸந்தர்ப்பப்படாதாகையால், அவ்வித விவாதங்களுக்கென்றே இப்படிச் சில பக்கங்கள் பிரித்து வைப்பது உசிதமென்று தோன்றுகிறது. அதுவுமன்றி, பூர்வ காலத்தில் பாஸ்சாத்யர்களால் ப்ரசுரப்படுத்தப்பட்ட சில பத்ரிகைகளிலும் இவ்விதமான அநுஷ்டாநம் ஒன்றுண்டு. அதையும் அநுஸரித்து, இவ்வித விசார விவாதங்களும் நிர்ணயிக்கப்படவேண்டிய ஆவச்யகதையையும் உத்தேசித்து, இரு பக்ஷமாகிற கக்ஷிகளும் யதேச்சமாய் எழுதப்படக் கூடியதாக விசார விவாத பக்கங்களென்று இப்பத்திரிகையில் இப்பாகமானது ப்ரத்யேகிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், தத்வ தர்ம ஸம்சயங்களும் விவாத விஷயங்களும் உத்தர ப்ரத்யுத்தரங்கள் உட்பட சரியான முறையில் எழுதப்பட்டால் அவை இவ்விபாகத்தில் ப்ரசுரிக்கப்படும். ஆனது பற்றி, இதனடியில் இவ்வித ஏற்பாடு செய்வதற்கு முதற்காரணமாய் அமைந்த ஸ்ரீமான் கோஷ்டீபுரம் வாஸுதேவாசார்யரால் எழுதி அனுப்பப்பட்ட நிரூபம் ஒன்று ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது விஷயமாயும் அதற்கு ப்ரத்யுத்தரமாயும் இன்னும் புதிது புதிதாயும் எழுதப்படும் நிரூபங்கள் கூடுமான வரையில் இந்தப் பத்ரிகையினுடைய இந்த விபாகத்தில் ப்ரசுரிக்கப்படும். [ஸ. கா.]

'ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி। தத்தேஜோऽஸ்ருஜத। தத்தேஜ ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி।

ததைக்ஷ ஆஹ:—ஸ்ருஷ்டிக்கு முன் இந்த ப்ரபஞ்சம் ஏகத்வாவஸ்தையை அடைந்திருந்தது என்று கீழ்ச் சொல்லப்பட்டது. இதனால் கார்யம் உண்டாவதற்கு முன் ஒரு ஆகாரத்தால் இருந்தது என்று சொன்னதாகிறது. இதைத் தூஷிக்கும் அஸத் கார்யவாதிகளுடைய பக்ஷத்தைக் கண்டிப்பதற்காக அந்தப் பக்ஷத்தைச் சொல்லுகிறார். (ததைக ஆஹுரஸதேவ) இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முன் இருந்ததன்று. இதனுடைய இல்லாமை தவிர, ஏகத்வாவஸ்தையாவது அந்த அவஸ்தையையுடைய வஸ்துவாவது ஒன்றுமில்லை. ஆகையால் முன் இல்லாத வஸ்துவுக்கு உத்பத்தியானது ஆயிற்று என்று ஆகிறது. கார்யம் உண்டாவதற்கு முன் அதினுடைய இல்லாமையை ப்ராகபாவம் என்று அஸத் கார்ய வாதிகள் வ்யவஹரிக்கிறார்கள். அந்தப் ப்ராகபாவம் ஒன்று தவிர, கார்யமும் அதின் முன் ரூபமும் ஆகிய இரண்டும் கிடையா. ஆகையால் முன் இல்லாத பானை முதலான வஸ்துக்கள் குயவன் வ்யாபாரம் முதலான வ்யாபாரங்களால் உண்டாகின்றன என்று அஸத்கார்யவாதிகள் சொல்லுகிறார்கள். தஸ்மாத் (அஸதஸ்ஸஜ்ஜாயத) என்கிறவிடத்தில் அஸதஃ ப்ராகபாவத்தினின்றும் என்றும் ஸத் என்பதற்கு ஸத்தை அதாவது உத்பத்தி என்றும், அஜாயத என்பதற்கு ஆயிற்று என்றும் அர்த்தம். ஆக இவற்றால் ப்ராகபாவத்தினின்றும் கார்யம் உண்டாகிறது என்று அர்த்தம். இந்தப் பக்ஷத்தைத் தூஷிக்கிறார்.

குதஸ்து—எந்த ப்ரமாணத்தைக் கொண்டு முன் இல்லாத த்ரவ்யம் உண்டாகிறது என்று சொல்லப்படுகிறது என்று அர்த்தம். முன் இல்லாத த்ரவ்யம் இப்போது புதிதாய் உண்டாயிற்று என்று சொல்வதற்கு ஒரு ப்ரமாணமும் சொல்ல முடியாது. காலையில் எந்த மண் ராசியை நாம் பார்த்தோமோ, அந்த மண்ராசி இப்போது பானை சட்டி ரூபமாக ஆயிருக்கிறது என்று எல்லோருக்கும் ப்ரத்யக்ஷம் உண்டாகிறது. இந்த ப்ரத்யக்ஷத்துக்கு விரோதம் வருகிறபடியால் முன் இல்லாதது புதிதாய் உண்டாயிற்றென்று, ஒரு ப்ரமாணத்தைக் கொண்டும் ஸாதிக்க முடியாது என்று கருத்து. இப்படி அஸத்கார்ய வாதத்தைக் கண்டித்து (ஸத்வேவ ஸோம்ய என்று) ஸ்வபக்ஷத்தை முடிக்கிறார். 'ஸதேவ ஸோம்ய' என்கிற கீழ் வாக்யத்தால் ப்ரபஞ்சத்துக்கு காரணாவஸ்தையைச் சொன்னார். இனி அதற்குக் கார்யாவஸ்தையைச் சொல்லிக்கொண்டு ப்ரஹ்ம

ததபோऽஸ்ருஜத । தஸ்மாத்யத்ர க்வ ச ஶோசதி ஸ்வேததே வா புருஷஸ்தேஜஸ ஏவ ததத்யாபோ ஜாயந்தே ।

மம் ஒன்றே ஜகத்துக்கு உபாதாந காரணமும் நிமித்த காரணமுமாயிருக்கிறது என்று கீழ்ச் சொன்னதை உபபாதிக்கிறார்.

ததைக்ஷத—ஸ்ருஷ்டிக்கு முன் நாமரூப விபாகத்தை இழந்திருந்த இச்சேதநாசேதந ரூபப்ரபஞ்ச சரீரகமான ப்ரம்ஹமானது நாமரூப விபாகத்தையுடைய சேதநாசேதந ரூப ப்ரபஞ்ச சரீரக ளுகக்கடவோம். அதற்காகத் தேஜஸ் சரீரகமாக உண்டாக்கக் கடவோம் என்று ஸங்கல்பித்தது என்று அர்த்தம்.

தேஜஸ், ஜலம், ப்ருதிவி என்னும் இந்த மூன்று பூதங்களையும் ஸ்ருஷ்டித்து, தச்சரீரகனுய் இந்த மூன்றில் ஒவ்வொன்றுக்கும் த்ரி வ்ருத் கரணம் பண்ணி, த்ரி வ்ருத்க்ருதமான அந்த பூதங்களைக் கொண்டு தேவ மநுஷ்யாதி ரூபங்களை ஸ்ருஷ்டித்து, தேவமநுஷ்யாதி சரீரகனுய் பகுவாகக்கடவோம் என்று ஸங்கல்பித்தது என்று தாத்பர்யம். (த்ரிவ்ருத் கரணத்தின் விவரம் மேல் சொல்லப்படும், இங்கு நான் தேவ மநுஷ்யாதி ப்ரபஞ்ச ரூபமாகிறது என்று கிடைக்கிறபடியால் ப்ரம்ஹத்துக்கு ப்ரபஞ்சத்தைக் குறித்து உபாதாந காரணத்வம் உபபாதிக்கப்பட்டது.

இனி ஸங்கல்பத்தின்படி ஸ்ருஷ்டியைச் சொல்லத் தொடங்கி, முதல் த்ரிவ்ருத்கரணம் பண்ணப்படாத தேஜஸ் முதலான பூதசரீரகமாக ப்ரஹ்மத்தின் உத்பத்தியைச் சொல்லுகிறார்.

தத்தேஜோऽஸ்ருஜத—இங்கு 'ப்ரஜாயேய' என்று கீழ்ச் சொன்ன ஸங்கல்பப்படி ப்ரஹ்மத்தின் உத்பத்தியைச் சொல்லுகிற ப்ரகரணமாகையால் 'தத்' என்கிற பதத்துக்கு மேல் 'ஆத்மாநம்' என்கிற பதம் வரவழைத்துக் கொள்ளவேணும். தத் பூர்வம் சொல்லியபடி ஸங்கல்பித்த ப்ரஹ்மம் தன்னைத் தேஜஸ்ஶரீரமாக ஸ்ருஷ்டித்தது; தேஜஸ் என்கிற பூதத்தை ஸ்ருஷ்டித்து அந்தத் தேஜஸ் சரீரகமாய் ஆயிற்று என்று தாத்பர்யம். இதனால் தேஜஸ் சரீரக ப்ரஹ்மத்துக்குக் கார்யத்வம் விவரிக்கப்பட்டது. இங்கு ப்ரஹ்மம் ஸங்கல்பித்தபடி ஸ்ருஷ்டித்தது என்பதனால் ப்ரஹ்மத்துக்கு நிமித்த காரணத்வம் உபபாதிக்கப்பட்டது.

தத்தேஜ ஐக்ஷத— தேஜஸ் சரீரகமான ப்ரஹ்மம் பகுவாகக் கடவோம்; அதற்காக ஜலசரீரகமாக உண்டாகக் கடவோம் என்று ஸங்கல்பித்தது.

'தா ஆப ஐக்ஷந்த பஹ்வ்ய: ஸ்யாம ப்ரஜாயேமஹீதி । தா அந்நமஸ்ருஜந்த । தஸ்மாத்யத்ர க்வ ச வர்ஷதி ததேவ பூயிஷ்டமந்நம் பவத்யத்ப்ய ஏவ ததத்யந்நாத்யம் ஜாயதே ।'

இதி த்விதீய: கண்ட: ।

ததபோऽஸ்ருஜத—தத், அந்த தேஜச்சரீரகப்ரஹ்மம் - அப: ஜல சரீரக ப்ரம்ஹத்தை, அஸ்ருஜத- ஸ்ருஷ்டித்தது. தேஜஸ்ஸினின்றும் ஜலம் உத்பந்நமாயிற்று என்று கீழ்ச் சொன்னதற்கு உபபத்தியைக் காட்டுகிறார். தஸ்மாத்யத்ர க்வ—ஆகையாலே தான் புருஷனுக்கு ஸந்தர்ப்பத்தால் வியர்வை உண்டாகும்போது தேஜஸ்ஸிலிருந்தும் ஜலம் உண்டாகிறது.

தா ஆப ஐக்ஷந்த......ஈஹீதி—இவைகளுக்கு முன்போல் அர்த்தம் கண்டுகொள்ளவும். தா அந்நமஸ்ருஜந்த — இங்கு 'அந்நம்' என்பதற்கு ப்ருதிவியை என்று அர்த்தம். இங்குத் தேஜஸ் ஜலம் இவைகள் அசேதநங்களாகையால், இவைகளுக்கு 'ஐக்ஷத' என்று சொல்லப்படும் ஸங்கல்பரூப ஜ்ஞாந விசேஷம் அநுபபந்நமாகையால் தேஜ: ப்ரப்ருதி சப்தங்கள் தச்சரீரக ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறதென்று கண்டு கொள்வது.

ஆறுவது அத்யாயம் இரண்டாவது கண்டம் முற்றிற்று.

அத த்ருதீய: கண்ட: ॥

தேஷாம் கல்வேஷாம் பூதாநாம் த்ரீண்யேவ பீஜாநி பவ-
ந்த்யண்டஜம் ஜீவஜமுத்பிஜ்ஜமிதி । ஸேயம் தேவதைக்ஷத ஹந்தா

மூன்ருவது கண்டம்.

தேஜஸ், ஜலம், ப்ருதிவி என்கிற மூன்று மஹாபூதங்களுடைய ஸ்ருஷ்டியைச் சொல்லிற்று. இனி நான்கு வகுப்புள்ள சரீரங்களும் இந்த மூன்று பூதங்களால் உண்டாக்கப்பட்டது என்று காட்டப்படுகிறது.

தேஷாம்—உத்பிஜ்ஜமிதி—அண்டஜம்—முட்டையினின்றும் உண்டாகும் சரீரம். அதாவது பக்ஷி பாம்பு முதலானவைகளினுடைய சரீரம். ஜீவஜம்—ஜராயு என்று சொல்லப்படும் கர்ப்ப கோசத்தினின்று உண்டாகும் சரீரம். அதாவது மநுஷ்யன், பசு, இவை முதலானவைகளின் சரீரம்.

உத்பிஜ்ஜம்—வ்ருக்ஷம் முதலிய ஸ்தாவர சரீரமும், வியர்வையினின்றும் உண்டாகும் புழு முதலியவைகளின் சரீரமும். இவை நான்குக்கும் கீழ்ச் சொன்ன தேஜஸ், ஜலம், ப்ருதிவி, என்கிற மூன்று பூதங்களும் காரணம். அதாவது: இம்மூன்று பூதங்களினின்றும் இந்த நான்கு சரீரங்களும் உண்டாகின்றன என்றபடி.

இவ்வளவால் தேஜோ ஜல ப்ருதிவிகளாகிற மூன்று பூதங்களைக் கொண்டு நான்குவித சரீரங்களின் ஸ்ருஷ்டியைச் சொன்னார். இனி இந்த நான்கு விதமான சரீரங்களின் வழியாக ப்ரஹ்மத்துக்குக் கார்யத்வத்தை நிரூபிக்கைக்காக அந்த நான்குவித சரீரங்களின் ஸ்ருஷ்டிக்கு மூலமான ஸங்கல்பத்தையும் அவைகளின் ஸ்ருஷ்டி ப்ரகாரத்தையும் புத்ரனுக்கு உபதேசிக்கிறார்.

ஸேயம் தேவதைக்ஷத--ஸேயா-ஏகத்வாவஸ்தாபந்நமாய், 'பஹுஸ்யாம்' பஹுவாகக்கடவோம் என்று ஸங்கல்பித்த தேவதை ப்ரப்ரம்ஹம் என்றபடி.

ஐக்ஷத-ஸங்கல்பித்தது. அந்த ஸங்கல்பத்தை விவரிக்கிறார். 'கீழ்ச் சொன்ன ஜலம், தேஜஸ், ப்ருதிவி என்று அர்தந்த தேவதைகளாலே அபிமானிக்கப்பட்ட இம்மூன்றையும் நான் ஜீவாத்மாவாகிற சரீரத்தின் வழி

ஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய
நாமரூபே வ்யாகரவாணீதி' ॥

யாகக் அநுப்ரவேசித்து நாமங்களையும் ரூபங்களையும் உண்டாக்கக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது. 'நான் ஜீவாத்மாக்களில் ப்ரவேசித்து, அந்த ஜீவாத்மாக்களைத் தேஜஸ் ஜலம் ப்ருதிவி என்கிற மூன்று பூதங்களில் ப்ரவேசிப்பித்து, தேவன் மநுஷ்யன் இவை முதலிய ஆகாரங்களையும் பெயர்களையும் உண்டாக்கக்கடவேன் என்று கீழ்ச் சொன்ன ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது' என்று தாத்பர்யம்.

'அநேந ஜீவேந' என்று ஜீவஸமுதாயத்தைச் சொல்லுகிறது. ஆத்ம சப்தம் சரீரபரம். 'ஆத்மா யத்நோ த்ருதிர்புத்தி: ஸ்வபாவோ ப்ரஹ்ம வர்ஷ்ம ச' என்று நைகண்டுகர்கள் ஆத்மசப்தத்துக்குச் சரீரமும் அர்த்தம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இங்கு ஸ்ரீபாஷ்யத்தில் 'ஆத்மா' என்கிற பதத்துக்கு வேறு அர்த்தம் ஸாதித்திருந்தாலும், இங்குச் சொல்லப்பட்ட சரீரம் என்னும் அர்த்தம் ஸித்தாந்தத்துக்கு உபயுக்தமாயும் அவிருத்தமாயும் இருக்கிறபடியால், இதில் பாஷ்யாதி விரோதம் எண்ணவேண்டா. அந்தர்யாமி ப்ராம்ஹணத்தில் ஜீவாத்மாவுக்கு பரமாத்ம சரீரத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், 'ஜீவாத்மாக்களில் தான் ஆத்மாவாக ப்ரவேசித்து, அந்த ஜீவாத்மாக்களைத் தேஜஸ் ஜலம் ப்ருதிவி என்கிற த்ரிவ்ருத்க்ருதமான மூன்று பூதங்களிலும் ப்ரவேசிப்பித்து' என்று அர்த்தம் கிடைக்கிறது.

இங்கு, கீழ்ச் சொன்ன மூன்று பூதங்களால் ரூபங்களையும் நாமங்களையும் உண்டாக்கக்கடவோம் என்று ஸங்கல்பம் செய்யாமல், ஜீவாத்மாக்களாகிற தன் சரீரத்தின் வழியாகத் தான் அந்த மூன்று பூதங்களில் ப்ரவேசித்து, அந்த மூன்று பூதங்களால் ரூபங்களையும் நாமங்களையும் உண்டாக்குவோம் என்று ஸங்கல்பித்தது ஒரு ப்ரயோஜநத்தை உத்தேசித்து ஆகவேணும். உலகத்தில் பிதா புத்ரனுக்கு நாமகரணம் பண்ணும்போது, புத்ரனிடத்தில் ப்ரவேசித்து நாமகரணம் பண்ணுவதில்லை. குயவன் முதலானர்கள், மண் முதலானவைகளுக்கு, பானை முதலான ரூபத்தை உண்டாக்கும்போது, அந்த மண் முதலானவைகளில் ப்ரவேசித்து ரூபத்தை உண்டாக்குவதில்லை. அப்படி யிருக்க, இங்கு 'ப்ரஹ்மம் ப்ருதிவி ஜலம் தேஜஸ்ஸுக்களில் நாம் ப்ரவேசித்து நாமரூபங்களை உண்டாக்குவோம்' என்று ப்ரவேசத்தை ஸங்கல்பித்ததற்கு ஒரு ப்ரயோஜநம் இல்லாவிட்டால்

தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாம் கரவாணீதி. ஸேயம் தேவதேமாஸ்திஸ்ரோ தேவதா அநேநைவ ஜீவேநாத்-

அப்படி ஸங்கல்பம் வ்யர்த்தமாய்விடும். அந்த ப்ரயோஜநமாவது, தான் உண்டாக்கப்போகிற நாமங்களும் ரூபங்களும் அந்த மூன்று பூதங்களின் வழியாய் ஜீவாத்மாக்களிலும், ஜீவாத்மாக்களின் வழியாய்த் தன்னிடத்திலும் ஸம்பந்திப்பதே. பிதா புத்ரனுக்குத் தேவதத்தன் யஜ்ஞதத்தன் முதலான பெயர்களை வைத்தால், அந்த சப்தங்கள் அந்த சரீரத்தின் வழியாக ஜீவாத்மாவைச் சொல்லுகிறதானது, ஜீவாத்மா அந்த சரீரத்தில் ஆத்மாவாக ப்ரவேசித்திருப்பதனடியாகவே. அதைப்போல் தேவன் மநுஷ்யன் இத்யாதி நாமங்கள், தேவாதி சரீரத்தின் வழியாக அதில் ப்ரவேசித்திருக்கும் ஜீவாத்மாக்களைச் சொல்லி, அவர்கள் வழியாக அந்த ஆத்மாக்களில் ஆத்மாவாக ப்ரவேசித்திருக்கும் ப்ரம்ஹத்தையும் சொல்லுகிறது. இப்படியே தேவாதி ஆகாரங்களும் ரூபங்களும் தேவாதி சரீரத்தின் வழியாக ஜீவாத்மாக்களில் ஸம்பந்தித்து அவர்கள் வழியாக ப்ரம்ஹத்தினிடத்திலும் ஸம்பந்திக்கின்றன. இப்படி ஸம்பந்தியாவிட்டால் ப்ரம்ஹத்துக்குப் பஹுத்வம் ஸித்திக்காதாகையால், 'பஹுஸ்யாம்' என்கிற ஸங்கல்பத்துக்கும் நாமரூப வ்யாகரணத்துக்கும் ஸம்பந்தமில்லாமல் அஸங்கதமாய்விடும். இதுதான் ப்ரவேசத்தினுடைய ஸங்கல்பத்துக்கு ப்ரயோஜநம். இப்படி, தேவாதி நாமரூப ஸ்ருஷ்டி ஸங்கல்பத்தைச் சொல்லி, அந்த ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான த்ரிவ்ருத்கரணத்தின் ஸங்கல்பத்தைச் சொல்லுகிறார்.

தாஸாம்......வாணீதி—தேஜஸ் ஜலம் ப்ருதிவி ஆகிற மூன்று பூதங்களில் ஒவ்வொன்றையும் த்ரிவ்ருத்தாகச் செய்யக்கடவோம் என்று ஸங்கல்பித்தது. த்ரிவ்ருத்கரணமாவது: ஒவ்வொரு பூதத்தோடு மற்ற இரண்டு பூதங்களையும் கலப்பது. ஒவ்வொரு பூதத்தையும் ப்ரத்யேகமாய் இரண்டு ஸமபாகமாய்ப் பிரித்து, ஒவ்வொரு பாதிபாகத்தையும் இரண்டாகப் பிரித்து ஒரு பூதத்தின் ஒரு பாதியோடு மற்ற இரண்டு பூதங்களின் பாதியில் ஒவ்வொரு பாகத்தையும் கலப்பது த்ரிவ்ருத்கரணம். அப்போது ஒவ்வொரு பூதங்களின் பாதியும், மற்ற இரண்டு பூதங்களின் நாலில் ஒரு பாகங்களும் கலந்து, த்ரிவ்ருத்க்ருதமான தேஜஸ், த்ரிவ்ருத்க்ருதமான ஜலம், த்ரிவ்ருத்க்ருதமான ப்ருதிவி ஆகிறது. இப்படிக் கலக்காவிட்டால் அந்த மூன்று பூதங்களுக்கும் அந்தந்த தேவாதி ரூபங்களை உண்டாக்க ஸாமர்த்யம் கிடையாது. ஆகையால் அந்த ரூபங்களை ஸ்ருஷ்டிக்கவேண்டியதற்காக த்ரிவ்ருத்கரணம் பண்ணவேண்டியது அவசியமாகிறது.

நுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரோத். தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாம் அகரோத். யதா து கலு ஸோம்யேமாஸ்தி-

இப்படி ஸங்கல்பித்தபடி செய்தது என்கிறார். ஸேயம் தேவதாவ்யாகரோத்- தாஸாம்......அகரோத் இங்கு நாமரூப வ்யாகரணத்துக்காக த்ரிவ்ருத்கரணம் பண்ணுகிறபடியால் த்ரிவ்ருத்கரணம் முற்பட்டது; நாமரூப வ்யாகரணம் பிற்பட்டது. ஆகையால் ஒவ்வொரு பூதங்களையும் த்ரிவ்ருத்க்ருதமாக்கி, அந்த த்ரிவ்ருத்க்ருதமான பூதங்களைக்கொண்டு தேவ மநுஷ்யாதி நாமரூபங்களை ஸ்ருஷ்டித்தது என்று இந்த வாக்யங்களுக்குத் தாத்ரிபர்யம்.

யதா......ஹீதி—ஒவ்வொரு பூதங்களும் த்ரிவ்ருத்க்ருதமாயிருக்கையை உதாஹரணத்தால் காட்டுகிறேன் கேள் என்று பிதா சொன்னார்.

சாந்தோக்யம் ஆறாவது அத்யாயம் மூன்றாவது கண்டம் முற்றிற்று.

இங்கு த்விதீய கண்டத்தில் 'ஸதேவ ஸோம்யேதம்' இத்யாதி வாக்யங்களால் 'ஸத்' சப்தத்தால் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்துக்கு ஸ்ருஷ்டிக்குமுன் ஏகத்வாவஸ்தையைச் சொல்லிப் பின் ஸ்ருஷ்ட்யாரம்பத்தில் 'பஹுஸ்யாம்' என்று தொடங்கிப் பஹுத்வாவஸ்தையைச் சொல்லுகிறபடியால், கார்ய காரணங்கள் இரண்டும் ஒன்றே. ஆனால் அவஸ்தாபேதத்தால் கார்ய காரணபாவம் என்று முன்பு 'வாசாரம்பணம்' இத்யாதி வாக்யங்களால் ம்ருத்பிண்டம் முதலிய த்ருஷ்டாந்தங்களில் காட்டின அர்த்தம் ஜகத் காரணமான ப்ரம்ஹத்தில் காட்டப்பட்டது.

'பஹுஸ்யாம்' என்று ஸங்கல்பித்து, தேஜஸ் முதலான ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தது என்று ப்ரபஞ்சத்துக்கு ஸ்ருஷ்டி சொல்லுகிறபடியால், கார்யமான ப்ரபஞ்சமும் ஸத்யம் என்று காட்டப்பட்டது.

'ததேக ஆஹு:' என்கிற வாக்யத்தால் அஸத்கார்ய பக்ஷத்தைத் தொடங்கி, 'குதஸ்து கலு' என்கிற வாக்யத்தால் அந்தப் பக்ஷத்தைக் கண்டித்தபடியால், முன் 'வாசாரம்பணம்' முதலிய வாக்யங்கள் ம்ருத்பிண்ட த்ருஷ்டாந்ததில் அஸத்கார்ய வாதத்தைக் கண்டிக்கைக்காகவே தொடங்கப்பட்டவை என்று காட்டப்பட்டது.

இங்கு, 'ததைக்ஷத பஹுஸ்யாம்' என்கிற வாக்யத்தில் தேவ மநுஷ்யாதி பகுவித விசித்ர ப்ரபஞ்ச ரூபத்தால் பஹுபவந ஸங்கல்பத்தைச் சொல்வதால் ப்ரஹ்மத்துக்கு ஸர்வஜ்ஞத்வமும், 'தத்தேஜோஸ்ருஜத' என்று ஸங்கல்ப மாத்ரத்தால் ஜகத்ஸ்ருஷ்டியைச் சொன்னதால் ஸத்யஸங்கல்பத்வமும் ஸர்வசக்தித்வமும் இவை முதலிய குணங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

ஸோ தேவதா த்ரிவ்ருத்த்ரிவ்ருதேகைகா பவதி தந்மே விஜாநீ-ஹீதி.

இதனால் ப்ரம்ஹத்துக்கு அசேதநத்தைக்காட்டிலும் ஜீவாத்மாவைக் காட்டிலும் வாசி காட்டப்பட்டதாகிறது. இங்கு ப்ரதமத்தில் தேஜஸ் ஸ்ருஷ்டியைச் சொல்லியிருக்கிறபடியால், ஸ்ருஷ்ட்யாதியில் தேஜஸ்ஸே ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்று தோற்றுகிறது. ஸுபாலோபநிஷத்தில் சொல்லப்படும் ப்ரளய க்ரமத்தை ஆராய்ந்தால், ஸ்ருஷ்டி க்ரமம் வேறாக ஏற்படுகிறது. அந்த ஸுபாலோபநிஷத்தில் ப்ருதிவி தன் ஆகாரத்தை விட்டு ஜலமாகிறது; ஜலம் தேஜஸ் ஆகிறது; தேஜஸ் வாயு ஆகிறது; வாயு ஆகாசமாகிறது; ஆகாசம் பூதாதி என்று சொல்லப்படும் ஒரு அஹங்கார மாகிறது; அந்த அஹங்காரம் தன் ஆகாரத்தை விட்டு மஹத் தத்வம் ஆகிறது; அந்த மஹத்தத்வம் அவ்யக்த மாகிறது; அது அக்ஷர மாகிறது; அக்ஷரம் தமஸ்ஸாகிறது; தமஸ் ப்ரம்ஹத்தோடு பிரிக்கமுடியாதபடி கலக்கிறது என்று லயக்ரமம் சொல்லப்படுகிறது. (லயமாவது: கார்யம் தன் ஆகாரத்தை விட்டுக் காரணாகாரத்தை அடைதல்) ஆகையால் உத்பத்தி க்ரமத்தில் முதலில் இருந்தது தமஸ். இதுதான் மூலப்ரகிருதி என்று சொல்லப்படுகிறது.

இந்தத் தமஸ்த்வாவஸ்தைதான் 'ஸதேவஸோம்ய' என்கிற விடத்தில் ஏகத்வாவஸ்தை என்று சொல்லப்படுகிறது. இதுதான் காரணாவஸ்தை. பின் ஸ்ருஷ்டி தசையில் இந்தத் தமஸ்தான் க்ரமமாய் அக்ஷரம் அவ்யக்தம் மஹத்தத்வம் அகங்காரம் முதலிய ரூபங்களாக மாறுதலடைந்து, பின்பு ஆகாச ரூபமாய், அதன்பின்பு வாயுவாய், அதன்பின் தேஜஸ்ஸாய், அதன்பின் ஜலமாய், அதன்பின் ப்ருதிவியாய் மாறுதலடைகிறது. இதுதான் ஸ்ருஷ்டி க்ரமம். ஆகையால் 'தத்தேஜோ ஸ்ருஜத' என்கிற இடத்தில் ஸ்ருஷ்ட்யாதியில் தேஜஸ் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்பதில் இந்த வாக்யத்துக்குத் தாத்பர்யமன்று என்று கண்டுகொள்வது. இங்கே இதை அறிந்துகொள்ளவேணும்.

'ஸதேவ ஸோம்யேதமக்ர' என்கிற வாக்யத்தில் 'ஸத்' என்கிற சப்தத்தால் ஒரு வஸ்துவைத் தொடங்கி, 'ஸேயம்தேவதைக்ஷத' என்று தொடங்கி, அந்த 'ஸத்' என்று சொல்லப்பட்ட வஸ்துவுக்கு நாமரூப வ்யாகரண ஸங்கல்பம் சொல்லும் ப்ரகரணத்தில் அந்த வஸ்துவுக்கு 'அஹம்' என்று (அதாவது நான் என்று) தோற்றுகையைச் சொல்லுகிறபடியால், அது ஆத்மவஸ்து என்று கிடைக்கிறது. அந்த ஆத்மா ப்ருதிவி ஜலம் தேஜஸ் இவைகளை 'இமா:' என்றும் ஜீவாத்மாக்களை 'அநேந'

முத்திதரு மெழுநகருண் முக்கியமாங் கச்சிக்
கித்தினமே வம்மினும தின்றமுழு துந்தருவேன்
கத்துதலுங் கண்டபடி விண்டெழுமின் கடிதென்
றத்தொழில ரதிசயிப்ப வாங்குவலிந் துரைத்தார். 48

கேட்டபடி கிள்ளியிடங் கிளக்கவிஃத வனும்
வாட்டிறலற் கங்குபொருள் வருகுவதே தறியே
மாட்குமறி வாந்தளரா ததிபதன மாகப்
பூட்டுவிலங் கொடுகொடுநீர் போதுகெனப் புகன்றான். 49

சென்னியுரை யின்படியச் சேவகரு மிளிர்வாள்
பொன்னுறையி னின்றுருவிப் பொருகரத்தி லேந்தித்
துன்னிவரத் தூயவரத் தொன்னகரந் தோய்ந்தும்
பொன்னறலின் றின்னனமி கப்புழுங்கி யலமந்தார். 50

அன்றுநிசி யானைமலை யையனவர் கனவிற்
சென்றிளையேல் வேகவதித் தென்கரைமேல் வீசும்
மன்றலிளம் பூம்பொழிலி னிடைமலர்கண் மலியப்
பொன்றிகழும் புன்னைமர மொன்றுதழைந் துளதால். 51

அதனடியி னுதிவிரலி னம்மணல கழ்ந்தே
மிதமறுபொன் மேவுதிநீ யென்றுமிழற் றுதலும்
புதையிருள்போம் வைகறையப் புண்ணியர்கண் டிறவா
முதமொடுதங் கனவுநிலை முன்னிவியந் தன்றே. 52

சிக்கெனவெ ழூந்திறைவன் சேவகரிற் சென்று
புக்கரிய வப்பொழிலிற் புன்னையடி நண்ணித்
தொக்கமண றேண்டவள வுக்கரிய தூய
பொற்குவைபொ லிந்துளது கண்டுமனம் பொங்கி. 53

இச்சைகொளு மட்டுமெடுத் தேகுமென வாரிப்
பிச்சையிடு பீடுறுக ரங்களின ளிக்க
வச்சனமு மையகரந் தன்னிலுமே லாய
திச்சுமையெ டுக்கிலே மென்றதிச யித்தார். 54

தந்தரம்வ ருந்தமிகு பாரமொடு காவல்
வந்தவர்சு மந்துகலி யன்றனையே வாழ்த்தித்
தந்தரணி பன்றனைய ணைந்துதனந் தந்த
விந்தைமுழு துஞ்செலவி வம்பினர்க ளன்றே. 55

வேறு

கண்டுகாவ லன்சொரிந்த காணநாண யந்தனைக்
கொண்டல்வண்ணன் குறியினிற்கு லாவுமின்ன தன்னதிம்
மண்டலத்தி லெங்குமின்று மன்னுநங்கொ சத்தினுங்
கண்டதின்று கண்ணனுக்கு கந்தநீர ரிவரரோ. 56

ஆதிநாய கன்றனக்க மர்ந்தபாக வதர்களைத்
தீதிழைப்ப தின்வலிந்த தீதுமில்லை யென்பரான்
மாதவத்த விவர்பசித்து மங்குவெஞ்சி றைக்குளாம்
பாதகத்தை யானிழைத்த தன்றுபண்ண பாவமே. 57

இப்பணங்கு றிக்கினன்று தீயினின்றெ ழுந்துளாள்
கைப்புறுஞ்ச வைக்கணைந்து கண்ணனைப்ப ழிச்சுகா
லிப்புவிக்கு ளரியவாடை யெண்ணலின்றெ ழுந்தவா
றொப்பவிங்கு மொளிருகின்ற தென்னவுள்ளு டைந்துபின். 58

அல்லிவல்லி யன்பநின்னை யாற்றருஞ்சி றைக்குளே
யல்லலிற்ப சித்திருக்க வாற்றுதீமை யகலுமா
றெல்லையில்ல திருப்பொருண்மு ழுக்கநீயே யேன்றுநின்
னில்லணைந்து பண்டுபோலு னெய்துகோலு மேந்தியே. 59

என்றகத்தி யைந்தபல்ல முகமனன்கி யம்புறுப்
பின்றனத்தி னோடுமின்னு மணயணிகள் பீதக
மின்றழைத்த வாடையாதி மிக்கபல்ல மேம்பட
நன்றளித்து விடவெழுந்து நணுகினார்த நகரரோ. 60

வாளெயிற்றி னுரகமுண்டு மிழ்ந்துவந்த மதியென
நீளகத்து நிலவிநீல மேனியன்ப தத்தினர்க்
காளகத்த ராகிநாளு மதிதிபூசை யாற்றுறு
வாளடுத்த கண்ணியோட ருந்தியின்பம் வைகினார். 61

மதனைவென்ற மங்கைமன்ன னின்னவண்ண மாயவன்
பதமிடைந்த பண்பினர்க்கு வைகலும்ப டைத்தபின்
னிதியொழிந்தி னிச்செயற்கு நெர்தலின்றி ரும்பொருண்
மதிமயங்கி நின்றுசற்று மாழ்கியுள்ளந் தேறியே. 62

ஆதுலர்க்கோ ரைந்தையேனு மருளலின்றி யீட்டிய
பேதையர்ப்ப றித்துமேனும் பெரியவர்க்க ளித்திட
னீதியுற்ற முடிபெனத்து ணிந்துகான நின்றதர்ப்
போதலுற்ற பூரியர்ம றித்தலைப்ப லென்றுடன். 63

முன்னுரைத்த நாலமைச்சர் முன்னமென்ன முற்செலக்
கன்னிறத்த நெஞ்சர்கால படர்களன்ன கானவர்
வன்னியொத்த விழியரன்றி யிடியிடித்த வார்த்தையர்
பொன்னிழைத்த தனுவளைத்த னேகர் சூழ்ந்து போதர. 64

துடிகறங்க முரசிரங்க மீதுவாவுந் துரகதத்
தடிதுலங்க வைத்திவர்ந்த னேகவான கத்திரள்
படிகலங்க வேயொலிப்ப மாகமோங்கு பாதபம்
மிடைமருங்கு கான்மருங்கி னடையதிர்ந்து மேவினார். 65

கள்ளரேனு முள்ளமுட்குங் கரிகுலந்தி ரிந்திடும்
வெள்ளெயிற்று வேங்கைகோக மிங்குமங்கும் விரவிடும்
முள்ளடர்ந்த வுடலவேன முடுகியெங்கு முழன்றிடும்
புள்ளினங்க ளினியபல்ல புதுமையாய் மிழற்றிடும். 66

தடவரைக்கு கைக்கிடந்த தழைசிறைப்பஞ் சானன
மிடுமுழக்க மெங்குமாரு மின்னதென்று ணர்வுறு
தடர்தருச்சி னைக்கலர்ந்த பலவிதத்தி னலர்களிற்
படுமணத்தை யனிலமுற்றும் படர்தரப்ப ரப்பிடும். 67

வீழ்ந்தசம்பு கப்பழத்தை வீழ்ந்துசம்பு கந்தினுந்
தாழ்ந்தமாங்க னியினைவேட ரேழ்ந்துகையிற் றாவுவார்
போழ்ந்துமண்ணெ ழுந்தமுட்பு றக்கனியைப் போழ்ந்தநின்
றாழ்ந்தவின்சு வைகளங்கு வாழ்ந்தவில்லி யர்கொள்வார். 68

புதுமையின்னு மிதிகமாய பூவைவண்ண னின்புறும்
மதுமலிந்த கானகத்தை மங்கைமன்ன வன்மணந்
ததினடந்த பதிகர்கொள்ளை யாடிநாடொ றும்முனம்
மதுவைவென்ற வைணவர்க்கு மாடினார்வி ருந்தரோ. 69

கள்ளுகாளை மாயவன்ற னருண்மிடைந்த காட்சியா
ளொள்ளியாரின் மூகங்குறித்த வர்க்கொரூஉ முனுற்றிடார்
கள்ளலர்ந்த குழன்மடந்தை வறியனைந்து காய்பிணி
யுள்ளவன்சி றாவனின்னோ ருடைமையொன்றுங் கவர்ந்திடார். 70

வையந்தாய வன்பதத்து வாழ்நரண்டை யணுகுறூர்
செய்யுந்தான தருமமுள்ள சேயர்பொன்னும் வவ்வுறூர்
பொய்யுந்தீமை யும்பொருந்தி விழுமியோர்கள் போற்றிடா
நையுந்தீய ருடைமையொன்று நாடியேப றிப்பரால். 71

வேறு

இவ்வண்ணந் திருக்களவி னிருடீகேச
  னடியவர்க ளருந்துவிருந் தியற்றுமேல்வை
யவ்வெண்ணற் கரியகொடு வனத்திருப்ப
  ரொருமொரு பகலனுக வறியராகி
யெவ்வண்ண மித்தினநா மந்தணர்க்கே
  யீதுமெனத் திருவுள்ள மிரங்கக்கண்ட
பைவண்ணப் பணிபதியாம் பாயன்மீதே
  பள்ளிகொளும் பரந்தாமன் பரிந்துமன்றே. 72

அன்றுதிரு வில்லிபுத்தூ ராண்டாடன்னை
  யணிமதிள்சூழ் திருநகரி யடைந்துவேத
நன்றுபசுந் தமிழேறப் பாடித்தந்த
  நம்மாழ்வார் திருமுன்னர் மணந்துதன்னூர்
மன்றன்மலர்க் கோதையுட னெழுந்தகோல
  மணந்தனந்த பரிசனமு மருங்குபோதச்
சென்றுகலி யன்களவு செய்யுமந்தச்
  செழித்தகன்ற வாரணியஞ் செறிந்தானன்றே. 73

செறிந்தங்குப் பாங்கரொளிர் சூடித்தந்த
  சேயிழையின் முகநோக்கி யழுதேமுன்ன
முறுங்கலியன் றனைநோக்காய் நெறியிற்செல்லு
  முலோபியரின் பொருள்பறித்தெம் மடியார்க்கூட்டி
யுறைந்திடுவ னின்றெவரும் படாக்கானு
  னேங்குமந்தப் போதிமரத் துச்சியேறி
யறிந்துசொல வடைபவரை மறவர்தம்மை
  யமைத்துமனத் தயர்வுமிக நின்றானங்கே. 74

பஞ்சூட்டும் பதுமமலர்ப் பதத்தாயுன்னைப்
  பயந்தவற்குப் பின்பிறந்த பரகாலன்ற
னெஞ்சூட்டும் படர்களைந்தித் திவசம்பாக
  வதாருந்தத் தனிவிருந்து நிகழ்த்தும் வண்ண

நஞ்சூட்டு மரவல்கு லரிவைநாமே
  யவனுழையே யணுகுதுமென் றருளிக்காரின்
மஞ்சூட்டு மணிவண்ணன் மறையின் மூர்த்தி
  யெனநிலவுங் கலுழன்மிசை யிவர்ந்தானன்றே. 75

கலியாணப் பிள்ளைதனக் குரியவேடங்
  கலந்தருகிற் பொற்கொடியிற் கோதைதுன்ன
வலியாரு மம்புயத்தா னயவேதத்
  தரியபுரோ கிதன்செறிய வனந்தன்சோதி
மலியாடும் பணக்கவிகை நிழற்றவானை
  முகன்முதலாம் பாரிடதர் மருங்குசூழ
வொலியாரு மங்களசா ரியத்தின்மண்ட
  வுறுபுலியே றனையவனு முவந்துகண்டான். 76

விலையரிய தெய்வமணி யிழைத்த பூண்கள்
  வில்லெறிய மேனியெலா மஞ்சட்கூறை
குலவவரப் புதிதளிப்போர் புதியர்போதக்
  கொண்மலர்ச்சி கொண்டுபல படையுங்கையு
நிலவுகளப் படர்களொடு நெருங்கியார்நீ
  ரிந்நெறியி லெமைமதியா தேகலுற்றீர்
பலபணியுங் களைந்துவிரைந் திடுமின்பார்மே
  லெனக்கரவா னுனியசைத்து மறித்திட்டானல். 77

ஆனகங்கள் கணகணவென் றதிரச்சோர
  ராம்வயவ ரார்ப்பரிப்பத் தடுக்கக்கண்ட
வானைமுகன் முதற்சேனை யதிபரோடு
  மமரரெலா முடுகியெழு மளவிற்பாயுஞ்
சேனையிறை யெம்பெருமா னுள்ளத்தோர்ந்து
  செங்கரத்துப் பொற்பிரம்பை யசைத்துநின்மின்
மோனமுட னெனக்குறிப்பி னுணர்த்தயாரு
  மொய்ம்படங்கி வாய்புதைத்து நிலைத்திட்டாரே. 78

விபுதரது வேகமடங் கியதுவெய்ய
  கந்திருவர் கருவமடங் கியதாஞ்சித்தர்
புதலறு வெந்திறலுஞ் சமழ்த்ததோய்ந்த
  கடலெழுவிச் சாதரரின் யன்னனத்தி

னபரிமிதச் சிறைவளியு மயர்ந்ததந்தி
வண்ணன்ற னெருத்தொலியும் வலாரியேறு
மிபமுடுகி யிடும்பிளிறு மிகந்தவீமன்
னிருஞ்சிறகி னெழும்விரைகா லொடுங்கிற்றம்மா. 79

வேறு

பறவையின் களரவ மடங்கிப் பாய்சினத்
தெறுழ்வலி மடங்கவே முதல வெண்ணறு
முறுவிலங் கோட்டமு முடங்கி மாருதத்
தெறிதரு கமனமு மின்றி யெங்கணும். 80

தருக்களி னடைகளுஞ் சலிப்பொன் றின்றியே
யுருக்கிள ரோவிய மென்ன யாவையு
மிருக்கவுந் திரையடங் களக்க ரென்னவே
மருக்கமழ் துளவினு னசைவின் மன்னினன். 81

கயிரவத் தணங்கினின் கணவ னங்ஙனம்
வயிரவத் தெழுந்துபூண் மலிந்த பேழையைச்
செயிரறக் கொண்டெழிற் செங்கண் மான்முகின்
மெயிலுறப் புனைபணி யடைய மீட்டரோ. 82

பறித்துயர் பதமருண் மூல மந்திரம்
பொறித்தொளிர் மணிவிரற் பொன்னன் மோதிரம்
பிறித்திடப் பெயர்கலா துணர்ந்து தன்பலிற்
கறித்திழுத் திடுதலுங் களித்துக் கண்ணனும். 83

நந்திருக் கலியனே வெனந வின்றருள்
சிந்திடுங் கடைக்கணி னேக்குஞ் செம்மையிற்
புந்தியின் மெய்த்திற மொருங்கு பொங்குமச்
சுந்தரர்க் கப்பெயர் சொல்ல லாயதே. 84

கலியனுங் கதனையுங் கழற்றி யாவையும்
பொலிதரு பேழையுட் பெய்து பூட்டிடா
வலிகொடு பெயர்த்துமவ் வயிர மஞ்சிகை
சலிவறக் கிடக்கமெய் சலித்துச் சிறியே. 85

புரோகிதன் முகமது புகைந்து நோக்குறு
வராவகை மஞ்சிகை யென்ன மந்திரம்
பராவினை யதனையென் செவியிற் பாய்ந்ததில்
விராவிட முறைமையின் விளம்பு கென்றனர். 86

ஐயயான் வதூவர னளிக்குந் தெக்கிணைக்
குய்யவிங் குவாத்திய னாகி யொன்றினேன்
பொய்யிலா மந்திரம் புகல வித்திரு
மெய்யனே வல்லவ னெனவ ழங்கினன். 87

மிழற்றலு மிளிருமால் வதன நோக்குறு
வழற்றரு மசியிதை யறிந்து பேழையிங்
கெழத்தகு மறையெனக் கியம்பு கென்றதைச்
சுழற்றலு மணிவண னகைத்துச் சொல்லுமால். 88

புலியினோர் புகலரு மதுகை மன்னுவெங்
கலியனே கழறுது மதனை யிங்ஙனம்
பொலியினே ரிரும்புனல் படிந்து போந்துநீ
வலியினே நின்னது வயமுறு தரோ. 89

என்னவப் பராந்தக னெழுந்து பாங்கரின்
மன்னுமோர் கயத்தினை மணந்து பூம்புனல்
பன்னிரு நாமனைப் பரவி யாடிமீண்
டன்னவ னருகுற வகங்களித் தவன். 90

கரையறும் பவக்கடல் கலங்கு மூழ்கியே
புரையுறு மவர்க்கரை புகுத்தும் வன்மையா
முரைபெறு நாலிரண் டெழுத்தி னொன்றுமாம்
வரையிறு மந்திரங் களுக்கி ராசமாம். 91

ஆரணப் பொருளெலா மகத்த டக்கிய
நாரணன் பகட்டையே நவிற்றுந் தன்மைய
வேரண வெழுத்துகண் மூன்றங் கேய்ந்துள
காரண பிரணவந் தலைப்பிற் காணுமாம். 92

எய்திடுங் குறிபிழைப் பென்று மெய்துறு
மெய்திகழ் சனகியே மேவு நாயகன்
கய்தனின் விடுபடுங் கணையிற் சொல்பவர்
செய்திடுந் தீவினை செருக்கற் பாலதாம். 93

சால்புறு மினும்பல சாற்றற் கொன்றிடா
மூலமந் திரமவன் முடியைத் தாழ்த்துபு
வாலிதிற் பொருந்துற வைச்செ விக்குளே
யாலிலைப் பள்ளியா னறைந்திட் டானரோ. 94

வேறு

இவ்வுப தேசமங் கெய்தலும் முன்னகங்
கவ்விய வந்தகா ரங்கழன் றோடவே
திவ்விய ஞானமாந் திகழ்சுடர் மூளமா
லொவ்வறுந் தனதுபே ருருவமுங் காட்டினான். 95

மறையுரு வாயசெம் பறவைமன் றோண்மிசை
நறைமலர் மன்னுமா நங்கையோ டன்றுகாண்
பிறைநுதற் கோதையும் பிணைந்துறத் தானவர்
கறைகெழும் படைகளோ ரைந்துமின் காலவும். 96

நாமகள் கணவனே நாரிபா கன்றருக்
காமலிந் திடுதறக் கந்தனுக் கதிபனே
மாமயின் முருகனே யிவர்முதற் சுரரெலாம்
நாமமா யிரந்திரு நாவினிற் பாடவும். 97

சேனைநா தன்வலச் செயவிச யன்முத
லானவா னித்திய சூரிய ரங்கரம்
மேனகக் குவிகொளா மிதமுறுங் குணமெலாங்
கானமா யினிதுறக் கவிதனிற் பாடவும். 98

தரிசனந் தந்திடுந் தாமரைக் கண்ணனைக்
கரிசகன் றிடுகணிற் கண்டதும் புளகமெய்
வருசலந் தன்னிலா னந்தமன் மறைதரக்
குரிசிலுந் தனைமறந் துள்ளகங் கூர்தரும். 99

வெள்ளவா னந்தமே விரிபெருந் துதியுரு
வுள்ளதாய்ப் புறமெழுந் தொளிருமென் றறைதரத்
தெள்ளரும் பெரியநற் றிருமொழி யாதியாங்
கள்ளருந் தொழுகுநூ லாறுடன் கழறினன். 100

திருக்குறுந் தாண்டகந் திருநெடுந் தாண்டக
முருக்கிளர் திருவெழு கூற்றிருக் கையுடன்
பெருக்கமுஞ் சிறுக்கமும் மிணைந்தநற் றிருமட
லுரைக்குமா லென்றுமற் றைந்தையு முலகமே. 101

வேறு

ஆயிரத்தெண் பத்தொருநான் காம்பெரிய திருமொழியுண்
மாயிருஞா லங்கடந்த மாயன்ற னின்னுருவைத்
தூயதிரு வெட்டெழுத்தா ரேற்றுவித்தா னென்றனக்குச்
சேயபொ ருண்மலியு மீரைந்து செப்பினனால். 102

தெள்ளா ரமுதினிமின் றீஞ்சுவையே மிக்கொழுகுந்
தொள்ளா யிரங்கவியிற் றொல்லுலக முண்டுமிழ்ந்தோ
னெள்ளா திலகுமொரு நூற்றெட்டி ரும்பதியைக்
கள்ளா னனைதுளவக் காரரங்கன் முன் மொழிந்தான். 103

எம்பெருமா னேன்றவெழி லீரைந்த வதரிப்பை
யும்பர்தொழ நூற்றறுபத் தொருநான்க ருங்கவியா
லிம்ப ருயவருளி நின்றதிரு வீரைந்தின்
வம்ப விழுஞ்சோலை யரங்கனடி வாழ்த்தினனால். 104

பாம்போ டொருகுடியிற் பயிலு பவன்போலுந்
தீம்பா யெறிவளியிற் றிகைக்குங்க லம்போலும்
போம்பேர் புனலலைக்கு மாற்றங்க ரைபொருந்தி
யாம்பால தின்றி யடிசாய்ம ரம்போலும். 105

இருதலையுற் கைக்கிடையி லேங்கும்பு ழுப்போலும்
வருபுனலி னீர்ப்புண்டு வாடும் நரிபோலும்
எரிதருதா பத்திரய மெனுமலைசேர் பவக்கடலுட்
கருகுறுமென் றீவினையைக் களைந்தளித்தி மாயவென. 106

குறியதொரு தாண்டகத்திற் கூறியெழு கூற்றிருக்கை
நறுமலரின் கைப்பிடித்த சாரங்க நாதனினை
யறிவுதனிற் கண்டடியே னுனந்தங் கொள்வதுபோன்
முறைதனிலுன் பணிபுரிய முன்னுமென்று நிற்றியென. 107

பெரியசிறுத் திருமடல்க ளென்னும் பெருநூல்க
ளரியபுரா தனபுருட னடியேன்பெ ரும்பேற்றி
னுரியவுபா யாந்தரமா யுற்றா னெனவன்றித்
திருமா மணவாளன் றிருநெடுந்தாண் டகமதனில். 108

என்மனமிங் கெண்ணியவா றெல்லா மளித்தானென்
றின்ம துரமூறு மிருமூன் றருநாலு
நன்மைமிகு நம்மாழ்வார் நான்மறைகட் கங்கமெனப்
பன்மகியு முய்யப் பகர்ந்தா ரிவையடைவே. 109

பாளைகளில் வாளையுகள் பைங்கமுகுஞ் சூழரங்கன்
றாளையடை நம்மாழ்வா ராதியர்க டாங்களிக்கக்
கோளமரு மிவ்வாறுங் கேட்டுக்கு ளிர்ந்துளமு
நீளைமுதற் பன்னியரு நேர்ந்துக டைக்கணிக்க. 110

ஆயர்வை யறுமமரு மயனாதே யாதியரு
முயர்விற் செவியேற்க வுத்தமனா மிக்கலியன்
மயர்வறு மெம்மடிய வருண்மன்னுஞ் சிறப்புடையான்
றுயரறுமித் தூயவனின் வாய்மொழியைச் செப்புகையே. 111

என்றேப கர்ந்தருளி யெருதேறி யாதியரா
யொன்றோர் சுரகணங்கட் குற்ற விடையருளித்
தன்றேர்ப் பறவைமிசைத் தன்பரிவா ரங்களுடன்
குன்றேய் மணிமாடப் பொன்னரங்கங் கூடினனால். 112

19-வது சருக்கம்

உண்மையுணரா துழல்கிற்பீ ருண்டென்றுணரு நம்மிறையு
மண்முன்கடந்த மாலருளான் மன்னுமுலகி லெனப்பழநூல்
கண்முன்கழறக் கண்டிருந்துங் கண்ணன்கழல்கள் கருதியிடாத்
திண்மைபிடித்த பிடிதளரா விடங்கர்க்குற்ற திறமானும். 1

கோயிலணைந்த குரைகழலன் கொற்றக்கலியன் குளிர்புனல்சூழ்
சேயவரங்கன் விடையருள்கொண் டிமையோரேத்துஞ் சேடகிரி
மேயவலர்மேன் மங்கைமண வாளன்மிளிரும் பதம்பணியக்
காயும்படைஞ ருடன்போதக் கடுகிவடபா னடந்தனனால். 2

சின்னாளகன்றோர் தினமருக்கன் சிரமேனிலவு நண்பகலிற்
பொன்னாடனைய கச்சிநகர்த் தென்பாற்புனித நீரொழுகும்
மின்னார்வெள்ளி மணல்செறியு மிருந்துபரந்த பாலாற்றின்
கொன்னார்கரையிற் கூடியவண் கூர்ந்தவெயிலில் வெதும்பினனே. 3

சேனாவீரர் களுந்தவித்துச் சில்லென்றொழுகு நீரிழிந்து
பானாறதனை யடுபசியிற் பருகிக்கமலக் கிழங்குகளைந்
தானாதயின்று படுந்துயரை யறிந்துதொண்ட ரலந்தலையை
நோனானன்று கரிபுரந்தோ னொடியின்முதிய வந்தணனாய். 4

ஈராரிடத்தின் பட்குறியு மிலகுந்துளவக் கமலமணி
யாராவளிமின் கந்தரமும் ததிசேரன்ன முடிக்கரமு
மாராநடையிற் றளர்ந்தொருதண் டங்கையூன்றி யவனிதனைப்
பாராவழிச்செல் பாந்தனெனப் பரகாலன்முன் றோன்றினனால். 5

கள்ளக்கிழவன் றனைக்கலியன் கண்டுவியந்து கஞ்சமலர்க்
குள்ளாற்றிடுவோ னெனவொளிரு முரவோயுன்றன் கரமிலகுங்
குள்ளச்சுவடி யெதுவின்று குறுகுந்தாரா ததிகரண
மெள்ளத்தனையு மிவைபிறழா தென்பாலருள்கூர்ந் திசைத்திவையே. 6

யானுமென்றன் வாகினியும் யாதுமருந்தற் றுணவின்றி
யூறுமுணர்வு முலருகையி னுன்றன்கரமா ரோதனமென் [மான்
மேனின்னருளி னருளுவையேன் மிசைத்துப்பிழைத்து மெனப்பெரு
றானன்குவந்து தராபதியே தருமென்மொழியைச் செவியுறுவாய். 7

அரிதாரகையின் றரிதியா மரிமாகரண மரியோக
மரிவாரமிதி னையமில்லை யறிவாயிந்த வடிசிலுமுன்
பரிவாரமதற் கொருசிறிதா மேனும்பகுத்துப் படைப்பலெனத்
தெரியாவெவ்வோர் பிடிவல்சி தோர்ந்தெல்லோர்க்கு மளித்தனனால். 8

அந்தவன்ன மனைவர்க்கு மிருமூன்றுருசி யமைந்தபல
விந்தையாய பணிகார வகையாயோரை விதம்பலவாய்
முந்தவிரம்ப நாசிவழி முன்றின்னவிழும் புறம்போதத்
தந்தம்வயிறு தடிப்புறவே யந்தக்கரணந் தாங்களித்தார். 9

சடையார்க்கந்த கனுமாங்கே யருந்திக்களித்து விண்ணவரும்
படையாப்பகடார் பான்மையனின் பதியேதீங்கு படர்ந்ததெவன்
கிடையாவுன்னை மணத்தொளிரும் பெயரேதென்று கிளக்கவுமைம்
படையார்நான்கு கரமூன்று குணவீர்விளையாட் டொருவனுமே. 10

தண்ணித்திலவெண் ணிலவெறிக்குந் தந்தத்தொளியா மின்னமுதின்
மண்ணுக்கிறையை யாட்டுவபோன் மலர்ந்தமுகத்தின் மனுநெறியா
யெண்ணுக்கியலா முடலையினிக் கச்சிநகர்க்குண் மேல்பாலில்
வெண்ணற்சுதையி னோங்குமொரு விமானநிலயத் துறைகுதுமே. 11

நாமமிருநான் கொளிருகர நரசிங்கனுமென் றறைகுவர்நீ
வேமிப்பசியி னுழல்வதுகண் டடைந்தேமிங்கு விரும்புவதொன்
றேமுக்கில்லை யிதுசரத மென்றுவழங்கி மாயமெனக்
காமற்பயந்த காயாவின் வண்ணன்கரந்தங் கெழுந்தனனால். 12

கண்முன்சால மெனக்கரந்த பின்னர்க்கலியன் விம்மிதனாய்
மண்முன்னளந்த வெண்புயத்து மலராளிறையே யெந்தமுறு
கண்முன்களைய வெழுந்துந்தன் செய்தியனைத்துங் கழறியதே
யென்முன்னிந்த்ர சாலமென வெழுந்தானந்தோ வென்செய்கேன். 13

நீயாரென்றே நிகழ்த்தினனே நிலத்துவாழும் மனிதனெனத்
தாயாரென்னத் தன்னிலைக ளடையவெற்குச் சாற்றினனே
பேயார்முலையை யுண்டிடுமென் பெம்மானஞ்சா யுதத்தொடுபேர்
வாயார்பலக பங்கயபா ணங்கள்வாய்ந்த வெண்கரத்தான். 14

இவனேயாயன் வாமனனே யிவனேகாகுத் தனுமிவனே
யிவனேபூமி யிடந்துமுன மேனமாயு நின்றவனே
யிவனேயெந்தங் குலதெய்வ மென்றீரைந்தா மின்கவியா
லவனேரில்லாக் குணகணங்க ளடையத்துதித்தா னங்கடைவே. 15

உள்ளம்பூரித் திவ்வணமே யுய்யும்பாடன் மிழற்றியுடன்
கள்ளம்பூரித் தடலுறுதன் கணத்தோடந்தத் தலந்தணந்து
வெள்ளம்பூரித் தொழுகுபல யாறும்விபினங் களுங்கடந்து
பள்ளம்பூரித் திருலருவிப் பைந்தேன்பாய்வேங் கடஞ்செறிந்தான். 16

வேறு

மாயமா வேடன் பாத மலர்பட முழுதுந் தூய்மை
யாயதா ளதனி லாழ்வார் தீர்த்தமே முதல பல்ல
தூயமா லருவி வீழ்ந்து மூனியுந்து வன்ற வாறு
மேயழு வருந்துந் தும்பி மிழற்றிடு மிசையு மின்னும். 17

திருநிவா சனையே கானத் தொறும்பிணி யகலு மாறு
வருமன வரத மெண்போ டற்கெனு மிடமொன் றின்றிப்
பெருகுறுஞ் செல்வர் கோவிந் தாவெனும் பெரிய வார்ப்பு
மிருமுழக் கமுமன் னோர்க ளிசைத்திடும் பறையின் மாதோ. 18

வரையெலா மலியு மன்றிச் சாமிபுட் கரணி யென்னும்
புரையறு கயத்தி னூடு பொதுளியே மலருஞ் செய்ய
மரைமலர் விரையை யேந்தி யிளவறி மலையி னெங்கும்
விரவிய வமர ரின்ப மெய்திட வீசு மென்றும். 19

ஒண்ணறு நீல கண்ட ரும்பரு மிடைவி டாது
நண்ணுகார் முகிலைக் கண்டு நடிக்குமப் பொருப்பு நாளும்
தண்ணில வருவி யென்னுந் தடங்கொடோர் நீல கண்ட
வெண்ணக மதனை நோக்கி மென்னகை புரிவ போலும். 20

முடிமிசைப் பொதுளி யோங்குந் தருக்களின் முனையி னின்றுங்
கடுவனாந் தருவின்மீதே முடுகியாங் குகள்க் கண்ட
துடியிடை யவரி னுட்கித் துறக்கநாட் டிமையோ ரைய
கடிமதி லிலங்கை யன்றீ தெனக்கரங் குவிப்பர் மாதோ. 21

கதிரவ னுதலிற் சுட்டி யெனத்தடங் கலந்து மின்னு
மதிநிறை கருவின் மாழ்கு மங்கைமார் படர்வ தென்னத்
ததைநிலா வெறிந்து மெல்லத் தவழ்தரு முடுக்க ணனை
விதமணிப் படமே லெங்கும் விரித்தென விளங்கு மன்றே. 22

இன்னுமித் தகைய வாடற் கிவைகிலாக் குவவு வாய்ந்த
பன்னகப் பதியின் வெற்பி லிவர்தரல் பழுதென் றுன்னிக்
கொன்னவின் முனைவ ராழ்வார் குலவுமப் பொருப்பின் பாங்கர்
மன்னினர் திவச மூன்று மாயவன் மலர்த்தா ளெண்ணி. 23

வேங்கடக் கிறைவன் பாத தரிசனம் வினையேற் கெந்தப்
பாங்கினிற் பலிக்கு மென்று பரிந்தவ னுறைய வந்தத்
தீங்கலுந் திருநி வாசன் றிருவுள மிரங்கி யாழ்வார்
பாங்குற வெழுந்து முன்னர்ப் பழிச்சுறத் தோன்றி னானால். 24

நிதிகொண்ட விதமே யேழை நிகழ்த்தரு முவகை பொங்க
மதிகொண்டு துதிக்க வொண்ணு மாண்பினை யுணர்ந்து நாவால்
சுதைகொண்ட மொழிக ளாலே சுவைபடத் துதிக்க மாய
னதுகொண்டு கடைக்க ணித்தே யாங்குடன் மறைந்தானன்றே. 25

துங்கிருந் தகன்று பின்ன ரரும்பெறற் சுற்றஞ் சுற்றக்
கொங்கிருந் தலர்ந்த தாரான் றென்முகங் கொண்டு மீண்டு
தங்கிருந் தடத்தில் விண்டு தலமெலாந் தொழுது போந்து
பொங்கிருந் திருவ ரங்க மெனும்பதி புகன்று புக்கான். 26

தாஞ்சென்ற தடத்தி னுங்காங் கீட்டிய தனத்தி னோடு
மான்சென்ற வழியிற் சென்றோன் வழுத்திய வரங்கன் பாதம்
வான்சென்ற மறையி னோதி வணங்கிநின் பணியின் வண்ண
நான்சென்று மீண்டே னேழு மலைக்கென நவின்று நின்றார். 27

நின்றவர் தம்மை மாய னீள்கடைக் கண்ணி னோக்க
வொன்றியக் கருணை யாங்கே யோங்கெயி லிழைக்க வுன்னி
மன்றலா ரகன்ற செய்ய மடைப்பள்ளி முதலா யங்குத்
துன்றிய புரிசை வானந் துன்றுறப் புரிந்து போந்தார். 28

புரிசையங் கொருநான் காய திழைக்கையிற் புவியி னூடே
கரிசகன் றொழிய நோற்கு மொருமுனி யிறையைக் காணு
வரிசையிற் பணிந்தி யோகம் வல்லனே படிமீ தைய
தரிசனஞ் செய்த தெத்த னைத்தலந் தகவி னீயே. 29

ஆடிய புனித தீர்த்த மெவ்வள வவையு மெல்லா
நீடிய வருளிற் சாற்று கெனவவ னிலவும் விண்டு
நாடிய தலநூற் றெட்டு நான்கண்டு தொழுத தைய
வாடிய விறுவ தின்றே யாடிய புனலு மென்றான். 30

இஞ்சியின் பணியீ டேற விருடியை யினிமை யாய
செஞ்சொலால் கற்ற வப்பால் செவ்விதி னுணர்ந்து வாழ்வார்
மஞ்சுள முனிவ மன்னும் பனிவரை மிசையின் மேல்பா
லஞ்செறி முழையொன் றுள மாயுள ததன்க ணம்மா. 31

பொன்னன துரத்தைப் போழ்ந்து பொலிதரு முகில்கள் வாய்ந்து
மின்னிருங் கரமோ ரெட்டின் மேவுவார் விழைம றந்து
மன்னுமெம் பெருமா னுய நரசிங்கன் மறைசேர் மூர்த்தி
தன்னைநீ யறியாய் போலு மென்றனர் தடங்கை கூப்பி. 32

பரசித னுரைத்த மாற்றம் பட்டதுஞ் செவியு னன்னான்
விரைவுட னெழுந்து போந்து விழைவுடன் குறுக வாங்கே
முரசித னடியன் வார்த்தை மொய்ம்புற விழைப்ப லென்றவ்
வரையரு குகையி னூடே வைகினன் வழங்கும் வண்ணம். 33

கண்டிர ணியனைக் காதுங் கண்டீர வமதை யோகி
கொண்டிறும் பூதுநீடக் குகையுழி யுறைய வீங்கே
விண்டுறை யரண்க ளாற்றி விண்டனன் பணங்க ளெல்லாங்
கொண்டனன் சீர்த்தி வாசக் குமுதமா வல்லி யாளன். 34

பின்புமூன் றுய தோங்கிப் பிறங்குவ திழைக்கக் கையிற்
பொன்சிறி துள்ளல் லானுய்ப் புந்தியி னுணர்ந்து கள்ள
மன்பெருந் திறலார் தம்மை மறைவினி லழைத்து மாயன்
றன்பெரும் பணியீ டேறத் தடஞ்சிறி தறியேங் கண்டீர். 35

திருட்டினும் புரட்டி னூனுந் தீயரைத் தெறுத்தற் கண்ணுந்
தெருட்டிடாத் தெளிந்த நீவிர் தேர்ந்துரைத் திடுமி னென்ன
விருட்டினு விழைத்த தென்னுங் கருமெயு மெரியார் கண்ணும்
வெருட்டிய மிடறு மாரவ் விளைஞரும் விளம்ப லுற்றார். 36

மாதவன் பணியின் மன்னு மாதவர்க் குழைக்க கில்லாப்
பேதையார் பிற்போ தைய பெற்றவ ரிளமை யல்லிக்
காதவன் பிறப்ப தன்றோ வடியரே மடலி னிற்க
நீதிரு வுள்ள நைய னிகழுமோ நிகரொன் றில்லாய். 37

பகலினும் பதிகர் கைத்துப் பறிப்பமல் லகத்துட் செல்ல
விகலுறுஞ் சுவரைக் கிண்டி கோலிருட் பொருளைக் காண்பான்
பகல்விளைத் திடுமை யோடு சலபமின் சுடரை மாய்க்குஞ்
சிகதைநீள் கயிறு தோண்டி யின்னன சிறக்க வுள்ளேம். 38

நீகவ லற்க கீழ்பா னீரதிக் கரையி லோரூர்
நாகப்பட் டணமென் றுண்டே யதனிடை மறையை நாடா
யூகபுத் தர்களின்புத்த விம்பமொன் றுளிரும் பொன்னி
னேகியப் புணர்ப்பி னேனுங் கொணர்துமீங் கதனை யென்றார். 39

செவிப்புலத் தவரின் வாய்மை யெனுஞ்சுதை தெவிட்ட வுண்டு
புவிக்கிறை பவுத்தர் வேடந் தாங்கிவெம் புரவி யூர்ந்து
தவிப்புற வயலார் வீறுந் தானையிற் பமந்தின் சோலை
கவிக்குமப் புரியை நண்ணிக் கண்டன னிலயந் தன்னை. 40

மாருத மசக மேனு நுழைகிலா வலிய காவ
லாருமக் கருப்ப விட்லுட் புகுதரு மாற்ற லில்லான்
யாரிதின் மறையைச் சொல்வா ரெனநினைந் தலமந் தந்த
வூரதின் முதிய பாண னொருவனை யணுகி மெல்ல. 41

வானகத் தச்சன் போற்றும் வலிகெழுந் தொழிலில் வல்லோய்
மேனகிச் சுகதன் கோயின் மேவரக் கரவின் வாயி
னூனகத் துளதோ வென்னத் தச்சனுங் கெம்மு னோர்க
ளூனகத் துணர வீங்கு நவின்றனர் நவில்வன் கோடி. 42

புத்தர்தங் கடவுட் டங்கும் பொன்விமா னத்தின் மீது
வைத்திடு முடியி னின்றோர் வன்சிருங் கலங்கீழ் வந்து
சித்திரத் தமைத்த தூம்பிற் செருகிய முளையிற் சேர்த்துப்
பத்திரத் துணர்த லின்றிப் பிணித்துள ததனைப் பற்றி. 43

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.
வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலை யங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

ஏறுபு முடியின் வாய்ந்த வெழிற்கட மதனை வாமத்
தாறுறத் திருகி வாங்கி யதனுளத் தொடரை வீழ்த்தி
யூறுறு திறங்கி யேறற் கொன்றமப் புழையோ மிக்க
சிறிது சிறிய காயற் கன்றது செலவற் றன்றால். 44

என்றவ னுரைப்ப மங்கைக் கிறைவனு மகிழ்ந்து துள்ள
குன்றிடை மேல்பா லேகு மமைய முங் குறித்து நிற்க
நன்றவற் கிரங்கி னான்போ னரனுமேற் சலதி யன்னான்
சென்றழுந் திடலு மிக்க தமமெங்குஞ் செறிந்த தம்மா. 45

வேறு

கள்ளற்குங் காமுகற்குங் களிபுரியுங்
கனவிருளுங் கலந்த காலை
மெள்ளச்சென் றக்கலியன் சிற்பிமுன
மிழற்றியவா றிவர்ந்து சோதி
கொள்ளப்பொற் சிகரமதிற் குலவுசூடந்
தனைத்திருகி துவக்கை யூடே
தள்ளப்பின் மெலிந்தவுடற் றங்கைபுரு
டன்றனையு னிறைக்கி னால். 4

அவனடியி லிழிந்ததுகண் டாடகப்பொற்
பதுமையரு கமர்ந்த பல்ல
சவிமழுங்குஞ் செம்பாதித் தாதுவினாற்
சமைந்தபிர திமைக ளஞ்சி
யிவையுதவா லோகமெமை யெடுக்கற்க.
வென்றிரங்க விரணி யத்தைக்
கவனமொடு நோக்கவதிற் கலந்துள்ளான்
கனகவுடற் பயனீ தென்றே.

கோண்டுவெறுப் பிகந்தகல விக்கிரகந்
தனைக்குதித்துக் குசலன் றோலாற்
கொண்டுவந்த வடமதனிற் பிணித்ததனைக்
குறித்திடமேற் கலிய னீர்த்துக்
கொண்டருளிப் பின்பிழிந்தோன் றனைவலிக்கக்
கோபுரமுன் னிழைத்தோன் சூது
கொண்டிழைத்த கைத்திறத்திற் பின்புழையுங்
கூறுகவவன் கொள்ள லின்றே

ஆவணக்காப்பக

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கனு சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படர் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृ
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்ப்ளனேட், மதராஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras